**14-3-2005**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xv |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | *1-36* |
| **2. அறிவிப்பு—** | |
| *மானியக் கோரிக்கைகள், 2005-2006, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.)* | *36* |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | *36* |


53-10—1

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்—**

*(அ)* **கோரிக்கை எண்** *21* **— உள் துறை—காவல்**
*(ஆ)* கோரிக்கை எண் *22* **— உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்** — 37-135

| | |
|---|---|
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 37, 48, 58-60, 62-69, 73-76, 78, 80-84, 86, 90, 91, 96, 98, 112-120, 125 130, 132-134 |
| *திரு. ஜெ. அன்பழகன் | 59-69, 72-73, 75-78 |
| திரு. பி.எம். நரசிம்மன் | 94-95, 99-110 |
| *திருமதி எ.எஸ். மஹேஸ்வரி | 110-113, 115-122 |
| செல்வி க. பாலபாரதி | 124-135 |

**5. அரசினர் தீர்மானம்—**

விதி *32*-ஐத் தளர்த்தல் — 135-136

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 136-137


226637



**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர் — திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



**10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | Chief Minister | – **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | Minister for Public Works, Prohibition & Excise and Revenue | – **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. | Minister for Finance | – **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. | Minister for Law and Information Technology | – **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. | Minister for Food and Co-operation | – **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**
Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**
Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**
Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**
Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**
Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**
Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| 20. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| 21. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| 22. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| 23. **Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 24. **Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| 25. **Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

\- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள்#

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |

# பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடானை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

| | | |
|---|---|---|
| 66. காளிமுத்து, டாக்டர் கா. | .. | திருமங்கலம் |
| 67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. | .. | அரூர் (செ.வ.) |
| 68. கிருஷ்ணன், திரு. ஆர். | .. | அந்தியூர் (செ.வ.) |
| 69. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. | .. | ஆண்டிமடம் |
| 71. கோதண்டராமன், திரு. ஜி. | .. | முகையூர் |
| 72. கோபிநாத், திரு. கே. | .. | ஓசூர் |
| 73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். | .. | விருத்தாசலம் |
| 74. கோவிந்தராஜ், திரு. வெ. | .. | கிருஷ்ணகிரி |
| 75. கோவை தங்கம், திரு. | .. | வால்பாறை (செ.வ.) |
| 76. சக்திவேல் முருகன், திரு. எம். | .. | அம்பாசமுத்திரம் |
| 77. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 78. சசிகலா, திருமதி ஆர். | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 80. சண்முகம், திரு. சி. | .. | பூந்தமல்லி |
| 81. சண்முகம், திரு. சி.வி. | .. | திண்டிவனம் |
| 82. சண்முகவேலு, திரு. சி. | .. | உடுமலைப்பேட்டை |
| 83. சந்தானம், திரு. லா. | .. | உசிலம்பட்டி |
| 84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். | .. | இராணிப்பேட்டை |
| 85. சந்திரமோகன், திரு. நா. | .. | சீர்காழி (செ.வ.) |
| 86. சந்திரன், திரு. வீ. | .. | சிவகங்கை |
| 87. சம்பத், திரு. எம்.சி. | .. | நெல்லிக்குப்பம் |
| 88. சரவணன், திரு. துரை. கி. | .. | சிதம்பரம் |
| 89. சரோஜா, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |



| | | |
|---|---|---|
| 90. சாமி, திரு. ஆர். | .. | மேலூர் |
| 91. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 92. சிதம்பரம், திரு. ப. | .. | பவானிசாகர் |
| 93. சிவகாமி, திருமதி வி. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 94. சிவசாமி, திரு. கே.கே. | .. | அருப்புக்கோட்டை |
| 95. சிவசாமி, திரு. சி. | .. | திருப்பூர் |
| 96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். | .. | கரூர் |
| 97. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 98. சிவபெருமாள், திரு. அ. | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 99. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 100. சின்னசாமி, திரு. மா. | .. | பழனி (செ.வ.) |
| 101. சீனிவேல், திரு. எஸ்.எம். | .. | திருப்பரங்குன்றம் |
| 102. சுதர்சனம், திரு. டி. | .. | திருவள்ளூர் |
| 103. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 104. சுந்தராம்பாள், திருமதி செ. | .. | மேட்டூர் |
| 105. சுப்பிரமணியன், திரு. வீ. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 106. சுப்பையா பாண்டியன், திரு. எம். | .. | கடையநல்லூர் |
| 107. சூரியகலா, திருமதி சி.எம். | .. | குடியாத்தம் |
| 108. செம்மலை, திரு. செ. | .. | ஓமலூர் |
| 109. செல்லையா, திரு. வி.ஏ. | .. | மருங்காபுரி |
| 110. செல்வம், திரு. எஸ்.கே. | .. | வீரபாண்டி |
| 111. செல்வராஜ், திரு. ஏ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 112. செல்வி முருகேசன், திருமதி | .. | காங்கேயம் |
| 113. சேகரன், திரு. கே.என். | .. | திருவெறும்பூர் |

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
128. துரைமுருகன், திரு. .. காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
131. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
138. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
154. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 1, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 14, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

தகுதி உடையவர்க்கு வேண்டுவன கொடுத்தலும், யாவரிடத்தும் அன்பாயிருத்தலும், நேர்மையான ஆட்சியும், தளர்ந்த குடிகளைப் பேணுதலும் ஆகிய இந்நான்கு செயல்களையும் உடையவர் அரசரெல்லார்க்கும் விளக்காம்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திரு. கே.டி. பச்சைமால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**141—**

### மீன்பிடித் துறைமுகம்

***61815—திரு. கே. டி. பச்சைமால்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 14

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல், முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம் ஆகிய பகுதிகளில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம்மூலம் இந்த ஆண்டில் ரூ.13.20 இலட்சம் செலவின மதிப்பீட்டில் மாதிரி ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம் ஆகிய இடங்களில் BOOT திட்டத்தின் அடிப்படையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமி பேரலையில் கன்னியாகுமரி மாவட்டம் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டது. அதிலும், குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 14 மீனவர் கிராமங்களும், பிற சமுதாய மக்கள் வசிக்கின்ற 10 கிராமங்களும் அதிகமாக பாதிக்கப்பட்டு, அதிகமான உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்பட்டன. அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறிடவும், நிவாரணங்கள் வழங்கிடவும் இரண்டு முறை குமரி மாவட்டத்திற்கு வருகை தந்தும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அரசினுடைய உயர் அதிகாரிகளையும் அனுப்பி, உலகமே வியக்கின்றவண்ணம் நிவாரணப் பணிகளை நிறைவேற்றி மீனவர் சமுதாய மக்களினுடைய விடி வெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர் சமுதாய மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், முட்டம், ராஜாக்கமங்கலம் துறை ஆகிய பகுதிகளில் அதிகமான அரிய வகை மீன்கள் கிடைக்கின்றன. இப்பகுதியில்தான் சுமார் 2000-க்கும் அதிகமான விசைப் படகுகள் உள்ளன. இவர்கள் மீன் பிடிப்பதற்கு அந்தப் பகுதியில் மீன்பிடித் தங்குதளங்களோ, மீன்பிடித் துறைமுகங்களோ இல்லாத காரணத்தினால் வெளி மாநிலங்களுக்கு மீன் பிடிக்கச் செல்கின்றனர். அவ்வாறு மீன் பிடிக்கச் செல்கின்ற வேளையில் அங்கே மீனவர்களுடைய உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுகின்றது. அவர்களுடைய பொருட்கள் சேதப்படுத்தப்படுகின்றன. அவ்வாறு இடைப்பட்ட காலத்தில்கூட கேரளாவில் அவர்களுடைய பொருட்கள்



2005 மார்ச் 14]

எரிக்கப்பட்டு, மீனவர்கள் தாக்கப்பட்டனர். அந்தப் பகுதியில் உலகத்திலேயே அதிகமாக மீன்கள் கிடைக்கின்ற wedge bank என்ற பகுதி உள்ளது. ஆகையால், குளச்சல், முட்டம், ராஜாக்கமங்கலம் துறை ஆகிய பகுதிகளிலே மீன்பிடித் துறைமுகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளச்சல் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறைந்த செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து சென்னை NIOT ஆய்வு மையம் நேரில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளது. தற்போது மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள ரூ.13.20 இலட்சம் தேவைப்படுவதாக சென்னை NIOT ஆய்வு மையம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் மற்றும் குளச்சலில் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ரூபாய் 25 இலட்சம் ஒப்பளித்துள்ளது. அத்தொகை சென்னை NIOT ஆய்வு மையத்தில் செலுத்தப்பட்டது. தற்போது, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் சென்னை NIOT ஆய்வு மையத்தால் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுனாமி வருகின்றபோதுகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.டி. பச்சைமால் அவர்கள் அந்தப் பகுதியிலே, அந்த ஆய்வுப் பணியிலே இருந்ததாகவும் எங்களுக்குத் தகவல் வந்தது. முட்டம் பகுதியைப் பொறுத்தளவிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள மீனவர்களின் பயன்பாட்டிற்காக முட்டம் கிராமத்தில் தனிநபர் முதலீட்டில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றினை அமைக்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் கொள்கை முடிவு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கிராமத்தைச் சேர்ந்த சகல புனிதர் ஆலய நிர்வாகக் குழு சார்பாக மாதிரி ஆய்வுப் பணி மேற்கொள்ளும் பொருட்டு முதல் தவணையாக ரூ.6 இலட்சம் பெறப்பட்டு அவ்வாய்வுப் பணிக்காக NIOT ஆய்வு மையத்திற்கு கடந்த 2004 ஏப்ரல் திங்களில் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணியினை மேற்கொண்டு மாதிரி ஆய்வின் வரைவு அறிக்கையை சென்னை NIOT ஆய்வு மையம் அளித்துள்ளது. மேலும் மாதிரி ஆய்வின் இறுதி அறிக்கை மற்றும் இத்திட்டத்திற்கான E.I.A., E.M.F.A. ஆய்வறிக்கையைத் தயாரித்து வழங்கிடவும் துறையால் சென்னை NIOT ஆய்வு மையம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு அரசின் கொள்கை முடிவாக ஏற்று, ஆணை கிடைக்கப்பெற்றவுடன் BOOT திட்டத்தின்கீழ் தனி நபர் முதலீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கத் தகுதியுள்ள நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க ஒப்பந்தப்புள்ளி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆய்வுப் பணி முடிக்கப்பெற்று, அவ்வறிக்கையின் அடிப்படையில் திட்ட மதிப்பீட்டு அறிக்கை, பெங்களூர் CICEF இயக்குநரின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டு, திட்டத்திற்கான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையுடன் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்றுடன் நிருவாக அனுமதி கோரி, மாநில அரசு மூலம் மத்திய அரசுக்கு உரிய கருத்துரு அனுப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முற்பகல் 10-05

ராஜாக்கமங்கலத்தைப் பொறுத்தளவிலே, துறையில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள ராஜாக்கமங்கலம் துறை மீன்பிடித் துறைமுக வளர்ச்சி பொறுப்பாட்சி தனது சொந்தச் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கிடக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, அக்கழகத்தின் முதலீட்டில் BOOT திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகம் ஒன்றினை அமைக்க அரசின் கொள்கை முடிவாக ஏற்று, அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ராஜாக்கமங்கலம் துறை மீன்பிடித் துறைமுக வளர்ச்சிக் கழகத்தால் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்று அறிய தேவையான மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள அரசிடமிருந்து நிதி ஒப்படைப்பு பெறத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ராஜாக்கமங்கலம் துறை மீன்பிடித் துறைமுக வளர்ச்சி பொறுப்பாட்சியிடம் ராஜாக்கமங்கலம் துறையில் இயக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பாக சில கூடுதல் விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. விவரங்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டபின் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆய்வு செய்வதற்காக ரூ.13.20 இலட்சம் ஒதுக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி 'அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு மாநிலத்திலே பல்வேறு துறைகள் BOOT திட்டத்தின்மூலம் பணிகளை நிறைவேற்றுவதைப்போல், குளச்சல், முட்டம், ராஜாக்கமங்கலம் துறைமுகம் ஆகிய பகுதிகளிலே அந்த மீனவர்





சமுதாய மக்களே கூட்டுறவை ஏற்படுத்தி, அவர்களாகவே துறைமுகத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக, அரசினுடைய கொள்கை முடிவை இந்த ஆண்டே அறிவித்து, மீனவர் சமுதாய மக்களுடைய நலன் காத்திட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறியபடி, BOOT திட்டத்தின்கீழே செயல்படுத்துவதற்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று, அதுசம்பந்தமாக அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல், முட்டம், ராஜாக்கமங்கலம், தேங்காய்ப்பட்டினத்திற்கு அருகில், இரையும்மன் துறை போன்ற பகுதிகளில், குறிப்பாக, இந்த மாவட்டத்திலே மீன்வளம் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், அதிகப்படியான இடங்களிலே மீன் பிடிப்பதற்கான சிறு, சிறு துறைமுகங்களை அமைக்க அரசு ஏற்பாடு செய்கின்றபோது அது நன்றாக இருக்கும். கடந்த வருடம் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரும், இயக்குநர் அவர்களும், தேங்காய்ப்பட்டினத்திற்கு வருகை தந்து, அங்கே மண் ஆய்வை முடித்துவிட்டுப் போய் இருக்கின்றார்கள். ஏற்கெனவே 5 வருடங்களுக்கு முன்னால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்மூலம், ஆய்வுக்கான பணமும் அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தோடு இணைத்து, தேங்காய்ப்பட்டினம், இரையும்மன் துறையைச் சேர்ந்த பகுதிகளில்கூட ஒரு சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதன் பயனாக எங்களுடைய மாவட்டத்திலே ஏற்பட்ட சுனாமி போன்ற தாக்குதலைப் பெரிய அளவிற்குத் தடுத்து நிறுத்திக்கொள்வதற்குக் கூட வாய்ப்பாக அது அமையும். அந்த வகையிலே இப்போது இரண்டு தினங்களாக சிறு தாக்குதல் மீண்டும் ஆரம்பித்துள்ள சூழ்நிலையில் அதைக்கூட அரசு மனதிலே வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை வேகமாகச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கூறியபடி, இந்தத் துறைமுகம் அமைக்கின்ற பணி என்பது

[2005 மார்ச் 14

மற்ற திட்டங்களைப்போல உடனடியாகப் பணம் கிடைக்கப்பெற்றவுடன் உடனே செய்கின்ற வேலையல்ல. அதன் பிறகுதான் செய்ய வேண்டும். இதில் பிரச்சினை என்னவென்றால் Pathymetry Survey என்று, கடலிலே ஆழம் எவ்வளவு இருக்கிறது, தரையில் எவ்வளவு ஆழம் இருக்கிறது என்பதை முதலில் பார்க்க வேண்டும். அடுத்தபடியாக Numerical Model Study என்று ஒன்று இருக்கின்றது. அதுவும் என்னவென்றால், அலையினுடைய வேகம் எந்த அளவுக்கு இருக்கிறது, அலையினுடைய தடுப்புச் சுவர் கல் எந்த அளவுக்கு அமைக்க வேண்டும், எந்த அகலத்திலே, எந்த அளவு ஆழத்திலே அமைக்க வேண்டும் என்பதற்கு அந்த Numerical Model Study என்ற ஒன்று செய்ய வேண்டும். அதை முடித்ததற்குப் பிறகு, Physical Model Study என்று, அது எந்த மாதிரி ஒரு அமைப்பு என்பதை, அதை ஒரு ஆய்வகத்திலே வைத்து, அலைகள் வந்து தாக்குகின்றபோது எந்த அளவுக்கு அது சேதம் அடையும், அதற்கு எந்த அளவுக்கு அது ஏற்றவாறு அமையும் என்ற study-ஐச் செய்ய வேண்டும். அடுத்தபடியாக, Bangalore CICEF Director மூலம் அதற்கு estimate போடுவதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும். இப்போது நான்காவது கட்டப் பணியாக தேங்காய்ப்பட்டினம் துறைமுகத்தைப் பொறுத்தளவிலே Bangalore CICEF Director-க்குப் போகின்ற அளவிலே இருக்கின்றது. இதற்குப் பிறகு, தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறுகள், குறைந்த அளவிலே எந்த அளவுக்கு செலவைக் குறைத்து, எத்தனை boats நிறுத்தலாம், எந்த அளவுக்கு மீன் பிடிக்கலாம், பிடித்த மீன்களை வியாபாரம் செய்வதற்கு ஏற்ற இடமாக இருக்கிறதா என்கின்ற அளவுக்கு, கடைசி stage-க்கு நாம் இப்போது வந்து விட்டோம். அடுத்தபடியாக, இது முடிந்தவுடனே, சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று என்பது District Level Committee, State Level Committee, பிறகு Government of India, அது மாதிரி வரிசையாக ஒவ்வொன்றிலும் கடைசி stage-க்கு வந்து விட்டோம். அதனால் தேங்காய்ப்பட்டினம் துறைமுகத்தைப் பொறுத்தளவிலே கடைசி அளவுக்கு வந்து விட்டோம். இனிமேல் நாம் தடையில்லாச் சான்று வாங்கியதற்குப் பிறகு, நிச்சயமாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரெங்கநாதன்.

**திரு. என். ரெங்கநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க முன்மாதிரி ஆய்வுக்காக.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது கன்னியாகுமரி; பூம்புகார் அல்ல..



2005 மார்ச் 14]

**திரு. என். ரெங்கநாதன்:** அதேதான். அதனுடைய தொடர்ச்சிதான். முன்மாதிரி ஆய்வுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் ரூ.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆய்வுப் பணிகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. Model Study முடிப்பதற்குக் கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா? ஆமெனில், எப்போது அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறியபடி, இதற்கும் ஆய்வுப் பணி --Bangalore CICEF Director மூலம் பணிகள் செய்வதற்கான அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அடுத்த கட்டமாக அந்தப் பணி சம்பந்தமாகச் செயல்பாடுகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 142, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**142—**

## தமிழ்நாடு ஓட்டல்

***2123—திரு. பி. ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலையோர உணவு விடுதிகளை மேல்மருவத்தூரில் உள்ளதுபோல தமிழ்நாடு ஓட்டல் மூலம் எடுத்து நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையோர உணவு விடுதிகளை மேல்மருவத்தூரில் உள்ளதுபோல தமிழ்நாடு ஓட்டல் மூலம் எடுத்து நடத்த இயலாது.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் இன்றைக்கு மாலை நேர வழியோர உணவு விடுதிகள் பெரிய அளவிலே நடைபெற்று வருகின்றன. அவர்கள் சுகாதாரமற்ற, தரக்குறைவான உணவைத் தயார் செய்கிறார்கள். அத்தகைய உணவை உண்பதால் நீண்ட தூரம் பஸ்ஸில் பயணம் செய்பவர்களுக்கு உடல்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக

[2005 மார்ச் 14

சென்னையிலிருந்து திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில் போன்ற நீண்ட தூரம் செல்லும் பயணங்களில் நல்ல உணவு கிடைக்காமல் அவர்கள் பெரிதும் அவதியுறுகிறார்கள். அந்தப் பயணிகள் பயணம் செய்யும் நேரமும் அதிக அளவிலே இருக்கிறது. நீண்ட தூரம் பயணம் செய்வதால் 2, 3 இடங்களில் எல்லாம் அவர்கள் சாப்பிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக நெடுஞ்சாலைகளில் முக்கியமான இடங்களிலாவது புதிய உணவகங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 29 ஓட்டல்களை நடத்தி வருகிறது. அதில் மேல்மருவத்தூர், உளுந்தூர்பேட்டை, சாத்தூர் முதலியன சாலையோர விடுதிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. ஏராளமான தனியார் உணவகங்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் செயல்பட்டு வருகின்றன. புதிதாக ஓட்டல்களை நடத்துவதற்கு தளவாடச் சாமான்கள் வாங்குகின்ற வகையிலும், இருக்கின்ற சமையல் வசதிகளைப் பெருக்குகின்ற வகையிலும் நிதி ஆதாரம் அதிக அளவில் தேவைப்படுகின்றது. எனவே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தற்போதுள்ள நிதிநிலை மற்றும் அரசின் தனியார்மயமாக்குதல் என்கின்ற நிலைப்பாட்டினால், மேலும் ஓட்டல்களை எடுத்து நடத்த இயலாத நிலையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய உணவகங்களை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுள்ள நெடுஞ்சாலைகளில் இருக்கின்ற அந்த ஓட்டல்கள் பலவற்றில் விலைப் பட்டியல்களை வைப்பதில்லை. ஆகவே, விலைப் பட்டியல் வைப்பதற்கும், தரமான உணவு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தின்மீது தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 143, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**143—**

## தொழிற்பயிற்சிப் பயிலகம்

*** 6687—திரு. எஸ். எம். பாலன்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) லால்குடியில் அரசு தொழிற்பயிற்சிப் பயிலகம் தொடங்க ஆவன செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) லால்குடி தாலுகாவில் ஏற்கெனவே 3 தொழிற்பயிற்சிப் பயிலகங்கள் இயங்கி வருவதால், லால்குடியில் அரசு தொழிற்பயிற்சிப் பயிலகம் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

**திரு. எஸ். எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில், லால்குடி ஒன்றியத்தில் ஆண்கள் மட்டும் பயிலும் 2 தனியார் I.T.I.-கள் செயல்படுகின்றன. லால்குடி தொகுதி, புள்ளம்பாடியில் ஒரு அரசு பெண்கள் I.T.I. செயல்படுகிறது. லால்குடி நகரப் பகுதியில் அரசு பெண்கள் I.T.I. ஒன்றிருந்தால், லால்குடி ஒன்றிய கிராமப்புறத்தில் வசிக்கும் ஏழையெளிய பெண்கள் மேம்பாடு அடையும் விதத்தில், அவர்கள் குறைந்த தூரத்தில், தொழிற்கல்வி படிக்க வசதியாக இருக்கும் என்பதால், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அது துவக்கப்படுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தாலுகாவிலுள்ள புள்ளம்பாடியில் 168 இருக்கைகளைக் கொண்ட மகளிருக்கான அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. ஆகவே, லால்குடிக்கென்று தனியாக ஒரு அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அரசுக்கு உத்தேசம்

இல்லை: மேலும், லால்குடியில் மகளிருக்கென்று தொழிற்பயிற்சி நிலையம் துவங்க தனியார் எவரேனும் முன்வந்தால், நிச்சயமாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் சமீப காலமாக மாணவர்கள் சேர்வதில் ஆர்வம் குறைந்து வருகிறது. இப்படி ஆர்வம் குறைந்து வருவதற்குக் காரணம், படித்த பிறகு அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எனவே வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி மையங்கள் 57. தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 615. இவற்றில் பெரும்பாலான பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 144, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**144—**

## மேல்நிலைத் தொட்டி

***23289—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மகாதேவபட்டினம் கிராமத்தின் தேவை கருதி, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?





**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி ஒன்றியம், மகாதேவபட்டினம் குடியிருப்பில், ஏற்கெனவே 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன்கூடிய தனி மின் விசைத் திட்டம் தற்போது மக்கள் பயனில் உள்ளது. மேலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பகுதி மக்களின் தேவையை அறிந்து ஆணையிட்டதற்கிணங்க, 2002-2003 ஆம் ஆண்டு 3 சிறு மின் விசைத் திட்டங்களும், 2003-2004 ஆம் ஆண்டு 2 சிறு மின் விசைத் திட்டங்களும், 2003-2004 ஆம் ஆண்டு மகாதேவபட்டினம் மெயின் ஆதிதிராவிடர் காலனியில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது மக்கள் பயனில் உள்ளது. மேலும், 2004-2005-ல், நானாசாகிப் தோட்டம், அம்பலத்துக்காரர் தெருவிலே, 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவிலும், மேலப்பேட்டை ரோடில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, அவை தற்போது பயனில் உள்ளன. ஆகவே, மேற்குறிப்பிட்ட நீராதாரங்களிலிருந்து பொது மக்களுக்கு தினசரி 2 வேளை போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்கொண்டு ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அவசியமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகாதேவபட்டினம் கிராமத்திலே அமைக்கப்பட்டிருக்கிற நீர்நிலைகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்தக் கேள்வி, ரொம்ப முன்னால் போடப்பட்ட கேள்வி. நிறைவேற்றப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது. அதே நேரத்திலே, இந்தப் பட்டியலைச் சொல்லியிருக்கிற அமைச்சர் அவர்களது பதிலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டிருப்பது பற்றிய அந்தப் பட்டியல் மட்டும் ஏன் வெளிவரவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதையும் அதிகாரிகள் கொடுக்கவில்லையா அல்லது நீங்கள் அதைத் தெரிவிக்க மறுக்கிறீர்களா என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்தக் கேள்வி போட்டதற்குப் பின்னாலே ஏற்பட்ட நிலைமைகளின் காரணத்தினாலே, அவசர உணர்வோடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமாக அது

[2005 மார்ச் 14

அமைக்கப்பட்டு, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த மாதிரிக் கேள்விகள்--முடிந்துபோன கேள்விகளுக்குரிய பதில்களைச் சொல்வதையே மரபாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பல கோரிக்கைகள், நிறைவேறாமல் இருக்கிற கோரிக்கைகள் அடங்கிய அந்தக் கேள்விகளை எடுத்துக்கொள்வது என்பது உசிதமாக இருக்கும். முடிந்த கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லி திருப்திபடுவது என்பது எந்த வகையில் சரியாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 145, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**145—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***23319—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுட்டிகாலடிபட்டி, அவ்வையம்பட்டி, நரியூத்து, காமலாபுரம், சக்கையநாயக்கனூர், புதுசத்திரம், கோடாங்கிநாயக்கன்பட்டி உட்பட 20 கிராமங்களுக்குச் செயல்படுத்தும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஒன்றியத்தில், குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள எரிலோடு, பிள்ளையார்நத்தம், கூவானூத்து, சிலுக்குவார்பட்டி, பள்ளப்பட்டி, பாளையகவுண்டன்பட்டி, நரியூத்து, கோட்டூர், கோடங்கிநாயக்கன்பட்டி, நூதலாபுரம், ஜம்பத்தூர்கோட்டை மற்றும் பச்சைமலையான்கோட்டை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 54 கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 8, நாள் 21-2-2005-லே ரூபாய் 564.55



2005 மார்ச் 14]

இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவில் குறிப்பிட்டுள்ள அனைத்துக் குடியிருப்புகளும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஏப்ரல் 2005 இறுதியில் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணற்றிலே ஊர்ப் பெண்கள் எல்லாம் குழுமி, 300 அடி, 400 அடி என்ற கிணற்றிலே ஊர்ப் பெண்கள் போட்டு இறைத்த காலத்தை மாற்றி, ஊர்ப் அளவிலே கடைக்கால் போட்டு இறைத்த காலத்தை மாற்றி, ஊர்ப் புறம்போக்குப் பகுதியிலே அடிக்குழாய் அமைத்து, அங்கேயும் பெண்கள் சூழ்ந்துகொண்டு, தலையிலே ஒரு பானை, இடுப்பிலே ஒரு பானை, கையிலே ஒரு குடம் என்று சொல்லி தண்ணீர் எடுத்து வந்த காலத்தை மாற்றி, என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டிய அத்தனை ஊர்களுக்கும் Mineral water-க்கு நிகரான குடிதண்ணீரை, சுவையான தண்ணீரைக் கொடுத்த நம்முடைய தங்கத் தலைவி, ஒப்பற்ற தலைவி, உன்னதத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வத்தலகுண்டு ஒன்றியத்திலே விருவீடு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் நடகோட்டை, விராலிமயன்பட்டி, செருமார்பட்டி, அக்கரைப்பட்டி, தெப்பத்துப்பட்டி, கீழதெப்பத்துப்பட்டி, அச்சனம்பட்டி, கீழஅச்சனம்பட்டி, தருமத்துப்பட்டி, விராலிப்பட்டி, இராமநாயக்கன்பட்டி, வெங்கப்பநாயக்கன்பட்டி, எழுவனம்பட்டி, பழைய வத்தலக்குண்டு போன்ற கிராமங்களுக்குப் பயன் தரக்கூடிய வகையிலே அந்தத் திட்டம் அமையும் என்ற காரணத்தினால் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கடித நாள் 17-9-2003-ல் கோரியுள்ளபடி விருவீடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் கூடுதல் குடிநீர் வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களுடைய அனுமதி பெற்று, மேலே அவர் குறிப்பிட்ட அனைத்து கிராமங்களும்—விருவீடு, நடகோட்டை, விராலிமயன்பட்டி, சந்தையூர், செக்காபட்டி ஆகிய

5 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 29 குடியிருப்புகளுடைய பகுதிகளுக்கு அவர் கேட்டுள்ளபடி நீராதாரத்தைப் பெருக்கித் தருவதற்காக ஒரு விரிவான மதிப்பீடு ரூபாய் 240 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே இப்படி ஒரு அற்புதமான ஆட்சியை--கேட்ட துறைகளுக்கு எல்லாம் வழங்கி, கேட்கப்படாத துறைகளுக்கும் வழங்கிக்கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 146, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**146—**

**உடற்பயிற்சி மையம்**

***43956—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் 1-வது பகுதியிலுள்ள உடற்பயிற்சி மையத்திற்கு உடற்பயிற்சி உபகரணங்களும், பாதுகாப்பு அறையும் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரே, தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படி வேண்டுமானாலும் கூப்பிடுங்கள்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** (அ) இல்லை. (ஆ) நிலை எழவில்லை.



முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களை ஆபாசத் திரைப்படங்கள் பார்ப்பது, மது அருந்துவது, புகை பிடிப்பது போன்ற சீர்கேடுகளிலிருந்து தவிர்த்திடும் வகையில், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மலையப்பசாமி அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் 1-வது பகுதியிலுள்ள உடற்பயிற்சி மையத்திற்கு உடற்பயிற்சி உபகரணங்களும், பாதுகாப்பு அறையும் கட்டித்தர மீண்டும் மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்க ஆணையிட்டு, விரைவாக அவை கட்டி முடிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளின் செலவினத்திற்காக மைய அரசின் பங்காக 50 விழுக்காடும், மாநில அரசின் பங்காக 25 விழுக்காடும், பொது மக்களின் நன்கொடைமூலமாக 25 விழுக்காடும் செலவிடப்படுகிறது. உடற்பயிற்சிக் கூடங்கள் ஒவ்வொரு மாவட்ட விளையாட்டு வளாகத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட விளையாட்டு வளாகம் தவிர, வேறு எந்த மாவட்டத்திலும் உடற்பயிற்சி மையத்திற்குத் தனியாக அறைகள் கட்டத் திட்டம் இல்லை. உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்குவதைப் பொறுத்த வரையில், தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குட்பட்ட மாவட்ட விளையாட்டுப் பிரிவுகளுக்கும் மற்றும் விளையாட்டுப் பள்ளி, விளையாட்டு விடுதி போன்ற சிறப்புத் திட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயன்பெற விளையாட்டு உபகரணங்கள் வாங்க மாண்புமிகு அம்மாவின் அரசு மானியம் வழங்குகிறது. இதுதவிர, சிறப்புத் திட்டத்திலோ அல்லது திட்டத்தில் சேராத எந்த நிறுவனங்களுக்கோ விளையாட்டு உபகரணங்கள் வாங்கி வழங்க வகையில்லை. எனவே, நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் 1-வது

[2005 மார்ச் 14

பகுதியிலுள்ள உடற்பயிற்சி மையத்திற்கு உடற்பயிற்சி உபகரணங்களும், பாதுகாப்பு அறையும் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல்லில் மாவட்ட விளையாட்டு அரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வந்தபோது, அங்கே அவர்கள் உறுதி கூறிவிட்டு வந்தார்கள். அங்கேயிருந்து கருத்துருவெல்லாம் அனுப்பப்பட்டு, இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டு இங்கே அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆகவே, சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் மாவட்டம் பிரிந்ததற்குப் பிறகு, அங்கே விளையாட்டு அரங்கம் கட்டப்படவில்லை. ஆகவே, அதை மனதிலே வைத்துக்கொண்டு, நாமக்கல்லிலே மாவட்ட விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரியில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அது கல்லூரிக் கல்வித் துறை இயக்குநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது, செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. கல்வித் துறையின் அனுமதி கிடைத்தவுடன் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிற்கு ஒன்றிரண்டு விளையாட்டுக் கூடங்கள் அமைத்துத் தர இப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டுக் கொண்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், நமது கிராமம் திட்டத்தின்மூலமாக தமிழகத்திலேயிருக்கிற அத்தனை ஊராட்சி மன்றங்களுக்கும் இப்போது சாலைப் பணிகளைச் செய்வதுபோல, ஏன் விளையாட்டுத் துறையிலே அக்கறை கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்கள், எல்லா மாவட்டங்களிலேயும் இதுபோன்ற ஒரு விளையாட்டு மையத்தினை ஏற்படுத்தித்தரக் கூடாது என்று தங்கள்மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2005 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட வளாகங்களைக் கட்டிக் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது, வட்டத் தலைநகரங்களில்—taluk headquarters-ல்—ஒவ்வொரு விளையாட்டு வளாகம் கட்டிக் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதைப்போல, நோய் நொடிகளின்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். அந்த அடிப்படையில் எதிர்கால இளைஞர்களினுடைய நலன் கருதி, 15 வயது முதல் 25 வயது வரை உள்ள இளைஞர்களையெல்லாம் தேர்வு செய்து, அவர்களைக் குழுக்களாக அமைத்து, அந்தக் குழுக்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற வகையில், கிரிக்கெட் மட்டைகள், carrom board, volley ball, chess போன்ற உபகரணங்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு Association-க்கும், கிரிக்கெட் தவிர பிற விளையாட்டுகளுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.டி. பச்சைமால்.

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து கிராமங்களில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கின்றவண்ணம், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2005 மார்ச் 14

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து, அப்படி விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரையோடு அரசுக்கு அனுப்பப்பட்டால் அது பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உடற்பயிற்சி மையம் தொடங்கும் எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? சில சட்டமன்ற உறுப்பினர்கள் நடப்பதற்கே சிரமப்படுகிறார்கள். அவர்கள் உடலை வாகாக வைத்துக்கொள்வதற்கு அது உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட எண்ணம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை இருந்தால் பேரவைத் தலைவரிடம் சொல்லுங்கள்.

வினா எண் 147, திரு. வி.ஆர். ராஜாங்கம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**147—**

## சாத்தியாறு அணை

***24076—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், தேவசேரி கண்மாய்க்கு சாத்தியாறு அணைத் தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2005 மார்ச் 14]

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதிக்கு சாத்தியாற்றிலிருந்து தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொண்டு, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த நிதியாண்டில், அதாவது, 2006 ஆம் ஆண்டு தமிழகத்தில் முதலமைச்சராக மீண்டும் அன்பு தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பேற்ற பின்னால், இத்திட்டத்தை நிறைவேற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கோணம்பட்டி கிராமத்தில் சாத்தியாறு ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கம் 29 அடி கொள்ளளவு கொண்டது. தண்ணீர் திறப்பு விதிகளின்படி செப்டம்பர் 25 ஆம் தேதி பருவ மழை பெய்து சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இருந்தால், 1,029 ஏக்கர் பழைய ஆயக்கட்டில் உள்ள 10 கண்மாய்களுக்கு பாதிக் கொள்ளளவு தண்ணீர் நிரம்பும்படி தண்ணீர் திறந்துவிட்டு, பாதி நிரம்பியவுடன் அணையின் நீர்மட்டம், ஆழம் 16 அடி இருந்தால், 412 ஏக்கர் புதிய ஆயக்கட்டுக்குத் தண்ணீர் வழங்காமல் பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு மட்டுமே நீர் வழங்கப்படவேண்டும். கடந்த பல ஆண்டுகளாக சரியான பருவத்தில் போதுமான அளவு பருவ மழை கிடைக்கப்பெறாததால் சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கத்திலுள்ள பழைய ஆயக்கட்டின் கீழுள்ள 10 கண்மாய்களுக்குப் போதிய தண்ணீர் வழங்க இயலவில்லை. இந்நிலை தொடர்ந்து நீடித்து வருவதால், மானாவாரி கண்மாயாகிய தேவசேரி கண்மாய்க்கு சாத்தியாறு நீர்தேக்கத்திலிருந்து தற்போது தண்ணீர் வழங்க சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**148—**

## இலவச விட்டுமனைப் பட்டா

***31692—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 14

(அ) திருவொற்றியூர் தொகுதி, 17-வது வட்டம் பகுதியில் குடிசைகளில் வாழும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இப்பகுதிகள் ஆட்சேபகரமான புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 149, திரு. ப. அரசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**149—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***60678—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் கோயில் வருமானத்திலிருந்து மதுரையில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வருமானத்திலிருந்து மதுரையில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு முன்னாலே என்னுடைய தொகுதியின் சகோதரர் ஒருவருடைய கல்யாணத்திற்காக திருப்பரங்குன்றம் சென்றிருந்தேன்.



2005 மார்ச் 14]

அங்கே அந்த விடுதியில் தங்கியிருக்கிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல பெரியவர்கள் வந்து பேசிக்கொண்டு இருந்தார்கள். மதுரையிலே நிறைய மகளிர் கல்லூரிகள் இருந்தாலும், கட்டணம், அதுவல்லாமல் நன்கொடை போன்றவை மிகவும் அதிகமாக இருப்பதால், அந்தப் பகுதியிலே இருக்கிற மகளிர் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. திருப்பரங்குன்றம் கோயிலுடைய வருவாய் ஓரளவிற்கு நன்றாக இருப்பதால், அந்தப் பகுதியிலே ஒரு மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி போடப்பட்டது. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற மகளிருடைய கல்வி முன்னேற்றத்தைக் கருத்திலே கொண்டு அருள்மிகு திருப்பரங்குன்றம் கோயிலுடைய வருவாயிலிருந்து அங்கே ஒரு மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு—நிறையப் பேர் படிக்காமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைத் தொடங்குவதற்கு—அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் நிதியிலிருந்து மகளிருக்கான பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று, 1,652 மாணவிகள் பயன்பெறும் வகையில் தற்சமயம் நடத்தப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் நிதியிலிருந்து கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தால் சுயநிதிக் கல்லூரிகள் மட்டுமே நடத்த அரசு அனுமதி பெறமுடியும். அரசு மானியம் ஏதும் கிடையாது. சுயநிதிக் கல்லூரி துவங்குவதற்குக் குறைந்தபட்சம் மாதாமாதம் 20 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவின வகையில் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயும் தேவைப்படும். இது குறைந்தது நான்கு வகை வகுப்புகள் கொண்ட கல்லூரி ஆரம்பிக்க ஆகும் உத்தேசச் செலவினமாகும். இவ்வளவு நிதி ஆதாரம் இத்திருக்கோயிலில் தற்சமயம் இல்லை. மேலும் மேற்படி கல்லூரி ஆரம்பிக்க, ஒரே இடத்திற்கான கிராமப்புறமாக இருந்தால் 10 ஏக்கர் பரப்பளவும், நகர்ப்புறமாக இருந்தால் 5 ஏக்கர் பரப்பளவு நிலமும் இருக்க வேண்டும். அவ்வளவு பரப்பளவு உள்ள இடம் இத்திருக்கோயிலுக்கு கிராமப்புறத்திலோ அல்லது நகர்ப்புறத்திலோ இல்லை. இத்திருக்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தற்சமயம் 75 சென்ட் நிலத்தில் இயங்கி வருகிறது. தற்போதைய அரசு விதிகளின்படி 5 ஏக்கர் நிலம் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தேவைப்படுகிறது.

[2005 மார்ச் 14

மேற்படி இடம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அரசு மானியம் பெறும் மகளிர் கலைக் கல்லூரிகள் மூன்று, ஏற்கெனவே மதுரையில் செயல்பட்டு வருவதுடன், பல்வேறு சுயநிதி கலைக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேற்படி காரண, காரியங்களின் அடிப்படையில் இத்திருக்கோயிலில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் கருத்துரு ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *150*, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**150—**

**உதவித் தொகை**

***50529—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 1-வது தொகுதியில் முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை பெற்றவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மீண்டும் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) சேலம் வட்டத்தில் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 100 சதவீதம் தணிக்கையின்மூலம் மொத்தம் 2,540 இனங்கள் நிறுத்தம் செய்யப்பட்டன. மேற்கண்ட இனங்களை மீள விசாரணை செய்ததில், 1,613 நபர்கள் தகுதியுள்ளவர்கள் எனக் கணக்கிட்டு, மேற்படி பயனாளிகளுக்கு 2003 மே மாதம் முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 936 பயனாளிகள் உதவித் தொகை பெறத் தகுதியற்றவர்கள் எனக் கண்டறியப்பட்டபின் உதவித் தொகை வழங்க இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2005 மார்ச் 14]

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, கணவனை இழந்த விதவைமார்கள் உதவித் தொகை, விவசாயக் கூலித் தொழிலாளர்கள் உதவித் தொகை எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது? மேலும் உதவித் தொகை வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதைத் தவிர்க்க, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்டு மாவட்டந்தோறும் கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் ஆதரவற்றோர் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் எத்தனை பேர்கள், மற்ற இனங்களின்மூலம் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதனை இங்கு கேட்டிருக்கின்றார். சேலம் மாவட்டத்தில் ஆதரவற்றோர் முதியோர் உதவித் தொகை 27,818 பேருக்கும், ஆதரவற்றோர், ஊனமுற்றோர் உதவித் தொகை 2,319 பேருக்கும், ஆதரவற்ற விதவை உதவித் தொகை 34,335 பேருக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலித் தொழிலாளிகள் உதவித் தொகை 5,866 பேருக்கும், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டவர் உதவித் தொகை 4,384 பேருக்கும், மொத்தம் அனைத்து இனங்களின்மூலம் சேலம் மாவட்டத்தில் 74,704 பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. மேற்கொண்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு, கண்காணிப்புக் குழு அமைக்கப்படுமா என்பதனையும் கேட்டிருக்கின்றார்கள். அதைப் பற்றி அரசு சிந்திக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்தோர் நல உதவித் திட்டத்தில், குடும்பத் தலைவர் இறந்தால் விதவைமார்களுக்கு அரசு உதவித் தொகை ரூபாய் பத்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் சேலம் மாவட்டத்தில் தற்போது 2001 ஆம் ஆண்டு வரை, குறிப்பாக ஆறாவது மாதம் வரை பெறப்பட்ட மனுக்களுக்கு மட்டுமே பணம் வழங்கப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மக்கள் பல ஆண்டுகளாகக் காத்துக் கிடக்கின்ற நிலைமை உள்ளது. தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஏழை விதவைமார்களிடமிருந்து சேலம் மாவட்டத்தில் 2001, 2002, 2003, 2004, ஆகிய ஆண்டுகளில் பெறப்பட்ட கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் உள்ளன. அரசு நிதி வழங்கவில்லை என்ற காரணத்தைக்

காட்டி, பல ஆண்டுகளாகக் கிடைக்கப்பெறாத நிலையில் உள்ளார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக அவர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், நலிந்தோர் உதவித் தொகை, இப்பொழுது 2001 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அரசின் சார்பாக விசாரணை செய்து, மீதியிருப்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வழங்கப்படும். 2002 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை, இன்னும் நலிந்தோருக்கு உதவித் தொகை வழங்கப்படவில்லை என்று கூறியிருக்கின்றார். அது நிதிநிலையைப் பொறுத்து வரிசைப் பிரகாரம் அனைவருக்கும்--தகுதியுள்ள நபர்களுக்கு வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை வழங்குவது தொடர்பாக, இப்போது மீண்டும் பரிசீலனை—inspection—என்கிற பெயரால், ஏற்கெனவே இருக்கக்கூடியவர்கள், தகுதி படைத்தவர்கள் சில பேர், சில பகுதிகளிலே இப்போது நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல; எங்களுடைய மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில்கூட நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நேற்றுகூட 50 பெண்மணிகள் வந்து—அவர்கள் 10 ஆண்டுகளாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்; 10 ஆண்டுகளாகப் பெற்றுக் கொண்டிருப்பவர்கள். அவர்களுக்கு நிலம் இல்லை. வீடு இல்லை. அவர்களில் சில பேர் விதவைகள். சில பேர் கணவனால் கைவிடப்பட்டவர்கள். இப்படி, தகுதியுள்ளவர்களை மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து—ஏனென்று சொன்னால், ஏதோ பரிசீலனை என்கிற பெயரால், அவர்களையெல்லாம் திடீரென்று போய், அவர்கள் இல்லாத நேரத்தில் பார்த்துவிட்டு, பிறகு வந்து, அவர்கள் தகுதியற்றவர்கள் என்ற அடிப்படையிலே பல பேர் நீக்கப்படுகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள், வருவாய்த் துறைமூலம் மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து, தகுதியானவர்களுக்கு மீண்டும் அந்த உதவித் தொகையை வழங்குவதற்கு, அரசு ஆவன செய்யுமா? அதேபோல, நலிந்தோர் உதவித் தொகையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 2001-லிருந்து





2005 வரை, இப்போது நாங்கள் விசாரணை செய்துகொண்டிருக்கிறோம்; நிதி ஒதுக்கத்திற்குத் தக்கவாறு அவர்களுக்கு வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்த அரசு அமைந்தவுடன், 'கோப்புகள் முடிக்கும் வாரம்' என்று, 90 நாட்களுக்குள்ளே அதுபோன்ற கோப்புகளை விசாரணை செய்து, முடித்துவிடுவதாக அறிவித்தீர்கள். (மணியடிக்கப்பெற்றது) விரைந்து அதை விசாரித்து, நலிந்தோர் உதவித் தொகை—ஒரு கணவன் இறந்த பின்னால், குடும்பத் தலைவர் இறந்துவிட்ட பின்னால், அவர்களுக்கு உடனடியாக வழங்கினால்தான், அது அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள்—அதை உடனுக்குடன், 90 நாட்களில் அல்லது 6 மாதத்திற்குள் வழங்குவதற்காவது ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், இப்போது பெற்றுக்கொண்டிருப்பவர்களில், தகுதியுள்ளவர்களுக்கும் உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று கூறினார். அவ்வாறு, எந்தெந்தப் பகுதிகளில் தகுதியுள்ளவர்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுவாரானால், 100 சதவிகிதம் தணிக்கையின்மூலம் மேற்கண்ட இனங்களின்மீது விசாரணை செய்து, அவர்களுக்கு, தகுதியுள்ளவர்களுக்கு வழங்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே நலிந்தோர் உதவித் தொகைத் திட்டத்தினைப் பற்றியும் எடுத்துக் கூறினார். ஏற்கெனவே அதற்கு நான் பதில் கூறியிருக்கின்றேன் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே. சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகள். ஒன்று, இந்த முதியோர் உதவித் தொகை பெறுவது சம்பந்தமாக. இரண்டு, இந்த விதவைகள் அனுமதிக்கப்பட்டு, அரசு ஏற்று வழங்கப்படுவதற்கு நிவாரணம் அறிவிக்கப்பட்டது, கொடுப்பது சம்பந்தமாக. இந்த முதியோர் உதவித் தொகையைப் பெறுவதில், இப்போது இருக்கும் நிபந்தனைகள் தளர்த்தப்பட்டால் மாத்திரமே, உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும். அதாவது இப்போது, 65 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும். ஆண் வாரிசு இருக்கக்கூடாது. வீடு இருக்கக்கூடாது. இடம் ஒன்றும் இருக்கக்கூடாது. ஆனால் அவர்கள் உயிர் வாழ வேண்டும் என்று நிபந்தனை இருக்கிறது. இப்படிப் பார்த்தால், பெரும் பகுதியானவர்களுக்கு

[2005 மார்ச் 14

இந்த நிவாரணம் கிடைக்க வாய்ப்பில்லை. ஆகையினால், முதியோர் உதவித் தொகை பெறுவதில் தற்போதுள்ள நிபந்தனைகள் தளர்த்தப்படுமா? அது ஒன்று. இரண்டு, இந்த 10,000 ரூபாய். கணவன் இறந்துவிட்டதற்குப் பிறகு கிடைக்கக்கூடிய பெண்களுக்கு, நான்காண்டு காலமாக, அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணம் வழங்கப்படும் என்று உத்தரவிடப்பட்டவர்களுக்கு, பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு எல்லா மாவட்டங்களிலும் வழங்கப்படாமல் உள்ளது. தயவுசெய்து, இந்த ஆண்டின் நிதி ஒதுக்கத்தில், சமூக நலத் துறை, இதற்கென்று உள்ள பழைய பாக்கிகளை, அரசு ஏற்றுக்கொண்ட நிதியை வழங்குவதற்கு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவித் தொகை மற்றும் நலிந்தோர் உதவித் தொகைத் திட்டத்திற்கு அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்தும் அவர்களுக்கு உதவித் தொகையும், நலிந்தோர் உதவித் தொகையும் கிடைக்கவில்லையென்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில், யாருக்குக் கிடைக்கவில்லையென்பதை எனக்கு எழுதிக் கொடுப்பார்களேயானால், அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஏற்கெனவே இந்த உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் முதியோர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு முதியோரின் உதவித் தொகை பெற உற்றார், உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர் மற்றும் முதியோர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற வேளாண்மைக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஆகியோர்களுக்கு இந்த அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் 200 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிபந்தனையைத் தளர்த்தவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இங்கே அவையில் இருக்கின்றார்கள். இதற்கு அம்மா அவர்கள்தான் முடிவு எடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம் பிரபு.



2005 மார்ச் 14]

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 வயதைக் கடந்த விதவைகளுக்கு அரசு ஓய்வூதியம் வழங்கி வருகிறது. ஆனால், இளம் வயதிலேயே கணவனை இழந்த பெண்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இளம் விதவைகளுக்கும் அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, திரு. லா. சந்தானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**151—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***23448—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிக்குண்டம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் படுக்கைகள் வசதி மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லிக்குண்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட படுக்கை வசதி இரண்டு ஆகும். அங்கு சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருதும்பொழுது, அங்கு கூடுதலாகப் படுக்கை வசதி செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை. இச்சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்துகின்ற ஒரு கொள்கை முடிவினை வைத்திருக்கின்றது. எனது உசிலம்பட்டி

தொகுதியிலேயிருக்கின்ற உசிலம்பட்டி ஒன்றியத்திற்கு இதுவரை அப்படி எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் நிலை உயர்த்தப்படுகின்ற நிலை இல்லையென்கின்ற காரணத்தினால், இந்த அல்லிக்குண்டத்தைப் பொறுத்தளவிலே, முழுமையாக கிராமப் பகுதிகளைக் கொண்ட மக்கள் வாழுகின்ற பகுதி. அந்தப் பகுதியிலேயிருந்து நகருக்கு வருவதற்கு, ஏறக்குறைய 15 கிலோ மீட்டர் தொலைவு வரவேண்டிய ஒரு சூழ்நிலை. எனவே, முழுமையாக கிராமப்புறங்களைக் கொண்ட அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் பயனடைகின்ற வகையிலே அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக நிலை உயர்த்துவதற்கு அரசு இந்த ஆண்டாவது சிந்திக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். அதோடு, சென்ற ஆண்டு, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை நிலை உயர்த்தித் தந்திருக்கிறது இந்த அரசு. அதற்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்து, இது உசிலம்பட்டி ஒன்றியம் என்பதனால், இந்த ஆண்டு இதனை அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டு நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. டி. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**152—**

## ஆயுர்வேதக் கல்லூரி

***42407—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, ஆனையடி எஸ்டேட் பகுதியில் ஆயுர்வேதக் கல்லூரி அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, ஆனையடி எஸ்டேட் பகுதியில் ஆயுர்வேதக் கல்லூரி அமைக்கும் நோக்கம் ஏதும் அரசுக்குத் தற்போது இல்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுர்வேதக் கல்லூரி அந்த மாவட்டத்தில் இல்லையென்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்றையதினத்தில் நம்முடைய அலோபதி மருத்துவத்தின் காரணமாக, பல்வேறுவிதமாக பக்க விளைவுகள் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையில், ஆயுர்வேத வைத்தியம் என்பது ஒரு சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது. அந்த வகையிலே ஒரு கல்லூரியை அமைத்துக்கொள்வதற்கு வாய்ப்பில்லை என்றாலும்கூட, அந்தப் பகுதியிலே ஒரு ஆயுர்வேத மருத்துவமனையை சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, நமது கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், அதேபோல், வட்டம்சாரா மருத்துவமனையாக இருக்கக்கூடிய, Non-Taluk Hospital ஆக இருக்கக்கூடிய குலசேகரம் மருத்துவமனையிலும், இதேபோல் மாவட்டத் தலைநகரமாக இருக்கக்கூடிய--திண்டுக்கல், நாகப்பட்டினம், தஞ்சாவூர், கன்னியாகுமரி, திருச்சி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலே தற்சமயம் இதுபோன்ற மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று-- வருகின்ற நிதி ஆண்டில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அம்மாவினுடைய அனுமதியைப் பெற்று, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு சில பகுதிகளில் ஆயுர்வேத மருத்துவம் நடைபெறுவதாக இங்கே தகவலைத் தந்திருக்கின்றார்கள்.

[2005 மார்ச் 14

கிள்ளியூரைப் பொறுத்தமட்டில், ஒரு மருத்துவரோ, இரண்டு மருத்துவர்களோகூட இருக்கின்றார்களா என்பது ஒரு கேள்விக்குறி. நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், குறைந்தபட்சம் ஒரு மருத்துவமனை என்று சொல்கின்றபோது, ஆயுர்வேத மருத்துவம் என்பது, பொதுவாக குறைந்தபட்சம் ஒரு மாதம், இரண்டு மாதம் அங்கே தங்கியிருந்து, அதற்கான மருத்துவம் பெறுவதுதான். குறிப்பாக, திருவனந்தபுரத்திற்குச் சென்றால், சிறப்பாக அரசு மருத்துவமனை என்பது இரண்டு இருக்கின்றது. ஒன்று பூஜைப்புரையில் இருக்கின்றது. இன்னொன்று, இன்னொரு பகுதியிலே இருக்கின்றது. எனவே, அந்த வகையிலே இந்த மருத்துவத் துறை இன்னும் விரிவடைவதற்கும், நம்முடைய மக்களுக்குப் பயன்பெறுகின்ற வகையில் இந்தத் துறை அதிகக் கவனம் செலுத்தி, அதிகப்படியான மருத்துவர்களை ஏற்பாடு செய்து, மக்களுக்கு உகந்த வகையிலே இந்த மருத்துவம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையிலே இருக்கக்கூடிய சித்த மருத்துவமனைக்கு இணையாக அங்கே ஆயுர்வேத மருத்துவமனை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிகிச்சை பெறவேண்டுமென்றால், நேரிடையாக அங்கே சென்று சிகிச்சை பெறலாம். ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தளவிலே, பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்ற நடவடிக்கை—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு ஆண்டும், இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலே--இருக்கக்கூடிய அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற மருத்துவப்பிரிவுகள் ஆரம்பிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை என்னவென்றால், அவர் ஏற்கெனவே அந்த ஆயுர்வேத மருத்துவம் எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே தாங்கள் விருப்பப்பட்டால், பாளையங்கோட்டையிலே வந்து, அதற்கான சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருவட்டாறு தொகுதியில் ஆதிகேசவ சுவாமி கோயிலுக்குச் சொந்தமான இடம், இந்த ஆனையடி எஸ்டேட் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அந்த இடத்திலே ஆயுர்வேதக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் இல்லையென்றால், அந்த



2005 மார்ச் 14]

இடத்திலே நம்முடைய மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய அமைச்சர்கூட, சொல்லப்பட்ட அந்தக் கருத்தின் அடிப்படையிலே ஒரு மூலிகைப் பண்ணை அங்கே ஏற்படுத்துவது என்பது — 100 ஏக்கருக்கும் அதிகமான அந்த நிலத்திலேயிருந்து போதுமான வருமானம் இன்றைக்கு அந்தக் கோயிலுக்குக் கிடைக்கப்பெறவில்லை. அந்தக் கோயிலைப் பொறுத்தளவிலே நல்ல வருமானம் அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே, மூலிகைப் பண்ணையை அங்கே ஏற்படுத்துவது— உதவிகரமாக இருக்கும் என்பதைக் கணக்கில் எடுத்து, அரசு நிலத்திற்கு வருமானம் கிடைப்பதற்கும் அது உதவிகரமாக இருக்கும். அந்த மாவட்டத்திலேயும், பக்கத்திலே இருக்கின்ற மாவட்டங்களிலேயும் அந்த மருந்துகள் கிடைப்பதற்கும் அது உதவிகரமாக இருக்கும் என்ற முறையிலே, அந்த 100 ஏக்கர் இடத்திலே ஒரு மூலிகைப் பண்ணையை ஏற்படுத்துவதற்காவது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு வனப் பகுதிகளிலே — குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்திலே—வனத் துறை சார்பாக பேச்சிப்பாறையிலே மூலிகைப் பண்ணை இப்போது நடைபெற்று வருகிறது. அதேபோல, உங்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய, ஆனையடி எஸ்டேட் பகுதியிலே மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக விஜயம் செய்து, அங்கே ஆய்வு செய்தபோது, அன்றையதினம் நீங்களும் இருந்தீர்கள். அந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மற்றவர்களிடமும் கருத்துகளைக் கேட்டு, அந்தக் கருத்துகளையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே அந்த சாத்தியக்கூறுகள் அமையும் என்றால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அன்றையதினம் அங்கே கூட்டத்திலே தெரிவித்தார்கள். ஆகவே, இதுபோன்ற கருத்துகளையெல்லாம், மூலிகைப் பண்ணை ஆரம்பிக்க வேண்டிய கருத்துகளையெல்லாம், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற ஆண்டிலே, நிதிநிலைக்கேற்ப இந்து சமய மற்றும் அறநிலையத் துறையோடு, சுகாதாரத் துறையும் சேர்ந்து, இதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 153, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**153—**

## தொழிற்பேட்டை

***41739—திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகரில் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழிப் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

*முற்பகல் 10-55*

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டையும், அதைச் சுற்றியுள்ள பகுதியும் மிக, மிகப் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே எந்தவிதமான தொழில் வளமும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, எங்களது மாவட்டத்திலே, மானாமதுரையிலே இருக்கக்கூடிய தொழிற்பேட்டையும் இன்றைக்கு மூடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, தேவகோட்டை பகுதியிலே ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ சிவகங்கை கிளையின்கீழ் ஐந்து தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றான காரைக்குடி தொழிற்பேட்டை --காரைக்குடியிலிருந்து திருவாடனை தொகுதிக்குட்பட்ட தேவகோட்டைக்குச் செல்லும் வழியில்--சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் தேவகோட்டை ரஸ்தா என்னும் இடத்தில் ஏற்கெனவே ஒரு தொழிற்பேட்டை அமைந்துள்ளதால், புதியதாக தேவகோட்டை நகரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 14]

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டை ரஸ்தா என்பது திருவாடனை தொகுதி என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அது காரைக்குடி தொகுதியைச் சார்ந்த இடம். அது காரைக்குடி பகுதியிலே இருந்தாலும், தேவகோட்டை பகுதி மிக, மிகப் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதியிலே புதிதாக ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தரவேண்டும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம், பக்கமாக இருக்கக்கூடிய, இணைந்திருக்கின்ற, ஒன்றியுள்ள பகுதிகள் அவை. ஏற்கெனவே தேவகோட்டை ரஸ்தாவில் அமைந்துள்ள தொழிற்பேட்டையிலே இன்னும் விற்கப்படாத தொழிற்கூடங்கள் ஐந்தும், காலியிடம் 100 ஏக்கர் நிலமும் இருக்கின்றன. இந்த நிலையில் தேவகோட்டை நகருக்கு மிக அருகிலேயே இந்தத் தொழிற்பேட்டைகள் எல்லாம் அமைந்துள்ள காரணத்தால், தேவகோட்டை நகரிலே மற்றுமொரு தொழிற்பேட்டை அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டை ரஸ்தாவில் அமைந்திருக்கின்ற தொழிற்பேட்டையிலே இதுவரை எந்தவொரு ஆரோக்கியமான தொழிற்கூடமும் அமையவில்லை. பல தொழிற்கூடங்கள் காலியாக இருக்கின்றன. தொழிற்கூடங்கள் ஏற்போரே இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன ஆகவே அதை முன்னேற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** தலைவர் அவர்களே, ஒரு தொழிற்பேட்டை அமைவதற்குத் தொழில் முனைவோர்கள் முதலில் முன்வரவேண்டும். ஏற்கெனவே அரசு, தொழில் முனைவோர்களை எல்லாம் அழைத்து, அந்தந்த மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடத்தி, அந்தந்தப் பகுதியிலே என்னென்ன தொழில் செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்பது குறித்து அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் விரும்புவாரேயானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய காலியிடங்களில் தொழில் முனைவோர்கள் முன்வந்து தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் குறிப்பிட்டபோது, மானாமதுரையில் இருக்கிற அந்தத் தொழிற்பேட்டை மூடிவிடக்கூடிய நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அது சிப்காட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முத்தனேந்தலிலே சிட்கோ ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பித்து, அதில் பல கட்டடங்கள் கட்டி, இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதைத் திறந்து வைப்பதற்கு, ஓட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**154—**

## தொழிற்பேட்டை

***42143—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தொழில் வளாகம் அமைக்க இருபது ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் அமைக்க முன்வருவார்களேயானால் தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 14]

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே இருக்கின்ற திருப்பத்தூர் தொகுதி மிக, மிகப் பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் பீடித் தொழில்கள், ஊதுவத்தித் தொழில்கள் செய்பவர்களாகவும், விவசாயக் கூலிகளாகவும்தான் இருக்கிறார்கள். இந்தத் தொகுதியில் ஒரு தொழிற்சாலைகூட கிடையாது. இங்கு படித்துவிட்டு, வேலையில்லாத இளைஞர்கள் எல்லாம் 1980-வாக்கிலே தீவிரவாதச் செயல்களில் எல்லாம் ஈடுபட்டு—அன்றைய முதல்வர் டாக்டர் எம்ஜிஆர். அவர்கள் காலத்திலே, சோலையார்பேட்டையில் இருக்கிற மண்டலவாடிப் பகுதியிலே தொழிற்பேட்டை உருவாக்குவதற்காக அங்கே ஆய்வு செய்யப்பட்டு, அது கிடப்பில் இருக்கிறது—இப்போது அங்கு படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் எல்லாம் அண்டை மாநிலமான கர்நாடகத்திற்கு, வெளி மாநிலங்களுக்கு பிழைப்பைத் தேடிச் செல்கின்ற அவல நிலை இருக்கிறது.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. டி.கே. இராஜா:** மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற அந்தப் பகுதி மக்கள், ஏழை மக்கள் படித்துவிட்டு வேலையில்லாது இருக்கின்ற காரணத்தாலே, அங்கே அவசியம் தொழிற்பேட்டை உருவாக்கி வேலைவாய்ப்பை உருவாக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் ஆரம்பிக்க முன்வருவார்களேயானால், கண்டிப்பாக அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு தொழிற்பேட்டை அமைவதற்கு முதலில் மாவட்டத் தொழில் மையம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாவட்ட சிறு தொழில் அமைப்புச் சங்கம் மற்றும் வர்த்தகச் சங்கங்களைச் சேர்ந்தவர்களையும், ஆர்வம் உள்ள தொழில் முனைவோர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் விரும்புவார்களேயானால், நிச்சயமாக திருப்பத்தூரிலே தொழிற்பேட்டை அமைப்பதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### மானியக் கோரிக்கைகள், 2005-2006, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005-2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for Grants for the financial year 2005-2006."

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்மீது கொடுத்திருக்கிறோம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஏற்கெனவே அதற்குப் பதில் அனுப்பப்பட்டு விட்டது.

**திரு. இ. புகழேந்தி:** அதுகுறித்து விவாதம் பண்ணுவதற்கு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் இல்லை. பதில் அனுப்பப்பட்டு விட்டது. பதில் அனுப்பப்பட்டு விட்டது என்றால், அதற்குப் பிறகு ஒன்றும் இல்லை. அதற்குரிய, பேரவைத் தலைவருடைய பதில் உங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டது.



## 4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்

### (அ) கோரிக்கை எண் 21 - உள் துறை-காவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21 - உள் துறை-காவல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.50,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 91, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 494, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1246, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1348, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1518, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

**"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1671, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1885, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2428, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2438, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 260, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 891, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1074, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக்



கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 333, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1191, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1605, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2064, திரு. வி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2089, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 456, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் புறநகர்ப் பகுதியான தோட்டனூத்து பகுதியை மையமாக வைத்து தனி காவல் நிலையம் அமைத்திடக் கோருதல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 904, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 956, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, கடலையூரில் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1000, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, "to discuss the need to start a Police Station at Swamyamadam in Kanniyakumari District", I move—

"That the sum of Rs.1,269,21,09,000/- allocated under the Revenue Account, Rs.69,36,42,000/- allocated under the Capital Account and Rs.50,01,000/- allocated under the Loan Account under Demand No. 21 - Home Department-Police be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1114, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், சேலாஸ் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1414, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1750, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1962, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், குமராட்சி ஒன்றியம், வல்லம்படுகை

கிராமத்தில் புதிய காவல் நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 31, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 692, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி நகராட்சிப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அளவுக்கு அதிகமாக உள்ளதால் அங்கு டிராஃபிக் போலீஸ் ஸ்டேஷன் உடனே அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 768, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலையில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1029, திரு. எம். ராம்குமார்.



**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதிக்குட்பட்ட கும்பகோணம் காவல் உட்கோட்டத்தில் உள்ள திருப்புறம்பியம் ஊராட்சியில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2039, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை நகரில் போக்குவரத்து காவல் பிரிவு தனியே அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1131, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2031, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1653, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் பெண் காவலர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2346, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் மகளிர் உதவி ஆய்வாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1316, திரு. ஜெ. அன்பழகன்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தியாகராய நகர் தொகுதியில் போக்குவரத்தினை சீர்செய்ய R1 காவல் நிலையம், R4 காவல் நிலையம் ஆகிய இரு காவல் நிலையங்களுக்கு அதிக போக்குவரத்துக் காவலர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2078, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், நெல்லை மாநகராட்சியில் நெல்லை— தூத்துக்குடி சாலையில் வண்ணாரப்பேட்டையில் போக்குவரத்து மற்றும் பயணிகள் சாலையைக் கடந்து செல்ல காவலரை நியமிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக்



கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2156, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் துறையில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2022, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் காவல் நிலையத்தில் காவலர்களின் எண்ணிக்கையினை உயர்த்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 68, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடியில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தொடங்கவும், மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், மீமிசல், திருப்புனவாசல் ஆகிய இடங்களிலுள்ள காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 421, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கண்ணுமாமூடு என்னுமிடத்தில் காவல் நிலையம் கட்டுவதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 607, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்தும், உசிலம்பட்டியில் இயங்கி வரும் மகளிர் காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தருவதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 608, திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 630, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை காவல் நிலையத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 932, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை காவல் நிலையம் முற்றிலும் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1472, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதி, சிவகாசி நகர் காவல் நிலையத்திற்கு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2496, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவாலங்காடு காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,269,21,09,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,36,42,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 22 – உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22 - உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/-க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல்: வெட்டுத் தீர்மானம் எண் 101, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 484, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 775, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1237, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1368, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1527, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1700, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1824, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2232, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம், அச்சிறுப்பாக்கம், உத்திரமேரூர் போன்ற இடங்களில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றமையை மாற்றி சொந்தக் கட்டடத்தில் இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2251, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1065, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 343, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1475, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1603, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2055, திரு. வி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2409, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீயணைப்புத் துறைக்கு போதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 422, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு வருவாய் கிராமத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 685, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி நகராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 888, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 959, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், எட்டையபுரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1010, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதிக்குட்பட்ட திருப்புறம்பியம் மற்றும் அய்யம்பேட்டை பகுதிகளில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1178, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மல்லிப்பட்டினம் ஊராட்சியில் தீயணைப்பு நிலையம் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1640, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேச்சேரியில் தீயணைப்பு நிலையம் ஒன்று புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1756, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2024, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியில் நாவல்பட்டு, அண்ணாநகர் பகுதியில் தீயணைப்பு நிலையம் இயங்குகிறது. திருவெறும்பூரின் மையப் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2077, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், நெல்லை மாநகராட்சி, மேலப்பாளையம் நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2355, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரப் பகுதியான அஸ்தம்பட்டி, குரங்குச்சாவடி மற்றும் மாவட்டத்தில் உள்ள வாழப்பாடி பகுதிகளில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2501, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் புதிய தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1097, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிப் பேருந்து நிலையத்தில் நெரிசலைத் தவிர்க்க அங்குள்ள தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 69, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகரிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதிதாகத் தீயணைப்பு வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2041, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை நகரில் உயரமான கோபுரங்களும், உற்சவத் தேர்களும் இருப்பதால் தீயணைப்புத் தடுப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவம் கருதி, Snooker ஏணி கொண்ட தீயணைப்பு ஊர்திகள் திருவண்ணாமலை நகருக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 262, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அனுப்பானடியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கூடுதல் வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 451, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீயணைப்புத் துறையில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது குறித்து" விவர்திக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 929, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1132, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, நாகை மாவட்டம், கீழ்வேலூரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2449, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியூர் தொகுதி, அந்தியூரில் உள்ள தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது, சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 606, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியிலுள்ள தீயணைப்பு நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் துறையின் சார்பில் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும், தொகுதிக்கு ஒன்று என்று உள்ள தீயணைப்பு நிலையங்களை ஒன்றியத்திற்கு ஒன்று என ஏற்படுத்துவதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 670, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

***திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை, எளிய மக்கள் அதிகம் வாழுகின்ற குடிசைப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க, குடிசைப் பகுதிகளில் துறை சார்பாக நிரந்தரமாகத் தீயணைப்பு சாதனங்கள் பொருத்துவது மற்றும் குடிசைப் பகுதி மக்களுக்கு, தீ விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.68,54,95,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை-காவல் மற்றும் உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை



விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. ஜெ. அன்பழகன்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு காவல் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையிலேகூட தமிழகத்திலே உள்ள அனைத்துத் துறைகளையும்விட, காவல் துறைக்குத்தான் அதிகமாக நிதியினை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஒரு வேளை, முதலமைச்சரே அந்தத் துறையைக் கவனிப்பதால், நிதி அமைச்சர் அவர்கள் அந்த நிதியினை ஒதுக்கியிருக்கலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே குறுக்கிட வேண்டாம் என்று நான் எண்ணியிருந்தேன். இன்று குறுக்கிடுவதில்லை என்ற முடிவோடுதான் வந்திருந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, எடுத்த எடுப்பிலேயே தவறான ஒரு தகவலை இங்கே சொல்லியிருக்கிறார். நிதிநிலை அறிக்கையில் மற்ற எல்லாத் துறைகளையும்விட காவல் துறைக்குத்தான் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார். அது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2005-2006 நிதிநிலை அறிக்கையில் காவல் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1,339.33 கோடி ரூபாய். கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 4,348.01 கோடி ரூபாய். நெடுஞ்சாலைத் துறை-Highways Department-க்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 2,991.47 கோடி ரூபாய். Rural Development -ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 2,416.07 கோடி ரூபாய். Health and Family Welfare Department-மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1,652.24 கோடி ரூபாய். Public Works Department-

@ 139 முதல் 231 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1,372.41 கோடி ரூபாய். ஆக, இத்தனை துறைகளுக்கு, காவல் துறையைவிட அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-15*

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதில் நிதி அமைச்சருக்குத்தான் என்பதையும் தெரிவித்துக்கொண்டு,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், என்ன பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெளிவோடு பேசுகிறாரா அல்லது ஏதேனும் உளறுகிறாரா என்று புரியவில்லை. இந்த விளக்கத்தை நேற்றே நான் அவையில் சொன்னேன். காவல் துறையைவிட மற்ற துறைகளுக்கு, எந்தெந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். நீங்கள் ஒன்று, நேற்று அவைக்கு வராமல் இருந்திருக்க வேண்டும் அல்லது வந்தும் தூங்கிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இப்படியெல்லாம் பேசுவது முறை இல்லை என்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூறிக்கொள்கிறேன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாண்புமிகு உறுப்பினர் தெரிந்தோ, தெரியாமலோ கூட *(கூச்சல்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, mistake இல்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் எழுந்து நின்று, ஒரு துறைக்கு மட்டுமல்ல, எத்தனை துறைகளுக்கு அதிகம் ஒதுக்கி இருக்கிறோம் என்பதை மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அதுதான் முறையே தவிர, ஒரு உறுப்பினர் பேசுவதை, உளறுகிறார் என்று இந்த அவையில் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். சொன்னவுடனே, 'இந்த பதில் நிதி அமைச்சருக்குத்தான்' என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கவனிக்காமல்



இருந்துவிட்டார் என்று கருதுகிறேன். திரு. அன்பழகன் அவர்கள் கூறியது, முதலமைச்சர் அவர்கள் கூறிய பதில் நிதி அமைச்சருக்குத்தான் என்று சொன்னார். இது கிண்டல் அல்லவா?

**திரு. துரைமுருகன்:** அது இருக்கலாம். அதற்கு நீங்கள் என்ன சொல்லியிருக்க வேண்டும்? *(கூச்சல்)* உங்களுக்குத்தான் சொன்னாரே தவிர, அது எனக்கில்லை என்று சொல்லி இருக்க வேண்டும். உளறுகிறார் என்பதை நீங்கள் அவைக் குறிப்பில் வைக்கிறீர்களா? வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் உண்மையிலேயே உளறத்தான் செய்தார். உளறல்தான் அது. *(குறுக்கீடு)* நீங்கள் பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளறுகிறவர்களுக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. இந்தக் கொள்கை விளக்கப் புத்தகம்—இந்தப் புத்தகத்திலே பெண்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள், அதிலே குறிப்பிடுகிறபோது 2003 ஆம் ஆண்டு கற்பழிப்புக் குற்றங்கள் 547 என்றும், 2004, இந்த ஆண்டு 618 ஆக அது உயர்ந்திருக்கிறது. ஆள் கடத்தல் குற்றம் 641 ஆக இருந்தது, இந்த ஆண்டு 692 ஆக மாறியிருக்கிறது. இவர்கள் காவல் நிலையங்களை அதிகமாக நாங்கள் ஆரம்பித்திருக்கிற காரணத்தால், அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், குற்றங்கள் கொஞ்சம் பெண்களுக்கு எதிராகக் கூடியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட குற்றங்களை, அதிக காவல் நிலையங்கள் இருக்கிற காரணத்தால் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறை மானியத்திலே உரையாற்றுவதற்கு முன்பாக, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்தபோதுதான் 1969 ஆம் ஆண்டுதான் காவல் துறைக்குப் பதக்கம் வழங்கும் விழாவை நடத்தினார்கள். தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது அந்த விழா நடைபெற்றது. 1989 ஆம் ஆண்டுதான்—நடுவிலே தி.மு.க. ஆட்சி மாறிய பிறகு அந்தத் திட்டத்தையே நிறுத்திவிட்டார்கள்.—மறுபடியும் தி.மு.க. 1989 ஆம் ஆண்டு வந்த பிறகுதான் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 1997 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தினுடைய விழாவிலே பேசும்போது எங்களுடைய தலைவர் அவர்கள், 'தமிழகக் காவல் துறை கடந்த காலத்திலே ஓரளவு சீர்குலைந்துவிட்டது என்றாலும்கூட, இன்றைக்கு அந்தச் சீர்குலைவு ஒழுங்காக ஆக்கப்பட்டு

செம்மையான முறையிலே காவல் துறை பணிபுரியத் தொடங்கியிருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார். 1998 ஆம் ஆண்டுகூட திருச்சியிலே நடைபெற்ற அந்தப் பதக்க விழாவில், 'கடந்த 2 ஆண்டு காலத்தில் காவல் துறையின் செயல்பாடுகள் பாராட்டத்தக்க வகையிலே இருந்தது' என்றும் சொல்லியிருக்கிறார். ஆக, காவல் துறை பதக்கம் வழங்கும் விழாவை தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சென்னையிலே நடைபெற்ற ஒரு விழாவில் பேசும்போது நம்முடைய முதலமைச்சர், 'காவல் துறையினரை சென்னைக்கு அழைத்து குறை கேட்ட ஒரே முதல்வர் அவர்தான்' என்று பெருமைப்பட்டுக்கொண்டு பேசினார்கள். குறை கேட்பது என்ற பெயரால், ஒரு நேரத்தில் 50, 60 பேரை அறைக்குள் அழைத்து அவர்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டது உண்மைதான். ஆனால் அந்த மனுக்களில் எத்தனை பேர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன என்பதும் முக்கியம். ஆனால் அதற்குப் பிறகு காவலர்களை அழைத்துப் பேசுவது என்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. காவலர்களை அழைத்துப் பேசியபோது, தொடர்ந்து 3 மாதத்திற்கு ஒரு முறை அழைத்துப் பேசுவோம் என்று உறுதிமொழி சொன்னீர்கள். அந்த உறுதிமொழி என்ன ஆயிற்று?

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களின் குறைகளைக் கேட்பது என்ற அந்தத் திட்டத்தையே சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார். ஒரு முறை, மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக, அவர்களுடைய கடமையை நினைவூட்ட அனைத்துக் காவலர்களையும், காவல் துறை அதிகாரிகளையும் இங்கே கோட்டைக்கு வரவழைத்து, கிட்டத்தட்ட 8,000 பேர்களிடம் அவர்களிடமிருந்து குறைகளைக் கேட்டு மனுக்களைப் பெற்றேன். 5 நாட்கள் இந்தச் சந்திப்புகள் நிகழ்ந்தன. அதன் பிறகு ஒரு Grievance Redressal Mechanism ஏற்படுத்தப்பட்டு, D.G.P. —காவல் துறை தலைமை இயக்குநரிலிருந்து தொடங்கி, அதன் பின்னர் படிப்படியாக A.D.G.P., பின்னர் Range D.I.G, மாவட்ட S.P. வரை, அவர்களுக்குக்கீழ் பணிபுரியும் காவலர்களை அழைத்து மாதந்தோறும் அவர்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்டு, களையும் முறை நடைமுறையில் இருக்கிறது. அது தவறாமல் நடைபெற்று வருகிறது, கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதைத்



தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, காவலர்களின் குறைகளைக் கேட்கும் திட்டமே கைவிடப்பட்டது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பான செய்தி, தவறான தகவல்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சரின் கடந்த கால ஆட்சியில் அவர்களிடம் முக்கியப் பொறுப்புகள் வகித்த காவல் துறை அதிகாரிகளுக்குக் கழக ஆட்சியின்போது மிக முக்கியமான பொறுப்புகளையும், இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அந்த ஆட்சியில் வகித்து வந்த அதே பதவிகளையும் கொடுத்து கௌரவித்தோம். ஆனால் கழக ஆட்சியிலே துறைகளில், காவல் துறையில் பணியாற்றிய பெரிய அதிகாரிகளை இவர்கள் எந்தப் பணியும் தராமல் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பொத்தாம் பொதுவாக காவல் துறை அதிகாரிகளுக்கு எந்தப் பொறுப்பும் தராமல் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதிலிருந்து என்ன புரிந்துகொள்வது? எந்தக் காவல் துறை அதிகாரிக்கு எந்தப் பொறுப்பும் கொடுக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், பதில் சொல்ல முடியும்.

**திரு. ஜெ. அன்பழகன்:** காவல் துறை D.G.P.-ஆக அ.தி.மு.க.வில் செயல்பட்ட ஒரு அதிகாரியை கழக ஆட்சிக் காலத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் D.G.P.-ஆக நியமித்தார். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், அதிகாரிகளை எப்படி, எப்படி, எந்தெந்தத் துறைக்கு, எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பது அரசு செய்யக்கூடிய முடிவு. அது வந்து.... (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** **அந்த அதிகாரிகள் பதவி வகித்த காலத்தில்தான் கலைஞர் அவர்களை நள்ளிரவிலே கைது செய்தார்கள். எந்த அதிகாரியைப் பிடிக்காமல் தூக்கி எறிந்தீர்களோ, அவர் இங்கேயிருந்து டெல்லிக்குச் சென்றுவிடலாம் என்று நினைத்து, அங்கே முயற்சி செய்து செல்லும்போது தமிழக அரசு அவரை அனுப்ப மறுத்தது. ஆகவே, அவர் எப்படியோ டெல்லிக்குச் சென்றார். அவருக்குப் பதிலாக வந்த D.G.P. சில மாதங்களிலே suspend செய்யப்பட்டார்கள். அதுபோல சென்னை மாநகரத்தின் காவல் துறையில், கழக ஆட்சியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர், திறமையான அதிகாரி பணியாற்றி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வந்தார். ஆனால், கழக ஆட்சி முடிந்து இந்த நான்கு ஆண்டு காலத்தில் அந்த அதிகாரி எந்தப் பணியில் இருக்கிறார் என்றே தெரியவில்லை. அந்த அதிகாரி பணியாற்றிய காலத்தில்தான் சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடுகின்ற பணியிலேகூட ஈடுபட்டிருந்தார். அதற்காக முதல்வர் அவர்கள் விருந்து அளித்த நேரத்தில்கூட, முதல்வரே நேரடியாக விருதினைத் தராமல் ஒதுக்கப்பட்டார் என்று செய்தி வந்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் எந்த விவரங்களும் தராமல் பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார். காவல் துறை உயர் அதிகாரிகள் தூக்கி எறியப்பட்டார்கள் என்றெல்லாம் கூறுகிறார். ஒரு காவல் துறை அதிகாரி, அதுவும் D.G.P. அந்தஸ்தில் இருக்கின்ற ஒரு காவல் துறை அதிகாரியை யாரும் தூக்கி எறிய முடியாது. ஒரு posting-லிருந்து இன்னொரு posting-க்கு transfer செய்யலாம். அவ்வளவுதான். ஆகவே, யாரும் தூக்கி எறியப்படவில்லை. எல்லோருக்கும் ஏதோ ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடனே, அன்றைக்கு Chief Secretary- யாக இருந்த ராயப்பா அவர்களையும், I.G.-யாக இருந்த மகாதேவன் அவர்களையும் அன்றே பணியிலிருந்து விடுவித்தார்கள் என்பதுதான் வரலாறு கண்ட உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, 1996-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அன்றைக்கு தலைமைச் செயலாளராக இருந்த திரு. ஹரிபாஸ்கரை suspend செய்தது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பெயரைச் சொல்ல வேண்டாம் என்பதற்காக அல்ல, சொல்லக் கூடாது என்பதற்காகவும் அல்ல, சொல்ல வேண்டுமென்று சொன்னால் நான் பெயரைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. அவர்களுக்குத் தெரியும், முதலமைச்சருக்குத் தெரியும்,** நான் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. வேண்டுமென்றால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



சொல்கிறேன், அதுபற்றி எனக்கு ஒன்றுமில்லை. நான் இதிலே உங்களுக்குச் சொல்ல விரும்புவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அரசியல்வாதி, நீங்களும் அரசியல்வாதி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** I.A.S. அதிகாரிகளானாலும் சரி, I.P.S. அதிகாரிகளானாலும் சரி, அனைவரையும் நான் சமமாக மதிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** நாங்களும் அரசியல்வாதி, நீங்களும் அரசியல்வாதி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அரசியல்வாதி, நீங்களும் அரசியல்வாதி. இருவருக்கும் கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அரசியல்வாதிகள்தான். ஆனால், நாங்கள் தரமுள்ள அரசியல்வாதிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பேரும் அரசியல்வாதிகள். யாருக்குத் தரம் என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். நான் சொல்ல வந்தது, இதிலே ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சட்டமன்றப் பேரவை உறுப்பினராக நான் சொல்லப் போகிற கருத்தில் தவறாக உங்கள்மீது குற்றம் சாட்டவில்லை. இரண்டு பேரும் அரசியல்வாதிகளாக இருக்கின்ற நேரத்திலே ** உங்களுக்கு நான் இங்கே சொல்ல விரும்புவது, தற்போது நீங்கள் சொன்னீர்கள், **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கூற்றுக்களையெல்லாம் அவைக் குறிப்புக்களில் இருக்க அனுமதிப்பதே தவறு என்று கருதுகிறேன். இப்படிப் பொத்தாம் பொதுவாக எந்தக் காரணமும் இன்றி, எந்த அடிப்படையும் இன்றி **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், அதாவது, ** அப்படியென்கிற கருத்துப்பட சொல்வது முறையற்றது. தாங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

குறிப்பிட்ட அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மேற்கொண்டு பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** சற்றும் ஆதாரமில்லாமல், அவர்கள் கூறிய கூற்றுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ** என்று ஏதேதோ பேசுகிறார். அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஜெ. அன்பழகன்:** தொடர்ந்து காவல் துறை நிகழ்ச்சியிலே நம்முடைய முதல்வர் அவர்கள் பேசுகிறபோது, தி.மு.க. ஆட்சியைக் குறை சொல்லி, தி.மு.க. ஆட்சியிலே இருந்த காவல் துறையைப் பற்றிக் குறை சொல்லிப் பேசியிருக்கிறார்கள். ஆகவேதான், நான் அவற்றைக் குறிப்பிடுவதற்குக் காரணம், 1969 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலேயும், 1989 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலேயும் முறையே கோபாலசாமி, I.P.S., சபாநாயகம், I.A.S., ஆகியோருடைய தலைமையில் காவல் துறைக்காக இரண்டு கமிஷன்கள் அமைக்கப்பட்டன என்பதும், இந்தியாவிலேயே காவல் துறைக்காகத் தனியாக கமிஷன் அமைக்கப்பட்டு, அதன் 15 பரிந்துரைகளை நிறைவேற்றியதும் தி.மு.க. ஆட்சி என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மத்திய அரசின் காவல் துறைப் பணியாளர்களுக்கு ஈடாக, இன்னும் சொல்ல வேண்டுமென்றால் அதிகமாகச் சம்பளம் வழங்கியது தி.மு.க. ஆட்சி. உங்களுடைய கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியைவிட தி.மு.க. ஆட்சி இரண்டு மடங்காக நிதியினை ஒதுக்கி இந்தத் துறைக்காக நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆக, தி.மு.க. ஆட்சியிலே பல்வேறு வகையிலே நாங்கள் காவல் துறை அதிகாரிகளுக்காக நன்மைகளைச் செய்திருக்கிறோம் என்பதனையும்...

முற்பகல் 11-30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேசுகின்றபோது, இந்த உறுப்பினர், 'நாங்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறோம்' என்றார். இப்போது ஆட்சியில் இருப்பது நாங்கள் அல்லவா? இல்லை, நான்தான் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிறேனா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. ஜெ. அன்பழகன்:** இல்லை. 1991-1996-ல். (கூச்சல்-குழப்பம்) போலி முத்திரைத் தாள் மோசடி வழக்கில் தமிழக அரசினுடைய C.B., C.I.D., D.I.G., முகமது அலி, உதவி கமிஷனர் சங்கர், L.I.C. அதிகாரி சாது ராமசாமி ஆகியோர் 1-7-2004 அன்று கைது ஆனார்கள். இவர்கள்மீது 90 நாட்களுக்குள் C.B.I. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாததால், இவர்கள் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததற்கு C.B.I. வழக்கறிஞர் தெரிவித்த காரணம், 'தமிழக அரசு கடிதம் எழுதவில்லை. குடியரசுத் தலைவர் ஒப்புதல் கிடைக்கவில்லை. சங்கர் மாநில அரசின் அதிகாரி. இவரைப் பணி நீக்கம் செய்ய மாநில அரசின் உதவி தேவை. அதுவும் கிடைக்கவில்லை. அதனால்தான் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடியவில்லை' என்று சொன்னார். இது சில மாதங்களுக்கு முன்பு இருந்த நிலை. தற்போது என்ன நிலை என்பது தெரியவில்லை. ஆகவே இதுகுறித்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி முத்திரைத் தாள் மோசடி வழக்குகளைப் பற்றி ஏற்கெனவே பல முறை விரிவாக இந்த அவையிலேயே எடுத்துரைத்து இருக்கிறேன். இந்த போலி முத்திரைத்தாள் சம்பந்தப்பட்ட 19 வழக்குகளை C.B.I. விசாரணைக்கு நான்தான் கொடுத்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மைக்கை இன்றைக்காவது ready பண்ணுங்கள். நாங்கள் பேசுகிறோம் என்று இது மாதிரிப் பண்ணிவிட்டீர்கள்போல இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய காவல் துறை செயல்பாட்டினைப் பற்றி நாங்கள் எங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்குப் பதிலாக, நீதிமன்றங்களிலே நீதிபதிகள் சிலர் வழங்கிய தீர்ப்புகளைப் படித்தாலே இந்த அவை புரிந்துகொள்ளும் என்று நான் கருதுகிறேன். 1991-1996 ஆம் ஆண்டு காலத்தில் கொடைக்கானல் Pleasant Stay Hotel வழக்கில் தீர்ப்பு வந்தபோது...
(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறை மானியக் கோரிக்கைக்கு சம்பந்தம் இல்லாதது இவையெல்லாம்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறை மானியக் கோரிக்கைக்கு சம்பந்தம் இல்லாதது.

**திரு. ஜெ. அன்பழகன்:** தருமபுரியிலே 3 மாணவிகள் இறந்ததற்கு, இறந்து போனதற்காக-இறந்து போன ஒரு மாணவியின் தந்தையார் வழக்கு மன்றத்திற்கு வந்து வழக்குப் போட்டார். அதிலே நீதிபதி கனகராஜ் அவர்கள் அளித்த தீர்ப்பினுடைய முக்கியப் பகுதி; 20-9-2003 அன்று அவர் அளித்த தீர்ப்பு: "வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதால் இவ்வழக்கை அநாதைக் குழந்தைகள்போல போலீஸ் அதிகாரிகள் நடத்துகிறார்கள். போலீஸ் மீதான நம்பிக்கை, நன்மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்துகொண்டார்கள். இந்த இமாலயத் தவறுக்காக உள் துறைச் செயலாளர் மற்றும் C.B., C.I.D., கூடுதல் S.P. ஆகியோரை இந்த நீதிமன்றம் கண்டிக்கிறது. அரசுத் தரப்பு சாட்சியங்களைக் கலைப்பதற்கு அனுமதி அளித்த குற்றத்திற்காக, C.B., C.I.D., கூடுதல் S.P. மீது, அதன் I.G. ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தின் வலிமையையும், கம்பீரத்தையும் நிலைநாட்டவும், இவ்வழக்கில் நியாயமான, சுதந்திரமான விசாரணை நடைபெறவும், இவ்வழக்கு தருமபுரி செஷன்ஸ் நீதிமன்றத்திலிருந்து சேலம் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்படுகிறது. தவறான சாட்சி அளித்தது, பொய்யான அறிக்கையிலே கையெழுத்திட்டது, வழக்கு சம்பந்தப்பட்ட ஆதாரங்களை அழிக்கக் காரணமாக இருந்தது, குற்றவாளிகள் சட்டபூர்வ நடவடிக்கையில் இருந்து தப்பிக்கக் காரணமாக இருந்தது போன்ற குற்றங்களுக்காக விருப்பாட்சிபுரம் கிராம நிர்வாக அலுவலர், உதவியாளர்கள்மீது வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் தொடர்ந்து கூறுகிறபோது, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அன்பழகன். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் குறிப்பிடும் கண்டனங்கள் தனிப்பட்ட அதிகாரிகளின் செயல்பாடுகளைப் பொறுத்தவை ஆகும். சில, காவல் துறை அதிகாரிகளின் தனிப்பட்ட நடத்தை சம்பந்தப்பட்டவை ஆகும். இதுபோன்ற குற்றச்சாட்டுகளால் ஒட்டுமொத்த காவல் துறையே களங்கப்பட்டுவிட்டதாகக் கருதுவது சரியல்ல. பல சமயங்களில் நீதிமன்றங்கள் காவல் துறையைப் பாராட்டியும் கருத்துகள் தெரிவித்திருக்கின்றன. வீரப்பன் குறித்து தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கு ஒன்றில் உயர் நீதிமன்றம், அதிரடிப் படையினரைப் பாராட்டி, அவர்களின் முயற்சி தமிழ்நாடு காவல் துறைக்கு நல்ல பெயரைத் தேடித் தந்தது மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) உலக அளவில் இந்தியாவிற்கே பெயரும், புகழும் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது



என்று கூறி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கௌரவித்த அரசின் நடவடிக்கைக்கும் பாராட்டுத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஜாய் இமாகுலேட் என்ற பெண் தாக்கல் செய்த வழக்கில், அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட அதே சமயத்தில், அப்போது மாநகரக் காவல் துறை ஆணையாளராக இருந்த திரு. விஜயகுமாரின் நேர்மையிலும், திறமையிலும் முழு நம்பிக்கை வைத்து இருப்பதாக உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுக் கூறியுள்ளது. பின்னர், உச்ச நீதிமன்றம் ஜாய் இமாகுலேட்டுக்குக் கொடுத்த நஷ்டஈட்டை ரத்துச் செய்து உத்தரவு பிறப்பித்ததும் குறிப்பிடத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற வழக்குக்குள்ளே புகுந்து கருத்துகளைச் சொல்லாதீர்கள். அத்துடன் முடியுங்கள். (குறுக்கீடு) 5 மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்னதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அரசாங்கத்தைப் பாராட்டியதை ஏற்றுக்கொள்கிறோம். எதிர்க்கட்சிகள் நாங்கள் சொல்கிற, இந்தக் கண்டனம்—நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிற கண்டனத்தையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. அந்த மாணவிகள் வழக்கு மீண்டும் 18-2-2005 அன்று விசாரணைக்கு வருகிறது, மீண்டும் அதே நீதிபதி கனகராஜ் திரும்பவும் தீர்ப்பு எழுதுகிறார், "மாணவிகளை எரித்த வழக்கை சேலம் Court விரைவாக நடத்த வேண்டும்...."

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு வழக்கைப் பற்றி இந்த அவையில் பேசுவது தவறாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், நீதிமன்றத்தில் அந்த வழக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே புகுந்து, அதிலே கருத்துச் சொல்லும்போது அந்த வழக்கை பாதிக்கும் அல்லவா அது? நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு வழக்கு அது. வேறு ஏதாவது சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து

விவாதிப்பது என்பது *sub-judice*. பேருந்து எரிப்பைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்குத் தகுதியில்லை. உங்களுடைய மு.க. ஸ்டாலினுக்கும், மு.க. அழகிரிக்கும் ஏற்பட்ட வாரிசு அரசியல் போரில் 40 பேருந்துகள் எரிக்கப்பட்டதற்கு என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்தீர்கள்? *(குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றங்களைப் பற்றி, நீதிபதிகளைப் பற்றிப் பேசுகிறார்கள். நன்றாகத் தெரியும். *(குறுக்கீடு)* நான் சொல்லி விடுகிறேன் *(குறுக்கீடு)* சொல்லி முடித்து விடுகிறேன். கேளுங்கள். நீங்கள் பேசும்போது நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். முதலில் கேட்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரைப் பேசவிடுங்கள். நீங்கள் குறுக்கே பேசாதீர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நீதிமன்றங்களைப் பற்றி— இன்றையதினம் நீதிபதிகள் எல்லாம் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள்; தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் செய்தது என்பது இந்த நாட்டுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நீதிபதிகள் தீர்ப்பு வரும்போது, நீதிமன்ற வாயிலிலும் சரி, நீதிமன்றக் கட்டடங்களைச் சுற்றியும், 'வாங்கிய தீர்ப்பா, வழங்கிய தீர்ப்பா' என்று wall poster அடித்தது யார் என்பது இந்த நாட்டுக்கு நன்றாகத் தெரியும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு உங்களைப் பொறுத்தது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் ஜெயக்குமார் அவர்கள் சொன்னார்கள். இல்லாத பிரச்சினையை, இந்த அவையில் இல்லாத அழகிரியை இழுத்து, ஸ்டாலினுக்கும், அவருக்கும் வாரிசுப் போர் என்று இழுத்திருக்கிறார். வாரிசுப் போரும் கிடையாது, ஒன்றும் கிடையாது. இல்லாத பூனையை அவர் இருட்டறையில் தேடுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் நடந்த உண்மையான நிகழ்ச்சி அது. சட்டமன்றத்தில் அமைச்சர் சொன்னது உண்மை. 40 பேருந்துகள் கொளுத்தப்பட்டன.



ஒரு பெண் உயிருடன் எரிக்கப்பட்டார்; அந்த பஸ்ஸில் அமர்ந்திருந்தபோது எரிக்கப்பட்டார். இரண்டு நாட்கள் bandh போன்று நடைபெற்றது. மு.க. அழகிரி, ஸ்டாலின் அவர்களுடைய போரானது, அங்கே இரண்டு நாட்கள் இயற்கை bandh-ஆக நடப்பதுபோன்று செயற்கை bandh-ஆக நடத்தப்பட்டது. இரண்டு நாட்கள் பஸ்கள் ஓடவில்லை. கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. *(குறுக்கீடு)* உருட்டுக் கட்டைகளோடு *(குறுக்கீடு)* இருங்கள், இருங்கள் பேசலாம், சகோதரர்களே இருங்கள், இருங்கள், பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** உருட்டுக் கட்டையோடு *(குறுக்கீடு)* இருங்கள், இருங்கள் *(குறுக்கீடு)* இருங்கள், இருங்கள் brother.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** உருட்டுக்கட்டையை எடுத்துக்கொண்டு தி.மு.க.வுடைய சமூக விரோதிகள் அத்தனை கடைகளையும் அடித்து உடைத்தார்கள். இது உண்மை. பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. *(குறுக்கீடு)* பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வாக்கியத்தில் முடியுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** அங்கேயிருக்கின்ற எங்களுடைய டி.வி.— ஜெயா டி.வி. நிருபரை அடித்து மண்டையை உடைத்தார்கள். அவர்கள் முன்னால், அவருடைய அடகுக் கடை முன்னால் நாங்கள் மறியல் செய்தோம். எங்களையும் கைது செய்தார்கள், உள்ளே கொண்டு வைத்திருந்தார்கள். இரண்டு நாட்கள் bandh நடந்தது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்ததும் பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** பேரவைத் தலைவருக்கு நன்றாகத் தெரியும். பேரவைத் தலைவர் அவர்கள் மதுரையைச் சேர்ந்தவர். அதற்கு அம்மா அவர்கள் தெளிவாக அறிக்கை விட்டிருந்தார்கள். பொதுக் கூட்டத்தில் தெளிவாகப் பேசினார்கள். மதுரையில் நடந்தது உண்மையான bandh-ஆ, செயற்கை bandh-ஆ என்று அன்றைக்கு இரண்டு நாட்கள் நடந்தது பற்றி அம்மா அவர்கள், தி.நகரில் நடந்த ஒரு பெரிய பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில், உயிரோடு ஒரு வயதானவர் எரிக்கப்பட்டார் என்பதைப் பற்றி புரட்சித் தலைவி மாண்புமிகு இதய

[திரு. வி.ஆர். ராஜாங்கம்] [2005 மார்ச் 14

தெய்வம் அம்மா அவர்கள் பேசியிருக்கிறார்கள். இது உண்மையான நிகழ்ச்சி. உங்களுடைய வாரிசுப் போர் அங்கே நடத்தப்பட்டு, இரண்டு நாட்கள் மதுரையில் bandh நடத்தப்பட்டது. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் நடத்தப்பட்டது. இது உண்மை, உண்மை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது உண்மை இல்லையென்றால், உண்மை இல்லை என்று நிரூபித்தால், அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று இந்தச் சட்டமன்றப் பதவியை விட்டு நான் வெளியேறுவதற்குத் தயாராக இருக்கிறேன். உண்மை, உண்மை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தாங்கள் இந்த அவையில் ஒரு தீர்ப்பு வழங்கியதை மட்டும் நான் திருப்பிச் சொல்கிறேன். பொதுவாக ஸ்டாலினுக்கும், அழகிரிக்கும் ஒரு பகைமையை உருவாக்க சிலர் முயற்சிக்கிறார்கள். அது முடியாது. அது யார் என்று சொல்லவில்லை. ஆனால் ஏதோ அவர்களுக்குள் பகை உள்ளதாகவும், உள்நாட்டு யுத்தம் நடந்ததைப்போலவும் ஒரு மாண்புமிகு உறுப்பினர்— நீங்கள் அனுமதித்தால் சொல்கிறேன்— உளறிக்கொண்டிருக்கிறார். அதை நிறுத்துங்கள். (குறுக்கீடு)

முற்பகல் *11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அன்பழகன். (குறுக்கீடு) அன்பழகன், நான் குறிப்பிட விரும்புவது, நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய ஒரு பிரச்சினைக்குள்ளே புகுந்து கருத்துச் சொல்லக்கூடாது. அது நீதிபதியே சொல்லியிருந்தால்கூட, அதைச் சொல்லக்கூடாது. ஏன் என்றால், நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வழக்கை அது பாதிக்கும். ஆகவே, வேறு கருத்து ஏதாவது இருந்தால் நீங்கள் பேசுங்கள். பேசி முடியுங்கள். இரண்டு மணித்துளிகளிலே பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்றத்தினுடைய எந்த வழக்கிற்குள்ளும் செல்ல விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற விதிமுறையிலே 'நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின்மீதும் தம் கருத்துச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது' என்று இருக்கிறது. அது விதிமுறைக்குப் புறம்பானது.



2005 மார்ச் 14]

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாத்திரம் அல்ல, பல வழக்குகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** பல வழக்குகளிலே நீதிமன்றம் தீர்ப்புகளைக் கூறியிருக்கிறது. அதுபோல, சிவகாசி ஜெயலெட்சுமி வழக்கிலேயும் கூறியிருக்கிறது. அதே மாதிரி, ஒரு போலீஸ், பேராசிரியருடைய (மணியடிக்கப்பெற்றது) நான் ஒன்றும் உள்ளே போகவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், நான் என்ன சொன்னேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லையா?

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் ஒன்றும் உள்ளே போகவில்லையே? (குறுக்கீடு) நான் ஒன்றும் உள்ளே போகவில்லையே?

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் வேறு பொருளைத் தேடுவதற்குள், கடந்த வெள்ளிக்கிழமையன்று திரு. ஸ்டாலின் அவர்கள் இந்த அவையில் தெரிவித்த ஒரு புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*11-3-2005* அன்று சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் பங்கேற்றுப் பேசியபோது, ஒரு புகைப்படத்தைக் காட்டி, சென்னை, அண்ணா நகர், 3-வது நிழற்சாலையில் விளம்பரப் பலகைகளை மறைத்த மரக் கிளைகள் வெட்டப்பட்டது குறித்து எந்தவித நடவடிக்கையும் இல்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார். பசுமையைக் காப்பாற்றுவதிலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் உறுதியுடன் இருக்கும் எனது அரசு இதுகுறித்து சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அப்போதே நான் தெரிவித்திருந்தேன். அதனடிப்படையில் இந்தப் பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விளக்கத்தைத் தற்போது இந்த அவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

அண்ணா நகர், 3-வது நிழற்சாலையின் ரவுண்டானா அருகே மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டிருப்பதாகவும், அந்த மரங்கள் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானவை என்றும், இவ்வாறு அந்த மரக் கிளைகளை வெட்டியவர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், சென்னை மாநகராட்சி, மண்டலம்

5-ன் பூங்கா மேற்பார்வையாளர், அண்ணா நகர் கே-4 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது அண்ணா நகர் கே-4 காவல் நிலையத்தில் எண் 64/K4/CSR/05, நாள் 15-2-2005-ன்படி முதலில் சமுதாயப் பணிப் பதிவேட்டில் ஒரு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பின் இதன்மீது ஆய்வு மேற்கொண்டு, 12-03-2005 அன்று இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 427 மற்றும் அதனுடன் சேர்ந்து தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்புத் தடுத்தல் சட்டத்தின்—Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act, பிரிவு 3, உட்பிரிவு 1-ன்கீழ் குற்ற எண் 737/05-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதுகுறித்து விசாரணை மேற்கொண்டபோது, அண்ணா நகர், ஏ-பிளாக், 13 ஆம் எண் கொண்ட கட்டடத்தின் காவல்காரராக, அதாவது watchman-ஆகப் பணியாற்றும் திரு. தனபால் என்பவர், அண்ணா நகர், ஏ-பிளாக்கின் 14 ஆம் எண் கொண்ட கட்டடத்தின் உச்சியில் விளம்பரப் பலகை நிறுவிய விளம்பர நிறுவனத்தின் பணியாளர்கள்தான் இந்த மரத்தின் கிளைகளை வெட்டினார்கள் என்பதைத் தெரிவித்துள்ளார். இதன்மீது மேலும் புலன் விசாரணை மேற்கொண்டதில், சென்னை, அண்ணா சாலை, ஜெனரல் பேட்டர்ஸ் சாலை, எண் 75-ல் உள்ள Jayaraman Ads. என்ற விளம்பர நிறுவனம் தனது விளம்பரப் பலகை காண்போருக்குத் தெளிவாகத் தெரிய வேண்டுமென்பதற்காக மரக் கிளைகளை வெட்டியுள்ளது என்பது தெரிய வந்தது. இந்த விளம்பர நிறுவனத்தின் உரிமையாளரான மோகனகிருஷ்ணன் என்கிற மோகன் அவர்களிடம் விசாரணை செய்தபோது, இந்தக் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார். அண்ணா நகர், ஏ-பிளாக் எண் 14-வது கட்டடத்தின் உச்சியில் தனது நிறுவனத்தால் நிறுவப்பட்ட விளம்பரப் பலகையை மறைத்தபடி இந்த மரக் கிளைகள் இருந்த காரணத்தால், அந்த விளம்பரப் பலகை தெளிவாகத் தெரியும்பொருட்டு, அண்ணா நகர், 3-வது நிழற்சாலை, ரவுண்டானா அருகிலிருந்த அந்த மரக் கிளைகளை தனது நிறுவன ஊழியர்களான ஜாஃபர்கான்பேட்டையைச் சேர்ந்த திரு. அர்ச்சுனன், கே.கே. நகர், எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் ஆகிய இருவரும் தனது ஆணையின்பேரில் 12-02-2005 அன்று அதிகாலை 2 மணியிலிருந்து 4 மணிக்குள் வெட்டியதாக அவர் ஒப்புக்கொண்டார். இந்த அடாத செயலைச் செய்த விளம்பர நிறுவன உரிமையாளர் மோகன கிருஷ்ணன் என்கிற மோகன், நிறுவன ஊழியர்கள் அர்ச்சுனன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் 13-03-2005 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். இந்தக் குற்றம் செய்யப் பயன்படுத்தப்பட்ட ஆட்டோ ரிக்ஷா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.



சென்னை மாநகரின் பசுமை காப்பாற்றப்பட வேண்டும், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தமிழ்நாடு காவல் துறை, அச்சத்திற்கோ, எந்த விருப்பு வெறுப்புக்கோ இடமளிக்காமல் விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், இரண்டு மணித்துளிகளுக்குள் முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பன் கொல்லப்பட்ட விஷயத்தில் காட்டில் பணிபுரிந்த நம்முடைய காவலர்களுக்கெல்லாம் இந்த ஆட்சியிலே ரூபாய் 3 இலட்சம், அதற்கு மேல் சிலருக்கு வீடுகள், இன்னும் பல பரிசுகளை வழங்கியிருக்கிறார்கள். நான் அதைக் குறை சொல்லவில்லை. நம்முடைய கர்நாடக மாநிலத்திலேகூட 5 இலட்சம் ரூபாய் அளவிற்கு காவலர்களுக்குப் பரிசுகள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அதிலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன் அவர்கள் தவறான தகவலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். கர்நாடக அரசில், விருதுகள் வழங்கப்படும், பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்களே தவிர, இன்னும் யாருக்கு, எவ்வளவு வழங்குவது என்று முடிவு செய்யவில்லை. இன்னும் யாருக்கும் 1 ரூபாய்கூட பரிசாக வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான், தமிழக அரசு வழங்கியிருப்பதற்குப் பாராட்டைத் தெரிவிக்கிறேன். நம்முடைய முதலமைச்சருக்குப் பாராட்டுத் தெரிவிப்பதற்காகத்தான் சொல்கிறேன். அதிலே ஒன்றும் அந்த மாதிரி—அதிலே ஈடுபட்டவர்களுக்கு இன்னும்கூட நீங்கள் பணம் தரலாம். இன்னும்கூட அந்த வீர, தீரச் செயல் புரிந்தவர்களுக்குப் பணம் தரலாம். ஆனால் அதிலே 1,000 காவலர்களுக்கு—சுமார் 1,000 காவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்கியிருக்கிறீர்கள். இதனால்—நாட்டில் 95,000 காவலர்கள் இருக்கிறார்கள். நிறையப் பேர் இந்த வீரப்பன் operation பண்ணப் போகும்போது ** இன்றைக்குக் காட்டிலே இருக்கிற இந்த 1,000 பேருக்கு நீங்கள் பதவி உயர்வு கொடுக்கிறதனாலே ஏறத்தாழ...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** இல்லை. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது அது. வேறு வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** துணைக் காவலர்கள் என்று சொன்னேன். பரவாயில்லை. ஆகவே, அவர்களுக்கெல்லாம் அந்தப் பதவி உயர்வு கொடுக்கிறதனாலே மற்ற காவலர்கள் மனச்சோர்வு அடைந்து, இன்றைக்கு மன விரக்தியில் இருக்கிறார்கள். அதை நான் முதல்வருக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், நீங்கள் நம்முடைய D.G.P. விஜயகுமார் அவர்களுக்குப் பதவி உயர்வு கேட்டு, டெல்லிக்கு மனுச் செய்தீர்கள், சிபாரிசு செய்தீர்கள். ஆனால், அவர்கள் seniority முறையிலேதான் வழங்கப்படும் என்று சொல்லித் திருப்பி, அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள். ஆகவே, seniority-படி பதவி உயர்வு என்பதைத்தான் இப்போது காவலர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் அந்தப் பதவி உயர்வை ரத்துச் செய்து, காவலர்களுக்கு இன்னும்கூட கூடுதலாகப் பரிசுகளைத் தாருங்கள், நாங்களும் வரவேற்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு மணித்துளிக்குள் முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். நான் பெரிதாக ஒன்றும் சொல்லவில்லையே! இதைத்தானே சொல்கிறேன்? காவல் துறை, சர்வதேசப் புகழ் பெற்றிருந்த காவல் துறை இன்றைக்கு **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை ** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்) முடிந்து விட்டது. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வார்த்தையைத்தான் திருப்பிச் சொல்கிறேன். நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை. நான் சொல்லி விடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் ** சொல்லப்பட்ட அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்ததைச் சொல்லுங்கள். ஒரு மணித்துளிக்குள் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இன்றைக்குக் காவல் துறை கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டு,
பரிதாபமாக, கோமா நிலையிலே காட்சியளிக்கிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குள்ள சூழ்நிலையில், காவல்
துறையைப் பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. நான் இறுதியாக
முடிப்பதற்கு முன்பாக, சென்ற காவல் துறை மானியக் கோரிக்கைமீது
பேசுகின்றபோதுகூடச் சொன்னார்கள். பேசுவதை விட்டுவிட்டு சினிமா
பாட்டைப் பாடினார்கள். நானும் கூட சினிமா பாட்டு பாடி முடித்து
விடுகிறேன். நான் ஒன்றும் புதிதாக அல்ல, எம்ஜிஆர். பாட்டு. உங்களுடைய
தலைவர் எங்கள் கட்சியிலே இருந்துவிட்டுப் போனவர்தான். அதனாலே
எங்களோடும் அவர் ஒரு காலத்திலே இருந்தவர். (குறுக்கீடுகள்)
அவருடைய பாட்டு மட்டும்தான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே,
எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!
சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார்,
சமயம் பார்த்துப் பல வகையிலும் கொள்ளையடிக்கிறார்! (குறுக்கீடுகள்)
பக்தரைப் போலவே பகல் வேஷம் காட்டி
பாமர மக்களை வலையிலே மாட்டி!
எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே,
எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்!"

என்று சொல்லி, இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு
வாய்ப்பளித்தற்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம் அமரர் புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய அந்தப்
பாட்டு தி.மு.க.வை நோக்கி, தி.மு.க. உணர வேண்டும் என்று பாடிய
பாட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு *(குறுக்கீடுகள்)* திரு. சேகர்பாபு. *(குறுக்கீடுகள்)* சரி, முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்திலே மலைக்கள்ளன் என்ற படத்திலே பாடிய பாட்டு. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள், சரி, முடியுங்கள். *(குறுக்கீடு)* சரி, முடித்துவிட்டார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'எங்கள் கட்சியில் அவரும் இருந்துவிட்டுப் போனார்' என்று குறிப்பிட்டார். புரட்சித் தலைவர் அவர்கள் தி.மு.க.வில் இருந்துவிட்டுப் போகவில்லை; வெளியேற்றப்பட்டார். அவர் வெளியேற்றப்பட்டதன் காரணமாக, அவர் உயிரோடு இருக்கின்ற வரை மீண்டும் தி.மு.க. இந்த மாநிலத்தில் தலைதூக்க முடியவில்லை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உட்காருங்கள். அன்பழகன், அவர் வெளியேற்றப்பட்டுப் போனார். *(குறுக்கீடு)* அவர் முடித்து விட்டார். சேகர்பாபு *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, முடியுங்கள். முடியுங்கள் *(குறுக்கீடுகள்)* முடித்தாகிவிட்டது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது முடிந்து விட்டது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுடைய பேச்சு நிறைவுபெற்று விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள், காவல் துறையினர்மீது



ஏதோ கரிசனம் காட்டுவதுபோல இன்றைக்கு நீலிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், உங்களுடைய பேச்சு முடிந்து விட்டது. நீங்கள் இனிமேல் பேசினால் நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும். தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் பேசினால் நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும். தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து உட்காருங்கள். பேசக்கூடிய வாய்ப்பு முடிந்து விட்டது. கொடுக்க வேண்டிய வாய்ப்பு கொடுத்து முடிந்து விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இனி பேசினால் நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும் *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து உட்காருங்கள். உங்களுடைய பேச்சு முடிந்து விட்டது. நிறைவுபெற்று விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** காவல் துறையினர்மீது தங்களுக்கு இருக்கின்ற கரிசனத்தைக் காட்டுகின்ற வகையில் நீலிக் கண்ணீர் வடிக்கின்ற விதத்திலே இங்கே பேசி அமர்ந்திருக்கின்றார்கள். கடந்த 9 ஆம் தேதி அன்று இந்த அவையிலே எழுந்த ஒரு பிரச்சினையின் காரணமாக எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர். வெளியேறிய அவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். ஊர்வலமாகச் சென்றனர். *(குறுக்கீடுகள்)* I am on a point of order. அவர் பேசிய subject-க்குத்தான் *(குறுக்கீடுகள்)* காவல் துறையை தங்களைக் கைது செய்யவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவரம் சொல்வதற்காகக் கேட்கிறார். சொல்லட்டும். அதிலே ஒன்றும் தவறில்லை. *(குறுக்கீடுகள்)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் பேசியபிறகு நீங்கள் பதில் கூறலாம். கைது செய்ய மறுத்தபோது F-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து, எங்களை சிறைக்கு அனுப்புங்கள் என்று கூறி, காவல் துறையினரைத் தள்ளிக்கொண்டு உள்ளே செல்கின்றனர். ஒரு உயர் அதிகாரியை, தனது வலது முழங்கையால், மார்பு, வயிறு ஆகிய பகுதிகளில் அடித்து, அதே சமயம் தனது வலது முழங்கை முட்டியால் அந்த உயர் அதிகாரியின் வலது முழங்கால் முட்டியில் மோதி, முழு பலத்தோடு அவரைப் பின்னுக்குத்

தள்ளி ஒருவர் தாக்க முயல்கின்றார். மேலும், கடும் சொற்களால் அந்த அதிகாரியைத் திட்டுகிறார். இருந்தபோதும் அந்த அதிகாரி அமைதி காக்கிறார். இந்த நிகழ்ச்சியைச் செய்தவர் யார் தெரியுமா? இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள். இந்தச் செயலையும் அவர் அமைதியாகப் பொறுத்துக்கொள்கிறார். அந்தக் காவல் துறை உயர் அதிகாரி யார் தெரியுமா? காவல் துறை உயர் அதிகாரி திரு. சுனில் குமார், I.P.S. அவர்கள். இந்த நிகழ்ச்சியின்போது, இங்கே காவல் துறையினருக்காக நீலிக் கண்ணீர் வடித்த திரு. அன்பழகன் அவர்களும், அந்தக் காவல் துறை அதிகாரியை முட்டி, மோதித் தள்ளுகிறார். ஆட்சி அதிகாரத்தில் இல்லாதபோதே இந்த ஆட்டம் ஆடும் இவர்கள், ஆட்சியில் இருக்கும்போது சட்டத்தையும், காவல் துறையினரையும் என்ன பாடு படுத்தியிருப்பார்கள்? இப்படிப்பட்ட செயல்களால் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கைச் சீர் குலைக்கப் பார்க்கிறார்கள். அம்மா அவர்கள் இதற்கு....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், கடந்த 9 ஆம் தேதி நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றி, சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் சம்பந்தப்பட்டதாக அவர் கூறுகின்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றி இங்கே தெரிவித்தார். அவர் கூறிய புகார் கடுமையானது. அது விசாரிக்கப்படும். Indian Penal Code section 353— "Assault or criminal force to deter public servant from discharge of his duty" என்ற பொருள் பற்றியது. "Whoever assaults or uses criminal force against any person, being a public servant in the execution of his duty as such public servant, or with intent to prevent or deter that person from discharging his duty as such public servant, or in consequence of anything done or attempted to be done by such person in the lawful discharge of his duty as such public servant, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both." ஒரு காவல் துறை அதிகாரியைத் தாக்குவதும், அவரைத் தனது கடமையைச் செய்யவிடாமல் தடுப்பதும், I.P.C. Section 353-ன்படி குற்றமாகும். இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதற்கு இரண்டு ஆண்டு காலம் சிறைத் தண்டனை உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தப் புகார் விசாரிக்கப்பட்டு, திரு. ஸ்டாலின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், திரு. ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோதே....

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ அந்தக் காவல் துறையினரை திரு. ஸ்டாலின் தாக்குகிற புகைப்படம்.

*(புகைப்படத்தைக் காண்பித்தார்.)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாபெரும் ஒரு போலீஸ் அதிகாரியை, இந்த மன்றத்தினுடைய உறுப்பினர், அதுவும் 9 ஆம் தேதி தாக்கினார் என்று சொன்னால், *(குறுக்கீடுகள்)* போலீஸ் இலாகாவை கையிலே வைத்திருக்கிற முதலமைச்சர், அதுகுறித்து வந்திருக்கும் என்று அவருக்கு வராத செய்தி, ஓர் உறுப்பினருக்கு சொன்னால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குச் செய்தி வந்துள்ளது. அது சம்பந்தப்பட்ட புகைப்படமும் வந்துள்ளது. அதை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு அளிக்க விரும்புகிறேன்.

*(புகைப்படத்தை, பேரவைத் தலைவரிடம் அளித்தார்.)*

**திரு. துரைமுருகன்:** அப்படியானால், நான் கேட்கிறேன். அப்படியானால், முதலமைச்சர் அவர்கள் எழுந்து சொல்லாமல்—ஒரு கிளை வெட்டியதற்கே 110 படிக்கிற முதலமைச்சர், ஒரு பெரிய போலீஸ் அதிகாரியைத் தாக்கியிருந்தால், இதுவரையிலே சொல்லியிருக்க வேண்டாமா? நான் நினைக்கிறேன். திட்டமிடுகிறீர்கள். வலை பின்னுகிறீர்கள். ஸ்டாலினை வீழ்த்துவதற்கு நினைக்கிறீர்கள். ஆனால் இந்தச் சதிக்கும் அந்த இளஞ்சிங்கம் பயப்படாது, நிச்சயம் வென்று காட்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இப்படி எங்களுக்கு உள்நோக்கம் கற்பிப்பது முறையல்ல. இதை ஏன் ஏற்கெனவே இந்த அவைக்குத் தெரிவிக்கவில்லை என்று கேட்கிறார். இன்றுதான் அந்தத் தகவல் எனது கைக்கு வந்தது, எனது பார்வைக்கு வந்தது. கடந்த சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் விடுமுறை நாட்கள். இன்று எனக்கு இந்தத் தகவல் கிடைத்தது. அதற்குள் திரு. சேகர்பாபு அவர்கள் அந்தப்

பிரச்சினையை எழுப்பினார். ஆகவே, ஏற்கெனவே இந்தப் புகைப்படம் என்னிடம் தரப்பட்டுள்ளதால், விசாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கு ஏன் இப்படி அலறுகிறார்கள் என்று தெரியவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நானே சொல்லிவிடுகிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* நான் சொல்லிவிடுகிறேன். திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். உட்காருங்கள். நான் ஒரு விவரத்தைச் சொல்லிவிடுகிறேன். திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அன்றைக்கு உரையாற்றுகிறபோதே திரு. சேகர்பாபு அவர்கள் என்னிடத்திலே அந்தப் படத்தைக் காண்பித்தார். காண்பித்து, தான் ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோது பதில் சொல்ல வேண்டுமென்று என்னிடத்திலே கேட்டார். *(குறுக்கீடு)* கேட்டபோது, நான்தான் குறிப்பிட்டேன்; கொஞ்சம் பொறுங்கள், காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது பிரச்சினையைக் கிளப்புங்கள், முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லுங்கள் என்று நான்தான் குறிப்பிட்டேன். ஆகவே அதற்குரிய பொறுப்பு ஏதாவது ஏற்க வேண்டுமானால், நான்தான் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். என்னிடத்திலே அவர் ஏற்கெனவே காண்பித்தார். ஸ்டாலின் அவர்கள் பேசி முடித்தவுடனே, அவர் எழுந்து அதைத்தான் எழுப்புவதற்கு முயற்சி செய்தார். நான்தான் அவரை அமர வைத்துவிட்டு, காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது பேசுங்கள் என்று சொன்னேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்மீது குற்றம் சுமத்துவதாக இருந்தால், பேரவை விதி.... *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. இப்போதாவது அவரைப் பதில் சொல்லவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர்மீதோ, ஓர் அமைச்சர்மீதோ நேரடியாகக் குற்றம் சுமத்த வேண்டுமென்று சொன்னால், அந்தச் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கும் notice கொடுத்திருக்க வேண்டும். இதைப்போன்ற ஒரு குற்றச்சாட்டை உங்களுக்கு எதிராக எழுப்ப இருக்கிறேன் என்று notice கொடுத்துவிட்டுத்தான் அதை அவையிலே எழுப்ப முடியுமே தவிர, அவராகவே இங்கிருந்து எழுப்ப முடியாது. சம்பந்தமே இல்லாமல், இன்னொரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் குறிப்பிடுவது, காவல் துறையைப் பற்றி இவ்வளவு பேசுகிறீர்கள், இப்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் குறிப்பிடுகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவ்வளவு பேசியவர் இப்படி நடந்து கொண்டிருக்கிறார் என்பது குற்றச்சாட்டு. It is--direct -ஆக அவருக்கு நேர் எதிராக ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். அந்தக் குற்றச்சாட்டு, அவருக்கு முன்பே தெரிவித்திருக்க வேண்டும். அவருக்கு முன்பே சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, இராஜீவ் காந்தி கொலையாளிகள் என்னுடன் இருக்கிறார்கள் என்று ஒரு போலிப் புகைப்படத்தை இந்த அவையிலே காட்டி, அன்றைய முதலமைச்சர், இராஜீவ் காந்தி கொலை வழக்கிலேயே என்னைத் தொடர்புபடுத்தப் பார்த்தாரே, அப்போது எனக்கு notice கொடுத்துவிட்டுத்தான் அன்றைக்கு அதைச் செய்தார்களா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது, ஓர் உறுப்பினருக்கு எதிராக, சபையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய ஒருவருக்கு எதிராகக் குற்றம் சுமத்துவது என்று சொன்னால், பேரவை விதி 93-ன்படி, "No personal allegation of a defamatory or incriminatory nature shall be made by a member against any member or any official unless the member has given previous intimation, in writing, to the Speaker, the Minister or the member concerned so that the Minister or the member may be able to make an investigation into the matter for the purpose of a reply.

Provided that such notice may be served on the member or Minister concerned through Legislative Assembly Secretariat, or personally" என்று தெளிவாக இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Any subject can be raised in the Assembly with the permission of the Speaker. *(மேசையைத் தட்டும் ஒலி)* உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுவிட்டுத்தான் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார். ஆகவே அதில் எந்தத் தவறும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. உறுப்பினருக்கு எதிராக—உறுப்பினருக்கு எதிராகக் குற்றச்சாட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உறுப்பினருக்கு notice கொடுத்த பிறகுதான் எழுப்ப முடியும் என்பது பேரவை விதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சேகர்பாபு குறிப்பிடுவது.....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எப்போது வேண்டுமானாலும் குற்றச்சாட்டை எழுப்பலாம் என்று எந்த விதியிலும் சொல்லப்படவில்லை. பேரவை உறுப்பினருக்கு எதிராக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சேகர்பாபு குறிப்பிடுவது.....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு பேரவை உறுப்பினர் பேரவையிலே குற்றச்சாட்டை எழுப்புவதாக இருந்தால், அந்தப் பேரவை உறுப்பினருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும், notice கொடுக்க வேண்டும். அவர் பதில் தயாரிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். திடீரென்று ஏதோ ஒரு விவாதத்திலே எழுப்ப முடியாது. எனவே பேரவை விதிகளுக்குப் புறம்பாக இதை எழுப்ப நீங்கள் அனுமதிக்கக் கூடாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the Speaker has got the power to waive any rule. எந்த விதியானாலும் அதற்கு விதிவிலக்கு அளிக்க Speaker-க்கு அதிகாரம் உண்டு. (குறுக்கீடுகள்)

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு நான் சொன்னேன் அல்லவா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** It is mandatory. Mandatory-ஆக இருப்பதால் நீங்கள் பண்ண முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. 286-வது விதியைப் படிக்கிறேன். விதி 286—"அரசியலமைப்புச் சட்டத்திலோ, அல்லது இவ்விதிகளிலோ குறிப்பிடப்பெறாது விடுபெற்ற பொருள்கள் பற்றியும், அல்லது இவ்விதிகளின் விரிவான செயல்முறைகளின் தொடர்பாக எழும் எல்லாப் பிரச்சினைகளும், அவ்வப்போது பேரவைத் தலைவர் பணிக்கும் முறையில் முறைப்படுத்தப் பெறும்" என்பது விதி. இந்த விதியின்படி நான்



குறிப்பிடுவது, திரு. சேகர்பாபு அவர்கள் ஏற்கெனவே இந்தப் பிரச்சினையை, திரு. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்ற, அன்றைக்குப் பேசி முடிந்த உடனே எழுப்புவதற்காக அனுமதி கேட்டார். அதற்கு முன்னாலே வந்து என்னுடைய அறையிலே அந்தப் படத்தையும் காட்டியிருந்தார். தான் எழுப்ப வேண்டுமென்று என்னிடத்தில் அனுமதி கேட்டார். நான்தான் குறிப்பிட்டேன், திரு. ஸ்டாலின் அவர்கள் அது தொடர்பாக எந்தக் கருத்தையும் சொல்லவில்லை; ஆக, காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது உங்களுடைய பிரச்சினையை எழுப்புங்கள் என்று நான்தான் திரு. சேகர்பாபு அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர், அதனால்தான் என்னுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, இன்றைக்கு இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். ஏற்கெனவே அந்தப் படத்தை எல்லாம் என்னிடத்திலே காட்டியிருந்தார். ஆகவே, அவர் தெரிவிக்கிற கருத்தை, நீங்கள் ஒட்டுமொத்தமாக அந்தக் கருத்தையே தெரிவிக்கக்கூடாது என்று சொல்வது முறையற்றது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவை விதிகளிலே குறிப்பிடாத ஒன்றைப் பற்றித்தான் உங்களுக்கு எஞ்சிய அதிகாரம் தரப்பட்டிருக்கிறதே தவிர, பேரவை விதிகளிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது எஞ்சிய அதிகாரத்தில், விதி 286-ல் வராது. விதி 93-ல் தெளிவாக இருக்கிறது. அவையிலே உறுப்பினராக உள்ள ஒருவருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று நடைபெறுவது காவல் துறை மானியக் கோரிக்கை. (குறுக்கீடு) காவல் துறையைப் பற்றிய ஒரு கருத்தை திரு. அன்பழகன் பேசினார். பேசியதற்குரிய ஒரு கருத்தினை, ஒரு மறுப்பை திரு. சேகர்பாபு அவர்கள் சொல்கிறார்கள். இது ஒன்றும் தவறல்ல. இது தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையைப் பொறுப்பிலே வைத்திருக்கிற முதலமைச்சர் அவர்கள், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான் பிரச்சினை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உறுப்பினருக்கெதிரான குற்றச்சாட்டைக் கூறி அவையினுடைய நேரத்தைத் தவறாகப் பயன்படுத்த முடியாது. பயன்படுத்தக் கூடாது. உறுப்பினருக்கு எதிராக நேரடியாக ஒரு குற்றச்சாட்டுச் சொல்லும்போது அவருக்கு notice கொடுத்திருக்க வேண்டும். கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதுமட்டுமல்ல. அவருக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டுமென்று அந்த விதியே சொல்கிறது. 93-வது விதி, அவருக்குப் போதிய அவகாசம் வழங்கவேண்டும் என்று தெளிவாகச் சொல்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 286-ன்படி "All matters not specially provided for in the Constitution or in these rules and questions relating to the detailed working of these rules shall be regulated in such a manner as the Speaker may from time to time direct" என்று இருக்கிறது. ஆகவே, பேரவைத் தலைவருக்குப் போதுமான அதிகாரம் உள்ளது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, யாராவது ஒருவர் பேசட்டும். எஸ்.ஆர்.பி.யைப் பேசவிடுங்கள், அல்லது நீங்கள் யாராவது பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதிகளிலே, தெளிவாக 93-வது விதியிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்ற ஒன்றை 286-க்கு நீங்கள் கொண்டு போக முடியாது. இதிலே எந்த உறுப்பினருக்கு எதிராகவாவது, எந்த அமைச்சருக்கு எதிராகவாவது நேரடியாகக் குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால், உங்களுக்கு மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கும் notice கொடுக்க வேண்டும். கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அவருக்குப் போதிய அவகாசமும் வழங்கப்பட வேண்டுமென்று தெளிவாக விதி 93 சொல்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக திரு. ஸ்டாலின் அவர்கள் விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எனவே, நீங்கள் விதி 286-லே போய் ஒளிந்து கொள்வது முறையல்ல. விதி 286-ஐ இதற்கு இழுக்காதீர்கள். விதி 286 என்பது Residuary power—எஞ்சிய அதிகாரம். எந்த விஷயம் Constitution-லே, அரசியல் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்படவில்லையோ, எந்த விஷயம் விதிகளிலே தெளிவாக இல்லையோ, அந்த ஒன்றுக்கு மட்டும்தான் விதி 286-ஏ தவிர, இந்த எஞ்சிய அதிகாரம் நிச்சயமாக மிஞ்சிய அதிகாரமாகவோ, விஞ்சிய அதிகாரமாகவோ ஆகமுடியாது. வானளாவிய அதிகாரம் என்பது வேறு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நீங்கள் ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் இரண்டு பிரச்சினைகள். ஒரு பிரச்சினை, ஒரு உறுப்பினர்மீது மற்றொரு உறுப்பினர் குற்றச்சாட்டுச் சொல்கிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவருடைய முன் அனுமதி பெற்று அவையிலே எந்தக் கருத்தையும் தெரிவிப்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு. எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமையுண்டு. அவர் ஒரு படத்தைக் காட்டி, அதுவும் திரு. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்ற அன்றைக்கே அந்தப் படத்தைக் காட்டி, இதைத் தெரிவிக்கவேண்டும், இந்தக் கருத்தைச் சொல்லவேண்டும், நீங்கள் அனுமதி தரவேண்டும் என்று அந்தப் படத்தைக் காட்டிக் கேட்டார். அன்றைக்கு அவர் எழுந்தார். எழுந்து அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு முற்பட்டார். நான்தான் அவரைக் கேட்டுக்கொண்டேன், ஸ்டாலின் அவர்கள் காவல் துறை தொடர்பாக எதுவும் பேசவில்லை. காவல் துறை தொடர்பான அந்த மானியக் கோரிக்கை வருகிறபோது நீங்கள் பேசுங்கள் என்று நான்தான் கேட்டுக்கொண்டேன். என்னுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத்தான் அவர் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுபோயிருக்கிறார். ஆகவே, அவரைப் பேச விடுவதற்கு, உரிய கருத்தைச் சொல்ல வைப்பதற்கு, உரிய அதிகாரம் பேரவைத் தலைவருக்கு உண்டு. ஆகவே, இந்தப் பிரச்சினையை இத்தோடு விடுங்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. நரசிம்மன். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. உட்காருங்கள். திரு. ஸ்டாலின் பதில் சொல்லட்டும்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு இந்த அவையிலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபு அவர்களும், முதலமைச்சர் அவர்களும், என்னைக் குறித்து ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்டி, அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சி. தவறு செய்திருந்தால், அது யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கட்டும், அது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஒரு பத்திரிகை என்மீது ஓர் அபாண்டக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து பல நாட்கள் எழுதிக்கொண்டிருந்தது. அதற்காக அந்தப் பத்திரிகைமீது நான் நீதிமன்றத்திலே ஒரு வழக்குப் போட்டிருக்கிறேன். ஆகவே அந்தக் கோபத்தின் காரணமாக ஒரு படத்தை எடுத்து, அந்தப் படத்திற்கு ஒரு விளக்கத்தை, நான் ஏதோ காவல் துறை அதிகாரியைத் தாக்க முயற்சித்ததாக ஒரு செய்தியைப்

போட்டிருக்கிறார்கள். அந்தப் படத்தைத்தான் இங்கே காட்டியிருக்கிறார்கள். ஆகவே, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும், விசாரிக்கப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார். தயவுசெய்து அந்த நடவடிக்கையை அவர் எடுக்க வேண்டும். தவறு செய்திருந்தால், அந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயார். எனவே, நாங்கள் எல்லாம் பனங்காட்டு நரி, இந்த சலசலப்புக்கெல்லாம் ஒருக்காலும் அஞ்சிட மாட்டோம். ஏற்கெனவே இராணி மேரி கல்லூரியினுடைய பிரச்சினை வந்தபோது...

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்) பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்) முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். பிரச்சினை என்பது, அவர், திரு. சேகர்பாபு கிளப்பிய பிரச்சினைக்குத்தான் பதில் சொன்னார். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று ஏதோ கூறிக்கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அதிகாரத்தை மீறி, என்னுடைய கட்டளையை மீறி விருப்பப்படி எழுந்து நின்று பேசினால் நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

(திரு. ஜெ. அன்பழகன், திரு. பா. பரணிகுமார், திரு. ப. ரங்கநாதன், திரு. அ. அசோகன் ஆகியோர் தங்களது இருக்கைகளை விட்டு மாண்புமிகு பேரவைத் தலைவரை நோக்கிச் சென்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடத்தை விட்டு, இடம் பெயர்ந்து வந்திருக்கிற திரு. ஜெ. அன்பழகன் அவர்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) அவருக்கு ஒரு நிமிடம் அவகாசம் தருகிறேன். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைக்குத் திரும்பாவிட்டால் நடவடிக்கைக்கு ஆளாவார்கள் என்று எச்சரிக்கிறேன்.



(குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் அவகாசம் தருகிறேன். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைக்குத் திரும்பாவிட்டால் (குறுக்கீடுகள்) நடவடிக்கைக்கு உள்ளாவீர்கள் என்று நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், இடத்தை விட்டு வெளியே வந்து தகராறு செய்யக்கூடிய திமுக. உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேற்றுமாறு தீர்மானத்தைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையின் கண்ணியத்தைப் பாதிக்கும் வகையிலும், அவையில் அமைதியின்மையை உருவாக்கி (குறுக்கீடுகள்) அவையிலே கலாட்டா செய்கின்ற வகையிலும் (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் இருக்கின்ற இடத்திற்கு வந்து, (குறுக்கீடுகள்) தகாத வார்த்தைகளைப் பேசி, கையை நீட்டி அமைதியைக் குலைக்கின்ற, அவை உரிமையை மீறிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற திரு. ஜெ. அன்பழகன் அவர்களையும், திரு. பா. பரணிகுமார் அவர்களையும், திரு. ப. ரங்கநாதன் அவர்களையும், திரு. அ. அசோகன் அவர்களையும் அவையிலிருந்து வெளியேற்றவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இன்று அவை நிகழ்ச்சிகள் பூராவுக்கும் அவர்களை அனுமதிக்காமல் அவையை விட்டு வெளியேற்றுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையினுடைய விதிகளை மீறி, இடத்தை விட்டுப் பெயர்ந்து தகராறு செய்யக்கூடியவர்களை அவையை விட்டு நீக்குமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். இருக்கையை விட்டு வெளியே வந்து அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம்

விளைவிக்கின்ற தி.மு.க. உறுப்பினர்களை அவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு ஆணையிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் அனைவருக்கும் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் ஒரு புகைப்படத்தை மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் காண்பித்தார். அந்தப் புகைப்படத்தைக் காண்பித்து, அதை ஒரு பிரச்சினையாக இந்த அவையில் எழுப்பவேண்டும் என்று அனுமதி கோரினார். அதற்குப் பேரவைத் தலைவர் அனுமதி அளித்தார். பேரவைத் தலைவர் அவர்கள் அளித்த அனுமதி, அந்தப் புகைப்படம் சம்பந்தப்பட்ட பொருளை ஒரு பொருளாக இந்த அவையில் எழுப்புவதற்காகத்தான். அவ்வளவுதானே தவிர, ஒரு சட்டமன்ற உறுப்பினர்மீது குற்றச்சாட்டுக் கூறுவதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்கவில்லை. நானும் இதைப் பற்றித் தெரிந்துகொண்ட பின்னர், விசாரிக்கப்படும், விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் தெரிவித்திருக்கிறேன் என்பதை விளக்கிக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி.-க்கு நான் அதைத்தான் சொன்னேன். அவர் ஒரு கருத்தைத் தெரிவிப்பதற்கு அனுமதி கேட்டார். ஏற்கெனவே அனுமதி கேட்டார், படத்தைக் காட்டி அனுமதி கேட்டார். (குறுக்கீடு) பார்த்தாயிற்று. அந்தக் கருத்தினுடைய அடிப்படையில், அதனுடைய தொடர்ச்சியாக விசாரணை நடைபெறும் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். திரு. எஸ்.ஆர்.பி.

**திரு. மு.க. ஸ்டாலின்:** Speaker Sir,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னது கருத்து அல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வெறும் கருத்தைச் சொல்லவில்லை. தெளிவாக மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலினுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டைச் சுமத்தும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் இப்போது தெரிவித்தார்கள்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு என்பதல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குற்றச்சாட்டுதான். அது எப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த உறுப்பினராக இருந்தாலும் (குறுக்கீடு) எந்த உறுப்பினராக இருந்தாலும்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் ஆதாரத்தைக் காட்டி கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு. அது தொடர்பாக விசாரிக்கிறேன் என்று சொல்வதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் உண்டு; உரிமை உண்டு. அந்தத் துறையினுடைய அமைச்சர் என்கிற முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்த அதிகாரம் உண்டு. அந்த வகையில்தான் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-10

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபையில் நேரடியாகக் குற்றச்சாட்டு சொல்வது வேறு; வெளியே நடந்த சம்பவத்திற்காக வெளியே நடவடிக்கை எடுப்பது என்பது வேறு. இங்கே..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் எந்தக் குற்றச்சாட்டும் கூறவில்லை. திரு. சேகர்பாபு ஒரு புகைப்படத்தை மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் காண்பித்து, அதை இந்த அவையில் காண்பித்து, அதுகுறித்து ஒரு கருத்துத் தெரிவிக்கவேண்டுமென்று அனுமதி வேண்டினார். அதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளித்தார்கள். அதற்குத்தான் பேரவைத் தலைவர் அனுமதி அளித்தாரே தவிர, குற்றச்சாட்டைக் கூறுவதற்கு அனுமதி அளிக்கவில்லை. திரு. சேகர்பாபுவின் கருத்தைக் கேட்ட பின்னர், 'விசாரிக்கப்படும்' என்று அறிவித்திருக்கிறேன். இதில் எந்தத் தவறும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், நானும் தெளிவாகக் குறிப்பிடுகிறேன். அவர் ஒரு குற்றச்சாட்டாக அல்ல; காவல் துறையின்மீது இவ்வளவு குற்றத்தைச் சுமத்துகிறீர்களே, நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்கள் என்பதற்காக ஒரு கருத்தைச் சொல்வதற்கு அனுமதி கேட்டார். ஒரு புகைப்படத்தைக் காட்டி அனுமதி கேட்டார். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக எதையும் சொல்லவில்லை. தெளிவாக நான் சொல்கிறேன். குற்றச்சாட்டை உறுப்பினர்மீது சொல்கிறார். அந்த உறுப்பினர், அந்த அதிகாரி தனது கடமையைச் செய்ய விடாமல் செய்தார். காவல் துறை அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்ய விடாமல் தடுத்தார் என்று சொன்னார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஸ்டாலின், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே எந்தக் குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்று முதலமைச்சர் சொல்கிறார்கள். ஆனால், திரு. சேகர்பாபு அவர்கள் இங்கே பேசுகிறபோது, நான் காவல் துறை அதிகாரியைத் தாக்க முயற்சித்தேன் என்று வந்திருக்கக்கூடிய செய்தியைச் சொல்லியிருக்கிறார். அதனால்தான் அதைக் குறிப்பிடுகிறேன். அதுமட்டுமல்ல,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஸ்டாலின், புகைப்படத்தைக் காட்டியிருக்கிறார் அவர்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, தாக்க முயற்சித்தேன் என்று சொன்னாரே, தாக்க முயற்சித்தேன் என்று சொன்னாரே (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நடந்ததைச் சொல்கிறேன். Speaker Sir, நடந்ததைச் சொல்லிவிடுகிறேன். அதாவது, இந்த அவையில் முதலமைச்சர் அவர்கள் 110 என்ற அந்த விதியைப் பயன்படுத்தி ஓர் அறிக்கையைப் படித்தபோது, அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தால், எங்களை அவையிலேயிருந்து நீங்கள் வெளியேற்றினீர்கள். ஆக, அதைக் கண்டிக்கின்ற வகையில், நியாயம் கேட்டு கோட்டைக்கு முன்னால், அங்கே நாங்கள், எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சாலை மறியலில் ஈடுபட்டோம். அங்கேயிருந்த போலீஸ் அதிகாரிகள், 'உங்களைக் கைது செய்ய



வந்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால், 10, 15 நிமிடங்கள் கழித்து, 'இல்லை, இல்லை, கைது செய்யவில்லை' என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு, நாங்கள் அத்தனை பேரும் நடந்து, ஊர்வலமாகவே அண்ணா சிலைக்கு அருகே சென்று, அங்கு சாலை மறியலில் ஈடுபட்டோம். அதற்குப் பிறகு அங்கே வந்த காவல் துறை அதிகாரிகள், 'உங்களைக் கைது செய்திருக்கிறோம்' என்று சொல்லி, எங்களையெல்லாம் காவல் துறையினுடைய Van-லே ஏற்றிக்கொண்டு, சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, காவல் நிலையத்திற்குள்ளே போய் உட்கார வைத்தார்கள். அதற்குப் பிறகு எங்களுடைய பெயர்களையெல்லாம் குறித்துக் கொண்டார்கள், எழுதிக் கொண்டார்கள், முகவரியையெல்லாம் கேட்டார்கள். அதற்குப் பிறகு 10, 15 நிமிடங்கள், அரை மணி நேரம் கழித்து 'நீங்கள் எல்லாம் வெளியிலே போகலாம், விடுதலை' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். ஆகவே, நாங்கள் வெளியிலே வந்தபோது, அங்கேயிருந்த சில அதிகாரிகளைப் பார்த்து, 'என்ன இது? அங்கு கோட்டை வாசலிலே கைது என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு விடுதலை என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு நாங்கள் அண்ணா சாலைக்கு வந்ததற்குப் பிறகு மீண்டும் கைது என்று சொன்னீர்கள். அதற்குப்பிறகு காவல் நிலையத்திற்கு வந்து உட்கார வைத்தீர்கள். அதற்குப் பிறகு வெளியிலே விட்டு விட்டீர்களே, என்ன இது?' என்று அவர்களிடத்திலே நியாயம் கேட்டேன். அதைத்தான் புகைப்படமாக எடுத்து, நான் மிரட்டியதாக, தாக்க முயற்சித்ததாக ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, அதுவும் குற்றச்சாட்டாக.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு அவருடைய கருத்தைச் சொன்னார். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை. குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எந்த உரிய நடவடிக்கை எடுத்தாலும், அதைச் சந்திப்பதற்கு நாங்கள் தயார், தயார், தயார் என்பதை மாத்திரம் சொல்லி, முடிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதியைச் சுட்டிக்காட்டி திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அவையின் நேரத்தை எடுத்துக்கொண்டு, கிட்டத்தட்ட அரை மணி நேரமாக விவாதிக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தீர்ப்பை வழங்கிவிட்டீர்கள். திரு. ஸ்டாலின் அவர்களும் விளக்கத்தைத்

தந்திருக்கிறார். இத்தோடு இதை முடித்துவிட்டு, அடுத்த நிகழ்வுக்குச் செல்லவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்தோடு முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. பி.எம். நரசிம்மன், நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. வேண்டாம். திரு. சேகர்பாபு சொன்ன கருத்துக்கு திரு. ஸ்டாலின் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருத்தைச் சொல்லிவிட்டார்கள். இனிமேல் விவாதம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதிலே விவாதம் வேண்டாம்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆராதனைக்குரிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாக்கல் செய்த தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே பேரவை முன்னவர் அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, இந்த அவையிலேயிருந்து அகற்றப்பட்ட உறுப்பினர்கள் மறுபடியும் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, யார், யார் பெயரைச் சொல்லி, பேரவை முன்னவர் அவர்கள் அவையை விட்டு அகற்றவேண்டுமென்று தீர்மானத்திலே முன்மொழிந்தார்களோ, அவர்கள் அனைவரையும் அவையை விட்டு அகற்றவேண்டுமென்று மீண்டும் நான் உத்தரவிடுகிறேன். அவைக் காவலர்கள் அவர்களை அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-15

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாக்கல் செய்த தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நீங்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள், முழு விளக்கம் தெரிவிக்கப்பட்டுவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள், உட்காருங்கள். திரு. நரசிம்மன், பேசுங்கள்.



(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு அவையிலிருந்து வெளியேறினர்.)

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை, பேரறிஞர் அண்ணா அவர்களின் கோட்பாட்டிலும், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாதையிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில், தொலைநோக்குப் பார்வையில் உதித்திட்ட சிறந்த பட்ஜெட் ஆகும். ஏழையெளிய, நடுத்தர மக்கள் ஏற்றம் பெறுகிற பட்ஜெட் ஆகும். விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பொது மக்களாலே பாராட்டப்படுகிற பட்ஜெட் ஆகும். புதிய வரி விதிப்பே இல்லாத ஒரு சிறப்பான பட்ஜெட் ஆகும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சிக்கு இந்த பட்ஜெட் ஒரு சான்றாக அமைகிறது. ஒவ்வொரு துறையும் முதல் நிலை அடையவேண்டுமென்பதற்காக நிதியைத் தாராளமாகத் தந்து, பல்வேறு திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே உரையாற்றிய பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், 1969 ஆம் ஆண்டிலேயிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது விருதுகள் வழங்கப்பட்டன என்றும், அது இடையிலே நிறுத்தப்பட்டது என்கின்ற ஒரு கருத்தினை இங்கே சொன்னார்கள். (குறுக்கீடு) ஆனால் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.எம். நரசிம்மன்:** 1999 ஆம் ஆண்டிலேயும், 2000 ஆம் ஆண்டிலேயும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது. அப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நரசிம்மன், உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன

அந்தக் குற்றச்சாட்டுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக இங்கே அறிவித்திருக்கிறாரகள். அது ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும், உறுப்பினர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குப் பேரவைத் தலைவரும், முதலமைச்சர் அவர்களும் பாதுகாப்பு வழங்கவேண்டுமே தவிர, அதை விடுத்து, இல்லாத ஒரு செய்தியை, புகாரை,—அப்படி ஒரு சம்பவம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே இல்லாத ஒரு செய்தியைச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் திரித்துக் கூறுகிறார். நான், நடவடிக்கை எடுக்கப்படும் என்று மொட்டையாக அறிவிக்கவில்லை. விசாரிக்கப்பட்டு, அதன் பின்னர் தேவைப்படுமானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் தெரிவித்தேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** தண்டனையையே எப்படித் தீர்ப்பாகச் சொல்லமுடியும்? இரண்டு ஆண்டு காலம் தண்டனையையே நீங்களே வழங்கியிருக்கிறீர்கள் என்றால், என்ன அர்த்தம் அது? ஒரு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, என்ன சொல்கிறீர்கள்?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண சின்னப் பிரச்சினையை முதலமைச்சர் அவர்கள் அந்த விதியையெல்லாம் சொல்லி, 2 ஆண்டு காலம் தண்டிக்கப்படுவார்கள், இவ்வளவு பெரிய பாதிப்பு என்பதையெல்லாம் சொல்கின்ற நேரத்திலே, உறுப்பினர்களுக்கு ஒரு பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்கிவிடுமோ என்று அச்சம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இல்லை. விசாரணையிலே என்ன முடிவோ அது கடைப்பிடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அப்படி ஒரு பெரிய அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்களே ஒப்புக்கொண்டார்; நான் காவலரைத் தாக்கியதுபோல் அந்தப்



பத்திரிகையிலே செய்தியைப் போட்டு இருக்கிறார்கள். எனக்கும், அந்தப் பத்திரிகைக்கும் ஆகாது என்று சொல்லியிருக்கிறார். இதை ஏன் நீங்கள் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்தப் பிரச்சினைக்குள்ளே போகாதீர்கள். ஏற்கெனவே திரு. சேகர்பாபு அந்தக் கருத்தைச் சொன்னார், திரு. ஸ்டாலின் அவருடைய கருத்தைச் சொல்லிவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது தொடர்பான கருத்தைச் சொல்லிவிட்டார்கள். அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதானே!

(பின்னர், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் திருமதி வி. சிவகாமி தவிர) வெளிநடப்புச் செய்தனர்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உறுப்பினர் அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்கவேண்டுமென்று கூறினார். அப்படி என்றால், காவல் துறை உயர்மட்ட அதிகாரிக்கு ஏற்பட்ட இந்தச் செயலுக்கு, வெளிநடப்புச் செய்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியினரும், கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்களும், இந்தப் புகைப்படத்திலே வந்திருக்கின்ற ஒரு காவல் துறை உயர் அதிகாரியை அடித்துத் தள்ளுகின்றதற்கு என்ன கூறப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். திரு. ஹேமச்சந்திரன், சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Mr. Speaker Sir, அதாவது, அவையிலே இருக்கிற ஒரு உறுப்பினரைப் பற்றி இங்கே ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டதற்கு, அந்த உறுப்பினருக்கு, அவர் இருக்கிற காரணத்தினால் அவருக்குப் பதில் சொல்வதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டுதான் முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசி இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ஸ்டாலின் பேசினார்கள் இல்லையா, அது என்ன என்று பார்த்தீர்களா? (குறுக்கீடு) சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஸ்டாலின் பேசினார், அவரது கருத்தைச் சொன்னார். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆனால் முதலமைச்சர் அவர்கள் ஒரு முடிவை அறிவித்ததற்குப் பிறகு அந்த உறுப்பினர் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது, that is a procedural wrong.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சேகர்பாபு சொன்ன கருத்துக்கு ஸ்டாலின் பதில் சொல்வதற்கு நான் அனுமதி அளித்தேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விஷயங்கள், சம்பவங்கள் வெளியிலே நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிப் பார்த்தோம் என்று சொன்னால் எல்லாப் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டு வந்து வைத்து, இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டுமென்று நாம் ஆரம்பித்தோம் என்றால், இந்தச் சட்டமன்றக் கூட்டத்தையே நடத்த முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, (குறுக்கீடு) நீங்கள் இங்கெல்லாம் பொத்தாம்பொதுவாக அப்படியெல்லாம் கருத்துச் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) பொத்தாம்பொதுவாக அப்படியெல்லாம் கருத்துச் சொல்லக் கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு உறுப்பினர் தன்னுடைய உரிமைகளுக்காக....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் ஆயிரம் புகைப்படங்கள் இருக்கலாம். ஆனால் காவல் துறை சம்பந்தப்பட்ட புகைப்படம் என்பதால்தான் திரு. சேகர்பாபு அவர்கள் அதை இங்கே கொண்டு வந்து அந்தப் பிரச்சினையை எழுப்பினார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை நான் மறுக்க விரும்பவில்லை. நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். சம்பவங்கள் சட்டமன்றத்திலே என்றைக்குத்தான் நடக்கவில்லை? இதுபோன்று இந்தச் சட்டமன்றத்திலே கிட்டத்தட்ட 24 மணி நேரம் நாங்கள் அடைக்கப்பட்டு இருந்த காலமெல்லாம் உண்டு. நானும் இருந்திருக்கிறேன். அப்போதெல்லாம் சாலை மறியலுக்குச் சென்று இருக்கிறோம். பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. பழனிசாமி, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) பழனிசாமி, தயவுசெய்து உட்காருங்கள். கருத்தைச் சொன்னது சேகர்பாபு. பதில் சொன்னது ஸ்டாலின். முடிந்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது



தொடர்பாக விசாரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் ஏன் இதைப் பெரிதாக்குகிறீர்கள்? உட்காருங்கள். திரு. நரசிம்மன், பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** காவல் துறை நிச்சயமாக ஒரு பொய் வழக்குப் போடுவதற்கு, இல்லையென்றால் தவறான வழக்குப் போடுவதற்கு உதாரணமாக அமைந்துவிடும். அந்த வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நரசிம்மன், பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுகிறபோது, காவலர்களுக்குப் பதக்கங்கள், விருதுகள் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்கின்ற கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1999 ஆம் ஆண்டிலேயும், 2000 ஆம் ஆண்டிலேயும் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்தபோது அண்ணா விருதையேகூட வழங்காமல் நிறுத்திய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்கின்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே பதிய வைக்க நான் விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, காவலர்களுக்குச் சீருடையேகூட வழங்காத அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வேறு ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். காவல் துறை கோமா நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்கின்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம்தான் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டது என்கின்ற கருத்தை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கோமா நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிற அந்த திராவிட முனனேற்றக் கழகத்தைத் தூக்கி நிறுத்தத்தான் நேற்றைக்குக்கூட பிரதான எதிர்க்கட்சி, மண்டல மாநாடு என்கின்ற ஒரு நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்து, அந்த மாநாட்டின் முகப்பின் தோற்றத்தைக்கூட யாரையோ திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காகவும், அந்தக் கூட்டணியிலே பிளவைச் சரிசெய்ய வேண்டுமென்பதற்காகவும் இத்தாலிய அரண்மனைபோலக்கூட அமைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தை, கோமா நிலையில் இருக்கிற நிலையை எப்படியாவது மாற்ற வேண்டுமென்கின்ற முயற்சியினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அற்புதமான திட்டங்களை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற வேண்டுமென்பதற்காகப் புரட்சிகரமான சட்டங்களையும், ஏழை, எளியோர் முன்னேற்றத்திற்காக இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் ஜனவரி திங்கள் கொள்ளையர்களால் சுடப்பட்டு மரணம் அடைகிறார். அன்று மறுநாளே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடியாக சுதர்சனம் அவர்களுடைய வீட்டிற்குச் சென்று, மனைவி, மக்களுக்கு, இயக்கத் தோழர்களுக்கு ஆறுதலைச் சொல்கிறார்கள். அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குற்றவாளிகளை உடனடியாகக் காவல் துறையினர் பிடித்து விடுவார்கள் என்கின்ற உறுதிமொழியைத் தந்தார்கள். அதேபோன்று, நடவடிக்கைகளையும் எடுத்தார்கள். அன்றையதினமே, மறைந்த காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களின் இல்லத்திற்கும் சென்று, அவரது மனைவிக்கும், இயக்கத் தோழர்களுக்கும் ஆறுதலைத் தெரிவிக்கிறார். இதற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-25*

பொது மக்களுக்குத் துன்பம் என்றாலும், இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத் துயரம் என்றாலும், ஓடோடி உதவி புரிபவர், துணை நிற்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இது நாங்கள் பெற்ற பேறு; எங்களுக்குக் கிடைத்த பாக்கியம் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், சில இயக்கங்களிலே, வேலியே பயிரை மேய்கிற நிலைமை. இயக்க முன்னோடிகளின் உயிருக்கே உலை. இது நிகழ்ந்துகொண்டுதான் உள்ளது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்த வரை, மக்களைக் காப்பதிலும், இயக்கத்தினரைக் காப்பதிலும், கண்ணை இமை காப்பதுபோல், கேடயமாக இருந்து காத்து வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடைசியாக பட்ஜெட் தாக்கல் செய்தபோது, அந்த பட்ஜெட்டிலே 21,564.87 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் செலவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்,



மாண்புமிகு அம்மா அவர்களால், 2005-2006 ஆம் ஆண்டில் 31,655.53 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து, முந்தைய அரசைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறபோது, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் புதிய திட்டங்களும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டிருப்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது, நிதிநிலைமை முற்றிலும் சீர்குலைந்திருந்தது. நிதிச் சீர்திருத்த நடவடிக்கையின் பயனாக, தமிழகத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்று வெற்றி கண்டவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். நிதிச் சீர்திருத்த நடவடிக்கையால், 2005-2006 ஆம் ஆண்டில், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 4.64 சதவிகிதம் குறைக்கப்படும் என்பதை வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. 2008-2009-ல் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ஏதுமில்லை என்கின்ற இலக்கை நோக்கித் தமிழகம் செல்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் இதுபோன்ற நிலைமை 5 மாநிலங்களில் உள்ளது. அவற்றில் தமிழகமும் ஒன்று என்று சொல்கிறபோது, இந்த அளவு தமிழகம் உயர்ந்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களே காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2004 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சாதனைகள் பல உள்ளன. அவற்றில், வீரப்பனை ஒழித்தது, புதிய வீராணம் திட்டத்தை சென்னைக்குக் கொண்டு வந்தது, திருட்டு விசிடி-யை ஒழித்தது ஆகியவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாறுகள் ஆகும். 20 ஆண்டுகளாகப் பிடிபடாமல் இருந்த கொடியவன் வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் இருபதே நிமிடங்களில் வேட்டையாடி, தமிழகத்திற்கு, கர்நாடகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே நிம்மதியை மீட்டுத் தந்தது, தமிழக சிறப்பு அதிரடிப் படை. இந்த வெற்றிக்கு முழுக் காரணம், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். அழிவின் ஆபத்திலிருந்த திரைப்படத் தொழிலை மீட்பதற்கும் அற்புதமான சலுகைகளை அடுக்கடுக்காக வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். திருட்டு வி.சி.டி.-யை ஒழிப்பதற்கு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளால் திரையுலகம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்துள்ளது. திரையுலகைக் காக்கும் தெய்வமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



226637

*பிற்பகல் 12-30*

மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறை செயல்பாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் தனிக் கவனம் செலுத்தி தமிழ்நாடு காவல் படை நாட்டிலேயே மிகச் சிறந்த படை என்ற நிலையை உருவாக்கியுள்ளார்கள். தமிழ்நாடு காவல் படை, தொழில் ரீதியான அணுகுமுறை, வீரம், திறமை மற்றும் சாதனை ஆகியவற்றில் தன்னிகரற்ற ஒரு படையாக விளங்குகிறது. காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு 427.59 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் கணினிகள், வீடியோ கேமராக்கள், நவீன ஆயுதங்கள், உயர் தொழில்நுட்பத் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவை வழங்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து வசதிகளும் கொண்ட காவலர் பயிற்சிக் கழகம் தொடங்க 48 கோடி ரூபாய் செலவில் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளளது. தரமணியில் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் கட்ட 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கு 1339.33 கோடி ரூபாயும், தீ தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 68.55 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

தீவிரவாதத்தை ஒழிக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணத்தை ஈடேற்றிய அதிரடிப் படை காவல் துறையினர் வீரப்பன் மற்றும் கூட்டாளியினரை ஒழித்துக் கட்டி, சாதனை படைத்திருக்கின்றனர். இதனால், இந்திய அளவில் மட்டுமல்ல, சர்வதேச அளவில் தமிழகக் காவல் துறையின் திறமை பாராட்டைப் பெற்றிருக்கிறது. எனவே, இதய தெய்வம் அம்மா அவர்கள் அதிரடிப் படை காவல் துறையினர் மற்றும் வனத் துறையினருக்குத் தலா மூன்று இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, விரும்பும் இடத்தில் வீட்டுமனை, ஒரு படி பதவி உயர்வு, பாராட்டுப் பதக்கம் வழங்கி சிறப்பித்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். 2004 ஆம் ஆண்டில் காவலர் பணியாளர்களின் 3,609 பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகையாக ஒரு கோடியே 32 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, காவலர் நலனில் அக்கறை கொண்ட ஒரு சிறப்பு அம்சமாகும். 2004 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து சிறந்த காவலர் பணியாளரின் 118 குடும்பத்தினருக்கு 1.18 கோடி ரூபாய் வழங்கப்பட்டது பாராட்டுக்குரிய ஒன்றாகும். 2002 ஆம் ஆண்டில் 8,395 காவல் பணியாளர்களின் குறைகளை நேரிடையாகக் கேட்டறியும் மகத்தான பணியை மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்டு, அதனால் அனைவரும் பயனடைந்ததை



யாரும் மறுக்க முடியாது. மனு நீதி நாள் மக்களுக்கு மட்டுமல்ல, காவலர்களுக்கும் என்கின்ற ஒரு சித்தாந்தத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 6,315 வீடுகளை காவலர் குடியிருப்பதற்காகக் கட்டிக் கொடுத்து, 2004-2005 ஆம் ஆண்டில் மட்டும் 94.25 கோடி ரூபாய் செலவில் 2,449 வீடுகள் கட்டப்படவுள்ளன என்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

பொது விவாதத்திலே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் பொன்முடி பேசுகின்றபோது, சில சட்டங்களைத் திரும்பப் பெற்றது ஏன் என்றும், திட சிந்தனை இல்லையா என்றும், ஏன் இந்தத் தடுமாற்றம் என்றும் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அப்படியானால், இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எந்தச் சட்டத்தையும் திரும்பப் பெறவில்லையா? நீங்கள் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவினை 26-5-1998-ல் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்து, 30-5-1998-ல் அச்சட்டமுன்வடிவை நிறைவேற்றினீர்களே, ஏன் திரும்பப் பெற்றுக்கொண்டீர்கள்? இதற்குப் பெயர் திட சிந்தனையா, ஏன் இந்த ஏமாற்று வித்தை, கேட்கமாட்டோமா? நீங்கள் பயங்கரவாதத்தைத் தடுக்கத்தானே அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள்? பிறகு ஏன் திரும்பப் பெற்றீர்கள்? யாருடைய நிர்ப்பந்தத்தினால் இந்தச் சட்டத்தைப் திரும்பப் பெற்றீர்கள்? கேட்க மாட்டார்களா நாட்டு மக்கள்? யாரைக் காப்பாற்ற இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றீர்கள்? காட்டுக் கொள்ளையன் வீரப்பன் காப்பாற்றப்பட்டானா? அல்லது வெடிகுண்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட தீவிரவாதிகள் காப்பாற்றப்பட்டார்களா? நீங்கள் சொல்லியதுபோல் யாருக்குத் தடுமாற்றம்? மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களுக்குத்தானே தடுமாற்றம் என்கின்ற கேள்விகளை இந்த நேரத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சி, அதிகாரம் வேண்டும் என்பதற்காக, கொலை வெறியர்களின், பயங்கரவாதிகளின் ஆதரவினைப் பெற்றவர்கள்தானே திராவிட முன்னேற்றக் கழகம்?

*பிற்பகல் 12-35*

பொது விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடுகிறபோது, கூலிப்படை ஆதிக்கம் குறித்தும், சட்டம்-ஒழுங்கு குறித்தும் இங்கே பேசினார்கள். இவை முந்தைய ஆட்சிக் காலத்திலே பேசவேண்டிய பேச்சுக்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சிகளை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். 1997-ல்

19 மதக் கலவரங்கள் ஏற்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மேலப்பாளையத்தில் 12-8-1997 அன்று மத விரோதம் காரணமாக 3 நபர்கள் கொலை. 2-9-1997 அன்று கோவையிலே நடைபெற்ற மதக் கலவரங்களில் 5 இந்துக்கள் கொலை. 29-11-1997 அன்று கோவையிலே செல்வராஜ் என்ற போக்குவரத்துக் காவலர் அல்-உம்மா தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களில் 22 பேர் மரணம். இதில் தீ வைப்புச் சம்பவங்கள், சொத்து சூறையாடல் சம்பவங்கள் நிகழ்ந்தன. 6-12-1997-ல் திருச்சி மற்றும் ஈரோடு அருகில் இரயிலில் நிகழ்ந்த 2 குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 6 பேர் உயிரிழந்தனர். 14-2-1998 அன்று கோவையிலே ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 49 பேர் உயிரிழந்தனர். இதில் 6 தீவிரவாதிகள் மடிந்தனர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலவளவு கிராமத்தில் 30-6-1997-ல் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் 4 நபர்கள் கொலை. சிவகங்கை மாவட்டம், தேவகோட்டைக்கு அருகில் கண்டதேவி என்னும் இடத்தில் கோயில் திருவிழா 29-6-1998 ஆம் தேதி நடைபெற்றபோது, துப்பாக்கிச் சூட்டிலே 5 பேரும், ஜாதிக் கலவர நிகழ்ச்சியில் 6 பேரும் இறந்தனர். இதுவெல்லாம் முந்தைய தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்கள். ஆனால் மாண்புமிகு அம்மா ஆட்சியில் தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்குகிறது. தமிழகத்தில் சாதி, மதக் கலவரம் இல்லை. வன்முறை, தீவிரவாதம் இல்லை. அடித்தளத்து மக்களும், பெண்களும், அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழும் தமிழகமாக உள்ளது. அனைத்துத் தரப்பு மக்களும் அச்சமின்றி வாழும் தமிழகமாக உள்ளது. சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பதை நிறைவேற்றும் தமிழகம். வெளி மாநிலத்தவரும், வெளி நாட்டவரும் விரும்பி தொழிலில் முதலீடு செய்ய அனைவரையும் கவரும் தமிழகமாக இன்றைக்குத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த அளவிற்குத் தமிழகத்தை உயர்த்திய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றைக்குப் பேசிய மு.க. ஸ்டாலின் நிதிநிலை அறிக்கை பற்றிக் குறிப்பிடுகிறபோது, காலி டப்பா என்கின்ற கூற்றை இங்கே வெளியிட்டார். நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட, காவல் துறைக்கு இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,339.33 கோடி ரூபாய் இவர் கண்ணுக்குத் தெரியவில்லையா? வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 854.44 கோடி ரூபாய் இவர் கண்ணுக்குப் புலப்படவில்லையா? சுனாமி சம்பவத்திற்காக, மறுவாழ்வுப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட



ஆயிரம் கோடி ரூபாய் தெரியவில்லையா? நமது கிராமம் என்கின்ற வறுமைக் குறைப்பு மற்றும் ஒவ்வொரு கிராமத்திற்கும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது தெரியவில்லையா? சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கான நிதி ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. இது புரியவில்லையா இவருக்கு? நெடுஞ்சாலை மேம்பாட்டிற்காக முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு 2,991.47 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டது. இது இவருக்குத் தெரியவில்லையா? ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புநிதித் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ரூ. 7,528.09 கோடியாக உயர்ந்துள்ளது. இது புரியவில்லையா? உணவு மானியத்திற்காக நிதி ஒதுக்கம் ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதையுமா இவர் அறியவில்லை? கல்வி மேம்பாட்டிற்காக இத்துறையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற 4,348.01 கோடி ரூபாய் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதையுமா அறியவில்லை? மக்கள் நல்வாழ்விற்காக 1,652.24 கோடி ரூபாய் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதுவுமா இவருக்குத் தெரியவில்லை? இப்படிப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற 31,655.53 கோடி ரூபாய் செலவாக இருக்கும் என பட்ஜெட்டில் கணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு சிறப்புகள் இருந்தும், காலி டப்பா என்று சொன்னால், உண்மையை மறைக்க முயற்சிக்கிறார் என்று புரிகிறது. உங்களுடைய வார்த்தைகள் மக்களிடத்தில் ஒருபோதும் எடுபடாது. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க இவர் பார்க்கிறார். எனவே, இவர் சொன்ன கருத்துகள் எப்படியுள்ளன என்றால், அதுவொரு ஓலைப் பட்டாசு, புஸ்வாணம்; இதைச் சொல்ல வேண்டுமென்றால், இவர் ஒரு வெத்துவேட்டு என்றே இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

இரண்டு நாட்களுக்கு முன்பு ஆந்திராவில் தீவிரவாதிகள் காவல் நிலையத்திற்குள் புகுந்து, இன்ஸ்பெக்டர், பெண் போலீஸ் உள்பட 7 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். அதற்குமுன், மணாளா என்ற பகுதியில் போலீஸார் நடத்திய தாக்குதலில் 10 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

12-3-2005 அன்று அஸ்ஸாமில் உல்ஃபா தீவிரவாதிகளால் கவர்னரை வெடிகுண்டு வீசி, கொல்ல முயற்சி நடந்தது. இதில் ஒருவர் பலி, 19 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தமிழகத்தில் மாணவர்களிடம்

[திரு. பி.எம். நரசிம்மன்] [2005 மார்ச் 14

அமைதி, தொழிலாளர்களிடம் அமைதி மற்றும் மதக் கலவரம், ஜாதிக் கலவரம் இல்லாத அமைதிப் பூங்காவாக இருப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களால் 2003 செப்டம்பரில் உருவாக்கப்பட்ட புதிய தொழில் கொள்கையின் பயனாக, 2004 செப்டம்பர் வரையுள்ள காலத்தில் 53,461 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்து, உள்நாட்டு முதலீட்டில், இந்தியாவில் முதல் மாநிலமாகத் திகழ்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பெருமுயற்சியே காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றங்களைக் கண்டுபிடித்தல், குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் மத நல்லிணக்கத்தைப் பாதுகாத்தல் ஆகிய செயல்பாடுகள் காவல் துறையின் பணிகளாக விளங்குகின்றன. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கணினி சார் குற்றங்கள், வீடியோ திருட்டுக் குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் காவல் துறை உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. காவல் பணி என்பது சாதாரண மக்களின் நலனையே தனது குறிக்கோளாகவும், முதன்மைப் பணியாகவும் கொண்ட ஒரு இன்றியமையாத மக்கள் சேவை ஆகும்.

2004 ஆம் ஆண்டில் கண்டதேவி கோயில் தேர்த் திருவிழா அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவோடு அமைதியான முறையில் நடைபெற்று முடிந்தது. மதுரை மேலவளவு முருகேசனின் நினைவு தினம், தாமிரபரணி சோகச் சம்பவ தினம், பசும்பொன்னில் தேவர் ஜெயந்தி விழா, டிசம்பர் 6-ல் அனுசரிக்கப்பட்ட பாபர் மசூதி இடிப்பு நினைவு தினம், பிப்ரவரி 14-ல் கோவை தொடர் குண்டு வெடிப்பு நினைவு தினம் ஆகியவை எவ்விதப் பிரச்சினையும் இன்றி, சுமுகமான முறையிலே அமைதியாக நடந்தேறின.

2004 ஆம் ஆண்டில் சாதி, மதம் சார்ந்த பிரச்சினையோ, தொழிலாளர் பிரச்சினையோ, மாணவர் பிரச்சினையோ மாநிலத்தில் ஏதும் ஏற்படவில்லை. பாராளுமன்றத் தேர்தலின்போதும், சட்டம்-ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டது. மதக் கலவரம் ஏற்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, 1996-ல் 17 பேர் உயிரிழந்தனர். 1997-ல் 45 பேர் உயிரிழந்தனர். 1998 ஆம் ஆண்டு 2 பேர் மதக் கலவரத்தில் உயிரிழந்தனர். 1999-ல் 2 பேர் உயிரிழந்தனர். மாண்புமிகு அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் 2001-ல் ஒருவர் உயிரிழந்தார். 2002-ல் 2 நபர்கள் உயிரிழந்தனர். 2003-ல் 2 பேர் உயிரிழந்தனர்.



2005 மார்ச் 14] [திரு. பி.எம். நரசிம்மன்]

2004-ல் ஒருவருமே இல்லை. 2005-ல் இதுவரை ஏதும் இல்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தின்போது மதக் கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்து இருந்ததையும், தற்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏதும் இல்லை என்கிறபோது, மாண்புமிகு அம்மா ஆட்சியில் மதக் கலவரம் என்பதே தலைதூக்கவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதிக் கலவரங்களால் எவ்வளவு உயிர் இழப்பு என்பதை தி.மு.க. ஆட்சிக் காலத்திற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திற்கும் ஏற்பட்ட மாறுபட்ட நிலைமைகளை எடுத்துச் சொல்ல விழைகிறேன். 1996-ல் 50 பேர் உயிரிழந்துள்ளனர். 1997-ல் 93 பேர் உயிரிழந்துள்ளனர். 1998-ல் 30 பேர் உயிரிழந்துள்ளனர். 1999-ல் 22 பேர் உயிரிழந்துள்ளனர். 2000 ஆம் ஆண்டு 18 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே 2002-ல் 6 பேர்; 2003-ல் 11 பேர்; 2004-ல் 2 பேர்; 2005-ல் இதுவரையில் ஏதும் இல்லை.

பிற்பகல் 12-45

தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தமிழகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகளின்போது, 1997-ல் 63 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள்; 1998-ல் 48 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள்; 1999-ல் 35 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள்; 2000 ஆம் ஆண்டில் 24 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் 2002-ல் 20 சம்பவங்கள்; 2003-ல் 13; 2004-ல் 12; 2005-ல் இதுவரையில் ஒன்றும் இல்லை. பயங்கரவாதிகளையும், சமூக விரோதிகளையும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க அரசு உறுதி பூண்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் 1992-ல் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் முதன்முதலில் தொடங்கப்பட்டன. 1996-க்குள் 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம்தான் அனைத்து மகளிர் காவல் நிலையமும், அனைத்து மகளிர் அதிரடிப் படையும் கொண்டிருக்கும் மாநிலம் ஆகும். அதேபோன்று அனைத்து மகளிர் காவல் அணி ஒன்றைத் தனியாக உருவாக்கியுள்ள முதல் மாநிலம் தமிழகம் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீடியோ கலந்தாய்வு மூலம் நீதித் துறை நடுவர்கள் விசாரணைக் கைதிகளின் நீதிமன்றக் காவலை நீட்டிப்புச் செய்யும் புதிய முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டு, 62 நீதிமன்றங்களையும், 16 சிறைச்சாலைகளையும் இணைக்கும் திட்டம் 8.61 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 357 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். குறிப்பாக, 2000 ஆம் ஆண்டில் 66 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். 2001 ஆம் ஆண்டில் 63 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். நீதிமன்றங்களுக்குக் கைதிகளை அழைத்து வரும்போது தப்பிச் செல்வதைக் கட்டுப்படுத்தவே ஓர் அறிவுபூர்வமான நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது.

குற்றங்களை யார் செய்தாலும், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு அறவே இல்லாமல், சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பதை இந்திய நாடே பாராட்டும் வண்ணம், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டி வரும் பெருமைக்குரியவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை; கட்டப் பஞ்சாயத்துக்கு இடமில்லை; வன்முறைக்கு இடமில்லை; தீவிரவாதம் ஒழிந்தது; பயங்கரவாதம் ஒழிந்தது; மதக் கலவரம் மறைந்தது; சாதிக் கலவரம் இல்லாத நிலை; இப்படிப்பட்ட அமைதித் தமிழகத்தை, தலைசிறந்த சட்டம்-ஒழுங்குப் பராமரிப்பால் மக்களுக்குத் தந்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களைத் தமிழக மக்கள் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள்.

இன்றைக்குச் சென்னையிலே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கும், விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் மேம்பாலம் கட்டுகிறோம் என்று மைய அரசிலே அங்கம் வகிப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 2000 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, அடையாறிலே ஒரு மேம்பாலம் கட்டப்பட்டது. நாமெல்லாம் நினைத்தோம், மேம்பாலம் என்று சொன்னால் ஏதோ ஊழல் மேம்பாலம்தான் என்று நினைத்தோம். ஆனால் செய்தித்தாள்களிலே "மேம்பாலமாம்-மேலே அனுப்பும் பாலம்" என்று பத்திரிகைகள் சொல்லுகிற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. தேவையில்லாத இடத்திலே, போக்குவரத்திற்கு அபாயகரமான இடத்திலே பாலம் கட்டப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அடையாறு பகுதியிலே L.B. சாலையிலே தேவையில்லாமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது பாலம் கட்டப்பட்டு, அங்கே ஊழல் செய்யப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி



அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, மேம்பாலம் கட்டப்பட வேண்டுமானால், பொது மக்களினுடைய கருத்துக்களைப் பெறவேண்டும். வணிகர்கள், சமூகத் தொண்டு ஆர்வலர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டிருக்கவேண்டும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே யாருடைய கருத்துகளையும் கேட்காமலேயே, அவர்களுடைய சுயநலத்திற்காக, மக்கள் கோரிக்கை வைக்காமலேயே, சுயநலம் பெறவேண்டுமென்கின்ற நோக்கத்தோடு பல இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் இன்றைக்குப் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கின்றன என்று பொது மக்கள் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சென்னை மாநகர மக்கள் சார்பிலே தெரிவித்துக்கொள்வது, போக்குவரத்திற்கு இடையூறாக அடையாறு போன்று எங்கெல்லாம் இருக்கின்றதோ, அது எதற்காகக் கட்டப்பட்டது என்றும், அப்பொழுது தன்னுடைய இலாபத்திற்காக, சுய இலாபம் பெறவேண்டுமென்பதற்காகக் கட்டப்பட்டது என்று சொல்கின்றபோது, அவர்கள்மீது, அதற்கு யார், யார் உறுதுணையாக இருந்தார்கள், அதற்கு யார், யார் காரணமானவர்கள் என்பதை ஆராய்ந்து, அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்மைக்கு மாறான வியாக்கியானங்களுக்கு என்னதான் வெளிச்சத் திரி போட்டாலும், இந்த மண்ணில் அவர்கள் கவ்வப் போவது இருட்டுதான். இருட்டுக்கு வெள்ளை அடிக்க முயற்சிக்கும் இவர்களின் குருட்டுத் தந்திரங்களுக்கு, வருகின்ற தேர்தல் பாடம் புகட்டும்! அன்னையே! உமது புகழ் பாடி இந்தக் குவலயம் சிறக்க இந்த நிதிநிலை அறிக்கை துணை நிற்கும்! அதற்கு இந்த நாட்டு மக்களும் துணை நிற்பார்கள். எனவேதான், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தமிழக மக்களுக்குப் பரிசாக, புதிய வரி விதிப்பு இல்லாத பட்ஜெட்டை பூங்கொத்தாக, அனைத்தும் மக்களைச் சென்றடையும். அளித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. மாண்புமிகு அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, ஏழை, எளியோரின் ஆட்சியாக உள்ளது. அம்மா அவர்களின் ஆட்சி, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அம்மா அவர்களின் ஆட்சி, கிராமப்புறப் ஆட்சியாகத் திகழ்கிறது. அம்மா அவர்களின் ஆட்சி, பொருளாதாரத்தை உயர்த்திய ஆட்சியாக அமைந்துள்ளது. அம்மா

அவர்களின் ஆட்சி, சமூகப் பொருளாதார உயர்வினைப் பெற்ற அரசாகத் திகழ்கிறது. அம்மா அவர்களுடைய ஆட்சி அனைத்துத் துறைகளிலும் முதல் நிலை என்கின்ற இலக்கை நோக்கிப் பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படி வளர்ந்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு எதிரிலே தடைக் கற்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றையெல்லாம் தூள் தூளாக்கும் வீரமும், விவேகமும் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே இருக்கின்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எதிலும் வெற்றி, எப்பொழுதும் வெற்றி, வெற்றி மேல் வெற்றி என்று கூறி, காவல் துறை மானியத்தை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகின்றேன், நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

***திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கைமீது எனது கருத்துகளைச் சொல்ல கனிவோடு அழைத்த தங்களுக்குப் பணிவோடு எனது நன்றிகளையும், வணக்கங்களையும் முதற்கண் உரித்தாக்கிக்கொண்டு, ஒரு ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான விவாதத்திற்குள் வருகின்றேன். என்னைப் பொறுத்தமட்டிலும், இந்த நிதிநிலை அறிக்கையாகட்டும், துறை சார்ந்த கொள்கை விளக்கக் குறிப்புகளாகட்டும், அவற்றை அகழ்வாராய்ச்சி செய்து, இகழ்வு செய்ய வேண்டுமென்பது எனது நோக்கமன்று. மாறாக, இவற்றின் வாயிலாகத் தங்கள் அரசு தந்துள்ள திட்டங்களையெல்லாம் எவ்வாறு செயல்படுத்தினால், அதன் வாயிலாக தமிழக மக்களுக்குக் கூடுதல் பலன்கள் கிட்டும், எட்டும் என்பதை எடுத்துரைப்பதற்காக நான் தங்கள் முன்னே நிற்கின்றேனேயன்றி, இடித்துரைப்பதற்காக அன்று.

கடந்த வெள்ளியன்று இந்தப் பேரவையிலே மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் பதிலுரை அளித்த நேரத்திலே, உள்ளம் பூரிக்க உவகையோடு ஒரு நற்செய்தியைச் சொன்னார்கள். இந்த ஆண்டு, முன் எப்போதும் இல்லாத அளவு உச்சபட்ச நிதி ஒதுக்கீடாக 9,100 கோடி ரூபாய் பெறப்பட்டிருக்கின்றது என்றும், கடந்த ஆண்டு 8,001 கோடி ரூபாய் பெறப்பட்டது, ஆனால் இந்த ஆண்டு அதைக் காட்டிலும் மிக அதிகமாக 9,100 கோடி ரூபாய் பெறப்பட்டிருக்கின்றது என்றும் சொன்னார்கள். ஆக, இந்த அதிக நிதி ஒதுக்கீடு என்பது, மைய அரசானது தமிழக அரசுக்கு அளித்துள்ள மிகப் பெரும் பரிசு என்று மகிழ்வோடும், நெகிழ்வோடும் இங்கே சுட்டிக் காண்பித்தார்கள். உண்மையிலேயே, இது மிக, மிக மகிழ்ச்சிகரமான செய்தி, நாங்கள் பெருமிதம் கொள்கின்ற



செய்தியும்கூட. அதேபோன்று, முன்பு மத்தியிலே ஆண்டு கொண்டிருந்த முந்தைய அரசு மத்திய வரித் தொகுப்பிலிருந்து தமிழகத்தின் பங்கினை 6.637 சதவீதத்திலிருந்து வெகுவாகக் குறைத்தது. அதாவது, 18.86 சதவீதம் குறைத்து, 5.38.5 சதவீதமாக நிர்ணயித்திருந்த நிலையிலே, தற்போதுள்ள மைய அரசு தமிழ்நாட்டின் பங்கை 5.305 சதவீதமாக நிர்ணயித்திருக்கிறது என்று சொல்லிவிட்டு, இது முந்தைய அளவைக் காட்டிலும் சற்றுக் குறைவே என்றாலும்கூட, நாம் ஏற்கெனவே அச்சப்பட்டாற்போன்று மிக அதிக அளவிலே, பெருமளவிலே குறையவில்லை என்று தாங்களே சொல்லியிருப்பதிலேயிருந்தும், நிதி அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அதிகப்படியான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதிலேயிருந்தும், தற்போது மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கின்ற மைய அரசானது, தமிழகத்தின்பாலும், தமிழக மக்களின்பாலும் அதிக அக்கறை கொண்ட அரசு, அன்பு பாராட்டுகின்ற அரசு என்பது தெள்ளத் தெளிவாகிறது.

*பிற்பகல் 12-55*

பொதுவாக, அதிக நிதி ஒதுக்கீடு என்பது, அதிகப்படியான வளர்ச்சிப் பணிகளுக்கு ஆதாரம், அடையாளம், அச்சாரம் என்று சொல்லலாம். அதைத் தாங்களும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த ஆண்டின் நிதி ஒதுக்கத்தை ஆய்வு செய்து பார்க்கின்ற நேரத்திலே, இந்த ஆண்டு காவல் துறைக்காக மட்டும் நீங்கள் 1,339.33 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். அதேபோன்று, கடந்த ஆண்டும் 1,327.15 கோடி ரூபாயை காவல் துறைக்காக ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு அருமையான விளக்கத்தைத் தந்தார்கள். காவல் துறையைக் காட்டிலும் சில துறைகளுக்குச் சற்று அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். எங்களுடைய கருத்து என்னவென்றால், எந்தத் துறையிலே பயனாளிகள் அதிகம் இருக்கிறார்களோ, எந்தத் துறையின் வாயிலாகப் பொது மக்களுக்குக் கூடுதலான பணிகள், நலத் திட்டங்கள் சென்று சேர்கின்றனவோ, அந்தத் துறைக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்வது என்பது ஆரோக்கியமானதாக, வரவேற்கத்தக்கதாக இருக்கும். அந்த நிலையிலே ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பொதுப் பணித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகியவற்றோடு எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்திலே, காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ள நிதி என்பது சற்றுக் கூடுதலாகத்தான் எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகவே, காவல் துறை என்பது, இந்த அரசினுடைய பெரும்பான்மைக் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது எனவும், காவல் துறை என்பது இந்த அரசினுடைய

ஆவல் துறையாக மாறிவிட்டது எனவும், எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் இன்னும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், வளர்ச்சிப் பணிகள் நடைபெற வேண்டியது மிக, மிக அவசியம். தொழில் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். தொழில் துறையில் அதிக முதலீடுகள் வர வேண்டுமானால், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைய வேண்டுமானால், வளர்ச்சிப் பணிகள் நடைபெற வேண்டுமானால், மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டும்; சட்டம்-ஒழுங்கு காக்கப்பட வேண்டும். ஆகவே, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு காக்கப்பட்டு, அமைதி நிலவினால்தான் மற்ற துறைகளில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற இயலும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே காவல் துறைக்கு எவ்வளவு செலவு செய்தாலும், அது அதிகம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசட்டும், அவர்கள் பேசட்டும்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** காவல் துறையிலே, காவல் துறைப் பணியாளர்கள் மட்டுமே பயனடைகின்ற காரணத்தினால், நாங்கள் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல நேர்ந்தது. எங்களைப் பொறுத்தமட்டிலும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தவறான மதிப்பீடு. காவல் துறையின் பணியினால் சட்டம்-ஒழுங்கு காக்கப்படுகிறது, அமைதி நிலைநாட்டப்படுகிறது. ஆகவே, தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த ஆறே கால் கோடி மக்களும் பயனடைகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** ஒரு குறிப்பிட்ட துறைக்கு, ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு என்பது, அந்தக் குறிப்பிட்ட துறையை மட்டும் வளர்ச்சிப் பாதையிலே வைத்துவிட்டு, இதர துறைகளைத் தளர்ச்சிப் பாதையில் தள்ளிவிடும் என எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் எண்ணுவதற்கும், போர்க் குரல் எழுப்புவதற்கும் இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கீடு இடம் அளிப்பதாக இருக்கிறது. இருந்தாலும்கூட, என்னைப் பொறுத்தமட்டிலும், இந்த அதிகப்படியான நிதி ஒதுக்கீட்டைக்கூட இன்னமும் ஆக்கபூர்வமாகச் செயல்படுத்தலாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. தமிழகத்தின் மக்கள் தொகையானது தற்போது பன்மடங்கு பல்கிப் பெருகிவிட்ட நிலையிலே, இன்றைக்கு



அதற்கேற்றாற்போல குற்றங்களும் பன்மடங்கு பெருகியிருக்கின்றன. ஆனால், அதற்கேற்றாற்போன்ற எண்ணிக்கையிலே, விகிதாச்சாரத்திலே காவல் நிலையங்களோ அல்லது காவல் துறைப் பணியாளர்களோ, அதிகாரிகளோ இல்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். பல நேரங்களிலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் திருமதி மஹேஸ்வரி அவர்கள் இப்போது பேசும்போது, குற்றங்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்து விட்டதாக இங்கே குறிப்பிட்டார். நான் முந்தைய ஆண்டுகளுக்கு எல்லாம் செல்ல விரும்பவில்லை. 2004 வரையில் புள்ளிவிவரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவையெல்லாம்--இப்போது 2003-2004 ஆம் ஆண்டுகளுக்கான குற்ற நிகழ்வுகளை ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். வெவ்வேறு தலைப்புகளின்கீழ் இந்தக் குற்ற நிகழ்வுகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. Property crimes, Murder for gain-2003-ல் 7, 2004-ல் 4; ஆகவே குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன. Dacoity—2003-ல் 6, 2004-ல் 4 ; ஆகவே குறைந்துள்ளன. Robbery—2003-ல் 74, 2004-ல் 47. குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன. Burglary—2003-ல் 649; 2004-ல் 430. அதுவும் குறைந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக 2003-ல் Property crimes-ன் எண்ணிக்கை 4,515, 2004-ல் 3,748. அதையே, violent crimes என்ற தலைப்புகளை எடுத்துக் கொண்டால், Murder என்ற தலைப்பின்கீழ் 2003-ல் 64, 2004-ல் 63. குறைந்திருக்கிறது. Attempt to commit murder—2003-ல் 279, 2004-ல் 210. குறைந்துள்ளது. Culpable homicide not amounting to murder—2003-ல் 4, 2004-லும் 4. ஆகவே அதிகரிக்கவில்லை. Hurt, grievous hurt— 2003-ல் 749, 2004-ல் 667,. குறைந்துள்ளது. Riots—2003-ல் 43, 2004-ல் 33. ஆக, ஒட்டுமொத்தக் கணக்கை எடுத்துக் கொண்டால், இந்த violent crimes-ன் எண்ணிக்கை 2003-ல் 1,139, 2004-ல் 977.

பிற்பகல் 1-00

அதைப்போலவே, பெண்களுக்கு எதிரான குற்றங்கள்—Rape—கற்பழிப்பு—2003-ல் 38, 2004-ல் 30; Molestation—மானபங்கப்படுத்துவது—2003-ல் 90, 2004-ல் 15; பாலியல் தொடர்பான harassment, sexual harassment—2003-ல் 212, 2004-ல் 184. Cruelty by husband and relatives—2003-ல் 159, 2004-ல் 135. அந்தத் தலைப்பின்கீழும் குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன. ஒட்டுமொத்தமாக Crimes against Women என்ற தலைப்பின்கீழ் 2003-ல் 517 குற்றங்கள், 2004-ல் 387 குற்றங்கள். ஆகவே

கணிசமாகக் குறைந்துள்ளன. Other heads — Kidnapping and abduction—2003-ல் 34, 2004-ல் 20; Arson—2003-ல் 1, 2004-ல் எதுவும் இல்லை. Cheating—2003-ல் 627, 2004-ல் 359. பாதியாகக் குறைந்துள்ளது. Counterfeiting—2003-ல் 8, 2004-ல் 3. ஆக, grand total-ஐ எடுத்துக் கொண்டால், ஒட்டுமொத்தமாக 2003-ல் Other heads என்ற தலைப்பின்கீழ் 8,580 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 2004-ல் 7,757 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவை எல்லாம் சென்னை மாநகரத்திற்கான குற்ற நிகழ்வுகள். இன்னும் மாநிலம் முழுவதற்கும் புள்ளிவிவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அதிக நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளதாக முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள்--கற்பழிப்பு 2003-ல் 547, 2004-ல் 618, 13 விழுக்காடுகள் அதிகரித்திருக்கின்றன. ஆள் கடத்தல் 2003-ல் 641, 2004-ல் 692, 8 விழுக்காடுகள் அதிகரித்திருக்கின்றன. வரதட்சணை மரணங்கள் 2003-ல் 222, 2004-ல் 225, 1 விழுக்காடு அதிகரித்திருக்கிறது. கணவன் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை 1,494, 2003-ல்; 1,437, 2004-ல். ஆக மொத்தத்தில் நிகழ்வுகள் அதிகரித்திருக்கின்றன, குறையவில்லை. அதுமட்டுமல்ல, இந்தக் குற்றங்கள் எல்லாமே பதிவு செய்யப்பட்ட குற்றங்கள்—பதிவு செய்யப்பட்ட குற்றங்கள். பதிவு செய்யப்படாத குற்றங்கள் ஏராளமானவை. திருட்டுக்களாக இருந்தாலும், கொள்ளைகளாக இருந்தாலும், house-breaking -ஆக இருந்தாலும், பதிவு செய்யப்படாத குற்றங்கள்தான் அதிகம். காவல் நிலையங்களிலே பெரும்பாலும் போனால் குற்றங்களைப் பதிவு செய்வதே இல்லை. அதுதான் உண்மை. எனவே பதிவு செய்யாத குற்றங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது நிச்சயமாக அதிகரித்திருக்கிறது, குறையவில்லை.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கருதினேன். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இவ்வாறு கூறியிருப்பதால் நான் சில விளக்கங்களைக் கூறக்



கடமைப்பட்டுள்ளேன். இப்பொழுது ஒட்டுமொத்தமாக 2003-2004 ஆம் ஆண்டுகளுக்கு பெண்களுக்கெதிரான குற்றங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையைப் பார்த்தீர்களானால், 2003-ல் ஒட்டுமொத்த எண்ணிக்கை 4,952. 2004-ல் 4,833. ஆகவே, minus 2.40 விழுக்காடு குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றபடி தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைவாக உள்ளன. இந்த விளக்கத்தையும் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவுக்குக் குற்ற நிகழ்வு விகிதம் 2003 ஆம் ஆண்டில் 40 புள்ளிகள் குறைந்துள்ளன. தேசிய குற்றப் பதிவேட்டுக் கூடத்தால் வெளியிடப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டிற்கான குற்ற நிகழ்வுகள் பற்றிய புள்ளி விவர அறிக்கையின்படி, 2002 ஆம் ஆண்டில் 265 புள்ளிகளாக இருந்த குற்ற நிகழ்வு, 2003 ஆம் ஆண்டில் 225 புள்ளிகளாகக் குறைந்துள்ளது. குற்ற நிகழ்வு விகிதம் என்பது, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கான குற்ற நிகழ்வு எண்ணிக்கையாகும். குற்றத் தடுப்புக்கான நவீன சாதனங்கள், நவீன கணினிமயமாக்கப்பட்ட கைவிரல் ரேகை பதிவு சாதனங்கள் உள்ளிட்ட புலனாய்வுக்கான அறிவியல் உபகரணங்கள், நவீன வாகனங்கள் முதலியன வழங்கப்பட்டு, காவல் துறை பலப்படுத்தப்பட்டுள்ளதால், குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மேம்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சொத்து தொடர்பான குற்றங்களான ஆதாயக் கொலை, கூட்டுக் கொள்ளை, வழிப்பறி, கன்னக் களவு மற்றும் திருட்டுக் குற்றங்கள் 6.3 சதவிகித அளவு குறைந்துள்ளன. எனவே, குற்ற நிகழ்வு விகிதம் 2004 ஆம் ஆண்டில் மேலும் குறையும். கடந்த சில ஆண்டுகளாகவே, குற்றங்களைக் கட்டுப்படுத்துவதிலும், சட்டம்-ஒழுங்கு பராமரித்தலிலும் முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடும் திகழ்ந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் ஆட்சியிலே மிக, மிக அதிகமான குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குற்றங்களுக்கெல்லாம் தங்கள் அரசுதான் பொறுப்பு என்கின்ற வகையிலே நான் சொல்ல விரும்பவில்லை. சொல்லவும் வரவில்லை. அதாவது, இன்றைக்கு மக்கள் தொகையானது பன்மடங்கு பல்கிப் பெருகி விட்டது. தவறு செய்யாத மனிதர்கள் இல்லை. ஆகவே, பல நேரங்களிலே, பலவகையான குற்றங்கள் இன்றைக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற நேரத்திலே, அந்தக் குற்றங்களை மிக, மிகச் செம்மையாக நாம் தடுத்து நிறுத்தவேண்டுமென்று சொன்னால், காவல் துறையினுடைய எண்ணிக்கையானது கணிசமாக உயர்த்தப்படவேண்டுமென்ற கருத்திற்காகச் சொன்னேன். அதாவது,

ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 129 காவலர்கள் என்னும் அடிப்படையிலே காவல் துறையிலே ஆட்கள் நியமிக்கப்படுவதாக Statistical Data-விலே சொல்லப்பட்டிருக்கிறது. இது மக்கள் தொகையோடு ஒப்பீடு செய்யும்போது 1.29 விழுக்காடுதான். தற்போது கொலைகளும், கொள்ளைகளும், கூலிப்படைகளும் கோலோச்சிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இந்த விழுக்காட்டினை, மிகக் குறைவாக இருப்பதை, 5 விழுக்காடாக உயர்த்துவது சாலப் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திருமதி மஹேஸ்வரி அவர்கள் பேச்சிலேயே ஒரு முரண்பாடு தெரிகிறது. ஆரம்பத்தில் காவல் துறைக்கு இவ்வளவு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்களே என்று குற்றம் சாட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது காவல் துறையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்கிறார். அப்படி எண்ணிக்கையைக் கூட்டினால், இன்னும் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவழிக்க வேண்டி வருமே! அதைப் பற்றிப் பரவாயில்லையா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான நிதி ஒதுக்கீட்டைக்கூட ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம் என்று நான் சொன்னேன். அந்த ஆக்கபூர்வமான வழிகளிலே இதுவும் ஒன்று என்பதுதான். ஏனென்றால், சட்டம்-ஒழுங்கைச் செம்மையாகப் பராமரிப்பதற்கு அதிகப்படியாக ஆட்களை நாம் காவல் துறையிலே நியமிப்பது என்பது நிச்சயமாக உதவும் என்பதற்காக இந்தக் கருத்தைச் சொன்னேன்.

அடுத்து, காவல் துறையின் செயல்பாடு என்பது தற்போது எப்படியிருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கடந்த 9 ஆம் தேதியன்று நடைபெற்ற ஒரு நிகழ்வானது—அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காண்பித்தார்கள். இது மிகக் கடுமையான குற்றம் என்று இங்கே சொன்னார்கள்—அப்படிப்பட்ட ஒரு குற்றமானது, அதுவும் ஓர் உயர் அதிகாரி தாக்கப்பட்ட ஒரு சம்பவமானது, இன்று காலை வரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, அதாவது துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரவில்லை என்று சொன்னால், காவல் துறையினர் எத்தனை மெத்தனமாக, எத்தனை



அலட்சியப் போக்கோடு நடந்துகொள்கின்றார்கள் என்பதைத் த்ங்களுடைய கவனத்திற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் நிச்சயமாக மெத்தனமாக இல்லை. பொது மக்கள் யாராவது தாக்கப்பட்டால் உடனடியாக வீறுகொண்டு எழுந்து காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள். இங்கே தாக்கப்பட்டவர் ஒரு காவல் துறை அதிகாரி. ஆகவே, அவர் அதைப் பற்றிப் புகார் செய்யவில்லை. வெள்ளிக்கிழமையன்றே சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு, அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்ப முயன்றார். அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், காவல் துறை மானியக் கோரிக்கை திங்கட்கிழமை வரும்போது, அப்போது எழுப்பலாம் என்று கூறினார். ஆகவே, சேகர்பாபு அதோடு விட்டுவிட்டார். நானும் மேற்கொண்டு அதைப் பற்றி விசாரிக்கவில்லை. முழு விவரம் இன்றைக்குத்தான் தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் 1-10

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவையில் நடக்கக்கூடிய விவாதத்திலேயிருந்து ஒரே ஒரு Point of Order. முதலிலேயே try பண்ணினேன். இதிலே சம்பந்தப்பட்ட உயர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இதில் விவாதத்திற்கு இடமில்லை. ஏற்கெனவே தெளிவாக்கப்பட்டுவிட்டது. ஏற்கெனவே இந்தப் பிரச்சினை தெளிவாக்கப்பட்டுவிட்டது. சேகர்பாபு சொன்னார். அது பாதிக்கப்பட்ட (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். மஹேஸ்வரி, பேசுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** அடுத்து, தமிழகத்திலே இதுவரை 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், இதில் விவாதத்திற்கு இடமில்லை. மஹேஸ்வரி பேசி முடிக்கட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Our Honourable Chief Minister has told here that the concerned officer has no complaint. அதாவது, அவர் ஒரு I.P.S. அதிகாரி, அவருக்கு அது சம்பந்தமாக complaint இல்லை, அதை அவர் விட்டுவிட்டார் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஹேமச்சந்திரன், பிரச்சினை, ஒரு காவல் துறை அதிகாரி, நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கின்ற ஒரு உறுப்பினர், இரண்டு பேர் சம்பந்தப்பட்டது. அதுதான் அதிலே நடவடிக்கை எடுப்பது என்பது உடனடியாகச் செய்யக்கூடிய சூழ்நிலை வந்திருக்காது. ஆகவே, ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. அதற்காக எதிர்க் கருத்தையும் ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப் போவதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மஹேஸ்வரி, பேசுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** அடுத்து, தமிழகத்திலே இதுவரை 195 மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மகளிர் தங்களுடைய குறைகள் திறம்படக் களையப்படும் எனும் உறுதியான நம்பிக்கையுடன் காவல் துறையினை அணுகலாம் என மிகுந்த நம்பிக்கையோடு குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால், மன்னிக்க வேண்டும். ஒரு பெண்ணாக இருந்தும்கூட தங்களிடம் வேதனையோடு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தயவுசெய்து அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கலைத்துவிடுங்கள். காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெண் இனத்திற்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளானவை, குற்றங்களானவை உடனுக்குடன் களையப்பட வேண்டுமென்கிற உன்னத நோக்கத்தோடு இந்த மகளிர் காவல் நிலையங்களை விரிவு செய்து வருகின்றீர்கள். ஆனால், அந்த உன்னத நோக்கமானது இன்றைக்கு அடியோடு சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் எங்களுடைய ஆதங்கம். காரணம், இன்றைக்கு இந்த மகளிர் காவல் நிலையங்களிலே கவுன்சிலிங் என்கின்ற பெயரிலே கட்டப் பஞ்சாயத்துக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட மகளிர் கொண்டு தருகின்ற புகார்கள் அவ்வளவு எளிதாகப் பதியப்படுவதில்லை. அதுமட்டுமல்ல, அங்கேயிருக்கின்ற அதிகாரிகள், பாதிக்கப்பட்ட பெண்கள் எவர்மீது புகார் சொல்ல வருகின்றார்களோ, அந்த எதிரிகளோடு கைகோர்த்துக்கொண்டு, கையூட்டுப் பெற்றுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மஹேஸ்வரி. ஒட்டுமொத்தமாக அப்படிக் குற்றச்சாட்டுச் சொல்லக் கூடாது. ஏதாவது ஒரு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு முன்னோடித் திட்டமாக இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அனைவரின் பாராட்டையும் பெற்று சிறப்பாக, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இன்றைக்குத்



தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 195 காவல் நிலையங்களிலும் இத்தகைய முறைகேடுகள் நடைபெறுகின்றன என்று பொத்தாம் பொதுவாக குற்றம் சாட்டினால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பிட்டு எந்தக் காவல் நிலையத்திலாவது இத்தகைய முறைகேடுகள் நடைபெற்றிருந்தால், விவரங்களோடு புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் தங்கள்மீது ஒரு குறையாகவோ, குற்றமாகவோ சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. உண்மையிலேயே தங்களுடைய முயற்சி பாராட்டத்தக்க முயற்சி. ஆனால், அது முழு வெற்றி பெறவில்லை என்பதுதான் எங்களுடைய ஆதங்கம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்தேன், கவிழ்த்தேன் என்பதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகிறார். ஒரு அரசாங்கம் அப்படிப் பொறுப்பின்றிச் செயல்பட முடியாது. ஏதோ ஓரிரு இடங்களில் தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். அதைச் சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுங்கள் என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால், அதற்காக 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையுமே கலைத்துவிடுங்கள் என்று கூறுவது மிகையானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மஹேஸ்வரி, இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு, இந்தப் பிரச்சினையின்மீது தாங்கள் ஒரு விரிவான ஆய்வு நடத்துங்கள். அதன் பிறகு தாங்கள் ஒரு முடிவு எடுங்கள். நிச்சயமாக தாங்கள் எத்தகைய தீர்வு எடுத்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏனென்றால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மட்டுமல்ல, அனைத்துக் காவல் நிலையங்களின் செயல்பாடுகள் குறித்தும் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொண்டுதான் வருகிறோம். ஆனால், இப்போது மாண்புமிகு உறுப்பினர் திருமதி மஹேஸ்வரி அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். ஆகவே, விவரங்கள் தர வேண்டும். எந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தவறு நடந்தது என்று குறிப்பிட்டால், நாங்கள் ஆராய்ச்சி செய்கிறோம், விசாரிக்கிறோம்.

*பிற்பகல் 1-15*

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. பொதுவாகக் காவல் நிலையங்களைப் பற்றிப் பொது மக்கள் சொல்லுகின்ற ஒரு குறை, இதைக் குற்றச்சாட்டு என்று நான் சொல்லமாட்டேன். பெரும்பாலான நேரங்களிலே காவல் நிலையங்களிலே எழுத்தரைத் தவிர எவருமே இருப்பதில்லை என்பது. அடிக்கடி பந்தோபஸ்து, ரோந்து என்று அவர்கள் வெளியே சென்றுவிடுகின்ற காரணத்தினால், புகார் கொடுக்க வரும் பொது மக்கள், இரவு வெகு நேரம் வரை காவல் நிலையங்களிலே காத்திருக்க நேரிடுகின்றது. ஆகவே, காவல் நிலையங்களிலே 24 மணி நேரமும், பொது மக்களின் வசதிக்காக ஏதேனும் ஒரு அதிகாரி இருக்கின்ற வகையிலே பார்த்துக்கொள்ள வேண்டும், அதற்குத் தாங்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, காவல் துறை அதிகாரிகள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் ஒரு ஒட்டுமொத்தமான, பொத்தாம்பொதுவான குற்றச்சாட்டு. தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் காவல் நிலையங்களிலும் யாருமே இருப்பதில்லை என்று சொன்னால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? குறிப்பிட்ட எந்தக் காவ்ல் நிலையத்திலாவது யாரும் இருக்கவில்லை என்பதைச் சொன்னால் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** அடுத்து, காவல் துறையைப் பற்றிப் பொதுவாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் பேசி முடித்து விடுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்க்கு இட ஒதுக்கீடு தருகிறீர்களோ, இல்லையோ, நேர ஒதுக்கீடு தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு, அடுத்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்க்கு இட ஒதுக்கீடு தர வேண்டியது மத்திய அரசு, நாடாளுமன்றம். உங்கள் அரசு அங்கே முதலில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** அகிலம் போற்றும் அன்னை சோனியா காந்தி அவர்கள் அதற்கு அனைத்து முயற்சிகளும் எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். (சிரிப்பு) காவலர்களைப் பற்றி, காவல் துறை அதிகாரிகளைப் பற்றி மக்கள் சொல்லுகின்ற மிகப் பெரும் குற்றச்சாட்டு, இவர்கள் பொது மக்களை குற்றவாளிகளைப் பார்க்கின்ற கண்ணோட்டத்திலே பார்க்கின்றார்கள். கனிவோடு நடப்பதில்லை. கடுமையாக நடத்துகின்றார்கள். அனைத்துத் தரப்பு மக்களிடமும் அராஜகமாக, அதிகார தோரணையோடு நடந்துகொள்கிறார்கள் என்பது. இதற்கேற்றாற்போல, அண்மையிலேகூட சில நாட்களுக்கு முன்பு, மதுரையிலே வழக்கறிஞர் சங்கத்தினுடைய துணைத் தலைவர் தமிழரசன் என்பவரை, மதுரை, உதவி காவல் ஆணையர் அவர்களும், அவர்களோடு சேர்ந்து இரண்டு காவலர்களும் மிகக் கடுமையாகத் தாக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதன் காரணமாக அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்கள்கூட ஒட்டுமொத்தமாக நீதிமன்றப் புறக்கணிப்பிலே ஈடுபட்டார்கள். ஆகவே, இதுபோன்று காவல் துறையினுடைய தவறான அணுகுமுறையால் பல நேரங்களிலே சட்டம்-ஒழுங்கு சீர்கெடுவதற்கு அவர்கள் காரணமாக அமைந்துவிடுகின்றார்கள். ஆகவே, இந்த மனப்பான்மையை மாற்றவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். அதாவது, காவல் துறையினர் என்பவர்கள் பொது மக்களின் நண்பர்கள். பொது மக்களின் பாதுகாவலர்கள் என்கின்ற உணர்வினை இரு சாராருக்குமிடையே ஏற்படுத்த இந்த அரசு முயலவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக, மிக முக்கியப் பிரச்சினை. கோவை தொடர் குண்டு வெடிப்பிலே, தலைமறைவாக இருந்த கொடிய தீவிரவாதிகளைப் பிடிப்பதற்காக 14 பேர் கொண்ட தனிப் படை அமைக்கப்பட்டது. அந்தத் தனிப் படையினரை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கும் ஊக்கத் தொகையும், பதவி உயர்வும் அளிக்கப்படும் என்று அரசே 7-5-1998 அன்று Intelligence Section-க்கு ஒரு Memorandum அனுப்பி இருந்தது. ஆனால் அதிலே அறிவிக்கப்பட்ட ஊக்கத் தொகையும், பதவி உயர்வும் இன்னமும் சம்பந்தப்பட்ட அந்தத் தனிப் படையினருக்கு வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இமாம் அலியைக் கைது செய்த 8 பேருக்குமே பதவி உயர்வு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதேபோன்று, வேலூர் கோட்டையிலிருந்து தப்பிய விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த விக்கி என்பவரைக் கைது செய்வதற்குத் தகவல் சொன்ன காரணத்திற்காகவே, வேலுசாமி என்பவருக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, காட்டுக் கொள்ளையன். வீரப்பனை வீழ்த்திய அதிரடிப் படையினருக்கு இன்றைக்கு நாம்

சலுகைகளை அள்ளி, அள்ளிக் கொடுத்திருக்கின்றோம். அதே நிலையிலே, கோவையிலே மீண்டும் அமைதி மலர்வதற்கு, அமைதி திரும்புவதற்குக் காரணமாக இருந்த தியாகச் செம்மல்களான இந்தக் காவல் படையினருக்கு, இந்த 14 பேர் கொண்ட தனிப் படையினருக்குத் தாங்கள் உடனடியாக, அந்தத் தியாகத்தை மதிக்கும் வண்ணமாகவும், அதேபோன்று, கோவை மக்களின் உணர்வை மதிக்கின்ற வகையிலும் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** முடித்து விடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையின்போது இதற்கான நல்ல செய்தியைச் சொல்லவேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் சார்பாக ஒரே ஒரு கோரிக்கை. வால்பாறை வட்டத்திற்கு என்று தனி D.S.P அலுவலகம் தேவை என்று அவர் கேட்டிருக்கிறார். ஆகவே அதைத் தாங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் சில கோரிக்கைகள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, எங்களுடைய கொறடா எச்.எம். ராஜு அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்து இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதெல்லாம் அவர்களே பேசுவார்கள். அப்புறம் வாய்ப்புக் கிடைக்கும்போது பேசுவார்கள். மற்றதை எழுதிக் கொடுத்து விடுங்கள், மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.:** காவல் துறையிலே 10 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு Grade-I காவலர் பணியும், 15 ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்குத் தலைமைக் காவலர் பதவியும், 25 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு உதவி ஆய்வாளர் பதவியும் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாணை இருந்தும்கூட, அது இன்னமும் பின்பற்றப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதைப் பின்பற்றி காவல் துறையினருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டம், ஓமலூர் காவல் நிலையம்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள். மற்றதைப் பிறகு எழுதிக் கொடுத்து விடுங்கள். திரு. ஜி.கே. மணி, கட்சிவாரியாகப் பேசும்போது நீங்கள்தான் பேசவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலேயே சொல்லிவிட்டோம். இன்றைக்கு எங்கள் கட்சியில் இரண்டு பேருக்குக் கொடுக்காமல் ஒருத்தருக்கு என்று சொன்னார்கள். ஒருத்தர் என்றால் நாளைக்குப் பேசுகிறோம், அனுமதியுங்கள் என்ற தகவலைச் சொல்லிவிட்டோம். வந்தவுடன் திடீரென்று—காலையிலேயே சொல்லி, இதுவரை யாரும் பெயர்கூட கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் வராமல் இருந்தால் பரவாயில்லை. வந்துவிட்டீர்கள், அதனால் பேசலாம் என்று.

**திரு. ஜி.கே. மணி:** பேசுகிறோம். பேசுவது பற்றி ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான்.

**திரு. ஜி.கே. மணி:** நாங்கள் பேசுகிறோம் என்று சொல்லி, பெயரும் கொடுக்கவில்லை. நாளைக்கு என்று சொல்லியாகிவிட்டது. திடீரென்று பேசச் சொன்னால் எப்படிப் பேசுவது? சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்...

**திரு. ஜி.கே. மணி:** மற்ற கட்சிகள் தயாராக இருந்தால் பேசச் சொல்லுங்கள். நாளைக்குப் பேசிவிடுகிறோம். நாளைக்குப் பேசுகிறோம் என்று சொல்லியாகிவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்கள் விவாதம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, இரண்டு நாட்களும் பிரதான எதிர்க்கட்சிகளைப் பேச அனுமதிப்பதுதான் முறை. இரண்டு பேரை அனுமதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் அதை ஒருவர் என்று சொல்கிறீர்கள். அவர் நாளைக்குப் பேசினால் பேசிவிட்டுப் போகட்டுமே, இப்போது என்ன? பத்து நிமிடங்களில் பேசுவதை நாளைக்குப் பேசிவிட்டுப் போகிறார். அதிலே ஒன்றும் பிரச்சினையே இல்லையே!

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்களைப் பேசவேண்டாம் என்று சொல்லவில்லை. திரு. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோதே, நீங்கள் இன்று பேசுகிறீர்கள், அவைக்கு வரவில்லை என்ற தகவல் தெரிந்தது. வந்துவிட்டீர்கள், பேசுகிறீர்கள் என்று சொல்லப்பட்டது, இரண்டு மணி நேரத்திற்கு முன்னால். *(குறுக்கீடு)* அப்படியில்லையே! That is not the thing at all. ஒரு நாளைக்குக் குறுக்கீடுகள் எல்லாம் *(குறுக்கீடு)* அவை அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம்தான் அவைத் தலைவர் எல்லாவற்றையும் நடத்துகிறார்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்கள் திடீரென்று இப்படி நெருக்கடி கொடுப்பதுபோல் பேசக்கூடாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. காலையில் நாங்கள் சொல்லிவிட்டோம். காலையில் 11 மணிக்கே சொன்னோம், நாளைக்குப் பேசுகிறோம் என்று. கட்சியில் பெயரைக் கொடுக்கவில்லை. வெளிநடப்புச் செய்யும்போது சொன்னார் திடீரென்று, நீங்கள் இப்போதுதான் பேசவேண்டும் என்று. இது நெருக்கடி, இதுவெல்லாம் நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெருக்கடி செய்யவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** ஒத்துக்கொண்டு, திரும்பப் பேசச் சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கட்சிவாரியாக, கட்சி அடிப்படையில் பேசவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியல்ல. முறைப்படி தி.மு.க., அடுத்து ஆளுங்கட்சி, அடுத்து காங்கிரஸ், அடுத்து P.M.K. அடுத்து C.P.M., C.P.I. இதுதான் முறை. அந்த வரிசை முறையை ஏன் நீங்கள் மாற்றுகிறீர்கள்? வரிசை முறையை மாற்றி ஏன் பெயர் கொடுக்காமல் தயங்குகிறீர்கள், தவறுகிறீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பாலபாரதி பேசியதும், நாளை அவர் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகக் காவல்



துறைக்குப் பல்வேறு கடமைகள் இருக்கின்றன. சட்டம்-ஒழுங்கை சரியாக வைத்திருப்பது, கொலை, கொள்ளைகளைத் தடுத்து நிறுத்துவது, விபத்துகளைத் தடுத்து நிறுத்தி, போக்குவரத்தைச் சீர்செய்வது போன்ற பல்வேறு முக்கியக் கடமைகள் அவர்களுக்கு முன்னால் இருக்கின்றன என்பதனை நாம் மறுக்கவில்லை. இந்தக் காவல் துறை, தமிழகத்தினுடைய சட்டம்-ஒழுங்கு குறித்து 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் தேதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உள் துறை இணை அமைச்சர் திரு. ஸ்ரீ பிரகாஷ் ஜெய்சுவால் அவர்கள் ஒரு தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகம், சிறை மற்றும் காவல் நிலையத்தில் நடந்த மரணங்களில் ஐந்தாவது இடத்தில் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். அவற்றில் 86 மரணங்கள் நீதிமன்றக் காவலில் நடந்ததாகவும், 8 மரணங்கள் காவல் நிலையத்தில் நடந்ததாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தமிழக அரசும், காவல் துறையும் மேலும் முயற்சிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்ததாக, தமிழகத்தினுடைய காவல் துறை என்பது, இந்தக் காலங்களில் நடைபெற்று வரக்கூடிய மக்களுடைய பல்வேறு ஜனநாயக உரிமைகள் தொடர்ந்து...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அளிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 15-ல், காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள் குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் காவல் துறையின் பாதுகாவலில் இருந்தபோது 7 பேர் மரணம் அடைந்துள்ளனர். காவல் நிலை ஆணை எண் 151-ன்கீழ் அவை குறித்து விசாரணை நடத்தப்பட்டன. இவ்வாண்டு 28-2-2005 வரை, இவ்வகை மரணம் ஏதும் நிகழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறையினுடைய இணை அமைச்சர் அறிக்கையில் குறிப்பிட்டதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

அடுத்ததாக, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 'இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்' என்ற நிலைமை இருந்தது. அன்றைக்கு சாதாரண மக்கள் தங்கள் கருத்துகளைச் சொல்வதற்குக்கூட உரிமைகள் மறுக்கப்பட்டன. இன்றைக்கு இந்திய நாடு விடுதலை பெற்ற பிற்பாடு, மக்கள் தங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு முன்வருகிறபொழுது, காவல் துறை சம்பந்தமில்லாமல் தலையிட்டு அவர்களுடைய உரிமைகளை மறுக்கிறது, பறிக்கிறது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-25*

கடந்த 3 ஆம் தேதி—மார்ச் மாதம் 3 ஆம் தேதி—காஞ்சிபுரம் மாவட்டத்தில், செய்யூர் தாலுகாவில், குளத்தூர் கிராமத்தில் உள்ள விவசாய விளை நிலம் அங்கிருக்கக்கூடிய இறால் பண்ணை வளர்ப்பினால் பாதிக்கப்படுகிறது என்பதனை அரசுக்குக் கவனப்படுத்த, அந்த விவசாயிகள் முன் வருகிறார்கள். இதற்காகக் காவல் துறையிடம் அனுமதி வாங்கி ஒரு போராட்டத்தை அமைதியான முறையில் நடத்தத் திட்டமிடுகிறார்கள். ஆனால் அங்கிருக்கக்கூடிய காவல் துறை அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்த சாதாரண விவசாயிகளை, சட்டையைப் பிடித்து மேலே உயரத் தூக்கி, லத்தியால் அடிப்பது, காயப்படுத்துவது—அந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினுடைய மாநிலப் பொதுச் செயலாளர் எங்கள் கட்சியினுடைய மாநிலத் தலைவர்களில் ஒருவர், கே. பாலகிருஷ்ணன் அவர்கள். அவரும் தடியடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-3-2005 அன்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர், சி.பி.எம். உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள், தனியார் இறால் பண்ணை அமைவதை எதிர்த்து சாலை மறியல் செய்தனர். 105 பேர்கள் கைது செய்யப்பட்டு, அனைவரும் அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர். கைது செய்ய எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் சம்பவ இடத்திலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் தடியடிப் பிரயோகம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடியால் அடித்து, அடி வாங்கப்பட்டு, வலியோடு இருக்கக்கூடியவர்கள் இன்றைக்கு எங்களுடைய இயக்கத்தில் இருக்கிறார்கள். அதை நான் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் கூறினேன். காவல் துறையினர் அனுப்பக்கூடிய செய்திகள் அல்லது சம்பவங்களெல்லாம் உண்மை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைக் கருத்திலே எடுத்துக்கொள்வதைக் கொஞ்சம் ஆய்வு செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். எங்களுக்கு வேறு நோக்கம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பல தொலைக்காட்சிகளிலும் அது செய்தியாக வந்தது.

இரண்டாவது, தொழிலாளிகள். உலக அளவுக்கு உலகமயக் கொள்கையை எதிர்த்து, பல போராட்டங்கள் வெடித்து வளருகின்றன.



அங்கே இருக்கக்கூடிய காவல் துறை, அந்தப் பொது மக்கள் போராட்டங்களை எல்லாம் எப்படிக் கட்டுப்படுத்துகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். தமிழகத்திலும் சில நேரங்களில்—கைத்தறி நெசவாளர்கள் காஞ்சிபுரத்திலே போராட முன் வந்தார்கள். இன்னும் பல இடங்களில் தொழிலாளிகள் போராட முன் வந்தபோது, அந்தப் போராட்டங்களுக்கான அனுமதியை வலுக்கட்டாயமாக மறுக்கிறார்கள்.

குறிப்பாக, அரசியலில் எதிர்க்கட்சிகளில் இருக்கக்கூடியவர்கள் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு மயான இடத்தையே சுட்டிக்காட்டி அங்குதான் அனுமதி தருவோம் என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். மயானத்திலே இருப்பவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் எதுவும் இல்லை. ஆனால், காவல் துறை, local காவல் துறையிடம் எவ்வளவு சொன்னாலும், மக்கள் இருக்கக்கூடிய ஒரு பகுதியைக் கொடுங்கள் என்றால், கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, இதுபோன்று ஜனநாயக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, இது என்ன மொத்தமாக எல்லா ஊரிலேயும் நடக்கிறது மாதிரிச் சொன்னீர்கள் என்றால் எப்படி? எங்கே அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்ன என்று சொன்னீர்கள் என்றால் நல்லது.

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயானங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்கப்படுகிறது என்பதை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். எங்கே அப்படி நடைபெற்றது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் விசாரிக்க முடியும். பொதுவாக, சென்னை மாநகரமானாலும் சரி, மற்ற நகரங்கள் ஆனாலும் சரி, குறிப்பிட்ட சில இடங்களில்தான் பொதுக் கூட்டங்கள் நடத்தலாம் என்று ஏற்கெனவே காவல் துறையினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில்தான் அவர்கள் அனுமதி வழங்குகிறார்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலேயே பேசப்பட்டு, அமைச்சரும், முதலமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிற ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இடுவாய் இரத்தினசாமி படுகொலை செய்யப்பட்டு, இறந்து 3, 4 வருடங்கள் ஆயிற்று. Case நடந்து கொண்டிருக்கிறது. நேற்று, 13 ஆம் தேதி அவருடைய நினைவு நாள். ஒரு பொதுக் கூட்டம்.

சென்னையிலிருந்து 7 முறை நான் எஸ்.பி.-யிடமும், அங்கே இருக்கிற டி.எஸ்.பி.-யிடமும், காவல் துறையினரிடமும் கேட்கிறேன். ஆனால், அந்த ஊரிலே கூட்டம் நடத்தக் கூடாது என்று அனுமதி மறுக்கப்படுகிறது. கடைசியாக நிபந்தனையின்பேரில் அனுமதி, அரசியல் பேசக் கூடாது, சம்பவத்தை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில், சில இடங்களில் குறிப்பிட்ட சம்பவங்களை நினைவுகூர்ந்து பொதுக் கூட்டங்கள் நடத்தினால், அதனால் அந்த இடத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எழக்கூடும்; பொது அமைதி கெடக்கூடும் என்று காவல் துறையினர் கருதினால், அவர்கள் அதற்கு அனுமதி மறுப்பது வழக்கமானதாகும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண நினைவு அஞ்சலி. அண்ணாவுக்கு நினைவு அஞ்சலி செலுத்துவதில்லையா? அந்த மாதிரிக் கேட்டால், அரசியல் பேசக் கூடாது, சம்பவத்தைப் பேசக் கூடாது என்று Police நிபந்தனை விதிக்கிறது. இராமாயணமும், மகாபாரதமுமா நாங்கள் படிக்க முடியும் அந்த இடத்திலேபோய்? இதெல்லாம் சரியில்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. பாலபாரதி, எந்த ஊர் என்று குறிப்பிட்டுச் சொல்லிப் பேசுங்கள். இன்னும் 5 மணித்துளிகளுக்குள் முடித்துவிடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து—விழுப்புரம் அரசு மருத்துவமனை முன்பு இருந்து கிளம்பிய அந்தப் பேரணியைத் தடை செய்தார்கள். மத்திய அரசாங்கம் இவ்வாறு விலையை உயர்த்துகிறபொழுது அதைக் கண்டித்து அந்த அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தாலும், பிரச்சினை வருகிறபோது, மக்கள் தலையிலே விலை உயர்த்தக் கூடாது என்பதற்காகப் போராட்டம் நடத்துவதற்கு உரிமை இருக்கிறது. அந்த முறையிலே அவர்களுக்கு உரிமை என்பது மறுக்கப்பட்டது. திண்டுக்கல்லிலேகூட மே தினத்திற்கான ஊர்வலப் பாதை மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை எதிர்காலத்தில் நீங்கள் கவனத்தில் கொண்டு, இதுபோன்ற ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை நான் வலியுறுத்திச்சொல்ல விரும்புகின்றேன். அதேபோன்று,



மேலூரில்--மதுரை மேலூரில், தருமபுரியில், போடிநாயக்கனூரில், இதுபோன்ற இடங்களில்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்துப் பேரணி எடுக்க முயன்றார்கள், அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்தார். பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவதுபோல் இது இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும்போது அந்த மத்திய அரசுக்கு அங்கே ஆதரவு வழங்கிவிட்டு, இங்கே எதிர்ப்புப் பேரணி என்றால் என்ன அர்த்தம்?

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவு என்பது, மக்களுக்கு விலைவாசி உயர்வு கூடாது என்ற பிரச்சினையில் ஆதரவு. உயர்த்தினால் அது எதிர்ப்பு. பாராளுமன்றத்திலும் எதிர்த்தோம், வெளியிலும் எதிர்த்தோம். அப்படித்தான் எங்களது ஆதரவையும், எதிர்ப்பையும் வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பாலபாரதி, நீங்கள் சொன்னதைத்தான் முதலமைச்சர் வேறு வார்த்தையிலே சொன்னார்கள். பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள் என்று சொன்னார்கள்.

**செல்வி க. பாலபாரதி:** பிள்ளையை நாங்கள் கிள்ளுவதில்லை. (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) பிள்ளையை நாங்கள் கிள்ளுவதில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் பிள்ளையையும் கிள்ள வேண்டும், தொட்டிலையும் ஆட்ட வேண்டி வரும். (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் lock-up மரணங்களும் இந்தக் காலங்களிலே நடந்திருக்கின்றன என்பதனைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். போடிநாயக்கனூரில் lock-up சித்திரவதையைத் தாங்க முடியாமல் மணிகண்டன், அடுத்த நாளே காவல் நிலையத்திற்கு முன்னால் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்து காவல் நிலையம் முன்னாலேயே எரிந்து போனார். ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் நடந்து முடிந்திருக்கின்றன என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, காவல் துறையினுடைய அணுகுமுறையில்

ஜனநாயகப் போக்கு என்பதைக் கொண்டு வருவதிலே இந்த அரசாங்கம் கவனமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். காவல் துறையைப் பற்றிய எந்த விமர்சனமும் செய்யாதீர்கள், என்னைக்கூட பேசுங்கள் என்று சொன்னார்கள். அந்தப் பெருந்தன்மையை நாங்கள் பாராட்டுகிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைப் பற்றி எந்த விமர்சனமும் செய்யக் கூடாது என்று நான் சொல்லவில்லை. பொதுவாக, எதிர்க்கட்சிகள் காவல் துறை போன்ற ஒரு முக்கியமான துறையைப் பற்றிப் பேசுகின்றபோது விமர்சனம் செய்யலாம். ஆனால், அந்த விமர்சனம் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும். விமர்சனங்களில் இரு வகை உண்டு. Constructive criticism, அதுதான் ஆக்கபூர்வமான விமர்சனம். Destructive criticism, அழிக்கக்கூடிய விமர்சனம். ஆகவே, நீங்கள் ஆக்கபூர்வமான விமர்சனம் செய்தால் அதை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். காவல் துறையின் செயல்பாட்டை மேம்படுத்த நல்ல ஆலோசனைகளைக் கூறினால், ஏற்க என்றைக்குமே தயாராக இருக்கிறோம். ஆனால் பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, பழி சுமத்தி, அபாண்டமான பழிகளைச் சொல்லி, காவல் துறையினரின் பணி ஆர்வத்தை, உற்சாகத்தைக் கொல்லுகின்ற வகையிலே, நீங்கள் அழிக்கக்கூடிய வகையில், அவர்களுடைய பணி ஆர்வத்தை அழிக்கக்கூடிய வகையில் நீங்கள் குற்றச்சாட்டுக்களைச் சொன்னால், விமர்சனங்களைச் சொன்னால் அது ஆக்கபூர்வமான விமர்சனம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வருடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல ஆலோசனைகளைக் கேட்டிருக்கிறார்கள். மேற்கு வங்க மாநிலத்தில் 27 ஆண்டு கால கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில், காவலர்கள் சங்கம் வைத்துக் கொள்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று தமிழகத்திலும் காவல் துறையினர் சங்கம் வைத்துக்கொள்வதற்கு உரிமை வழங்க மாநில முதல்வர் அவர்கள் முன்வர வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். ஏனென்றால், இன்றைக்கு Cooker-லேகூட அழுத்தம் தாங்கவில்லை என்றால், அதனுடைய gas வெளியே போவதற்கான ஏற்பாடு இருக்கிறது. காவல் துறையினர் தங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளுடைய புழுக்கம் தாங்காமல் அதற்கெல்லாம் வடிகாலாக, சாதாரண மக்கள் வருகிறபோது மிரட்டுவது, அச்சுறுத்துவது என்ற நடவடிக்கையிலே



ஈடுபடுகிறார்கள். ஆகவே, காவல் துறையினர் சங்கம் வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி தர வேண்டும்.

அதேபோன்று, தலைமைக் காவலர்கள், கிட்டத்தட்ட 53 வயது வரை வேலை செய்தாலும், அவர்களுக்கு promotion என்பதே கிடையாது. இப்போது ஒரு முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. காவலர்களிலிருந்து தலைமைக் காவலர்களாக உயர்த்துவதற்கு பணி மூப்பு கருதப்படுகிறது. அதேபோன்று துணை ஆய்வாளர், ஆய்வாளராகச் செல்வதற்கு அவர்களுக்கும் பணி மூப்பு கருதப்படுகிறது. ஆனால் தலைமைக் காவலரிலிருந்து S.I. ஆக உயர்வதற்கு, அவர்களுக்கு test எழுத வேண்டும், எழுத்துத் தேர்வு எழுத வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதில் தலைமைக் காவலர்களுக்கு ஏதோ சில பிரச்சினைகளும் இருக்கின்றன. ஆகவே, எல்லோரும் தேறி விட முடிவதில்லை. ஆகவே, அவர்களினுடைய பணியினுடைய வயதைக் கருத்திலே கொண்டு அவர்களுக்குப் பணி மூப்பு அடிப்படையிலே அந்தப் பதவி உயர்வைத் தருவது என்பது, பல ஆண்டு காலமாக அவர்களிடம் இருக்கக்கூடிய அந்த ஆதங்கத்தை நீங்கள் தீர்த்து வைத்ததாக இருக்கும். ஆகவே, தலைமைக் காவலர்களுடைய அந்தக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்ற முன்வர வேண்டும். பெண்களுக்குக்கூட, மகளிர் காவல் நிலையத்திலேகூட அவர்களுக்கு test என்பது வைக்கப்படுவதில்லை. ஆகவே, அந்த முறையில் இவர்களுக்கும் செய்யப்பட வேண்டும் என்பதை என்னுடைய கருத்தாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-35*

அதேபோன்று, திண்டுக்கல் மாவட்டம் பாப்பம்பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களின் விழாவின்போது ஜாதியைச் சொல்லித் திட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதைக் குறித்துப் புகார் செய்ய வேண்டும் என்று காவல் துறைக்குச் சென்றபொழுது, அந்தப் புகார் மனுவை உயர் அதிகாரிகள் வரை வாங்க மறுத்து விட்டார்கள். துடியடிகூட நடந்தது. அதைச் சொன்னபொழுது, இதெல்லாம் excess என்ற வார்த்தையோடு நிறுத்திக்கொள்கிறார்கள். சில நேரங்களில் இப்படித்தான் ஆகும் என்று சொல்கிறார்கள். இதுபோன்ற நிலைமைகளை ஊக்கப்படுத்தக் கூடாது என்பதை என்னுடைய கருத்தாகச் சொல்லிக்கொள்கின்றேன்.

மேலும், குளித்தலையினுடைய ஆசிரியை பிரச்சினையை நான் முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மீனாட்சி அவர்கள் ஆறு மாதமாகக் காணவில்லை. ஒரு பெண் குழந்தை இருக்கிறது.

C.B., C.I.D., விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மதுரை, உயர் நீதிமன்றக் கிளையின் முன்பாக நம்முடைய உயர்திரு D.G.P. அவர்களே ஆஜராகியிருக்கிறார்கள். அதிலே அந்த உயர் நீதிமன்றக் கிளை என்பது மிகுந்த வருத்தத்தோடு, நாங்கள் காவல் துறை மீது நம்பிக்கை வைத்து இந்தப் பொறுப்பைக் கொடுத்தோம்; உண்மையை வெளிக்கொண்டு வருவதில் உங்களுக்கு என்ன தயக்கம்; யார் உங்கள் கைகளைக் கட்டியிருக்கிறார்கள்? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. நீதிமன்றத்திலே இருக்கிற பிரச்சினை அது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியையாகப் பணியாற்றி வந்த குளித்தலையைச் சேர்ந்த மீனாட்சி என்பவர் 19-10-2004 அன்று முதல் காணவில்லை என்ற புகார் தொடர்பாக குளித்தலை காவல் நிலைய குற்ற எண் 795/2004-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மீனாட்சியின் கணவர் ஜோதி ராமலிங்கம் தாக்கல் செய்த ஆட்கொணர் மனுவினைத் தொடர்ந்து குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனாட்சி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் காவல் துறையினர் தீவிர முனைப்புடன் விசாரணையை நடத்தி வருகின்றனர். இறுதி அறிக்கையினைத் தாக்கல் செய்ய 27-4-2005 அன்று வரை நீதிமன்றம் அவகாசம் அளித்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர் திரு. பாப்பா சுந்தரம் மற்றும் அவரது உறவினர்களைச் சம்பந்தப்படுத்தி எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த ஆதாரங்கள் எதுவும் இல்லை. புலன் விசாரணை தொடர்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, இரண்டு மணித்துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** யார்மீதும் குற்றம் சாட்டுவது அல்ல. ஒரு சிறுமி தன்னுடைய தாயைக் காணவில்லை என்று தவித்துக் கொண்டிருக்கிறார். நீதிமன்றம் இதிலே ரொம்பக் கவனமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் காவல் துறை, C.B.,C.I.D.,-க்கு முதல்வர் அவர்கள் நேரடியாகக் கூறி, நமது காவல் துறையால் கண்டுபிடிக்க...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் தெரிவித்தேன். இறுதி அறிக்கையைத்



தாக்கல் செய்ய 27-4-2005 அன்று வரை நீதிமன்றம் காவல் துறைக்கு அவகாசம் அளித்துள்ளது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, ஒரு வயது வந்த பெண் நடாஷா அவர்கள் காவல் துறையினுடைய custody-யிலேயே தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு எந்த முடிவு எடுப்பதற்கும் உரிமை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நடாஷா என்ற பெண் காவல் துறை custody-யில் வைக்கப்படவில்லை. சென்னையைச் சேர்ந்த சினிமா இசை அமைப்பாளர் திரு. ஜோஷ்வா ஸ்ரீதர், நடாஷா என்பவரைக் கடத்திச் சென்று, அவருடன் ஒரு மாதம் வாழ்ந்துள்ளார். ஜோஷ்வா ஸ்ரீதருக்குத் திருமணமாகி--ஏற்கெனவே திருமணமாகி 2 குழந்தைகளும் உள்ளன. இது தொடர்பாக நடாஷாவின் தாயார் கொடுத்த புகாரின் அடிப்படையில் 7-1-2005 அன்று பெங்களூர் Frazer Town காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில் திரைப்படம் ஒன்றிற்கு இசை அமைப்பது தொடர்பாக ஜோஷ்வா ஸ்ரீதர் ரூபாய் இரண்டு இலட்சத்தை ஏமாற்றி விட்டதாக சென்னையைச் சேர்ந்த ஹையாக் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில், சென்னை, ராயப்பேட்டை காவல் நிலையத்தில் 406 மற்றும் 420, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்குத் தொடர்பாக காவல் துறையினர் ஜோஷ்வா ஸ்ரீதரை 25-2-2005 அன்று கைது செய்தபோது நடாஷாவும் அவருடன் இருந்தார். இந்நிலையில் ஜோஷ்வா ஸ்ரீதர் கைது செய்யப்பட்டவுடன், நடாஷா சென்னையில் யாருடைய ஆதரவும் இல்லாமல் தனியே இருக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆகவே, சென்னை, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி விடுதியில் அவர் தங்க வைக்கப்பட்டு, அவருடைய தாயாருக்கும் இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. சென்னைக்கு விரைந்து வந்த நடாஷாவின் தாயார், நடாஷாவின் பாதுகாப்புக் குறித்து, அவருடைய உறவினர்களோடு கலந்தாலோசித்து, ஆஷா நிவாஸ் என்ற பெண்கள் விடுதியில் தங்க வைத்தார். மேலும் தனக்கும், நடாஷாவுக்கும் போலீஸ் பாதுகாப்புக் கோரினார். ஆகவே, நடாஷா தங்கியிருந்த இடத்தில் இரகசிய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. நடாஷா தனியாகச் சிறை வைக்கப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. அவர் தனது தாயாரோடு பாதுகாப்பாக உள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40 [2005 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள், ஒரு மணித்துளியில் பேச்சை முடியுங்கள், பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு Junior Assistant-களுக்குரிய ஊதியமும், அவர்களுக்கு இணையான ஊதியமும், தலைமைக் காவலர்களுக்கு Assistant-களுக்கு இணையான ஊதியமும் வழங்க வேண்டும் என்பதை என்னுடைய கோரிக்கையாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு இளநிலை உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்குவது குறித்து இங்கே கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைக் காவலர்களின் ஊதிய விகிதம் ரூபாய் 3050-75-3950-80-4590. இளநிலை உதவியாளர்களின் ஊதிய விகிதம் ரூபாய் 3200-85-4900. காவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் தேர்வு முறை, கல்வித் தகுதி, தேர்வு செய்யும் அமைப்பு, பணியின் தன்மை ஆகியவை வெவ்வேறானவை என்பதால் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு இளநிலை உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்குவது இயலாத ஒன்றாகும்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் காவல் நிலையம் குறித்து எனக்கு முன்னால் கருத்துச் சொன்ன காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தோடு எனக்கு உடன்பாடு இருக்கிறது. அது, ஒரு காவல் நிலையத்தில் மட்டும் நடப்பதில்லை. தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய ஆண், பெண், இரண்டு காவல் நிலையங்களிலுமே, அது மறைமுகமாகவோ, நேரடியாகவோ நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இருக்கின்றன. 1,413 பொதுக் காவல் நிலையங்கள் இருக்கின்றன. அனைத்துக் காவல் நிலையங்களையும் மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் சென்று பார்த்தாரா? அனைத்துக் காவல் நிலையங்களிலும் முறைகேடு அந்த நேரத்தில் நடைபெற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** காவல் துறையில் நல்லவர்கள், நேர்மையானவர்கள் நிச்சயமாக இருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை.



2005 மார்ச் 14] [செல்வி க. பாலபாரதி]

எல்லா இடங்களிலும் அப்படி நடக்கிறது என்று பொதுமைப்படுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிச் சொல்லக்கூடாது, அதுதான்.

**செல்வி க. பாலபாரதி:** நடக்கிற இடங்களைப் பற்றி நாம் புகார் கொடுக்கிறபோது நடவடிக்கை எடுப்பதில்லை. அதிலேதான் பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட புகார்கள் வரக்கூடிய நேரத்தில் உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. (மணியடிக்கப்பெற்றது) மகளிர் காவலர்களுக்கான சீருடை, அவர்களுடைய பிரசவ நேரங்களில் அதற்கான விடுமுறை, இவை போன்றவற்றில் அவர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகக் காவல் துறையினருடைய அடக்குமுறைகள் தொடரக் கூடாது, தொழிலாளிகள், விவசாயிகள்மீது அது ஏவிவிடப்படக் கூடாது, அவற்றிலே இந்த அரசு கவனமாக இருந்து, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) உறுப்பினர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15-3-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். பேரவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 15-3-2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

[2005 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (15-3-2005) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-3-2005) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

43. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்திய சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

44. 2003-2004 ஆம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

45. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

46. 2003-2004 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



2005 மார்ச் 14]

47. 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

57. மானியக் கோரிக்கை எண் 21 - உள் துறை-தமிழ்நாடு காவல் துறையின் 2005-2006 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

58. மானியக் கோரிக்கை எண் 22 - உள் துறை-தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் 2005-2006 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

# இணைப்பு I

*(59 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 21

## உள் துறை

## தமிழ்நாடு காவல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

## முகவுரை

தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டு முழுமையானதொரு வளர்ச்சியை அடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். உறுதியான இந்த நோக்கத்தை எய்துவதிலும், மக்கள் மனதில் நம்பிக்கையை உருவாக்குவதிலும் பொது அமைதியும், பாதுகாப்பும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே, வேகமாக மாறி வரும் இன்றைய சமூக-பொருளாதாரச் சூழ்நிலையில் காவல் துறையின் பணி மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கும், விரைவான முன்னேற்றத்திற்கும் நிலைக்களனாக விளங்கிடும் பொது அமைதி மற்றும் ஸ்திரத் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்திட, மக்களின் உற்ற நண்பனாகவும், சட்டத்தை மீறி நடப்போர்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும் விளங்கிட காவல் துறையை நவீனமயமான, திறமையான மற்றும் நேர்மையானதொரு அமைப்பாக்கிட வேண்டுமென இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

காவல் துறையினரின் பணித் திறனை மேம்படுத்துவதற்கும், செயல்பாடுகளை நவீனப்படுத்துவதற்கும், இந்த அரசு பல புதுமை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரை உள்ளடக்கிய, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின்பால் மிகுந்த பரிவு காட்டும் வகையிலும், சாதாரண

மக்களின் இயல்பு வாழ்க்கையுடன் இணைந்த பணிகளில் காவல் துறையினர் சீரிய நெறிகளைப் பின்பற்றும் வகையில், அவர்கள் கூர்உணர்வூட்டப்பட்டுள்ளனர்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு ஒரு முன் மாதிரித் திட்டமாக பாராட்டப்படும் சமுதாயக் காவல் பணி, நமது மாநிலக் காவல் துறையின் சிறப்பான செயலாக்கத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்துள்ளது. மாநிலக் காவல் துறையை, மக்களை மையமாகக் கொண்ட அமைப்பாக உருவாக்கிடும் முயற்சிகளுக்கு இந்தச் சமுதாயக் காவல் பணி மேலும் ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளது.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுத்து நிறுத்திடும் நோக்கத்துடன் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காவல் நிலையங்களில் பெண் அதிகாரிகள் மற்றும் பெண் காவலர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகரித்திருப்பதும், நடமாடும் ஆலோசனை மையங்களை அமைத்திருப்பதும், தங்களது குறைகளுக்குத் தீர்வு மற்றும் நீதி ஆகியவற்றை நாடி வரும் மகளிரின் மனதில் நம்பிக்கை உணர்வினை ஏற்படுத்திடப் பெரிதும் உதவியுள்ளது.

காவல் துறையை நவீனமயமாக்கல் மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மேலான அணுகுமுறையை மேற்கொள்ளுதல் ஆகியவை, வன்குற்றங்கள் மற்றும் கன்னக்களவு ஆகியவற்றின் எண்ணிக்கைகள் பெருமளவு குறையக் காரணமாக அமைந்துள்ளன. கடந்த 2004 ஆம் ஆண்டில் குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் குற்ற நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட பொருள்களை மீட்டுத் தருதல் ஆகியவற்றில் மிக உயர் அளவு விழுக்காடு எய்தியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சீரிய முறையில் திட்டமிட்டுச் செயலாக்கப்பட்ட நடவடிக்கைகளால், கடந்த 18-10-2004 அன்று காட்டுக் கொள்ளையன் வீரப்பன் கொல்லப்பட்டதன் மூலம் சிறப்பு அதிரடிப் படை சிறப்பான வெற்றியைப் பெற்றது. தேசிய மற்றும் சர்வதேச அளவில் பாராட்டப்பட்டுள்ள இந்தச் சாதனையின்மூலம் தமிழ்நாட்டையும்,





அண்டை மாநிலமான கருநாடகத்தையும் ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிடித்திருந்த பெரும் கேடு ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், சட்டம்—ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் மத நல்லிணக்கத்தைப் பேணிக் காத்தல் ஆகிய செயல்பாடுகள் காவல் துறையின் தலையாய பணிகளாகத் தொடர்ந்து வரும் அதே வேளையில், நவீனமயமாக்கத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயலாக்குவதன்மூலம் காவல் துறை மாற்றம் அடைந்து, புதுப் பொலிவினைப் பெற்று விளங்குகிறது. தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கணினிசார் குற்றங்கள், வீடியோ திருட்டுக் குற்றங்கள் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் காவல் துறையினரின் செயல்திறனை அதிகரித்திட உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அத்தியாவசிய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை வாங்குவதோடு அல்லாமல், மாறி வரும் இன்றைய சமுதாயச் சூழலுக்கேற்ப காவல் துறையினர் தங்களது கடமையைச் செவ்வனே ஆற்றும் வகையில் அவர்களுக்குத் தேவையான பயிற்சியிலும், கூர்உணர்வூட்டலிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

காவல் பணி என்பது மக்களை மையமாகக் கொண்டதொரு சமுதாய முயற்சியாக மாறியுள்ள இந்நாளில், இவ்வரசின் சீரிய வழி காட்டுதலும், உறுதியான ஆதரவும் இம்மாநிலக் காவல் துறையின் பாராட்டுக்குரிய செயல்பாட்டிற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. காவல் பணி என்பது, சாதாரண மக்களின் நலனையே தனது குறிக்கோளாகவும், முதன்மைப் பணியாகவும் கொண்ட ஒரு இன்றியமையாத மக்கள் சேவையாகும். மாறி வரும் பணிகளுக்கும், பொது மக்கள் மற்றும் சமூகத்தின் தேவைகளுக்கும் ஏற்ப புதுமையும், கூர்உணர்வும், சீரிய பயிற்சியும் பெற்ற காவல் படையை, திறனும் பெற்ற ஆளுகையின் அங்கமாகத் திகழச் செய்திட இந்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

[2005 மார்ச் 14

## அத்தியாயம் – 1

### காவல் துறையின் நிருவாக அமைப்பு

தமிழகக் காவல் துறையின் தலைமையகத்தில், மாநில காவல் துறைக்குத் தலைமை வகிக்கும் காவல் துறைத் தலைமை இயக்குநருக்கு உதவிட, இரு கூடுதல் காவல் துறை இயக்குநர்களும், இரு காவல் துறைத் தலைவர்களும், இரு உதவி காவல் துறைத் தலைவர்களும், இதரப் பணியாளர்களும் உள்ளனர். நிருவாக வசதிக்காக, மாநிலம் நான்கு மண்டலங்களாகப் (சென்னை மாநகர ஆணையரகம் நீங்கலாக) பிரிக்கப்பட்டுள்ளது. கோவை, மதுரை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களைத் தலைமையகங்களாகக் கொண்டுள்ள ஒவ்வொரு மண்டலமும் ஒரு காவல் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வருகின்றது. அந்நான்கு மண்டலங்களும், கூடுதல் காவல் துறை இயக்குநரின் (சட்டம்—ஒழுங்கு) நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன.

மாநிலக் காவல் துறையின் நிருவாக அமைப்பு பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| மண்டலங்கள் | — | 4 |
| ஆணையரகங்கள் | — | 6 |
| சரகங்கள் | — | 12 (ஒரு இரயில்வே சரகம் உட்பட) |
| மாவட்டங்கள் | — | 31 (2 இரயில்வே மாவட்டங்கள் உட்பட) |
| உட்கோட்டங்கள் | — | 202 (5 இரயில்வே உட்கோட்டங்கள் உட்பட) |
| வட்டங்கள் | — | 287 |
| காவல் நிலையங்கள் | — | 1,413 (19.5 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 31 இரயில்வே காவல் நிலையங்கள் உட்பட) |
| புறக் காவல் நிலையங்கள் | — | 117 (26 இரயில்வே புறக் காவல் நிலையங்கள் உட்பட) |



2005 மார்ச் 14]

கீழ்க்கண்ட சிறப்பு/தனிப் பிரிவுகள் ஒவ்வொன்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகின்றன:

1. நுண்ணறிவுப் பிரிவு
2. கடலோரப் பாதுகாப்புப் பிரிவு
3. குடிமைப்பொருள் வழங்கல், குற்றப் புலனாய்வுப் பிரிவு
4. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு
5. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு
6. ஊர்க்காவல்—மக்கள் பாதுகாப்புப் படை
7. குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு

கீழ்க்கண்ட சிறப்பு/தனிப் பிரிவுகள் ஒவ்வொன்றும் காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையில் செயல்படுகின்றன:

1) தொழில்நுட்பப் பிரிவு
2) இரயில்வே காவல் படை
3) தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 12 அணிகளும், ஆவடியில் உள்ள படைக்கள மையமும், காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. இதில், முழுவதும் பெண்களே அடங்கிய மகளிர் காவல் அணி ஒன்றும், சிறப்புக் காவல் படை ஒன்றும் அடங்கும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் எட்டாவது அணி, புது டெல்லி, திஹார் சிறைச்சாலையில் அயல் பணியில் உள்ளது.

காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவல் துறையின் கட்டடங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளைக் கவனித்து வருகிறது.

காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் நிலை பணியாளர்களைத் தேர்வு செய்யும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியமானது, காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரும், ஒரு காவல் துறைத் தலைவரும் பணியாற்றி வருகின்றனர்.

மத அடிப்படைவாதிகள்மீதான அனைத்து வழக்குகளையும் புலன் விசாரணை செய்து, வழக்குத் தொடர அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு, கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு ஆகியன குற்றப் பிரிவு காவல் துறை இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத் தலைவர், குற்றப் பிரிவு காவல் துறை இயக்குநர் பொறுப்பையும் கூடுதலாகக் கவனித்து வருகிறார்.

காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவானது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் மீது விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுத்து வருகிறது.

காவலர் முதல் காவல் துணைக் கண்காணிப்பாளர் வரையிலும் மற்றும் இந்தியக் காவல் பணி தகுதிகாண் பருவத்தில் உள்ள அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கும் பொறுப்பை காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கும் பயிற்சிப் பிரிவு கவனித்து வருகிறது. புதிதாகப் பணியில் சேர்பவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும், ஏற்கெனவே பணியில் உள்ளவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி உட்பட, பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன.

திறன் மேம்பாட்டுப் பள்ளி, உதவி ஆய்வாளர் பயிற்சிக் கழகம் ஆகியவை குறித்த பணிகளுக்கென திட்ட அலுவலர் பதவி ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு அதிரடிப் படை, தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளி உள்ளிட்ட சிறப்புச் செயலாக்கப் பிரிவிற்கும் அவரே பொறுப்பு வகிக்கிறார். அவரே சிறப்பு அதிரடிப் படையின் தலைவராகவும் தொடர்ந்து இருந்து வருகிறார்.

தமிழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இந்தியக் காவல் பணி அதிகாரிகளின் எண்ணிக்கை 214 ஆகும். 1-1-2005 அன்றைய நிலவரப்படி உள்ள மொத்த அதிகாரிகளின் எண்ணிக்கை 193 ஆகும்.

1-1-2005 அன்றைய நிலவரப்படி, ஒப்பளிக்கப்பட்ட மொத்த காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 95,679; அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை 5,152 ஆகும்.





## அத்தியாயம் – 2

## சட்டம்–ஒழுங்கு

தமிழக அரசின் தொய்வில்லா முயற்சிகளின் காரணமாக சட்டம்— ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு மாநிலத்தில் தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. மக்கள் அனைவரும் பயனடையும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நலப் பணிகள் மற்றும் நீண்ட கால நலத் திட்டங்கள் ஆகியவற்றின் காரணமாகவும், மாவட்ட நிருவாகம் உரிய நேரத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாகவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கமும், நட்புணர்வும் அரசால் உறுதி செய்யப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில், சாதி, மதம் சார்ந்த பிரச்சினையோ, தொழிலாளர் பிரச்சினையோ, மாணவர் பிரச்சினையோ பெரிய அளவில் எதுவும் மாநிலத்தில் ஏற்படவில்லை. 2004 ஆம் ஆண்டில், அரசியல் கட்சிகளாலும், மதவாத இயக்கங்களாலும் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்கள், அரசு மேற்கொண்ட திட்டமிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக அமைதியாக நடந்து முடிந்தன. 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது சட்டம்— ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டது.

### மத வேறுபாடுகள் குறித்த நிலவரம்

உள்ளூர்க் காரணங்களால் ஒரு சில இடங்களில் நிகழ்ந்த சிறிய சம்பவங்களைத் தவிர, தமிழ்நாட்டில் பொதுவாக, மத நல்லிணக்கம் நிலவியது. இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, சிவசேனை, ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து அமைப்புகளால் 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 முதல் 26 வரையில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட விநாயகர் சிலை கரைப்பு ஊர்வலங்கள் எவ்வித அசம்பாவிதமுமின்றி அமைதியாக நடந்து முடிந்தன. அதேபோன்று, மதப் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ள 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்ட பாபர் மசூதி இடிப்பு நினைவு தினமும், 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்ட கோவை தொடர் குண்டு வெடிப்பு நினைவு தினமும் எவ்விதப் பிரச்சினையும் இன்றி அமைதியான முறையில் நடந்தேறின.

கடந்த பத்து ஆண்டுகளில் மதக் கலவரங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:

[2005 மார்ச் 14

| ஆண்டு | உயிரிழந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 1996 | 17 |
| 1997 | 45 |
| 1998 | 2 |
| 1999 | 2 |
| 2000 | 1 |
| 2001 | 1 |
| 2002 | 2 |
| 2003 | 2 |
| 2004 | ஏதுமில்லை |
| 2005 (28-2-2005 வரை) | ஏதுமில்லை |

**சாதி வேறுபாடுகள் குறித்த நிலவரம்**

சாதி வேறுபாடுகள் குறித்த நிலவரத்திலும், தமிழகத்தில் அமைதி நிலவி வருகிறது. கடந்த மூன்றாண்டு காலமாக சாதி மோதல்களைத் தடுக்க அரசு மேற்கொண்ட திட்டமிட்ட, திறம்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்த நல்ல பலனை அளித்துள்ளன. 2004 ஆம் ஆண்டில் மாநிலத்தில் பெரிய அளவில் சாதி மோதல் எதுவும் நிகழவில்லை. 2003 ஆம் ஆண்டிலிருந்து சாதி மோதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. 2004 ஆம் ஆண்டில் ஆங்காங்கே நிகழ்ந்த 15 சாதி மோதல்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாண்டு, 28-2-2005 வரை நிகழ்ந்த இரண்டு சம்பவங்களில் உயிரிழப்பு ஏதுமில்லை.

2004 ஆம் ஆண்டில், கண்டதேவி கோயில் தேர்த் திருவிழா, அனைத்துத் தரப்பு மக்களின் பங்களிப்போடு அமைதியான முறையில் நடைபெற்று முடிந்தது. பல்வேறு சாதியினரிடையே பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய, மதுரை மேலவளவு முருகேசன் நினைவு தினமான 30-6-2004 அன்றும், தாமிரபரணி சோகச் சம்பவ நினைவு நாளான



2005 மார்ச் 14]

23-7-2004 அன்றும், மற்றும் ராமநாதபுரம், பசும்பொன்னில் தேவர் ஜெயந்தி விழா நடைபெற்ற 30-10-2004 அன்றும் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் அந்நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்து முடிந்தன.

கடந்த பத்து ஆண்டுகளில் சாதிக் கலவரங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:

| ஆண்டு | உயிரிழந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 1996 | 50 |
| 1997 | 93 |
| 1998 | 30 |
| 1999 | 22 |
| 2000 | 18 |
| 2001 | 21 |
| 2002 | 6 |
| 2003 | 11 |
| 2004 | 2 |
| 2005 (28-2-2005 வரை) | ஏதுமில்லை |

சாதி, மத மோதல்களைத் தடுக்கும்பொருட்டு, மாவட்டங்களில் இயங்கி வரும் அமைதிக் குழுக்களை முடுக்கிவிடுமாறும், பதற்றம் அதிகரிக்கக் கூடும் என தகவல் கிடைக்கப்பெறும் சமயங்களிலெல்லாம் அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளுக்கு ஆரம்பக் கட்டத்திலேயே சுமுகமாகத் தீர்வு காணுமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மத நல்லிணக்கத்தைப் பராமரிக்கும்பொருட்டு, அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த மூத்த மதத் தலைவர்களையும், இளைஞர்களையும் கொண்ட மத நல்லிணக்கக் குழுக்களை அமைக்குமாறும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். முன் அனுமதி இல்லாமல் உருவச் சிலைகளை அமைப்பதால் எழும் பதற்றத்தைத் தவிர்க்க, புதிய சிலைகள் அமைக்கப்படும்போது

விழிப்புடன் இருக்குமாறும், இதுசம்பந்தமாக அரசு வழங்கியுள்ள அறிவுரைகளைத் தவறாமல் பின்பற்றுமாறும் மாவட்ட ஆட்சியர்களும், காவல் துறை அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் பங்கேற்ற வருடாந்திர மாநாட்டில், நுண்ணறிவுத் தகவல் சேகரிப்பு, திறமையான சட்டம்—ஒழுங்கு பராமரிப்பு போன்றவை குறித்து அவர்கள் கூர்உணர்வு ஊட்டப்பட்டனர்.

**பயங்கரவாத/தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள்**

பயங்கரவாத/தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாதிகளையும், சமூக விரோதிகளையும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

1967 ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை மத்திய அரசு 14-5-2004 முதல் நீட்டித்துள்ளது. மத்திய அரசினால் பிறப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்பு) திருத்த அவசரச் சட்டத்தின்கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தவிர, இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கமும் 1967 ஆம் ஆண்டு சட்டப் புறம்பான நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய தீவிரவாத அமைப்புகளான தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ் தேசிய மீட்புப் படை, தமிழர் விடுதலை இயக்கம், தமிழர் தேசிய இயக்கம் ஆகியனவும், 1908 ஆம் ஆண்டு குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் மக்கள் யுத்தக் குழு மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டதன் காரணமாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் அம்மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குள் ஊடுருவக்



கூடும் என்பதால், அந்த அமைப்பை 1908 ஆம் ஆண்டு குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின்கீழ் இவ்வரசு, ஓர் அறிவிக்கையின் மூலமாக சட்ட விரோத அமைப்பாக அறிவித்துள்ளது.

**மத அடிப்படைவாதம் மற்றும் மத அடிப்படைவாத அமைப்புகள்**

மதவாதமும், மத அடிப்படைவாதமும் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுவதால், மத நல்லிணக்கத்தைப் பாதிக்கக் கூடியதும், மத ரீதியிலான பதற்றத்தை அதிகரிக்கக்கூடியதுமான அபாயங்கள் தலைதூக்காதவண்ணம் முன்கூட்டியே தடுக்கும் வகையில், மதவாத, மத அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்**

2004 ஆம் ஆண்டில், காவல் துறையின் பாதுகாவலில் இருந்தபோது ஏழு பேர் மரணமடைந்துள்ளனர். காவல் நிலை ஆணை 151-ன்கீழ் அவை குறித்து விசாரணை நடத்தப்பட்டன. இவ்வாண்டு, 28-2-2005 வரை இவ்வகை மரணம் ஏதும் நிகழவில்லை. காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள் குறித்து, மூன்று மாதத்திற்கு ஒரு முறை அரசு நுணுக்கமாக ஆய்வு செய்து, அத்தகைய நிகழ்வுகள் அறவே தவிர்க்கப்பட அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**காவல் துறை துப்பாக்கிச் சூடு**

2004 ஆம் ஆண்டில், 12 சந்தர்ப்பங்களில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேர்ந்தது. நான்கு முறை கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், 8 முறை குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராகவும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இவ்வாண்டு, 28-2-2005 வரை காவல் துப்பாக்கிச் சூடு எதுவும் நடைபெறவில்லை. பதற்றத்தைத் தணிப்பதிலும், பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதிலும், அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதால், கடந்த மூன்றாண்டுகளில் காவல் துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துள்ளது.

[2005 மார்ச் 14

**1996 முதல் 2005 வரை (28-2-2005) காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள்**

| வ. எண் | விவரங்கள் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 (28-2-2005 வரை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை: | 24 | 63 | 48 | 35 | 24 | 32 | 20 | 13 | 12 | – |
| அ) | கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் | 17 | 50 | 22 | 24 | 10 | 18 | 7 | 2 | 4 | |
| ஆ) | கூட்டுக் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையில் | – | – | 2 | – | – | – | – | – | – | |
| இ) | பிற குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் | 7 | 13 | 24 | 11 | 14 | 14 | 13 | 11 | 8 | |
| 2. | இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை: | 15 | 28 | 10 | 19 | 9 | 13 | 9 | 4 | 6 | – |
| அ) | காவல் துறையினர் (சம்பவங்களில்) | – | – | – | 2 | – | – | – | – | – | |
| ஆ) | பொது மக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 15 | 28 | 10 | 17 | 9 | 13 | 9 | 4 | 6 | |
| 3. | காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை: | 116 | 307 | 116 | 165 | 66 | 207 | 42 | 22 | 24 | – |
| அ) | காவல் துறையினர் (சம்பவங்களில்) | 97 | 245 | 68 | 154 | 58 | 178 | 37 | 20 | 23 | |
| ஆ) | பொது மக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 19 | 62 | 48 | 11 | 8 | 29 | 5 | 2 | 1 | |



2005 மார்ச் 14]

## அத்தியாயம் – 3

## பெண் காவலர்

பெண்களின் பிரச்சினைகளைக் கையாள்வதில் காவலருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்கிற முதன்மை நோக்கத்துடன், 1973 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் மகளிர் காவலர் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. தற்போது பெண் காவலர்கள், சட்டம்—ஒழுங்கு பராமரிப்பிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், அவற்றைக் கண்டுபிடிப்பதிலும், உதவியாக இருந்து வருகின்றனர்.

### அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்

1992 ஆம் ஆண்டில் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தை சென்னை நகரில் நான் துவக்கி வைத்தேன். ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒரு மகளிர் காவல் நிலையமாவது இருக்கின்ற வகையில், கடந்த நான்காண்டுகளில் மட்டும், 137 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைத்திட நான் ஒப்புதல் அளித்துள்ளேன். தற்போது தமிழ்நாட்டில் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

### மகளிர் அதிரடிப் படை

2—6—2003 அன்று முதல் மகளிர் அதிரடிப் படை நிறுமம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது. மகளிர் அதிரடிப் படையினருக்கும் ஆண் அதிரடிப் படையினருக்கு நிகராக அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அனைத்துத் தானியங்கி நவீன ஆயுதங்களைக் கையாளுதல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அழித்தல், வாகனம் ஓட்டுதல், குதிரை சவாரி, சாகச விளையாட்டு ஆகியவற்றில் அவர்கள் ஆண் காவலர்களுக்கு நிகரான திறமை பெற்று விளங்குகின்றனர். யோகாசனம் மற்றும் ஆழ்நிலை தியானப் பயிற்சி ஆகியவற்றோடு, ஆயுதமில்லா சண்டைப் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதுவரையில் 352 மகளிருக்கு அதிரடிப் படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### அனைத்து மகளிர் காவல் அணி

இந்தியாவிலேயே அனைத்து மகளிர் காவல் அணி ஒன்றைத் தனியாக உருவாக்கியுள்ள முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தற்போது பல்வேறு பதவி நிலைகளில் உள்ள 1,078 மகளிர் காவல் பணியாளர்களுடன் இந்த அணி செயல்பட்டு வருகிறது. இதில் இரண்டு மகளிர் அதிரடிப் படை நிறுமங்களும் அடங்கும்.

[2005 மார்ச் 14

## நடமாடும் ஆலோசனை மையங்கள்

பெண்களுக்கெதிரான குற்றங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களது இருப்பிடத்திற்கே சென்று அவர்களது குறைகளைத் தீர்க்கவும், ஒவ்வொரு பெருநகரத்திலும்/மாவட்டத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மையத்திற்கும், ஒலிபெருக்கி வசதிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, காணொலிப் பதிவுக் கருவி (விசிஆர்), கல்வி காணொலிப் பேழைகள், மிக உயர் அலை சாதனம், ஏ.சி. மின் உற்பத்திக் கருவி ஆகியவை பொருத்தப்பட்ட வேன் ஒன்று உள்ளது. இத்தகைய 17 வாகனங்கள் முதற்கட்டமாக ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டன. இரண்டாவது கட்டமாக, 18 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நடமாடும் ஆலோசனை மைய வேன்களில், போதிய பணியாளர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று, பொது மக்களிடமிருந்து புகார்களைப் பெற்று, அவர்களது குறைகளைத் தீர்த்து வைக்கின்றனர். பிற துறைகள் சம்பந்தப்பட்ட குறைகள் குறித்தும் புகார்கள் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவை அனுப்பி வைக்கப்படுகின்றன. பொதுவாக சமுதாயத்திலும், குறிப்பாக மகளிரிடையேயும் இத்திட்டம் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.

## காவல் நிலையங்களில் மகளிர் காவல் பணியாளர்களைப் பணியமர்த்தல்

பெண்கள் எவ்விதத் தயக்கமும் இன்றி, நம்பிக்கையுடன் காவல் நிலையங்களுக்குச் செல்வதற்கு வகை செய்யும் விதத்தில் மாநிலத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும், தலா ஒரு மகளிர் உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டாம் நிலை மகளிர் காவலர் இருவரைப் பணியமர்த்த நான் உத்தரவிட்டேன். எனது ஆணையின் பேரில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மகளிர் உதவி ஆய்வாளர்களையும், இரண்டாம் நிலை மகளிர் காவலர்களையும் தேர்வு செய்துள்ளது. 881 மகளிர் உதவி ஆய்வாளர்களும், 2,013 இரண்டாம் நிலை மகளிர் காவலர்களும் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி முடிவுற்றபின், அவர்கள் காவல் நிலையங்களில் பணியமர்த்தப்படுவார்கள்.



2005 மார்ச் 14]

# அத்தியாயம் – 4

## குற்ற நிகழ்வு நிலவரம்

### 2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சொத்து சம்பந்தமான குற்றங்கள்


கடந்த அண்டுடன் ஒப்பிடுகையில், 2004 ஆம் ஆண்டில் சொத்து குறித்த 1,489 குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன. நெடுஞ்சாலை சுற்றுக் காவல் பணி மற்றும் திறம்பட்ட குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இவ்வாண்டில் (2004) வன்முறைக் குற்றங்களும், கன்னக் களவுகளும் கணிசமாகக் குறைந்துள்ளன. குற்ற நிகழ்வுகள் கண்டுபிடிப்பு 84 விழுக்காடாகவும், களவு போன பொருட்கள் மீட்கப்பட்டது 80 விழுக்காடாகவும் இருந்தன. இவ்வகையில், மிக உயர்ந்த விழுக்காட்டு அளவை எய்திய மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுக்கான சொத்து குறித்த குற்றங்களின் ஒப்பீட்டுப் பட்டியல் பின்வருமாறு:


**2003 மற்றும் 2004—ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற சொத்து சம்பந்தமான குற்றங்கள்**


| வ. எண் | குற்றத்தின் தன்மை | 2003 பதிவு | 2003 கண்டுபிடிப்பு | 2004 பதிவு | 2004 கண்டுபிடிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | ஆதாயக் கொலை | 104 | 77 | 73 | 55 |
| 2. | கூட்டுக் கொள்ளை | 95 | 85 | 72 | 63 |
| 3. | வழிப்பறி | 514 | 406 | 464 | 363 |
| 4. | கன்னக் களவு | 4,849 | 2,877 | 4,147 | 2,687 |
| 5. | திருட்டு | 18,213 | 15,153 | 17,530 | 15,430 |
| | **மொத்தம்** | **23,775** | **18,598** | **22,286** | **18,598** |

| | 2003 | 2004 |
|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | 78.22 % | 84% |
| களவுபோன சொத்துக்கள் (ரூபாய் கோடிகளில்) | 49.56 | 43.94 |
| மீட்கப்பட்ட சொத்துக்கள் (ரூபாய் கோடிகளில்) | 35.75 | 34.97 |
| மீட்கப்பட்ட சதவீதம் | 72.13% | 80% |

[2005 மார்ச் 14






2005 மார்ச் 14]

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள்**

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், குறைக்கவும், தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆபத்துக் காலத்தில் உதவும் வகையில் தொலைபேசி வசதிகள் மற்றும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பொது மக்களிடையே, குறிப்பாக, பெண்களிடையே அவர்களது உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் கூடுதல் எண்ணிக்கையில் புகார்கள் பெறப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன.


*2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள்:*

| வ. எண் | தலைப்பு | 2003 | 2004 | 2003 ஆம் ஆண்டுக்கும் 2004 ஆம் ஆண்டுக்கும் இடையிலான வேறுபாடு (விழுக்காட்டில்) |
|---|---|---|---|---|
| 1. | கற்பழிப்பு (முயற்சிகளையும் சேர்த்து) | 547 | 618 | 13 |
| 2. | ஆட்கடத்தல் | 641 | 692 | 8 |
| 3. | வரதட்சணை மரணங்கள் | 222 | 225 | 1 |
| 4. | கணவன் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 1,494 | 1,437 | (-)4 |
| 5. | மானபங்கம் | 2,048 | 1,861 | (-)10 |
| | **மொத்தம்** | **4,952** | **4,833** | **(-)2.40** |

[2005 மார்ச் 14

பாலியல் துன்பம் விளைவித்தல் வழக்குகளைப் பொறுத்த வரை, 2003 ஆம் ஆண்டைக் காட்டிலும், 2004 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. 2003 ஆம் ஆண்டில் 924 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருக்க, 2004 ஆம் ஆண்டில் 1,081 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டன. கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், திரையரங்குகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற முக்கிய இடங்களில் குற்றம் இழைப்போரைக் கண்டுபிடிக்க, காவல் துறையினர் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டதால் குற்ற வழக்குகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.


**பெண்களுக்கு எதிரான குற்றங்கள் - 2003 மற்றும் 2004**






2005 மார்ச் 14]

**பாலியல் துன்பம் விளைவித்தல் - 2003 மற்றும் 2004**



[2005 மார்ச் 14

## அத்தியாயம் – 5

### காவல் துறையின் சிறப்புப் பிரிவுகள்

தமிழகக் காவல் துறையில் கீழ்க்கண்ட சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன:

1. குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு
2. மாநில குற்ற ஆவணக் காப்பகம்
3. குற்றத் தடுப்புப் பிரிவு
4. பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு
5. சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு
6. நுண்ணறிவுப் பிரிவு
7. தொழில்நுட்பப் பிரிவு
8. சிறப்பு அதிரடிப் படை
9. சமூக நீதிப் பிரிவு
10. காவல் பயிற்சிக் கல்லூரி
11. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை
12. கடலோரப் பாதுகாப்புப் படை
13. மதுவிலக்கு அமல் பிரிவு
14. இரயில்வே காவல் படை
15. மோப்ப நாய் படைப் பிரிவு
16. குதிரைப் படைப் பிரிவு
17. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்
18. ஊர்க்காவல் படை
19. குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு



2005 மார்ச் 14]

### குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு

குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவானது கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ், 7 தனிப் பிரிவுகளுடனும், 34 உட்பிரிவுகளுடனும் செயல்பட்டு வருகின்றது.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி காவல் ஆணையர் அலுவலகங்களில், காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையிலான, திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்றத் தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

கணினி சார் குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்துடன், கணினி சார் குற்றத் தடுப்புப் பிரிவுகள், குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு தலைமையகத்திலும் சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

கள்ள நோட்டு மற்றும் போலி முத்திரைத்தாள் குறித்த வழக்குகளைப் புலனாய்வு செய்வதற்கென, கள்ள நோட்டுத் தடுப்புப் பிரிவு ஒன்று மாநில குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ளது.

தமிழ்நாட்டிற்குள்ளும், மாநிலங்களுக்கு இடையேயும், பெண்களையும், குழந்தைகளையும் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுக்கும் பொருட்டும், அவ்வாறு ஈடுபடுத்துவோரைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டும், மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை தலைமையகத்தில் விபச்சாரத் தடுப்புப் பிரிவு ஒன்று 2002 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

### மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம்

மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் 1995 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதன் பதவி வழி இயக்குநராக குற்றப் பிரிவின் காவல் துறைத் தலைவர் பொறுப்பு வகித்து வருகிறார். காவல் துறையின் செயல் திறமையை மேம்படுத்துவதும், குற்ற ஆவணக் காப்பு முறையை மேம்படுத்துவதும் இந்த ஆவணக் காப்பகத்தின் நோக்கங்களாகும்.

#### அ) காவல் துறை கணினிப் பிரிவு

காவல் துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் கணினி மயமாக்குவதில், தமிழ்நாடு காவல் துறை நாட்டிற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் குறித்த அனைத்து விவரங்களும் அடங்கிய தரவுத் தளம் ஒன்றை ஏற்படுத்துவதே இப்பிரிவின் நோக்கமாகும்.

[2005 மார்ச் 14

மத்திய உள் துறை அமைச்சகத்தின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (The National Crime Record Bureau), தேசிய அளவிலான குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய விவரங்களை, வரையறைப்படுத்தப்பட்ட படிவங்கள் மூலம் பெற்றுத் தொகுத்திட, கடந்த 1-1-1996 முதல் 'குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல் முறை' என்ற மென்பொருளை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது. தமிழகக் காவல் துறை இத்திட்டத்தினைச் செவ்வனே அமல்படுத்தி வருகின்றது.

**(ஆ) விரல் ரேகைப் பதிவுப் பிரிவு**

நம் நாட்டின் மிகப் பழமையான விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகளில் ஒன்றான தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுப் பிரிவு, 1895 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தனி விரல் ரேகைப் பதிவு முறையை அனைத்து மாவட்டங்களிலும், ஆணையர் அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடாகும்.

விரல் ரேகைப் பதிவானது, கருவிகள் உதவி இன்றி, மனித ஆற்றலை மட்டும் பயன்படுத்தி, செய்யப்பட்டு வந்தது. 1999 ஆம் ஆண்டில் விரல் ரேகை பகுத்தாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் முறை (FACTS) அறிமுகப்படுத்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் குற்றவாளிகளின் 7,962 விரல் ரேகை அடையாளச் சீட்டுகள் பதிவு செய்யப்பட்டன. விரல் ரேகைப் பதிவுப் பிரிவுப் பணியாளர்கள், 5,996 குற்ற நிகழ்விடங்களுக்குச் சென்று, எதேச்சையாகப் பதிவாகியுள்ள 3,740 விரல் ரேகைகளைப் பதிவு செய்துள்ளனர்.

**குற்றத் தடுப்புப் பிரிவு**

காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்பட்டு வரும் இப்பிரிவில் கீழ்க்கண்ட பிரிவுகள் உள்ளன:

**(அ) சிறப்புப் புலனாய்வுப் பிரிவு**

மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதற்கும், வழக்குத் தொடர்வதற்கும், அவ்வழக்குகளில் புலனாய்வுகளும், விசாரணைகளும் முழுமையாகவும், விரைவாகவும் நடைபெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு ஒன்று மாநில குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்குகிறது. இவருக்கு உதவியாக காவல்



2005 மார்ச் 14]

துறைத் துணைத் தலைவர் ஒருவரும், காவல் கண்காணிப்பாளர்கள் இருவரும் உள்ளனர். தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ள 118 வழக்குகளை இப்பிரிவு மேற்பார்வை செய்து வருகிறது.

இச்சிறப்புப் பிரிவினர் கையாண்ட 76 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் முடிவடைந்து, அந்த 76 குற்றவாளிகளில் 58 குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. 28 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், 23 குற்றவாளிகளுக்கு நான்கு ஆண்டு, மூன்று மாதங்கள் கடுங்காவல் தண்டனையும், மேலும் ஆறு பேருக்கு மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன.

**(ஆ) போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு**

போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவிற்கு, காவல் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமை வகித்து வருகிறார். ஒவ்வொன்றும் இரண்டு முதல் நான்கு மாவட்டங்களை அதிகார எல்லையாகக் கொண்டு 12 போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும், ஒரு ஆய்வாளர் தலைமையில் இயங்கி வருகிறது. போதைப் பொருள் கடத்தல் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதுடன், 1985 ஆம் ஆண்டு மயக்க மருந்துப் பொருட்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருட்கள் சட்டத்தையும் இப்பிரிவு அமல்படுத்தி வருகிறது.

2004 ஆம் ஆண்டில் 1,385 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,434 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 77.05 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உலர் கஞ்சா, பசுங் கஞ்சா, ஹெராயின் போன்ற போதை மருந்துப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 1973 ஆம் ஆண்டு இப்பிரிவு தொடங்கப்பட்டதிலிருந்து, ஹெராயின் போன்ற போதைப் பொருட்கள் இவ்வளவு அதிக அளவில் இந்த ஆண்டில்தான் (2004) கைப்பற்றப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டில் போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடானது பாராட்டுக்குரியதாக அமைந்திருந்தது. 2004 ஆம் ஆண்டு பல்வேறு தலைப்புகளின் கீழான 1,077 வழக்குகள் தண்டனையில் முடிந்தன.

### (இ) வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு

காவல் கண்காணிப்பாளர் ஒருவரது தலைமையின்கீழ் வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தை மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்க, 1995 ஆம் ஆண்டில் இப்பிரிவு உருவாக்கப்பட்டது. இப்பிரிவின் அலகுகள், சென்னை, சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரம், புனித தோமையர் மலை, வேலூர், திண்டுக்கல், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில், சமீபத்தில் மேலும் ஆறு அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டில் 594 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4.16 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்க, 2004 ஆம் ஆண்டில் வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவினரால் 1,180 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 12.07 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வீடியோ திருட்டுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளது. வீடியோ திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுவோரைத் தண்டிக்கும்பொருட்டு, அத்தகைய குற்றங்கள், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் (மற்றும்) காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் (VCR) மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு அமைவு மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (சட்டம் 7/1984) கீழ் விதிக்கப்படும் தண்டனையும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### (ஈ) கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு

1995 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பிரிவிற்குக் காவல் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமை வகித்து வருகிறார்.

மாநில மற்றும் மாநிலங்களுக்கு இடையே செயல்படும் குற்றவாளிகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் குறித்த தகவல்களை இப்பிரிவு சேகரித்து, அதைப் பிற காவல் பிரிவுகளுக்கு அனுப்பி வருகிறது. இப்பிரிவு, உயர் நீதிமன்றம் மற்றும் அரசின் உத்தரவின்படியும், காவல் துறைத் தலைமை இயக்குநர் ஆணையின்படியும் ஒப்படைக்கப்படும் முக்கியமான வழக்குகளில் புலன் விசாரணையும் செய்து வருகிறது.





## பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு

### (அ) நிதி நிறுவனங்கள் பிரிவு

பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு (நிதி நிறுவனங்கள்), வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மோசடி மற்றும் பணம் திருப்பி அளிக்காதது பற்றிய வழக்குகளை இப்பிரிவு புலன் விசாரணை செய்து வருகிறது.

2004 ஆம் ஆண்டில் இப்பிரிவின் செயல்பாடு மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இவ்வாண்டில் 2,62,275 வைப்பீடுதாரர்களுக்கு, 399.12 கோடி ரூபாய் பெற்றுத் தரப்பட்டுள்ளது; இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட 581 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். நிதி மோசடி செய்த குற்றவாளிகள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர்களுக்குச் சொந்தமான 1,748.40 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் ஜப்தி செய்வதற்காகக் கண்டறியப்பட்டன. இதுவரையில் 956.53 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளன.

### (ஆ) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் நடக்கும் நிதிக் கையாடல்களை விசாரணை செய்ய 1971 ஆம் ஆண்டு வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது. இப்பிரிவு புலனாய்வு செய்த வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே, வேலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை ஆகிய இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

1—1—2005 வரை 165 வழக்குகள் புலன் விசாரணையிலும், 1,011 வழக்குகள் நீதிமன்ற நிலுவையிலும் உள்ளன. 2004 ஆம் ஆண்டில் 116 வழக்குகள் தண்டனையில் முடிந்தன.

### (இ) சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு

ஐந்து இலட்சம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள தொன்மை வாய்ந்த சிலை திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை செய்வதும், காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களால் ஒப்படைக்கப்படும் சிலை திருட்டு வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதும் இப்பிரிவின் முக்கியமான பணிகளாகும். மாவட்ட மற்றும் மாநகரக் காவல் துறையால் கையாளப்படும் முக்கியமான சிலை திருட்டு வழக்குகளின் புலன் விசாரணைப் பணிகளை ஒருங்கிணைப்பது, தொன்மை வாய்ந்த கலைப் பொருள் வணிகர்களின் சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகள்

[2005 மார்ச் 14

பற்றிய நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பது ஆகிய பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவாகும் சிலை திருட்டு வழக்கு விசாரணையை இப்பிரிவு கண்காணித்து வருகிறது.

2004 ஆம் ஆண்டில் 11 உலோகச் சிலைகளையும், ஒரு வராகி கற்சிலையையும், ஒரு ஜெயின் கற்சிலையையும் இப்பிரிவு மீட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் எட்டு வழக்குகள் தண்டனையில் முடிந்தன.

### சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு

திட்ட அலுவலர் ஒருவர் தலைமையின்கீழ் இப்பிரிவு இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக காவல் துறைத் தலைவர் ஒருவர் உள்ளார். இப்பிரிவில் அடங்கியுள்ள உட்பிரிவுகள் பின்வருமாறு:

#### (அ) தமிழ்நாடு அதிரடிப் படை

அதிமுக்கிய நபர்களுக்குப் பாதுகாப்பு, வழித்துணைப் பாதுகாப்பு போன்ற பணிகளை ஆற்றவும், முக்கிய நிகழ்ச்சிகளின்போது இதர பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிக்கவும், தமிழ்நாடு அதிரடிப் படை உருவாக்கப்பட்டது. முக்கிய நபர்களுக்கான மெய்க்காவல் பணியையும், அதிரடிப் பணியையும் இவர்கள் மேற்கொள்கின்றனர்.

நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனுப்பப்பட்ட அதிரடிப் படையினர், மாவட்ட நிருவாகத்திற்கு உதவியாக இருந்து, பாராட்டுக்குரிய வகையில் செயலாற்றினர்.

#### (ஆ) தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி

தமிழ்நாடு அதிரடிப் படை அமைக்கப்பட்டபோது, தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளியும் அமைக்கப்பட்டது. நவீன ஆயுதங்களைக் கையாளுதல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் நுணுக்கம், பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல், கணினியை இயக்குதல், ஆயுதங்களைக் கையாளுதல், துப்பாக்கி சுடுதல், வீடியோ படம் எடுத்தல் போன்றவற்றில் காவல் பணியாளர்களுக்கு இப்பள்ளி பயிற்சி அளிக்கிறது.

2004 ஆம் ஆண்டில், காவல் பணியாளர்களின் துப்பாக்கி சுடும் திறமையை மேம்படுத்த, 3,365 காவல் துறை அதிகாரிகளுக்கு விரைந்து செயல்படும் துப்பாக்கி சுடும் (Reflex Shooting) மூன்று நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.



2005 மார்ச் 14]

பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள், அதிமுக்கிய நபர்கள், முக்கிய நபர்கள் ஆகியோர் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், நகரங்களுக்கும் வருகை புரியும்போது, பயணப் பாதையில் தேவையான பாதுகாப்பு அளிக்கப்படுவதற்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பு, 824 காவல் பணியாளர்களுக்கு நடத்தப்பட்டது.

180 காவல் பணியாளர்களுக்கு, காவல் அதிரடிப் படை பயிற்றுனர் பயிற்சியும், 223 காவல் பணியாளர்களுக்கு அதிரடிப் படை புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. 912 ஆண் அதிரடிப் படை வீரர்களுக்கும், 200 மகளிர் அதிரடிப் படை வீராங்கனைகளுக்கும் 12 வார அதிரடிப் படை பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளியில் உள்ள அனைத்து வீரர்களுக்கும் ஆறு வார கால தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டது.

#### (இ) வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படையானது 1991 ஆம் ஆண்டில் என்னால் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியின்கீழ் இயங்கி வரும் சிறப்புமிக்க இப்படையானது, திறமைவாய்ந்த நிபுணர்களின் சாதுரியமான தொழில்நுட்பத்தால், வெடிகுண்டுகளை விரைந்து கண்டுபிடித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பணிகளைச் சிறப்பான முறையில் செய்து வருகின்றது. இப்பிரிவைப் பலப்படுத்தும் வகையில், 2004 ஆம் ஆண்டில், முன்னாள் இராணுவ வீரர்கள் 30 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது தவிர, சென்னை ஆணையரகம், அனைத்துக் காவல் சரகங்கள், 12 மாவட்டங்கள், தலைமைச் செயலகப் பாதுகாப்பு மண்டலம் ஆகியவற்றில், மொத்தம் 25 வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் குழுக்கள் பணியமர்த்தப்பட்டுள்ளன. அக்குழுக்களுக்கு வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவி, கண்ணி வெடிகளைக் கண்டுபிடித்து அகற்றும் கருவி, ஊடுகதிர் ஆய்வுக் கருவிகள், கையடக்க உலோகக் கண்டுபிடிப்புக் கருவி, வாசற்படி உலோகக் கண்டுபிடிப்புக் கருவி, பல்முனை வாசற்படி உலோகக் கண்டுபிடிப்புக் கருவி, வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் சாதனங்கள் அடங்கிய கைப்பெட்டி, வெடிகுண்டுகளைச் சோதிப்பதற்கான உபகரணக் கைப்பெட்டி, வாகனங்களுக்குக்கீழே சோதனையிடும் கண்ணாடி மற்றும் தேடுதல் உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

[2005 மார்ச் 14

## நுண்ணறிவுப் பிரிவு

தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் பிரிவு ஆகியவை அடங்கிய நுண்ணறிவுப் பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநர் (நுண்ணறிவு) அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகிறது. முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை அளிப்பதுடன், நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு செய்து உரியவர்களுக்கு அனுப்பும் பணியையும் இது கவனித்து வருகிறது.

### (அ) தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவானது, மாநிலத்தில் மத வேறுபாடுகள் மற்றும் சாதி பிரச்சினைகளால் ஏற்படும் பதற்ற நிலை மற்றும் பிற சட்டம்—ஒழுங்கு பிரச்சினைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு செய்து, உள்ளூர்க் காவல் துறையினருடன் அவற்றைப் பகிர்ந்து கொள்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும்/ஆணையரகத்திலும் ஆய்வாளர் ஒருவரின் தலைமையின்கீழ் இத்துறையின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது.

### (ஆ) 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இடதுசாரி தீவிரவாதிகள் மற்றும் இதரப் போராளிகளின் நடவடிக்கைகளை 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை கூர்ந்து கண்காணித்து வருகிறது. தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளின் புலன் விசாரணையையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. இப்பிரிவின் அலகுகள், அனைத்து மாவட்டங்களிலும்/மாநகரங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

### (இ) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

மாநில நுண்ணறிவுப் பிரிவின் ஓர் அங்கமான பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, தமிழ்நாட்டிலுள்ள முக்கியப் பிரமுகர்கள்/பாதுகாக்கப்பட வேண்டிய பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அயல் நாட்டுப் பிரமுகர்கள் உள்பட தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் முக்கிய, மிக முக்கியப் பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்பு



2005 மார்ச் 14]

சம்பந்தப்பட்ட விஷயங்களையும் கையாள்கிறது. இது தவிர, கேந்திர அமைப்புகள், பாதுகாப்புத் திட்டங்கள், கடவுச்சீட்டு ஆகியவை தொடர்பான பணிகள் மற்றும் வெளிநாட்டவரின் நடவடிக்கைகள் ஆகியவற்றையும் இப்பிரிவு கையாள்கிறது.

### (ஈ) சிறப்புப் பிரிவு

கோவை தொடர் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து, முஸ்லீம் மற்றும் இந்து அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்க, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இந்த சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்த சிறப்புப் பிரிவின் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. காவல் துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில், அவருக்கு உதவியாக மூன்று காவல் ஆய்வாளர்களுடன் ஒவ்வொரு அலகும் செயல்படுகிறது.

### (உ) காவல் சுருக்கெழுத்துத் துறை

காவல் சுருக்கெழுத்துத் துறை, முதுநிலை அறிக்கையாளர்களும், இளநிலை அறிக்கையாளர்களும், பிற அலுவலர்களும் உதவிட, முதன்மை அறிக்கையாளரின் தலைமையில் இயங்குகிறது. இப்பிரிவிற்கு அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் கிளைகள் உள்ளன. பொதுக் கூட்டப் பேச்சுக்களை முழுமையாகக் குறிப்பெடுப்பதும், ஆட்சேபகரமான, அவதூறான பேச்சுக்களைக் கண்காணிப்பதும் இத்துறையின் முக்கியப் பணிகளாகும். இது தவிர, குற்றப் புலனாய்வுத் துறையின் மாநில குற்றப் பிரிவு, 'க்யூ' பிரிவு, சிறப்புப் பிரிவு கவனித்து வரும் பரபரப்பான வழக்குகள் குறித்த முக்கிய ஆவணங்களை மொழியாக்கம் செய்யும் பணியையும் இப்பிரிவு செய்து வருகிறது. *2003* ஆம் ஆண்டில் *12,647* இனங்களில் குறிப்பெடுக்க அனுப்பி வைக்கப்பட்டிருக்க, *2004* ஆம் ஆண்டில் *13,188* இனங்களில், காவல் துறை அதிகாரிகளின் கேட்புக்கு இணங்க அறிக்கையாளர்கள் குறிப்பெடுக்க அனுப்பி வைக்கப்பட்டனர்.

*7.39* கோடி ரூபாய் செலவில், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், ஒவ்வொரு துணைக் கோட்டத்திற்கும், தலா ஒரு வீடியோ காமிராவினை அரசு வழங்கியுள்ளது. சட்டம்—ஒழுங்கு நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றை, சுருக்கெழுத்துத் துறைப் பணியாளர்கள் துல்லியமாகப் பதிவு செய்திட வீடியோ காமிரா மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

[2005 மார்ச் 14

## தொழில்நுட்பப் பிரிவு

தொழில்நுட்பப் பிரிவு, காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு காவல் துறையின் ஒரு அங்கமான காவல் தொலைத் தொடர்பு பிரிவானது, அன்றாடப் பணிகளைக் கவனிப்பதற்காக, காவல் துறைக்குத் தொலைத் தொடர்பு கட்டமைப்பு வசதிகளை அமைத்துக் கொடுப்பதோடு, இயற்கைச் சீற்றங்களின்போது முக்கிய உதவிகளையும் புரிந்து வருகிறது.

காவல் நிலையங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் வகையில் தற்போது 29 மாவட்டங்களிலும், 6 ஆணையரகங்களிலும் மிக உயர் அலை உயர் வேகத் தொலைத் தொடர்பு சாதன வசதிகள் உள்ளன. சிறப்பான தகவல் பரிமாற்றத்திற்கென, 39 மறு அஞ்சல் அமைப்புகள் (Repeaters) உள்ளன. பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைத் தவிர, பிற மாவட்டங்கள் அனைத்திலும் நுண்ணலை தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூருக்கு, விரைவில் நுண்ணலை தொலைபேசி வசதி செய்து தரப்படும். சிறப்புக் காவல் அணிகளில், உயர் வேக வான்செய்தி தொலைத் தொடர்பு வசதி உள்ளது. முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்புப் பிரிவிற்கென மிக உயர் வேக ஒலி தொடர்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## சிறப்பு அதிரடிப் படை

1992 ஆம் ஆண்டில் சிறப்பு அதிரடிப் படையை நான் உருவாக்கினேன். சிறப்பு அதிரடிப் படையினரின் துணிச்சலான, தீரமிக்க நடவடிக்கையின் காரணமாக, கொலைகாரனும், வழிப்பறிக் கொள்ளையனும், காட்டுக் கொள்ளையனுமான வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் மூவரும், கடும் மோதலில் 18-10-2004 அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன்மூலம், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற தேடுதல் வேட்டைக்கு ஒரு முடிவு காணப்பட்டது. தங்களது பாதுகாப்பு, குடும்ப வசதிகள் ஆகியவற்றைத் தியாகம் செய்து, இடர்பாடுகள், நோய் மற்றும் உயிருக்கு ஏற்படும் அச்சுறுத்தல் ஆகியவற்றை வீரத்துடன் எதிர்கொண்ட சிறப்பு அதிரடிப் படையின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் தொடர் முயற்சி காரணமாக இச்சாதனை சாத்தியமாயிற்று.

சிறப்பு அதிரடிப் படையினரின் அளப்பரிய இப்பணியை அங்கீகரிக்கும் வகையில், இத்தகைய மாபெரும் வெற்றிக்கு காரணமாக



2005 மார்ச் 14]

இருந்த காவல் பணியாளர்களுக்கு, ஒரு படி பதவி உயர்வு, ரொக்கப் பரிசுகள், பதக்கங்கள் மற்றும் வீட்டுமனைகள் ஆகியன வழங்க நான் உத்தரவிட்டேன்.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு அளிக்கப்பட்ட முக்கியப் பணி வெற்றிகரமாக முடிக்கப்பட்டு விட்டபோதிலும், உயிரின வாழ்க்கைச் சூழல் மற்றும் வனச்சூழலை மேம்படுத்தவும், வனங்கள் தீவிரவாதிகளின் புகலிடமாக மாறுவதைத் தடுக்கவும், பல்வேறு பதவி நிலையில் உள்ள 242 பணியாளர்களுடன் இப்படை தொடர்ந்து இயங்க வேண்டுமென்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

## சமூக நீதிப் பிரிவு

சமூக நீதிப் பிரிவு, 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட விதிகளையும், 1989 ஆம் ஆண்டு பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் பிரிவுகளையும் அமல்படுத்தி வருகிறது. மாநிலம் முழுமையும் செயல்பட்டு வரும் இப்பிரிவானது, காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது.

சமூக நீதிப் பிரிவிடம் கீழ்க்காணும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான குற்ற நிகழ்வுகளையும், வன்கொடுமைகளையும் தடுத்தல்.

ஆ) அத்தகைய குற்ற வழக்கு விசாரணைகளில் சிறப்பு நீதிமன்றங்களுக்கு உதவுதல் மற்றும்

இ) அத்தகைய குற்றங்கள் முதலியவற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதில் மாவட்ட நிருவாகத்துக்கு உதவுதல்.

இப்பிரிவானது, வருவாய்த் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு, கொடைக்கானலில் பல காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த குடிநீர்த் தகராறு, தேனி மாவட்டம், டி.மேட்டுப்பட்டி கிராம சுடுகாட்டுப் பாதைப் பிரச்சினை முதலியவற்றில் தலையிட்டு வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது. நலிவுற்ற மக்களின் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு, அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலச் சங்கங்கள் ஆகியவற்றின் சேவைகளை இப்பிரிவு பயன்படுத்திக்கொள்கிறது.

[2005 மார்ச் 14

## காவல் பயிற்சிக் கல்லூரி

காவல் பயிற்சிப் பிரிவானது, காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரும், காவல் துறை துணைத் தலைவர் ஒருவரும் உள்ளனர். அடிப்படைப் பயிற்சித் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து, பல புதிய பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம், தமிழ்நாட்டில் காவல் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியானது, அவர்கள் தொழில் முறையில் மேலும் திறமை பெற்றிட வழிகோலியுள்ளது. காவல் பயிற்சிக் கல்லூரி தவிர, கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன:

அ) வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் காவல் பயிற்சிப் பள்ளிகள்

ஆ) கோவை மற்றும் தூத்துக்குடியில் தற்காலிகக் காவல் பயிற்சி மையங்கள்

இ) சென்னை மாநகரம் (2), செங்கல்பட்டு, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், சேலம், மதுரை, ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய சரகத் தலைமையிடங்களில் 11 பணியிடைப் பயிற்சி மையங்கள்.

2004 ஆம் ஆண்டில் காவல் பயிற்சிக் கல்லூரியில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன:

| வ.எண் | பயிற்சி | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பணிசார் பயிற்சி | 8 இந்தியக் காவல் பணி அதிகாரிகள் (ஆ) |
| 2. | அடிப்படைப் பயிற்சி | 22 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் (18ஆ+4பெ), 859 மகளிர் உதவி ஆய்வாளர்கள், 18 உதவி ஆய்வாளர்கள் (9ஆ+9பெ), 7,984 காவலர்கள் (7,937ஆ+47பெ) |
| 3. | பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சி | 503 தலைமைக் காவலர்கள் (399ஆ+104பெ) |
| 4. | பணியிடைப் பயிற்சி | 8,304 காவலர்கள் (ஆ) |

(ஆ) — ஆண் (பெ) — பெண்



2005 மார்ச் 14]

கணினி சார் குற்றங்கள், ஊடக மேலாண்மை, 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான (வன்கொடுமை) தடுப்புச் சட்டம், புவியியல் அடிப்படையிலான தகவல்களைச் சேகரித்தல், தேர்தல் மேலாண்மை, காவலில் சித்ரவதையையும், சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைத்திருத்தலையும் தடுத்தல் மற்றும் சட்ட விரோதமான போதை மருந்து விற்பனை போன்ற பல்வேறு பாடத் திட்டங்களின்கீழ் அனைத்துப் பதவி நிலைகளிலும் உள்ள காவல் பணியாளர்களுக்கு சென்னை, காவல் பயிற்சிக் கல்லூரியில் 31 செறிவுப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

## தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம்

வண்டலூர் அருகில் ஊனமாஞ்சேரி கிராமத்தில், அனைத்து நவீன கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட காவல் பயிற்சிக் கழகம் ஒன்றை 48 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு எனது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. காவல் பயிற்சிக் கழகத்துக்கான அடிக்கல்லை, நான் 10-11-2004 அன்று நாட்டினேன்.

காவல் பயிற்சிக் கழகம் அமைக்கப்படுவதற்கான பணிகளைக் கவனிக்க, கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் ஒரு திட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையில் 12 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளும், ஆவடியில் உள்ள படைக்கள மையம் ஒன்றும் இயங்கி வருகின்றன. இதில், அனைத்து மகளிர் காவல் அணி ஒன்றும், சிறப்புப் படைப் பிரிவு ஒன்றும் அடங்கும். பேரழிவு ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்ய, சிறப்புப் படைப் பிரிவு அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சிறப்புக் காவல் எட்டாவது அணி, புது டெல்லியில் உள்ள திஹார் சிறையில் அயற்பணியாற்றி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் சிறப்புக் காவல் அணியானது, அகில இந்திய அளவில், மாநிலங்களில் அமைக்கப்பட்ட முதல் அனைத்துப் பெண்கள் அணியாகும். இதனை நான், கடந்த 30-1-2004 அன்று துவக்கி வைத்தேன். தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அதிகாரிகளும், காவலர்களும், பெரிய அளவிலான சட்டம்—ஒழுங்கு நிலைமைகளைக் கையாளவும், தேர்தல் பணிகள் உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகளிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், வெளி மாநிலங்களிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இத்துடன், காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டில் ஆவடியிலும், திருச்சியிலும் தலா ஒரு காவல் வாகனப் பணிமனையுடன்கூடிய இரண்டு பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 2004 ஆம் ஆண்டில் காவல் துறை வாகனங்களில் ஏற்பட்ட 3,620 சிறிய மற்றும் பெரிய பழுதுகளை இப்பிரிவுகள் நீக்கியுள்ளன.

## கடலோரப் பாதுகாப்புப் படை

1994 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்புப் படைப் பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. (1) எரிபொருள், மருந்துப் பொருட்கள் மற்றும் இதர இன்றியமையாப் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் கடல் வழியாகக் கடத்தப்படுவதைத் தடுப்பதும், (2) தமிழ்நாட்டுக்குள் போராளிகளின் ஊடுருவலைத் தடுப்பதும் மற்றும் (3) மீனவர்களும், போராளிகளும் தீய கூட்டுறவின்மூலம் சட்டத்திற்குப் புறம்பாக இயங்குதலைத் தடுப்பதும் இக்கடலோரப் பாதுகாப்புப் படையின் நோக்கங்களாகும்.

கடலோரப் பாதுகாப்புப் படை, தமிழ்நாட்டின் 1,076 கி.மீ. நீள கடலோரப் பகுதிகளில், அறுபது சோதனைச் சாவடிகளை அமைத்து, கண்காணித்து வருகிறது. இது கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதில், கப்பற்படை, கடலோரக் காவல் படை, உள்ளூர்க் காவல் துறை, மீன்வளத் துறை, சுங்கம் மற்றும் வருவாய்த் துறை மற்றும் 441 கடலோரக் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட கிராமக் கண்காணிப்புக் குழுக்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகிறது.

## மதுவிலக்கு அமல் பிரிவு

கள்ளச் சாராயம் காய்ச்சுவது, அதனைக் கடத்துவது, இருப்பில் வைத்திருப்பது, விற்பனை செய்வது, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு வகை போலி மதுபானம் தயாரிப்பது, அனுமதி இல்லாத மதுபானங்களை விற்பனை செய்வது ஆகியவற்றை முற்றிலுமாகத் தடுக்கவும், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாகச் சாராயம் மற்றும் மதுபானங்கள் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், மதுவிலக்கு அமல் பிரிவு அமைக்கப்பட்டது. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின்கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 94 மதுவிலக்கு அமல் பிரிவு அலகுகள் அமைக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரது தலைமையின் கீழ் செயல்படுகின்றன. அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களுக்காக 38 கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் 38 காவல் துணைக் கண்காணிப்பாளர்





பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்/மாநகரக் காவல் ஆணையாளர்கள் கட்டுப்பாட்டின்கீழ் இவ்வலகுகள் இயங்குகின்றன.

2004 ஆம் ஆண்டில் மதுவிலக்கு அமல் பிரிவு ஆற்றிய சிறப்பான பணிகள் பின்வருமாறு:

அ) தகா வழி பேர்போன மதுவிலக்குக் குற்றவாளிகள் 500 பேர், கள்ளச் சாராயக்காரர்கள் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர்.

ஆ) 69.75 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம் பறிமுதல் செய்யப்பட்டது.

இ) கருநாடகம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்பட்ட 2.69 இலட்சம் கள்ளச் சாராயப் பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஈ) 2.57 இலட்சம் லிட்டர் எரிசாராயம் பறிமுதல் செய்யப்பட்டது.

உ) 279 நான்கு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட 4,071 மோட்டார் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஊ) கருநாடகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலிருந்து கடத்தப்பட்ட 35,605 லிட்டர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு போலி மதுவகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

எ) 1,12,527 லிட்டர் மதுக் கஷாயம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஏ) மதுவிலக்கு வழக்குகளை நீதிமன்றம்மூலம் தீர்வு செய்த வகையில் இணக்கத் தொகையாக 2.37 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.

## இரயில்வே காவல் படை

1932 ஆம் ஆண்டில், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. பின்னர், 1981 ஆம் ஆண்டு, சென்னையில் இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. இப்படை காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையின்கீழ், 31 இரயில்வே காவல் நிலையங்கள் மற்றும் 26 புறக் காவல் நிலையங்களுடன் தற்போது இயங்கி வருகிறது.

[2005 மார்ச் 14

5,525 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இரயில்வே காவல் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, பாதுகாப்பு, குற்றத் தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ள அனைத்துப் பதவி நிலைகளிலும் 1,569 காவல் பணியாளர்கள் இரயில்வே காவல் படையில் உள்ளனர். 2004 ஆம் ஆண்டில் இரயில்வே காவல் படையானது, 94 விழுக்காடு சொத்து குறித்த குற்றங்களைக் கண்டுபிடித்து, 81 விழுக்காடு சொத்துக்களை மீட்டுள்ளது.

**மோப்ப நாய் படைப் பிரிவு**

சிறப்பு அதிரடிப் படை, இரயில்வே காவல் படை, தமிழ்நாடு அதிரடிப் படை போன்ற சில சிறப்புப் பிரிவுகள் உட்பட ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநகரத்திலும், மோப்ப நாய் படைகள் இயங்கி வரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் தடத்தைப் பின்பற்றிச் செல்லும் மோப்ப நாய்களும், வெடிமருந்துப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் மோப்ப நாய்களும் உள்ளன. சில பிரிவுகளில் போதை மருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் மோப்ப நாய்களும் உள்ளன.

தமிழகத்தில் உள்ள மோப்ப நாய் படைப் பிரிவில் தற்பொழுது தடத்தைப் பின்பற்றிச் செல்லும் 86 மோப்ப நாய்களும், வெடிமருந்துப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் 86 மோப்ப நாய்களும், 4 மீட்பு நாய்களும் மற்றும் போதைப் பொருள் கண்டறியும் 9 மோப்ப நாய்களும் உள்ளன.

**குதிரைப் படைப் பிரிவு**

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய நான்கு மாநகரங்களில் விழாக்கள்/ஊர்வலங்கள்/பெரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகையில், நெரிசலைக் கட்டுப்படுத்த, குதிரைப் படை பயன்படுத்தப்படுகிறது. குடியரசு தினம், சுதந்திர தினம் போன்ற சிறப்புக் கால அணிவகுப்புகளிலும் குதிரைப் படை பங்கேற்கிறது. தற்போது, தமிழகக் குதிரைப் படைப் பரிவில் 47 குதிரைகள் உள்ளன.

**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்**

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது. காவல் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் இரண்டாம்



2005 மார்ச் 14]

நிலை சிறைத் துறைக் காவலர்கள் ஆகியோரைத் தேர்வு செய்யும் பொறுப்பு இவ்வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசின் உத்தரவுப்படி, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 961 பெண் உதவி ஆய்வாளர்களை 2004, மார்ச் மாதத்திலும், 2,306 இரண்டாம் நிலை பெண் காவலர்களை 2004, அக்டோபர் மாதத்திலும் தேர்வு செய்தது. இறுதியாகப் பணிக்குத் தகுதிபெற்ற 881 பெண் உதவி ஆய்வாளர்களுக்குப் பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டு, 15-9-2004 முதல் அவர்கள் அடிப்படைப் பயிற்சி பெற்று வருகின்றனர். பணி நியமனம் செய்யப்பட்ட 2,013 இரண்டாம் நிலைப் பெண் காவலர்களுக்கும் 15-2-2005 அன்று முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1,553 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள் மற்றும் 666 இரண்டாம் நிலை பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட அரசு உத்தரவிட்டு, தேர்வுப் பணி நடைபெற்று வருகிறது.

**ஊர்க்காவல் படை**

கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு ஊர்க்காவல் படையானது ஒரு தன்னார்வ அமைப்பாகும். காவல் துறை இயக்குநர் அவர்கள் பதவி வழியால் இப்படையின் தலைமைத் தளவாயாகப் பதவி வகிக்கிறார். அந்தந்த மாவட்டங்களில் உள்ள காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை ஆணையாளர்கள், அங்குள்ள ஊர்க்காவல் படையின் தளவாய்களாகப் பொறுப்பு வகிக்கிறார்கள்.

தமிழ்நாடு ஊர்க்காவல் படையிலுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 11,605 ஆகும். இதில் 2,750 மகளிர் ஊர்க்காவல் படையினரும் அடங்குவர்.

ஊர்க்காவல் படை, மக்கள் பாதுகாப்புப் படை ஆகியவை காவல் துறைக்கு உதவி செய்யும் துணைப் படைகளாக இயங்கி வருகின்றன. சட்டம்—ஒழுங்கைப் பராமரித்தல், போக்குவரத்தை முறைப்படுத்துதல், கோயில் திருவிழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளில் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல், தேர்தல் பாதுகாப்புப் பணி ஆகியவற்றில் காவல் துறையினருக்கு உதவியாக ஊர்க்காவல் படையினர் செயல்படுகின்றனர். இயற்கைச் சீற்றங்களின்போதும், விமானத் தாக்குதல் மற்றும் தீவிரவாதிகள் தாக்குதல்கள் போன்ற பிற அவசரக் காலங்களின்போதும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு, மீட்புப் பணிகளை ஆற்றி வருகின்றனர். சமீபத்தில் சுனாமியால்

[2005 மார்ச் 14

அரசின் உத்தரவுப்படி, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 961 பெண் உதவி ஆய்வாளர்களை 2004, மார்ச் மாதத்திலும், 2,306 இரண்டாம் நிலை பெண் காவலர்களை 2004, அக்டோபர் மாதத்திலும் தேர்வு செய்தது. இறுதியாகப் பணிக்குத் தகுதிபெற்ற 881 பெண் உதவி ஆய்வாளர்களுக்குப் பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டு, 15-9-2004 முதல் அவர்கள் அடிப்படைப் பயிற்சி பெற்று வருகின்றனர். பணி நியமனம் செய்யப்பட்ட 2,013 இரண்டாம் நிலைப் பெண் காவலர்களுக்கும் 15-2-2005 அன்று முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1,553 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள் மற்றும் 666 இரண்டாம் நிலை பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட அரசு உத்தரவிட்டு, தேர்வுப் பணி நடைபெற்று வருகிறது.

**ஊர்க்காவல் படை**

கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு ஊர்க்காவல் படையானது ஒரு தன்னார்வ அமைப்பாகும். காவல் துறை இயக்குநர் அவர்கள் பதவி வழியால் இப்படையின் தலைமைத் தளவாயாகப் பதவி வகிக்கிறார். அந்தந்த மாவட்டங்களில் உள்ள காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை ஆணையாளர்கள், அங்குள்ள ஊர்க்காவல் படையின் தளவாய்களாகப் பொறுப்பு வகிக்கிறார்கள்.

தமிழ்நாடு ஊர்க்காவல் படையிலுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 11,605 ஆகும். இதில் 2,750 மகளிர் ஊர்க்காவல் படையினரும் அடங்குவர்.

ஊர்க்காவல் படை, மக்கள் பாதுகாப்புப் படை ஆகியவை காவல் துறைக்கு உதவி செய்யும் துணைப் படைகளாக இயங்கி வருகின்றன. சட்டம்—ஒழுங்கைப் பராமரித்தல், போக்குவரத்தை முறைப்படுத்துதல், கோயில் திருவிழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளில் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல், தேர்தல் பாதுகாப்புப் பணி ஆகியவற்றில் காவல் துறையினருக்கு உதவியாக ஊர்க்காவல் படையினர் செயல்படுகின்றனர். இயற்கைச் சீற்றங்களின்போதும், விமானத் தாக்குதல் மற்றும் தீவிரவாதிகள் தாக்குதல்கள் போன்ற பிற அவசரக் காலங்களின்போதும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு, மீட்புப் பணிகளை ஆற்றி வருகின்றனர். சமீபத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஊர்க்காவல் படையினரின் சேவை பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.




2005 மார்ச் 14]

**குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு**

கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்பட்டு வரும் குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவானது, இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தையும், மத்திய அரசு மற்றும் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் அமல்படுத்தி வருகிறது. இப்பிரிவின் 16 அலகுகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன.

2004 ஆம் ஆண்டில், இப்பிரிவினரால் 6,429 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 4.38 கோடி ரூபாய் மதிப்புள்ள பொது விநியோக அரிசியும், 18.07 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மண்ணெண்ணையும், 4.41 கோடி ரூபாய் மதிப்புள்ள பெட்ரோல், டீசல், எரிவாயு சிலிண்டர்கள், டீ தூள் உள்ளிட்ட இதரப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. வாகனங்களின் மதிப்பு நீங்கலாக, பறிமுதல்



[2005 மார்ச் 14

## அத்தியாயம் – 7

## காவலர் நலன்

காவல் பணியாளர்களின் நலத்தைப் பேணுவதில் முன்னுரிமை அளித்து, அப்பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. காவலர் நலத் திட்டங்களில் முக்கியமானவை பின்வருமாறு:

### 1. தமிழ்நாடு காவலர் நல நிதி

அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதி மற்றும் இதர நிவாரண உதவி அளிக்கும் நோக்கத்துடன் அதிகாரிகளிடமிருந்து நன்கொடையும், அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களிடமிருந்து சந்தாத் தொகையும் பெறப்பட்டு, 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் நல நிதி துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி, அதிகாரிகளிடமிருந்து நன்கொடைகளாகவும், உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாகவும், மாநில அரசிடமிருந்து வருடாந்திர மானியமாகவும் பெறப்படுகிறது. 2004 ஆம் ஆண்டில் இந்நிதிக்கென, அரசு 20 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கி உள்ளது. 2004 ஆம் ஆண்டில் 2,531 பயனாளிகளுக்கு உதவித் தொகையாக 1,29,67,920 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 2. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு கல்வி உதவித் தொகை

1959 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியிலிருந்து, அரசிதழ் பதிவு பெறாத காவல் துறைப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகள், கல்லூரிகளில் (கலை அல்லது தொழிற்கல்லூரி) சேர்ந்து பயில அல்லது தொழில்நுட்பப் பயிற்சி பெற உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது பெறப்படும் ஒருமொத்தப் பங்களிப்புத் தொகைகள் மற்றும் வருடாந்திர நன்கொடைகள்மூலம் இந்நிதி ஏற்படுத்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் காவல் பணியாளர்களின் 3,609 பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகையாக 1,32,57,000 ரூபாய் வழங்கப்பட்டது.

### 3. தமிழ்நாடு அரசு சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதி

காவல் துறைப் பணியாளர்களுடைய குழந்தைகளின் பயனுக்காக,
1994 ஆம் ஆண்டில் இச்சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதியை நான்
ஏற்படுத்தினேன். காவல் துறைப் பணியாளர்கள் இத்திட்டத்திற்கு நான்கு
இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளனர். இத்தொகுப்பு நிதிக்குத் தனது பங்காக,
அரசு 16 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.



2005 மார்ச் 14]

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ், அரசிதழ் பதிவு பெறாத
காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு இரண்டு இலட்சம்
ரூபாய் சிறப்புக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.
தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வில் முதலிடம் பெற்று
தொழிற்கல்விப் படிப்புக்கு அனுமதிக்கப்பட்ட மாணவ/மாணவிக்கு
40,000 ரூபாயும், இரண்டாமிடம் முதல் ஒன்பதாமிடம் வரையில்
பெற்ற மாணவ, மாணவிகளுக்குத் தலா 20,000 ரூபாயும்
மேற்படிப்புக்காக அளிக்கப்பட்டு வருகிறது.

### 4. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை பள்ளித் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தை 1993 ஆம் ஆண்டில் நான் அறிமுகப்படுத்தினேன்.
இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது.
மேல்நிலைப் பள்ளித் தேர்வில் (பிளஸ்-2) மாவட்ட அளவில் முதலிடம்
பெறுவோருக்கு 7,000 ரூபாய், இரண்டாமிடம் பெறுவோருக்கு 5,000 ரூபாய்,
மூன்றாமிடம் பெறுவோருக்கு 3,000 ரூபாய் அளிக்கப்படுகிறது.
இதேபோன்று, பத்தாம் வகுப்புத் தேர்வில் மாவட்டத்தில் முதலிடம்,
இரண்டாமிடம், மூன்றாமிடம் பெறுவோருக்கு, முறையே 6,000 ரூபாய்,
4,000 ரூபாய், 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. 2004 ஆம் ஆண்டில்
மொத்தப் பரிசுத் தொகையாக, காவல் துறையினரின் குழந்தைகள்
229 பேருக்கு 10.22 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 5. காவல் துறை மருத்துவமனைகள்

காவல் துறைப் பணியாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும்
மருத்துவ உதவி அளிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் 11 காவல்
துறை மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

### 6. தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர் நலவாழ்வு நிதி

இத்திட்டம் என்னால் 1995-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
இத்திட்டத்தின்கீழ், காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் அவர்களது
குடும்பத்தினர் கடும் நோயால் பாதிக்கப்படும் நேர்வுகளில், மருத்துவ
சிகிச்சை அல்லது சிறப்பு அறுவை சிகிச்சைக்கென நிதியுதவி
அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேரும் ஒவ்வொரு
பணியாளரும், மாதாந்திரச் சந்தாவாகப் பதினைந்து ரூபாய்
செலுத்துகிறார். ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்திற்கென அரசு ஒரு
கோடி ரூபாய் ஒதுக்கி வருகிறது. 2004 ஆம் ஆண்டில் 183 நபர்கள்
இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனர். அவர்களுக்கு மொத்தம்
1,18,99,540 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 14

### 7. குடும்ப நல நிதி

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு காவல் பணியாளரும் மற்றும் அமைச்சுப் பணியாளரும் மாதச் சந்தாவாக 20 ரூபாய் செலுத்துகின்றனர். இறக்க நேரிடும் ஊழியரின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

### 8. வீர தீரச் செயல் புரியும்போது காவல் துறைப் பணியாளர்கள் உயிரிழந்தாலோ அல்லது காயமடைந்தாலோ கொடுக்கப்படும் கருணைத் தொகை

கடமையாற்றும்போது, வீர தீரச் செயல்கள் புரிந்து உயிரிழந்த அல்லது காயமடைந்த காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையைக் கீழ்க்கண்டவாறு உயர்த்தி 2001 ஆம் ஆண்டில் அரசு உத்தரவிட்டது:

1) இறப்பு — ரூ.5,00,000/—

2) நிரந்தர முடக்கம் — ரூ.1,00,000/—

3) கொடுங்காயம் — ரூ.20,000/—

4) சிறு காயம் — ரூ.10,000/—

அதிமுக்கியப் பாதுகாப்புப் பிரிவு, அதிரடிப் படை மற்றும் அதிரடிப் படை பயிற்சிப் பள்ளியில் பணியாற்றி, வீர தீரச் செயல் புரிந்து உயிர் இழக்கும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்குப் பத்து இலட்சம் ரூபாயும், காவலர் முதல் ஆய்வாளர்கள் வரையிலான பதவி வகித்த பணியாளர் வாரிசுகளுக்கு ஆறு இலட்சம் ரூபாயும் வழங்கப்படுகிறது. நிரந்தர உடல் ஊனம், பார்வை இழப்பு, உணர்வு இழப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நான்கு இலட்சம் ரூபாய், உருக்குலைந்தோருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. உயிரிழந்தோரின் வாரிசுகளுக்குக் குடும்ப ஓய்வூதியமாக உயிரிழந்த பணியாளர் கடைசியாக வாங்கிய சம்பளம், அவர் பணியில் நீடித்திருந்தால் என்றைக்கு ஓய்வு பெறுவாரோ அந்த நாள் வரை வழங்கப்படும்.



2005 மார்ச் 14]

வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீர மரணம் அடையும் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடையும் சிறப்பு அதிரடிப் படையினர் (STF) அனைவருக்கும், அவர்களது பதவி நிலைகளைக் கருத்தில் கொள்ளாது, பத்து இலட்சம் ரூபாய் கருணைத் தொகையை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

### 9. தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர் காப்பீட்டுத் திட்டம்

காவல் துறையின் சிறப்பு பாதுகாப்புப் பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப் படை ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள், ஓர் உத்வேகம் பெற்று மேலும் சிறப்பாகப் பணியாற்றவும், அவர்களது மனதில் ஓர் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தவும், 1993 ஆம் ஆண்டில் ஒரு குழுக் காப்பீட்டுத் திட்டத்தை நான் அறிமுகப்படுத்தினேன். பின்னர் இத்திட்டம், இதர காவல் துறைப் பணியாளர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், பணியின்போது இறக்க நேரிடும் (விபத்து மரணம் உட்பட) அல்லது நிரந்தர முடக்கம் அல்லது பகுதி உடல் ஊனம் ஏற்படும் தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்படுகிறது:

| | இறப்பு அல்லது நிரந்தர முடக்கம் | பகுதி உடல் ஊனம் |
|---|---|---|
| சிறப்பு அதிரடிப் படை, அதிரடிப் படைப் பள்ளி, அதிரடிப் படை, அதி விரைவுப் படை மற்றும் அதிமுக்கிய நபர்கள் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர் | ரூ.10 லட்சம் | மொத்தத் தொகையில் 50 சதவீதம் |
| ஏனைய காவல் பணியாளர்கள்: | | |
| (i) காவலர் முதல் காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் வரை | ரூ.1 இலட்சம் | ஊன அளவிற்கேற்ப நிதியுதவி வழங்கப்படும் |
| (ii) காவல் துறை கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் வரை | ரூ.5 இலட்சம் | |
| (iii) காவல் துறை கூடுதல் இயக்குநர் | ரூ.7.5 இலட்சம் | |
| (iv) காவல் துறை இயக்குநர் | ரூ.10 இலட்சம் | |

[2005 மார்ச் 14

எனினும், பணியில் இருக்கும்போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீர மரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைகின்ற காவல் துறையினரின் குடும்பத்தினர், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி அல்லது அரசு வழங்குகின்ற கருணைத் தொகை, இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே பெற முடியும் என்று இருந்த விதிமுறைகளை மாற்றி, வீர மரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைபவர்களின் தியாகத்தைக் கருத்தில் கொண்டு, கருணைத் தொகையுடன், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப் டுகின்ற நிதியையும் சேர்த்து வழங்கிட நான் ஆணைய._டேன்.

### 10. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதி

இறக்க நேரிடும் காவல் பணியாளரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் கருணைத் தொகையாக அளிக்கப்படுகிறது. 2004 ஆம் ஆண்டில் இறந்த காவல் பணியாளர் 118 பேரின் குடும்பத்தினருக்கு 1.18 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

### 11. மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்

காவல் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 2004 ஆம் ஆண்டில் 30,050 காவல் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தின்கீழ் 131.92 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

### 12. காவல் பணியாளர் குறைதீர்ப்பு

2002 ஆம் ஆண்டில் மாபெரும் எண்ணிக்கையிலான 8,395 காவல் பணியாளர்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறியும் மகத்தான பணியை நான் மேற்கொண்டேன். அதனைத் தொடர்ந்து குறை தீர்க்கும் முறை நிரந்தர ஏற்பாடாக ஆகியுள்ளது. தற்போது, அனைத்து நிலையிலும் உள்ள காவல் பணியாளர்களும் இதனால் பயன்பெற்று வருகின்றனர். காவல் துறையைச் சேர்ந்தவர்களின் குறைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதில் அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.



2005 மார்ச் 14]

## அத்தியாயம் – 8

## காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

காவல் துறை கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் அனைத்தையும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கவனித்து வருகிறது.

### காவலர் வீட்டு வசதி

காவல் துறை கட்டடங்கள் சிறந்த தரத்துடன் கட்டப்படுவதுடன், பல்வேறு பதவி நிலைகளில் உள்ள காவல் பணியாளர்களின் வீட்டு வசதித் தேவையை நிறைவு செய்ய குடியிருப்புகள் கட்டப்படுவதை உறுதி செய்வதில், முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது. என்னுடைய அரசு இதுவரை, 6,315 வீடுகளைக் கட்டி முடித்துள்ளதோடு, 2004—2005 ஆம் ஆண்டில் மட்டும் 94.25 கோடி ரூபாய் செலவில் 2,449 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

### காவலர் கட்டடங்கள்

திருவண்ணாமலையிலும், விழுப்புரத்திலும் தகவல் தொடர்பு வளாகத்துடன்கூடிய மாவட்டக் காவல் அலுவலகங்கள், தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, 10-11-2004 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டன., பயன்பெறும் துறையினரோடு கலந்து ஆலோசிக்கப்பட்டு, இத்தகைய வளாகங்களுக்கான மாதிரி வடிவமைப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் வகுக்கப்பட்டு, தரப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த வடிவமைப்புகளைக் கொண்டு, மாநிலத்தில் மாவட்டக் காவல் அலுவலகங்கள் கட்டப்படும்.

பதினோராவது நிதிக் குழு மானியம் மற்றும் காவல் துறை நவீனமயமாக்கல் திட்டம் ஆகியவற்றின்கீழ், 18.12 கோடி ரூபாய் செலவில், 151 காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் பதினான்கு இடங்களில், 49 காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட காவல் துறை கட்டடங்கள் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன:

[2005 மார்ச் 14

(அ) 1.63 கோடி ரூபாய் செலவில் ராஜா அண்ணாமலைபுரத்தில் விரல் ரேகைப் பிரிவிற்காகத் தனிக் கட்டடம்.

(ஆ) 1.15 கோடி ரூபாய் செலவில், தஞ்சாவூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் காவல் துறை வானொலி ஒலிபரப்பு தகவல் வளாகங்கள்.

(இ) 103 கோடி ரூபாய் செலவில், கழிவறை—குளியலறை வசதிகளோடு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆயுதப் படை மற்றும் உள்ளூர்க் காவல் நிலையங்களில் பணியாற்றும் மகளிருக்கென 114 ஓய்வு அறைகள்.

(ஈ) 75 இலட்சம் ரூபாய் செலவில் ஆவடி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படைகளுக்கான பாதுகாப்பு சுற்றுச் சுவர்.

(உ) 51 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் காவல் துறை வானொலி தொழில்நுட்பப் பிரிவிற்கான தொழில்நுட்பப் பயிற்சி மையம்.

(ஊ) 36 இலட்சம் ரூபாய் செலவில் தஞ்சாவூர், சேலம், நாமக்கல், தேனி, புதுக்கோட்டை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் துயில் கூடங்கள். இத்தகைய துயில் கூடங்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும், தனித்தனியே கட்டப்பட்டுள்ளன.

(எ) 1.69 கோடி ரூபாய் செலவில் மோப்ப நாய்களுக்கான நாய்ப் பட்டிகள் கீழ்க்கண்ட 12 இடங்களில் கட்டப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 1) புனித தோமையர் மலை | 2) சிவகங்கை |
| 3) திண்டுக்கல் | 4) திருநெல்வேலி |
| 5) காஞ்சிபுரம் | 6) திருவண்ணாமலை |
| 7) பெரம்பலூர் | 8) கரூர் |
| 9) புதுக்கோட்டை | 10) நாமக்கல் |
| 11) உதகமண்டலம் | 12) தருமபுரி |



2005 மார்ச் 14]

(ஏ) 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்ட 25 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் 15 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 10 மகளிர் காவல் நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தரமணியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்திற்கு, 10-11-2004 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். தமிழ்நாடு காவல் துறை போன்ற ஒரு உயரிய தொழில் திறன் பெற்ற ஒரு அமைப்பின் தலைவர் அலுவலகத்துக்கு ஏற்ற வகையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதிநவீன தகவல் சாதனங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக இப்புதிய வளாகம் திகழும். தமிழ்நாடு காவல் துறையின் உயராணை மையமாகிய இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின், நாட்டிலேயே ஒரு தலைசிறந்த வடிவமைப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஊனமாஞ்சேரி கிராமத்தில், 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் காவல் பயிற்சிக் கழகத்திற்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்த மிக நவீன காவல் பயிற்சிக் கழகம், புதிதாகப் பணியில் சேர்ந்தவர்களுக்கு, பல்வேறு அடிப்படைப் பயிற்சிகளை அளிக்கவும், இதர காவல் பணியாளர்களுக்கு, பணியிடைப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கவும் தேவையான வசதிகள் அமைந்ததாக இருக்கும். உலகத் தரம் வாய்ந்த பயிற்சி அளிக்கத் தேவையான வசதிகள், பயிற்சி பெறுபவர்களுக்கான தங்கும் வசதி, பயிற்றுனர்களுக்கான குடியிருப்பு வளாகம், வணிக வளாகம், மருத்துவமனை மற்றும் மருந்தகம் மற்றும் நவீன உடற்பயிற்சி மையம் ஆகிய வசதிகளோடு 800 காவல் பணியாளர்களைப் பயிற்றுவிக்கத் தேவையான கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக இக்காவல் பயிற்சிக் கழகம் திகழும். 132.92 ஏக்கர் பரந்தகன்ற நிலப்பரப்பில் அமையவிருக்கும் குறிப்பிடத் தகுந்த இந்நிறுவனம், பொலிவும், பயனும் ஒருங்கே அமைந்த வடிவமைப்பைக் கொண்டு, சுற்றுச்சூழலோடு இணைந்தும் உலகத் தரத்திலான சூழலோடும் விளங்கும். இந்தியாவிலேயே காவல் பணியாளர்களுக்கான ஒரு முதன்மையான பயிற்சி நிறுவனமாக இது உருவாகும்.

[2005 மார்ச் 14

நடப்பு ஆண்டில், கீழ்க்கண்ட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் உள்ளன:

(அ) 8.94 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில், தேனி, திருவள்ளூர், மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் மாவட்டக் காவல் அலுவலகக் கட்டடங்கள்.

(ஆ) 2.51 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் போச்சம்பள்ளியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஏழாம் அணிக்கான நிருவாகக் கட்டடங்கள்.

(இ) ஆறு காவல் பணியிடைப் பயிற்சி மையங்களில் 1.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் கணினிக் கூடங்கள்.

(ஈ) 1 கோடி ரூபாய் செலவில் தேனியில் ஆயுதப் படைக்கு நிருவாகக் கட்டடம் கட்டுதல்.

(உ) ஒவ்வொன்றும் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகர ஆணையரகங்களில் நவீன கட்டுப்பாட்டு அறைகள்.


(ஊ) வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வரும் காவலர்கள் தங்குவதற்காக, 67.3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகரம், ஜாஸ்பர் சாரங் தெருவில் விருந்தினர் அறைகள்/ஓய்வு அறைகள்.

(எ) வெளியூர்களிலிருந்து வரும் பெண் காவலர்கள் தங்குவதற்காக, சென்னை மாநகரம் ஐசக் தெருவில், 62.2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விருந்தினர் அறைகள்/ஓய்வறைகள்.




2005 மார்ச் 14]

## காவல் நிலையங்கள்




## காவலர் குடியிருப்புகள்



[2005 மார்ச் 14

## அத்தியாயம் – 9

### காவல் துறையை நவீனமயமாக்குதல்

மாறி வரும் தேவைகளுக்கும், காலங்களுக்கும் ஏற்ப காவல் துறை தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதால், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு உரிய முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. வேகமாக மாறி வரும் நவீன உலகில், குற்றம் புரிவோர், அதி நவீன தகவல் தொடர்பு சாதனங்களையும், ஆயுதங்களையும், வாகனங்களையும் பயன்படுத்தி வரும் காலகட்டத்தில், காவல் பணி புதிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. காவல் துறையை நவீனமயமாக்க மாநில அரசு எடுத்து வரும் முயற்சியின்கீழ் கட்டடம், வீட்டு வசதி, வாகன வசதி, ஆயுதம், தகவல் தொடர்பு சாதனங்கள், பயிற்சி, தடய அறிவியல் கூடங்கள் மற்றும் கணினி வசதிகள் என்ற வகைகளில், மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. மாநில அரசும் 2002—2003 ஆம் ஆண்டு வரை இணை மானியம் அளித்து வந்தது. 2003—2004 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிதி ஒதுக்கீடு மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 60 : 40 என்ற அடிப்படையில் உள்ளது.

நெடுஞ்சாலை ரோந்துப் பணிக்காக புதிய வாகனங்கள், மேம்படுத்தப்பட்ட மோட்டர் சைக்கிள்கள், கைதிகளை ஏற்றிச் செல்லவும் மற்றும் வழித்துணைக் காவலர்களுக்குமான வாகனங்கள், அதிக சக்தி வாய்ந்த, உயிருக்கு ஊறு விளைவிக்காத புதிய வகை ஆயுதங்கள் ஆகியவற்றால் காவல் துறை நவீனமயமாகி, அதன் பணித்திறனும், செயல் வீச்சும் பெரிதும் அதிகரித்துள்ளது. புதிய வகை 'வாக்கி-டாக்கி' தகவல் தொடர்பு வசதி, அகண்ட தொலைத் தொடர்பு சாதனங்கள், டிஜிடல் தகவல் தொடர்பு வசதி, அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் கணினி வலையமைப்பு, தகவல் தொடர்பு பெரிதும் மேம்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மத்திய அரசும், மாநில அரசும் ஒதுக்கிய நிதி விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | மத்திய அரசு | மாநில அரசு ஒதுக்கியது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடிகளில்) | | |
| 2001—2002 | 68.1 | 68.1 | 136.2 |
| 2002—2003 | 68.1 | 68.1 | 136.2 |
| 2003—2004 | 52.47 | 36.67 | 89.14 |
| 2004—2005 | 39.63 | 26.42 | 66.05 |
| **மொத்தம்** | **228.3** | **199.29** | **427.59** |




2005 மார்ச் 14]

காவல் துறையை நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டுக்காக 131.71 கோடி ரூபாய் அளவிலான திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. எனினும் இத்திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டதால், தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடும் குறைக்கப்பட்டது.

**காவல் துறையை நவீனமயமாக்கல்**

வகை வாரியான நிதி ஒதுக்கீடு (ரூபாய் 66.05 கோடி)

2004 – 2005




வகை
**(ரூபாய் லட்சங்களில்)**

| | |
|---|---|
| கட்டடம் | **2,424** |
| வீட்டு வசதி | **1,813** |
| வாகனங்கள் | 553 |
| தொலைத் தொடர்பு | 281 |
| பயிற்சி | 507 |
| தடய அறிவியல் | 280 |
| உபகரணங்கள் | 567 |
| ஊர்க்காவல்படை | 180 |

[2005 மார்ச் 14

## அத்தியாயம் – 10

## புதிய தொடக்கங்கள்

### (1) சென்னை ஆணையரக எல்லையை விரிவுபடுத்துதல்

இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை அமைய வேண்டுமென்பதே எனது தொலைநோக்குப் பார்வையாகும். இதனை நிறைவேற்றும் எண்ணத்துடன், உலகத் தரமிக்க கட்டமைப்பையும், இதர வசதிகளையும் கொண்ட மிகப் பெரும் மாநகரமாக சென்னையை மாற்ற ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை நான் உருவாக்கி, அமல்படுத்தி வருகிறேன். வளர்ச்சிக்கான எந்தவொரு திட்டமும் குடிமக்களுக்கு அமைதியான, பாதுகாப்பான, குற்ற நிகழ்வுகளுக்கு இடமில்லா வாழ்க்கையினை உருவாக்கித் தருவதை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

சென்னை போன்ற ஒரு மிகப் பெரும் மாநகரின் காவல் பணிக்கு, மக்கள்தொகைப் பெருக்கம், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை, வளர்ந்து வரும் தொழில்மயமாக்கல், வணிக நிறுவனங்களின் வளர்ச்சி ஆகியன சவால்களாக அமைந்துள்ளன. இத்தகைய சவால்களை சென்னை மாநகரக் காவல் துறை மிகச் சிறந்த முறையில் எதிர்கொண்டு வருகிறது.

அண்மைக் காலமாக சென்னை மாநகரம் இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முதலீட்டை ஈர்த்துள்ளதோடு, நாட்டிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் பெருநகரமாகவும் திகழ்கிறது. குறிப்பாக, வாகனம், கணினி, தகவல் தொழில்நுட்பத் துறைகளில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அளவிலான தொழில்மயம் காரணமாக, சென்னை மாநகரச் சுற்றுப் பகுதிகளில், குடியிருப்பு வீடுகள், போக்குவரத்து, இதர கட்டமைப்புத் துறைகளில் அதிக அளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி, சென்னைப் புறநகரப் பகுதிகள் சென்னைப் பெருநகரோடு ஒன்றிட வழி வகுத்துள்ளது. மேலும், விரைவான நகரமயமாக்கம் மாநகருக்குள் குடிபெயர்தலை அதிகரித்துள்ளது. மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தை ஒட்டிய நன்கு வளர்ச்சி அடைந்து, விரைந்து விரிவடைந்து வரும் பகுதிகளும், அதிக மக்கள்தொகையை உள்ளடக்கிய பல்வேறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளும் மாநகரத்தை ஒட்டியுள்ளதால், புறநகர்ப் பகுதிகளின் விரைந்த வளர்ச்சியால் ஏற்படும் சிக்கல்கள் மிகையாகியுள்ளன. இதனால் ஏற்படும் புதிய சவால்களைக் காவல் துறை சந்திக்க வேண்டியுள்ளது.



2005 மார்ச் 14]

இத்தகைய வளர்ச்சிகள் காரணமாக, சென்னை மாநகரை ஒட்டியுள்ள செங்கை கிழக்கு காவல் மாவட்டத்தில் உள்ள 31 காவல் நிலையங்களை மேம்படுத்தும்பொருட்டு, கூடுதலான ஊழியர்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றுக்கு ரூ.22.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நான் உத்தரவிட்டேன்.

நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் ஆகியவற்றின் விரைவான வளர்ச்சியால் காவல் துறையினர் சந்திக்க வேண்டிய புதிய சவால்களைக் கருத்தில் கொண்டும், சென்னை மற்றும் சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குடிமக்களுக்குப் பாதுகாப்பான, அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடும், குற்ற நிகழ்வுகளையும், பெருகி வரும் போக்குவரத்தையும், திறம்படக் கையாளவும், பொது மக்களின் குறைகளைத் தீர்க்கவும், செங்கை கிழக்கு காவல் மாவட்டத்தில் அமைந்துள்ள 41 சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்களையும், 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும், சென்னைப் பெருநகரக் காவல் துறை ஆணையரின்கீழ், சென்னை மாநகர ஆணையரக அதிகார வரம்பின்கீழ் இணைக்க நான் ஆணையிட்டேன்.

இதன் விளைவாக, 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளிட்ட 155 காவல் நிலையங்கள், புதிய காவல் துறை ஆணையரகத்தின் அதிகார வரம்பின்கீழ் வரும். புனித தோமையர் மலை, மாதவரம் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்று புதிய காவல் மாவட்டங்களை உருவாக்க நான் உத்தரவிட்டேன். தாம்பரத்தில் ஒரு புதிய உட்கோட்டமும், புதிய மத்திய போக்குவரத்து மாவட்டமும் உருவாக்கப்பட்டுள்ளன. காவல் துறைத் தலைவர் பதவி நிலையில், கூடுதல் காவல் ஆணையர் பதவி ஒன்றையும், காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) பதவி ஒன்றையும், மூன்று துணை ஆணையர்கள் (சட்டம்—ஒழுங்கு மற்றும் குற்றப் பிரிவு) மற்றும் ஓர் உதவி ஆணையர் பதவியையும் உருவாக்க நான் ஒப்புதல் அளித்தேன்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர ஆணையரகம், இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பெருநகரக் காவல் ஆணையரகங்களில் ஒன்று என்ற தனிச் சிறப்பைப் பெற்றிருக்கும். கூடுதல் எண்ணிக்கையிலான அதிகாரிகள், ஊழியர்கள், சாதனங்கள் மற்றும் வாகனங்களோடுகூடிய புதிய பெருநகர ஆணையரகத்தை

ஏற்படுத்தும் இந்தப் புதிய முயற்சி, [2005 மார்ச் 14
சென்னைப் பெருநகரின் பல்வேறு சிக்கல்களை உள்ளடக்கிய காவல் வரும்
பணிகளை ஒருங்கிணைந்த, திறமையான, உருவாகி
நுணுக்கத்துடன்கூடிய முறையில் கையாளவும், சென்னைவாழ் தொழில்
மக்களுக்கு மிகச் சிறந்த மற்றும் பாதுகாப்பான வாழ்க்கையை
உருவாக்கித் தரவும் உதவும் என்று நான் நம்புகிறேன்.

## (2) விரி பரப்புப் பிணையத் திட்டம் (WAN Project)

விரி பரப்புப் பிணையத் திட்டத்திற்குத் தமிழக அரசு இரண்டு
கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. மின் அஞ்சல் பரிமாற்றம், கோப்பு
மாற்றல், இணையவலைத் தேடல், இணையவலைப் பயன்பாடு மற்றும்
காவல் நிலைய நிலை வரை உள்ள தரவுத் தள அணுகும் வசதி
ஆகியவை இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். குத்தகை
இணைப்புகள், ஒருங்கிணைந்த சேவைகளின் இலக்க முறைக்
கட்டமைப்பு (ISDN), பொது சேவை தொலைபேசிக் கட்டமைப்பு
(PSTN) மற்றும் துறை சார்ந்த நுண்ணலைத் தொலைத் தொடர்பு
ஆகியவற்றை இணைத்து இந்த விரி பரப்புப் பிணையத் திட்டம்
செயல்படுத்தப்படும்.

## (3) இலக்க முறை நுண்ணலைத் தொடர்புத் திட்டம்

இலக்க முறை நுண்ணலைத் தொடர்புத் திட்டத்திற்காக, தமிழக
அரசு 8.8 கோடி ரூபாய் ஒதுக்க ஒப்பளித்துள்ளது. தற்போதுள்ள
தொடர் முறை நுண்ணலைத் தொடர்பு முறை, தொடர் முறை புற
உயர் அதிர்வலை கிளை இணைப்புகள் ஆகியவற்றுக்குப் பதிலாக,
ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அளிக்கப்படும் தடங்களின்
எண்ணிக்கையை அதிகரிப்பதும், மாவட்டங்களுக்குத் தரவுத்
தடங்களை அமைப்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறு
மாற்றி அமைக்கப்பட உள்ள 28 தொடர்புகளில் 19 தொடர்புகள்
ஏற்கெனவே செயல்படத் துவங்கிவிட்டன. எஞ்சியுள்ள தொடர்புகள்
அமைக்கும் பணிகளும் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள்
முடிக்கப்பட்டுவிடும்.

## (4) கம்பியில்லாத் தொலைபேசித் திட்டம் (வில் திட்டம்)

சென்னை மாநகருக்கான கம்பியில்லாத் தொலைபேசித் திட்டத்தின்
நுண்ணலைத் திட்டம் 2—ஐ இலக்கமயமாக்கும் திட்டத்திற்காகத்
தமிழக அரசு 3.04 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. காவல் துறை
அலுவலகங்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் நுண்ணலைத்



2005 மார்ச் 14]

தொலைபேசி வசதிகள் அளிப்பதற்கும், சென்னைப் பெருநகரில் அமைந்துள்ள அனைத்துக் காவல் நிலையங்களையும் ஒரு நுண்ணலை இணைப்புடன் இணைப்பதற்காகவும் பாரத் சஞ்சார் நிகம் (BSNL) நிறுவனத்திடமிருந்து வாடகைக்குப் பெற்றிருந்த 76 தொடர்பக வழி அல்லா இணைப்புகளை மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்மூலம் காவல் நிலையங்கள், காவல் அலுவலகங்கள் மற்றும் காவல் துறை மூத்த அதிகாரிகளின் வீடுகள் ஆகியவற்றுக்குத் தரவு இணைப்பு (Data Connectivity) வசதி அளிக்கப்படும்.

## (5) தொலைத் தொடர்பு தெளிவாகச் சென்றடையாத இடங்களில் தகவல் பரிமாற்றம்

தொலைத் தொடர்பு தெளிவாகச் சென்றடையாத இடங்களில் தகவல் பரிமாற்ற வசதியினை மேம்படுத்துவதற்காகத் தமிழக அரசு 1.58 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில், தொலைத் தொடர்பு தெளிவாகச் சென்றடையாத இடங்களில், 25 மறு அஞ்சல் நிலையங்கள் (Repeater) நிறுவி, மீஉயர் அதிர்வலை தொலைத் தொடர்பு வசதியை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் 20 மறு அஞ்சல் நிலையங்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 5 மறு அஞ்சல் நிலையங்களும் விரைவில் நிறுவப்பட்டு விடும்.

## (6) வாக்கி–டாக்கி கருவி மூலம் தகவல் பரிமாற்றம்

கையடக்க வாக்கி—டாக்கி கருவிகளை வாங்குவதற்காகத் தமிழக அரசு 1.5 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், போக்குவரத்துக் காவல் நிலையங்கள், புதிதாக உருவாக்கப்பட்ட காவல் நிலையங்கள், ரோந்துப் பணிகளில் உள்ள காவலர்கள் ஆகியோருக்கு இக்கையடக்கக் கருவிகளை வழங்கி, தகவல் தொடர்பு வசதியை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி, 1,252 கையடக்கக் கருவிகள் வாங்கப்பட்டு காவல் நிலையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

## (7) மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் நவீன கட்டுப்பாட்டு அறை

மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் உள்ள கட்டுப்பாட்டு அறைகளை நவீனப்படுத்தும் நோக்கத்தோடு, உலக இருப்பிட விவரம் அறியும் கருவி (Global Positioning System), புவியியல் இருப்பு தகவல் அளிக்கும் வசதி (Geographical Information System) ஆகிய வசதிகளுடன் கூடிய 100/103 தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொள்ளும்

[2005 மார்ச் 14

திட்டத்திற்காக, அரசு 1.4 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இத்திட்டம் முடிக்கப்படும்.

**(8) காவல் இணையப் பிணையம் (POLNET)**

மாவட்டத் தலைமையிடங்களின் பயன்பாட்டுக்காக 29 மீகுறு செயற்கைக் கோள் தொடர்பு நிலையங்களும் (VSAT), 29 பல்முனை வானொலித் தொடர்பு தொலைபேசி ஆதார நிலையங்களும் (MART) அமைக்கவும், காவல் நிலையங்களுக்கென 1,090 பல்முனை வானொலித் தொடர்பு தொலைபேசி ஆதார நிலையங்கள் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டு, திட்டப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**(9) கணினிமயமாக்குதல்**

காவல் துறையைக் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ், தமிழக அரசு, வெவ்வேறு கட்டங்களில் 7.5 கோடி ரூபாய் மற்றும் 7.18 கோடி ரூபாய் என நிதியை ஒதுக்கியுள்ளது. காவல் நிலைய மட்டம் வரை அனைத்துப் பிரிவுகளையும் கணினிமயமாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழகத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**(10) சாலைப் பாதுகாப்பு மற்றும் நெடுஞ்சாலை ரோந்துக் காவல்**

நெடுஞ்சாலைகளில் விபத்துகளை, குறிப்பாக, மனித உயிரிழப்பு ஏற்படும் விபத்துகளைக் குறைக்க வேண்டுமென்பதற்கு நான் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறேன். சாலைப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென ஏற்படுத்தப்பட்ட சாலைப் பாதுகாப்பு நிதியில் இருந்து, சாதனங்களும், வாகனங்களும் வாங்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மேலாண்மைக்காகவும், சாலை விதிகளின் சிறப்பான அமலாக்கத்திற்காகவும், மாவட்டங்களுக்கும், மாநகரங்களுக்கும் அவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 10-8-2004 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் அறிவித்ததையடுத்து, மீட்பு வாகனம் ஒன்று வாங்கப்பட்டு, மிகவும் தேவை உள்ள நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை, சாலைப் பாதுகாப்பு சாதனங்கள் வாங்குவதற்கு 3.99 கோடி ரூபாயை எனது அரசு வழங்கியுள்ளது.



2005 மார்ச் 14]

கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவி நிலையில் உள்ள ஓர் காவல் துறை உயர் அதிகாரி, காவல் தலைமையகத்தில் அமைந்துள்ள மாநில போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவுக்குப் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

சென்னை மாநகரைப் பொறுத்த அளவில், 100 புதிய மோட்டார் சைக்கிள்கள் (டிவிஎஸ்—ஃபியரோ) வாங்கப்பட்டு, சாலைகளில் உள்ள இடையூறுகளை அகற்றுவதற்காக, சென்னை மாநகரில் ரோந்துக் காவல் பணியில் ஈடுபட்டுள்ள போக்குவரத்து மார்ஷல்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள 8 சாலை சந்திப்புக்களில், உட்சுற்றுத் தொலைக்காட்சி காமிராக்கள் நிறுவப்பட்டு, அதன்மூலம் பதிவாகும் படங்கள், நவீன கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்பட்டு, கண்காணிக்கப்படுகின்றன. 30 புதிய சாலை சந்திப்புகளில் தானியங்கி போக்குவரத்து சைகை விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 64 சந்திப்புகளில் LED எனப்படும் ஒளி உமிழும் போக்குவரத்து சைகை விளக்குகள் அமைக்கப்பட்டதன் விளைவாக, சைகை விளக்குகளின் தெளிவு மேம்பட்டுள்ளது. 137 சைகை விளக்குகளில் வினாடிகளைக் காட்டும் கருவி (டைமர்ஸ்) பொருத்தப்பட்டதன் விளைவாக எரிபொருள் மிச்சப்படுவதுடன் புகையின் அளவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் முக்கிய சாலைகளில் 22.41 இலட்சம் ரூபாய் மதிப்பில் தெர்மோ பிளாஸ்டிக் வகை வண்ணப் பூச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் 25 பிராணவாயு நுகரும் சாதனங்கள் நிறுவப்பட்டதன் விளைவாக, போக்குவரத்து முனைகளில் பணியாற்றும் போக்குவரத்துக் காவலர்கள் சுத்தமான பிராணவாயுவை சுவாசிக்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. 1,500 மாசு கட்டுப்பாட்டுக் கவசங்கள் வாங்கப்பட்டு, பணியில் உள்ள காவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கவசங்கள், 95 விழுக்காடு மாசு பாதுகாப்பை உறுதி செய்கிறது.

சாலைப் பாதுகாப்பில் நெடுஞ்சாலை ரோந்துக் காவல் பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள நெடுஞ்சாலை ரோந்துக் காவல் பணி சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. ராடார் துப்பாக்கிகள் மற்றும் சுவாசத்தைச் சோதனையிடும் கருவிகள் உள்ளிட்ட நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட 80 புதிய டோயோடா குவாலிஸ் வாகனங்கள், 24 மணி நேரமும் தேசிய நெடுஞ்சாலைகளில் ரோந்துக் காவல் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இத்துடன், நெடுஞ்சாலையில் விபத்துக்கள் அதிகம் நிகழக்கூடிய இடங்களில் அவசர கால விபத்து நிவாரண மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 23-8-2003 அன்று என்னால் துவக்கி

வைக்கப்பட்டது. 160 நெடுஞ்சாலை ரோந்துக் காவல் குழுக்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய நெடுஞ்சாலை ரோந்துக் காவல் பணி கூர்ந்து கண்காணிக்கப்படுவதுடன், ஒவ்வொரு வாரமும் மண்டல காவல் துறைத் தலைவர்களாலும், ஒவ்வொரு மாதமும் காவல் துறை தலைமை இயக்குநராலும் ஆய்வு செய்யப்படுகிறது.

இத்தகைய ரோந்துக் காவல் பணியால், சாலை விபத்துக்களின் எண்ணிக்கையும், சாலை விபத்துக்களில் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளன. இது குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| விவரம் | 2003 ஆம் ஆண்டு | 2004 ஆம் ஆண்டு |
|---|---|---|
| விபத்துக்களின் எண்ணிக்கை | 47,362 | 46,017 |
| சாலை விபத்துக்களில் இறந்தவர்கள் | 9,174 | 8,779 |
| பலத்த காயமடைந்தோர் | 9,356 | 7,344 |

அவசர கால நிவாரண மையங்களும், நெடுஞ்சாலை ரோந்துக் காவல் குழுவினரும் சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக விரைந்து "பொன்னான நேரம்" (Golden Hour) என்று சொல்லப்படும் விபத்து நடந்த ஒரு மணி நேரத்திற்குள் உதவி செய்ததால், விலை மதிப்பற்ற பல மனித உயிர்களைக் காப்பாற்ற முடிந்ததுடன், பலத்த காயமடைந்த 7,344 பேர் சிகிச்சைக்காக இலவசமாக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**11. நடமாடும் ஆலோசனை மையங்கள்**

பாதிப்புக்குள்ளாகும் பெண்களின் குறைகளைத் தீர்த்து வைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும்/நகரிலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒலிபெருக்கி வசதி, கலர் தொலைக்காட்சிப் பெட்டி, காணொலி பதிவுக் கருவி, மிக உயர் அலை சாதனம், ஏ.சி. மின் உற்பத்திக் கருவி ஆகியவை பொருத்தப்பட்ட வாகனங்களில் கிராமப்புறங்களுக்குச் சென்று, பெண்களுக்கான உரிமை குறித்து விளக்கி, அவர்களிடம் புகார்களைப் பெற்று, அவைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றன. இத்திட்டம், பொதுவாக அனைத்துத் தரப்பினராலும், குறிப்பாக, பெண்களாலும் பெரிதும் பாராட்டப்படுகிறது. மேலும், புதிதாக 18 நடமாடும்



ஆலோசனை மையங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு, மொத்தமுள்ள 35 ஆலோசனை மையங்களும் திறம்பட இயங்கி வருகின்றன.

**12. புதிய காவல் நிலையங்களை அமைத்தல்**

2004 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் ஏழு அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு புதிய காவல் நிலையமும் அமைக்கப்பட்டன.

**13. கருணை அடிப்படையில் கணினி தகவல் பதிவர்கள் நியமனம்**

2004 ஆம் ஆண்டில் நலத் திட்ட நடவடிக்கையாக, பணியில் இருக்கும்போது உயிர் இழந்த காவல் துறைப் பணியாளர்களின் வாரிசுதாரர்களான 805 பேர்களைக் கணினி தகவல் பதிவர்களாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசு பணி நியமனம் செய்துள்ளது.

**14. 2005–2006-ல் பகுதி II திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள்**

அ. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணிக்கு 80 லட்சம் ரூபாய் செலவில் நிருவாகக் கட்டடம், தங்குமிடம் மற்றும் பண்டகசாலை கட்டுதல்.

ஆ. வேலூரில் உள்ள காவலர் பயற்சிப் பள்ளியை (திப்பு மஹால், ஹைதர் மஹால்) 20 இலட்சம் ரூபாய் செலவில் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.

இ. சென்னை நகருக்கு வருகை தரும் அதிமுக்கியப் பிரமுகர்களின் வழிக்காவல் பணிக்காக 21.28 இலட்சம் ரூபாய் செலவில் ஐந்து சீருந்துகளை வாங்குதல்.

ஈ. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டக் காவல் படை அணிகள் மற்றும் ஆணையரகங்களில் உள்ள காவலர் குழலிசைப் பிரிவுகளுக்கு 12.11 இலட்சம் ரூபாய் செலவில் புதிய இசைக் கருவிகளை வாங்கி வழங்குதல்.

உ. சென்னை, எழும்பூரில் 12.38 இலட்சம் ரூபாய் செலவில் குதிரை லாயம் மற்றும் குதிரைப் படை அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

[2005 மார்ச் 14

அத்தியாயம் – 11

## அகில இந்தியக் காவல் பணித்திறன் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்

### அகில இந்தியக் காவல் பணித்திறன் போட்டி

2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், ஐதராபாத்தில் நடைபெற்ற 47-வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் பங்கு பெற்ற தமிழ்நாடு காவல் துறைக் குழுவானது, ஒரு தங்கப் பதக்கத்தையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், 4 வெண்கலப் பதக்கங்களையும் வென்று, அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அஸ்ஸாமில் நடைபெற்ற 48-வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு காவல் துறைக் குழு, இரண்டு தங்கப் பதக்கங்கள், நான்கு வெள்ளிப் பதக்கங்கள், ஐந்து வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைப் பெற்று, ஒட்டுமொத்த மதிப்பெண்களில் முதலிடம் பெற்றது. இரண்டு முதல் இடக் கோப்பைகளையும், இரண்டாவது இடத்திற்கான ஒரு கோப்பையையும் தமிழ்நாடு காவல் துறைக் குழு வென்றது.

### துப்பாக்கி சுடும் போட்டி

இந்தூரில், 22-11-2004 முதல் 25-11-2004 வரையில் நடைபெற்ற அகில இந்திய துப்பாக்கி சுடும் போட்டியில் கலந்து கொண்ட தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த துப்பாக்கி சுடும் வீரர்கள், மாநிலங்களிடையேயான ஒட்டுமொத்த சாம்பியன் பட்ட சுழற்கோப்பையையும் (1991 ஆம் ஆண்டில் நான் ஏற்படுத்திய ஜெ ஜெயலலிதா சுழற்கோப்பை), இரண்டு தங்கப் பதக்கங்களையும் வென்றனர்.



2005 மார்ச் 14]

### அகில இந்திய விளையாட்டுப் போட்டிகள்

அகில இந்திய அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாடு காவல் துறை விளையாட்டு வீரர்கள் பங்கேற்று, இருபது ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். வழக்கமான போட்டிகளைத் தவிர, புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட 'ரக்பி' மற்றும் படகுப் போட்டி போன்ற விளையாட்டுகளில் தமிழ்நாடு காவல் துறை விளையாட்டு வீரர்கள் தங்களது சிறப்பான விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்தினர். விளையாட்டுச் சாதனைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1) 2004-ல் கேரளாவில் நடைபெற்ற அழைப்புக் கோப்பை கபடி போட்டியில் தமிழக அணி முதலிடம் பெற்றது.

2) செப்டம்பர் 2004-ல் ஜம்முவில் நடைபெற்ற 53-வது அகில இந்தியக் காவல் துறையினருக்கான கைப்பந்து, கூடைப்பந்து, கையெறிபந்து மற்றும் கபடி சாம்பியன் போட்டிகளில் தமிழ்நாடு காவல் துறை விளையாட்டுக் குழு வெள்ளிப் பதக்கம் வென்றது.

3) அக்டோபர் 2004-ல் ரூர்கியில் நடைபெற்ற நான்காவது அகில இந்தியக் காவல் துறையினருக்கான நீர் விளையாட்டுப் போட்டியில், தமிழக காவல் துறையைச் சேர்ந்த படகு ஓட்டும் குழு, ஒரு தங்கப் பதக்கத்தையும், மூன்று வெள்ளிப் பதக்கங்களையும் வென்றது.

4) 2004-ல் பஞ்சாபில் நடைபெற்ற 30-வது தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்ற தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் மகளிர் அணி தேசிய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

[2005 மார்ச் 14

5) 2004-ல் சென்னையில் நடைபெற்ற கடற்கரை கைப்பந்து சாம்பியன் போட்டியில், தமிழ்நாடு பெண் காவலர் குழு மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

2003-ல் முதல் முறையாக தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 'ரக்பி' விளையாட்டுக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, தீவிரப் பயிற்சிக்குப் பின்னர், அக்குழுவினர், மும்பை, கொல்கத்தா, பெங்களூர் போன்ற இடங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். இதேபோன்று இலங்கை, பெர்மிங்காம், தாய்லாந்து போன்ற இடங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும் அப்படையின் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். 2004 ஆம் ஆண்டு நவம்பரில் ஒரிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெற்ற அகில இந்திய 'ரக்பி' கால்பந்து போட்டியில் கலந்து கொண்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் வீரர்கள், இந்திய இராணுவத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பிடித்தனர்.

பதக்கங்களையும், கோப்பைகளையும் வெல்பவர்களுக்கு செப்டம்பர் 2004 முதல் ரொக்க வெகுமதியை அதிகப்படுத்தி நான் உத்தரவு பிறப்பித்தேன். அது குறித்த விவரம் வருமாறு:

| பதக்க விவரம் | செப்டம்பர் 2004–க்கு முன்பாக வழங்கப்பட்ட ரொக்க வெகுமதி | அதிகப்படுத்தப்பட்ட ரொக்க வெகுமதி |
|---|---|---|
| தங்கம் | 10,000 | 50,000 |
| வெள்ளி | 5,000 | 30,000 |
| வெண்கலம் | 3,000 | 20,000 |

இது காவல் துறையினருக்கு உற்சாகமும், ஊக்கமும் அளித்து, அகில இந்திய அளவில் நடைபெறும் பணித்திறன் போட்டிகளிலும், இதர விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு கொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தை உருவாக்கியுள்ளது.



2005 மார்ச் 14]

## அத்தியாயம் – 12

## தடய அறிவியல் துறை

1849 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தடய அறிவியல் துறையானது, சட்டங்களைச் செயல்படுத்தும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு அமைப்புகளுக்குத் தடய அறிவியல் சார்ந்த பணிகளை நல்கும் ஒரு முதன்மை அமைப்பாக விளங்குகிறது. இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்படும் இத்துறையில் அவருக்கு உதவியாக, 230 தடய அறிவியல் பணியாளர்களும், 266 இதர பணியாளர்களும் உள்ளனர்.

சென்னையிலுள்ள இத்துறையின் தலைமை ஆய்வகம், 15 உட்பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவுகளில், மரபணு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்துறையின்கீழ், மாநிலத்தில் 9 வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் நீங்கலாக, ஏனைய அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் தலா ஒன்று வீதம் 35 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன.

விஷ பாதிப்பால் சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு, மருத்துவம் சார்ந்த நச்சியல் ஆய்வு தொடர்பான பணிகளை இத்துறை அளிக்கிறது. மேலும், ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் ஒரு சமூகப் பணியாக 'பெற்றோரைக் கண்டறியும்' ஆய்வையும் இத்துறை மேற்கொள்கிறது.

2004 ஆம் ஆண்டில், 77,437 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,33,826 தடயப் பொருட்களை இத்துறை பகுப்பாய்வு செய்துள்ளது.

அறிவியல் பட்ட மேற்படிப்பு (சுற்றுப்புற நச்சியல்), முதுகலைப் பட்டம் (குற்றவியல்), முதுகலைப் பட்டயப் படிப்பு (குற்றவியல் மற்றும் தடய அறிவியல்) மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு (தடய

[2005 மார்ச் 14

அறிவியல் மருத்துவம்) ஆகிய பட்ட மேற்படிப்புகளை, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மாநில மருத்துவ நிறுவனங்கள் அளிப்பதில் இத்துறை உதவி வருகிறது. இது தவிர, முனைவர் பட்டத்துக்கான ஆய்வு மையமாகவும் இத்துறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தடய அறிவியல் துறையில், மரபணு சோதனை ஆய்வகத்தை ஏற்படுத்தியதன்மூலம், மரபணு சோதனை சேவை வழங்குகின்ற ஒரு சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாக விளங்குகிறது.

2005—2006 ஆம் ஆண்டில், பகுதி-II திட்டத்தின்கீழ், கணினி சார் குற்றங்களைத் தடுக்கத் தேவைப்படும் கருவிகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு கணினி தடய அறிவியல் பிரிவை 34 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கணினி தடய அறிவியல் பிரிவு, மென்பொருள் மற்றும் கணினியுடன் கூடிய ஆதார நிலையம் கொண்டதாக இருக்கும். தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சியை அடுத்து, பெருகி வரும் கணினி சார் குற்றங்கள், மின்—குற்றங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மாநிலத்தின் திறமையை இது அதிகரிக்கும்.

**நிறைவுரை**

ஏற்ற சூழ்நிலைகள் அமைந்திருந்தாலும், காவல் பணியைத் திறம்படச் செய்வது என்பது கடுஞ்சுமையானதொரு பணியாகவே அமைந்து விடுகிறது. இருப்பினும், மாறி வரும் சமூக—பொருளாதாரச் சூழல்களினால் விளையும் புதுப் புது சவால்களை எல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு, தமிழ்நாடு காவல் துறை செயல்படும் விதம், அதன் பெருமைக்கு அணி சேர்ப்பதாக உள்ளது. அவ்வாறு செய்யுங்கால், காவல் படை தனது உயர்ந்த தொழில் சார் திறமையையும் மற்றும் சாதாரண மக்களுடன் இணைந்து செயல்படும் பாங்கையும் வெளிப்படுத்தி வருகிறது.

அரசின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் வலுவான ஆதரவுடன், வெகு வேகமாக நவீனமயமாகிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு காவல்



2005 மார்ச் 14]

துறை, தொழில்நுட்ப வளர்ச்சியில் நிகழும் அன்றாட மாற்றங்களைத் தன்வயமாக்கிக் கொள்ளும் அதே சமயத்தில், சாதாரண மக்களைப் பேணிக் காக்க வேண்டியதன் அவசியத்திலும், மனித உரிமைகளையும், மாண்பினையும் நிலைநாட்டுவதிலும் எந்தவிதக் குறைபாடுமின்றிச் செயலாற்றுகிறது. மாநிலத்தில் நிலவி வரும் சீர்மையான சட்டம்-ஒழுங்கு நிலை மற்றும் நல்அமைதிச் சூழல் ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் எழும் பிரச்சினைகளையும், சவால்களையும் காவல் துறை எதிர் கொள்வதற்கு ஏற்ற வகையில், புதிய உத்திகளும் மற்றும் நவீன செயலாக்க மாதிரி வகை முறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகளின் வீதம் சீராக குறைந்து வருவதோடு, நமது நாட்டிலேயே குற்றங்களுக்குத் தண்டனை பெற்றுத் தருவதில் உயர் நிலையை எட்டிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்ற பெருமையும் தொடர்ந்து பெற்று வருகிறது. மதவாத, அடிப்படைவாத மற்றும் தீவிரவாத சக்திகளின் செயல்பாடுகள் திறம்பட எதிர்கொள்ளப்பட்டு, ஒடுக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில், சமூக-பொருளாதார நிலைகளில் நலிவுற்ற பிரிவினரின் குறைகளைப் பரிவுடனும், விடா முயற்சியுடனும் களைவதற்கும், அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. கணினி சார் குற்றங்கள், வணிகக் குற்றங்கள், வீடியோ திருட்டு மற்றும் நிதி நிறுவனங்களால் இழைக்கப்படும் குற்றங்கள் போன்ற கெடு மதி குற்றங்களுக்கு எதிராகத் திறம்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. போதை மருந்துகளைக் கடத்துதல் மற்றும் கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபடுதல் போன்ற சமூக விரோதச் செயல்பாடுகள் கடுமையான நடவடிக்கைகளின்மூலம் ஒடுக்கப்பட்டுள்ளன.

புதிய சவால்கள் எழும்போதெல்லாம் புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு புதிய தீர்வுகள் காணப்பட வேண்டும். தமிழ்நாடு காவல் துறை இதுபோன்ற சவால்களை எல்லாம் எதிர் கொண்டு, அனைத்துத் தரப்பினரின் எதிர்பார்ப்புக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற வகையில் தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி, செயல்படும் என்று நான் உறுதிபட நம்புகிறேன்.

## இணைப்பு -1

### 2004 ஏப்ரல் முதல் 24-1-2005 வரை காவல் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள்

| வ. எண் | பதக்கங்கள் | கா.து.இ. | கூ.கா.து.இ. | கா.து.த. | கா.து.து.த. | கா.து.க/து.ஆ. | கூ.கா.து.க. | கா.து.து.க/உ.ஆ. | ஆய்வாளர் | உ.ஆய்வாளர் | த.காவலர் | மு.நி.காவலர் | இ.நி.காவலர் | மொத்தம் | அ.ஆணை/ கடித எண் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காவலர் பதக்கம் –2005 | | | | | | | | | | 1388 | | 112 | 1500 | அ.ஆ.நிலை எண் 36 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 12-1-2005 | ஒவ்வொரு வருக்கும் ஒரு பதக்கமும், மாதாந்திர பதக்கப் படியாக தலைமைக் காவலர்களுக்கு ரூ.50–ம் காவலர்களுக்கு ரூ.40–ம். |
| 2 | குடியரசு தினத்தன்று வழங்கப்படும் குடியரசு தலைவர் பதக்கம் – 2004 | | | | | | | | | | | | | | அரசு கடித எண் 481–1/2004 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 27-1-2005 | பதக்கம் மட்டும் |
| | 1) சிறப்புப் பணிக்கு | | 2 | | | 1 | | | | | | | | 3 | | |
| | 2) மெச்சத்தக்க பணி | | | 1 | 3 | 4 | 2 | 4 | 2 | | | | | 16 | | |
| 3 | முதலமைச்சரின் காவலர் பதக்கம் –2004 (அண்ணா பதக்கம்) | | | | | | | | | | | | | | அ.ஆ. நிலை எண் 1129 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 14-9-04 மற்றும் அ.ஆ. நிலை எண் 1336 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 3-12-04 | ஒவ்வொரு வருக்கும் ஒரு பதக்கம் மற்றும் மாதாந்திர பதக்கப் படியாக ரூ.100/– |
| | 1) வீரதீரச் செயல் | | | | | 1 | | 3 | 3 | 8 | 8 | 2 | 8 | 33 | | |



| வ. எண் | பதக்கங்கள் | கா.து.இ. | கூ.கா.து.இ. | கா.து.த. | கா.து.து.த. | கா.து.க/து.ஆ. | கூ.கா.து.க. | கா.து.து.க/உ.ஆ. | ஆய்வாளர் | உ.ஆய்வாளர் | த.காவலர் | மு.நி.காவலர் | இ.நி.காவலர் | மொத்தம் | அ.ஆணை/ கடித எண் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2) கடமைப் பற்றுறுதிக்காக | | | | | | 4 | 10 | 26 | 14 | 31 | 5 | | 90 | அ.ஆ. நிலை எண் 1129 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 14-9-04 | பதக்கம். காவலர் முதல் தலைமைக் காவலர் வரை ரூ.2,000/–ம், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு ரூ.3,000/–ம், காவல் துணை கண்காணிப்பாளருக்கு ரூ.5,000/–ம் ரொக்கப் பரிசு. காவல் துணை கண்காணிப்பாளருக்கு மேற்பட்ட பதவியில் உள்ள அதிகாரிகளுக்கு ரொக்கப் பரிசு இல்லை. |
| | 3) பொதுச் சேவையில் சிறப்புப் பணி ஆற்றியமைக்காக | | | 1 | | | | | | | | | | 1 | அ.ஆ. நிலை எண் 1373 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 10-12-04 | தங்கப் பதக்கம் மற்றும் ரொக்க வெகுமதியாக ரூ.5,000/– |
| 4 | கள்ளச்சாராய ஒழிப்பில் சிறப்பாக பணி ஆற்றியமைக்காக மகாத்மா காந்தி பதக்கம் | | | | | | 2 | 1 | 1 | | | | | 4 | அ.ஆ. நிலை எண் 331 மவிஆ. துறை தேதி 28-9-04 | பதக்கம் மற்றும் ரொக்க வெகுமதியாக ஒவ்வொரு வருக்கும் ரூ.10,000/– |
| 5 | சிறப்பான புலன் விசாரணைக்காக முதலமைச்சரின் காவலர் பதக்கம் – 2004 | | | | | | 1 | 2 | 6 | 1 | | | | 10 | அ.ஆ. நிலை எண் 1017 உள் துறை (கடும் மந்தனம்) தேதி 13-8-04 | தங்கப் பதக்கம் மற்றும் ஒவ்வொரு வருக்கும் ரொக்க வெகுமதியாக ரூ.5,000/– |

கா.து.இ (டிஜிபி) –காவல் துறை இயக்குநர், கூ.கா.து.இ (ஏடிஜிபி)–கூடுதல் காவல் துறை இயக்குநர்,
கா.து.த (ஐஜிபி) –காவல் துறை தலைவர், கா.து.து.த (டிஐஜி) – காவல் துறை துணைத் தலைவர் ,
கா.து.க (எஸ்பி) – காவல் துறை கண்காணிப்பாளர், கூ.கா.து.க (ஏடிஎஸ்பி) – கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர்,
கா.து.து.க (டிஎஸ்பி) –காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்;
து.ஆ (டிசி) – துணை ஆணையர், உ.ஆ (ஏசி) – உதவி ஆணையர்.

## இணைப்பு II

(59 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 22

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### I. முகவுரை

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, நாட்டில் உள்ள மிகச் சிறந்த மற்றும் மிகப் பெரும் தீயணைப்புத் துறைகளில் ஒன்று என்ற பெருமையைப் பெற்று விளங்கி வருகிறது. அடிப்படையில் இது ஒரு சேவைத் துறையாகும். இதனுடைய முக்கியப் பணி, தீ மற்றும் இயற்கைச் சீற்றங்களிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் மீட்பது ஆகும். நெருக்கடி காலங்களில் இத்துறை ஆற்றும் முக்கியப் பங்கினை சமீபத்திய சுனாமி பேரழிவு எடுத்துக்காட்டியதோடு மட்டுமல்லாமல், இந்தக் கொடிய பேரழிவின்போது பெரும் தொண்டாற்றிய இத்துறைப் பணியாளர்களது மன உறுதி மற்றும் அவர்களது திறமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

இதுபோன்று ஆபத்தான மற்றும் அவசர காலத்தில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் இத்துறை காட்டிய ஊக்கமும், ஆற்றிய தொண்டும் ஊடகங்கள் மற்றும் பொது மக்களின் வெகுவான பாராட்டைப் பெற்றன. இந்த அரசின் நிலையான ஆதரவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கத்தினால்தான் இந்த உயரிய செயலாக்கம் சாத்தியமாயிற்று. பேரழிவு மேலாண்மையில் முதன்மை முகமையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, அதன் கடினப் பணிக்கு ஏற்ற வகையில் ஆயத்தம் பெற்றிருக்க வேண்டும் என்று இந்த அரசு நம்புவதால், அதற்கேற்றாற்போல் துறையின் திறனை மேம்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நவீன சாதனங்கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 100-க்கும் மேற்பட்ட புதிய தீயணைப்பு ஊர்திகள் இத்துறையால் வாங்கப்பட்டுள்ளன. தீ பாதிக்காத உடைகள், இரசாயனப் பாதுகாப்பு உடைகள் மற்றும் அனல் பாதிக்காத கையுறைகள் ஆகியவற்றை வாங்கவும் தாராளமாக நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. இத்துறையால் அளிக்கப்படும் முன்னுரிமைகளைப் பொறுத்த வரை, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதே வேளையில், பயிற்சியின் முக்கியத்துவத்தையும் மறந்து விடாமல், அனைத்து நிலையிலும் உள்ள பணியாளர்களுக்குத் திட்டமிட்ட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அரசினால் அமைக்கப்பட்டுள்ள பேரழிவு மேலாண்மை ஆணையம், தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை அமைத்துப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை இத்துறையிடம் ஒப்படைத்துள்ளது. இதன்மூலம், பேரழிவினை எதிர்கொள்வதற்குத் திட்டமிடுவதிலும், ஆயத்தம் கொள்வதிலும் இத்துறையின் பங்கு வெகுவாக அதிகரித்துள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம் அமைத்ததிலிருந்தே, பொது மக்களின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் இவ்வரசு அளிக்கும் முக்கியத்துவமும், அக்கறையும் வெளிப்படுகிறது. இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் இல்லாமல், தமிழகத்தில்தான் முதன்முதலாக இத்தகைய ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையம் தனது பரிந்துரைகளை சமீபத்தில் அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இப்பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியினை முதன்மையான சேவைப் பணியாக மேம்படுத்துவதிலும், இயற்கைச் சீற்றங்கள், வேகமான நகரமயமாக்குதல் மற்றும் தொழில்மயமாக்குதல் ஆகியவற்றால் எழும் சவால்களைச் சமாளிக்கத் தேவையான பயிற்சி மற்றும் அமைப்பு ரீதியான திறனை இத்துறைக்கு அளிக்கவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

## II. குறிக்கோள்கள்

"காக்கும் பணி எங்கள் பணி" என்ற கொள்கையின் அடிப்படையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சேவை மனப்பான்மையுடன் செயலாற்றி வருகிறது. தீ, வெள்ளம், கட்டடம் இடிதல், மற்றும் இதர அசம்பாவிதங்களால் உயிருக்கோ, உடைமைக்கோ அபாயம் ஏற்படும் தருணங்களில், உடனடியாக இத்துறை நடவடிக்கைகளில் இறங்குகிறது. தீ விபத்து ஏற்பட்டு, அதனால் உயிருக்கும், உடைமைக்கும் சேதம் ஏற்பட வாய்ப்புள்ள கோயில் திருவிழாக்கள், பெரிய அளவிலான கூட்டங்கள் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் நேர்வுகள் ஆகியவற்றின்போது இத்துறை பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத்





தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். இத்துறையின் தீயணைப்புப் பணியில் மீட்புப் பணிகள் மற்றும் நோயாளர் ஊர்தி சேவை ஆகியவையும் அடங்கும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைத் தவிர, பொது மக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தீ பாதுகாப்பு குறித்த சட்டம் மற்றும் விதிகள் கண்டிப்பாக செயல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் மற்றும் தீ பாதுகாப்பு, வெள்ளம் மற்றும் இதர பேரிடர் தொடர்பாக ஆலோசனை வழங்குதல் ஆகிய பல்வேறு வழிகளில் தீ விபத்தினை தடுப்பதிலும் இத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

## III. எதிர்கால சவால்களும், நவீனமயமாக்குதலின் அவசியமும்

தற்செயலாக ஏற்படும் தீ விபத்து, வெள்ளம், நிலநடுக்கம் மற்றும் பிற இயற்கைப் பேரிடர்களின் போது மட்டுமல்லாமல், தீவிரவாதிகளின் தாக்குதல், சாதி, இன மோதல்கள் போன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, காவல் துறை, வருவாய்த் துறை, மருத்துவப் பணிகள் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இரசாயனக் கசிவுகள், அடுக்கு மாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகள், சரியான அணுகுபாதையின்றி நெருக்கமாகவும், அதிக மக்கள்தொகை கொண்டதாகவும் உள்ள நகரப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகள் போன்றவற்றையும் எதிர்கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆயத்தமாக உள்ளது.

## IV. பேரழிவு மேலாண்மை என்னும் பெரும் சவால்

புயல், வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் தமிழகத்திற்குப் புதியவை அல்ல. இதுபோன்ற பேரிடர்களைச் சிறந்த முறையில் கையாள்வதற்கு ஏற்ற வகையில் மாநிலத்தின் நிருவாக இயந்திரம் முழு ஆயத்த நிலையில் இருக்கத் தயார்படுத்தப்பட்டுள்ளது. பேரழிவு மேலாண்மை இயந்திரத்தின் ஒரு முக்கியப் பிரிவான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பேரழிவு நேரங்களில் தனது கடமையைச் சிறப்பாக செய்வதில் எப்பொழுதும் பின்தங்கியதில்லை.

8-7-2003 அன்று அரசு ஒரு உயர்மட்ட பேரழிவு மேலாண்மை ஆணையத்தினை அமைத்தது. இந்த ஆணையத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநரும் ஓர் உறுப்பினராக உள்ளார். இவ்வாணையம் காலமுறைப்படி கூடி, பேரழிவினைத்

தடுப்பது, பேரழிவு மேலாண்மை மற்றும் அதன் அழிவினைக் குறைப்பது மற்றும் கையாள்வது குறித்து பல்நோக்கு அணுகுமுறையை வகுத்துள்ளது.

## V. ஆழிப்பேரலைக்குப் (Tsunami) பின்னர்

*2004* ஆம் ஆண்டு டிசம்பர் *26* அன்று காலை, இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நில அதிர்ச்சியினைத் தொடர்ந்து எழுந்த ஆழிப்பேரலையினால், வரலாறு காணாத உயிர்ச் சேதமும், பெரும் பொருட்சேதமும் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து, பட்டினிச் சாவு, தொற்று நோய் போன்ற கொடிய பிரச்சினைகள் ஏற்படும் என்று மேற்கத்திய நாடுகளின் வல்லுநர்கள் கணித்தனர். ஆனால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உட்பட அரசின் பல்வேறு முகமைகளால் உடனடியாகவும், சிறப்பாகவும் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணிகளால் இந்தக் கணிப்புகள் பொய்யாக்கப்பட்டதோடு, தொற்று நோய் அபாயமும் தடுக்கப்பட்டது.

இந்த சுனாமி தாக்குதல், அலட்சியப் போக்குக்கு இடம் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இதுபோன்ற சவால்களையும், எதிர்காலத்தில் எழக்கூடிய எந்த ஒரு நெருக்கடியையும் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைத் தொடர்ந்து தயார் நிலையில் வைப்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது.

## VI. நிருவாக/பணி அமைப்பு

உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையின் தலைவராக இயக்குநர் ஒருவர் உள்ளார். இவருக்கு உதவியாக நான்கு துணை இயக்குநர்கள் உள்ளனர். மாநிலத்தில் உள்ள நான்கு மண்டலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு துணை இயக்குநர் தலைமை வகிக்கிறார். இந்த மண்டலங்கள் 29 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றது. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் உள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் இத்துறையின் அடிப்படைச் செயலாக்கப் பிரிவாகும். ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும், ஒரு நிலைய அலுவலரின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் மொத்தம் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் உள்ளன. 1 மீட்புப் பணி நிலையம் ஒகேனக்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. 25 கி.மீ. சுற்றளவுள்ள இடத்திற்குள் குறைந்த பட்சம் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் இருத்தல், 50,000-க்குக் குறையாத மக்கள்தொகை மற்றும் ரூபாய் 50,000/- மதிப்பிற்குக் குறைவில்லாத





சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள தீ விபத்து அபாயங்கள் ஆகியவற்றை அளவுகோல்களாகக் கொண்டு, தேவைப்படும் இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்கப்படுகிறது.

12 கோட்டங்களில் தீ தடுப்புப் பிரிவுகள் உள்ளன. இயக்குநர் (பயிற்சி) அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் தாம்பரத்தில் மாநிலப் பயிறசி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தில் துறைப் பணியாளர்களுக்கும், குறைந்த கட்டணம் வசூலிக்கப்படும் அடிப்படையில் ஏனையோருக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையில் உள்ள மாநிலப் பணிமனையும் இவருடைய மேற்பார்வையின்கீழ் இயங்கி வருகிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்பு குறித்த விளக்கப் படம் இணைப்பு I—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## VII. மனித வளம் மற்றும் சாதனங்கள்

### அ) மனித வள ஆற்றல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 6,606 ஆகும். கோட்ட அலுவலர்கள், தானியங்கிப் பணிமனைப் பொறியாளர் (மாநிலப் பணிமனை), நிலைய அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தீயணைப்பாளர் பதவிக்கான பணியாளர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கு சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்பதிலும், பாலின வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக உள்ள இவ்வரசு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் கோட்ட அலுவலர், நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்பாளர் நிலைகளில் மகளிர் நியமிக்கப்பட வகை செய்யும் விதத்தில் சம்மந்தப்பட்ட பணி விதிகளுக்குத் திருத்தம் செய்ய 12-10-2001 அன்று ஆணைகள் வெளியிட்டுள்ளது. கோட்ட அலுவலர் பதவிக்கு பெண்களை நியமனம் செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி விதிகளைத் திருத்தி, 2003 ஆம் ஆண்டு ஜனவரி

மாதத்தில் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி, இரண்டு பெண் கோட்ட அலுவலர்கள் நேரடி நியமனம்மூலம் 1-8-2003 அன்று பணியமர்த்தப்பட்டனர்.

அரசாணை (நிலை) எண் 993, உள் துறை, நாள் 7-8-2004-ன் மூலம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைப் பொறுத்த வரையில், புதிய பணியாளர்கள் நியமனம் தொடர்பான தடையை இந்த அரசு நீக்கியுள்ளது.

### ஆ) ஊர்திகள் மற்றும் தளவாடங்கள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் சிறப்பாகச் செயல்படுவதற்காக, 326 நீர்தாங்கி ஊர்திகளும், 80 நோயாளர் ஊர்திகளும், 13 நுரை தகர்வு சிறு ஊர்திகளும், 5 அவசர கால மீட்பு ஊர்திகளும், நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட (இங்கிலாந்து-சைமன் ஸ்நார்கல்) ஊர்தி ஒன்றும், சுழல் மேஜை ஏணி ஊர்தி (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு) ஒன்றும், 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் 2 (பிராண்டோ ஸ்கைலிஃப்ட்-பின்லாந்து தயாரிப்பு), நீர்விடு குழாய் பதிக்கும் ஊர்தி ஒன்றும், 51 தண்ணீர் லாரிகளும், மீட்பு ஊர்தி ஒன்றும், 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகளும், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகளும், 93 மிதவைப் பம்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, போதிய தொழில்நுட்பத் துணைப் பணியாளர்களுடன் 61 துணை ஊர்திகளும் வழங்கப்பட்டுள்ளன.

நவீன உபகரணங்களான, தூக்கும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், மின் ஆக்கிகள் மற்றும் மீட்புப் பணிக்கான அனைத்து உபகரணங்களையும் கொண்ட பெட்டி ஆகியவை தேவையான நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் உபயோகப்படுத்துவதற்காக, இத்துறையில் 8 கண்ணாடி இழை விசைப் படகுகளும், 11 மிதவைப் படகுகளும் உள்ளன. அனல் வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி பொருத்திய தலைக் கவசம்-1, கையில் எடுத்துச் செல்லக்கூடிய அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவிகள்-2, உயிர் உள்ளவர்கள் சிக்கியுள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள்-2, பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள்-2 மற்றும் 81 தீ பாதிக்காத உடைகள், 83



இரசாயனப் பாதுகாப்பு உடைகள் மற்றும் தீ பாதிக்காத 222 இணைக் கையுறைகள் ஆகியவையும் இத்துறையில் உள்ளன.

இரசாயனப் பாதுகாப்பு உடைகள் மற்றும் தீ பாதிக்காத உடைகளுடன் உபயோகப்படுத்துவதற்காக, 32.31 இலட்சம் ரூபாய் செலவில், 50 மூச்சுக் கருவிகள் மற்றும் 164 இணை சிறப்புக் காலணிகளை 2004-2005 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## VIII. தகவல் தொடர்பு வசதிகள்

### அ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லா தொலைத் தொடர்புக் கருவிகள்

அவசர காலங்களில் தொடர்பு கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்திலும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் வாக்கி டாக்கிகள், மறு அஞ்சல் கருவிகள் உள்பட 122 குறை வேக மீஉயர் அலைவரிசை கம்பியில்லா தொலைத் தொடர்புக் கருவிகள் இயங்கி வருகின்றன. எளிதில் தீ விபத்து அபாயங்கள் ஏற்பட வாய்ப்புள்ள இடங்களில் 32 உயர் அலைவரிசைக் கருவிகள் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

சென்னை மாநகரில் தகவல் தொடர்பு வசதியை மேலும் மேம்படுத்துவதற்காக, கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதியினை நவீனப்படுத்தும் வகையில், அதிநவீன தகவல் தொடர்பு சாதனங்களைக் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு 55 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

### ஆ) பதில் செயல்பாட்டு நேரம் (Response Time)

விபத்து அழைப்பு பெறப்பெற்ற கணத்திலிருந்து முதல் தீயணைப்பு ஊர்தி விபத்து நடந்த இடத்தைச் சென்று அடைய எடுத்துக்கொள்ளும் நேரமே பதில் செயல்பாட்டு நேரமாகும். தீ விபத்து அல்லது மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலைகளில் பதில் செயல்பாட்டு நேரத்தைக் குறைக்க இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது. சென்னை மாநகரில் இந்த பதில் செயல்பாட்டு நேரத்தினை 10 நிமிடங்களுக்கும் குறைவாக கொண்டு வருவதில் இத்துறை வெற்றி கண்டுள்ளது. பதில் செயல்பாட்டு நேரத்தைக் குறைக்கும் நோக்கத்தில் தகவல்களை விரைந்து அளிப்பதற்கென தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும், '101' மற்றும் '102' எண்கள் கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் கம்பியில்லா தொலைத் தொடர்புக் கருவி இணைப்புகள் பொருத்திய

ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் இயங்கி வருகின்றன. பதில் செயல்பாட்டு நேரத்தை மாவட்டங்களில் மேலும் குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### இ) துறையின் இணையதளம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென இணையதளம் ஒன்று தேசிய தகவல் தொடர்பு மையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் முகவரி— **http://www.tn.nic.in/fireservice** என்பதாகும். இந்த இணையதளம், பொது மக்களுக்கு, தீ பாதுகாப்பு பற்றி அறிவுறுத்துவதில் முக்கியப் பங்கு ஆற்றுவதுடன் கட்டட விதிகள் மற்றும் உரிம நிபந்தனைகள் குறித்த தகவல்களையும் அளிக்கிறது.

## IX. பயிற்சி வசதிகள்

இந்திய அரசின் உள் துறை அமைச்சகம், புதுடெல்லி, நாகபுரியிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரியினால் வழங்கப்பெறும் பயிற்சியினை வழங்கும் மண்டல பயிற்சி மையங்களில் ஒன்றாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தினை நியமித்துள்ளது. நாகபுரியில் உள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரி சார் நிலை அலுவலர்களுக்கு அளிக்கும் பயிற்சியை, பல்வேறு மாநிலங்கள் /மத்திய அரசு நிறுவனங்கள்/ இராணுவம் மற்றும் கப்பற் படையிலிருந்து அனுப்பப்படும் பயிற்சியாளர்களுக்கு தாம்பரத்தில் உள்ள மாநிலப் பயிற்சி மையம் அளிக்கிறது.

கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான படங்களை குறுந்தகடுகளில் தயாரிக்க உள் (காவல் **ஙீசூஷிமிமி**) துறையின் 2—9—2004 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1078-ல் இந்த அரசு இயக்குநருக்கு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் ஒவ்வொரு படத்துக்குமான செலவு, 10,000 ரூபாய்க்கு மிகாமலும், ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான அதிகபட்சமான செலவு 2 இலட்சம் என்ற வரம்பிற்கு உட்பட்டும் இருத்தல் வேண்டும். இப்படங்கள், துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கு, தீயணைப்பு தொடர்பான நவீன தொழில் நுட்பங்களைப் பயிற்றுவிக்க உபயோகப்படுத்தப்படுகின்றன.

பயிற்சி வசதிகளை மேம்படுத்தவும், நிர்வாகத் தரத்தினை உயர்த்தவும் 35 இலட்சம் ரூபாய் செலவில் 35 கணினிகள், 2 மல்டி மீடியா புரொஜெக்டர்கள், 4 டிஜிடல் வீடியோ கேமராக்கள் மற்றும் 7 டிஜிடல் ஸ்டில் கேமராக்கள் ஆகியன வாங்க அரசாணை (நிலை)





எண் 1020, உள் (காவல் 17) துறை, நாள் 16-08-2004-ல் இவ்வரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

## X. பணிமனை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்குவதற்காக சென்னையில், மாநிலப் பணிமனை ஒன்றை நடத்தி வருகிறது. ஊர்திகளின் பழுதுகளை நீக்கும் செலவுத் தொகை 20,000 ரூபாய் வரை உள்ள இனங்களில் அவற்றுக்கான மதிப்பீடுகளுக்குத் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரம் தானியங்கிப் பணிமனையின் பொறியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால், தீயணைப்பு ஊர்திகளுக்குப் பழுது நீக்கம் செய்வதற்காகத் தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் பெருமளவில் குறைகிறது.

## XI. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்

மாநிலத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில், 145 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் ஓரளவு நிரந்தரக் கட்டடங்களிலும், 105 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஒகேனக்கல்லில் மீட்புப் பணி நிலையம் ஒன்று அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பதினொன்றாவது நிதிக் குழு மானியத் தொகையிலிருந்து 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குப் பொதுப் பணித் துறை மூலம் கட்டடம் கட்டித் தர அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, 34 நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், பெண்ணாகரம், ஆத்தூர், முசிறி, உத்தமபாளையம், போச்சம்பள்ளி, திருச்சுழி, கொல்லங்கோடு, வள்ளியூர், சாயல்குடி, உசிலம்பட்டி, பெரணமல்லூர், கொடுமுடி, பவானி, மானாமதுரை, திருவண்ணாமலை ஆகிய 15 ஊர்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான கட்டடங்கள் 3.56 கோடி ரூபாய் செலவில் கட்டித்தர 2003-2004 ஆம் நிதி ஆண்டில் இவ்வரசு அனுமதி வழங்கியது. இந்தக் கட்டடங்கள் பொதுப் பணித் துறை மூலம் கட்டப்பட்டு வருகின்றன.

[2005 மார்ச் 14


## XII. பெருமளவில் ஆற்றிய பணிகள்

### அ) தீ தடுப்பு

பொது மக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென, 12 கோட்டங்களில் தீ தடுப்புக் குழுக்கள் உள்ளன. தீ விபத்து ஆபத்துகளைக் குறைக்க ஊரக மற்றும் நகரப் பகுதி மக்களிடம் தீ தடுப்பு முறைகள் பற்றி இக்குழுக்கள் கற்பிக்கின்றன. தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் சொற்பொழிவுகளும், செயல்முறை விளக்கங்களும் நிகழ்த்தப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் இக்குழுக்கள் 3,460 இடங்களில் தீ தடுப்பு முறைகள் குறித்து பயிற்றுவித்துள்ளன.

தீ தடுப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வியத்தகு பலன் அளித்துள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் தீ விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளதைக் கீழ்க்காணும் வரைபடத்திலிருந்து காணலாம்:—


**2002 முதல் 2004 ஆம் ஆண்டு வரை வரப்பெற்ற தீ விபத்து அழைப்புகளின் ஒப்பு நோக்கு புள்ளி விவரம்**






2005 மார்ச் 14]

தீ விபத்து நிகழ்வுகளில் ஏற்பட்டுள்ள இச்சரிவு இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட தீ தடுப்புப் பிரச்சாரத்தின் திறனுக்குச் சான்றாக அமைகிறது. சென்னையில் தீபாவளி தீ விபத்துக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வியத்தகு சரிவினை கீழ்க்காண் வரைபடத்திலிருந்து காணலாம்:—




ஏழு (7) நோயாளர் ஊர்திகளை நடமாடும் திரையரங்கங்களாக மாற்ற இத்துறை உத்தேசித்துள்ளது. இதற்கென, 10 இலட்சம் ரூபாய் செலவில் புரொஜெக்டர்கள் மற்றும் குறுந்தட்டு இயக்கி மற்றும் பிற சாதனங்களை வாங்கி மேற்படி ஊர்திகளில் பொருத்தி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பொது மக்களுக்குத் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கும்பகோணத்தில் அரசு உதவி பெற்ற பள்ளி ஒன்றில் ஏற்பட்ட கோர விபத்தினைத் தொடர்ந்து, இது போன்ற நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க கல்வித் துறையுடன் இணைந்து இத்துறை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:—

(1) பள்ளிகளில் போதுமான எண்ணிக்கையில் நுழைவாயில், வெளியேறும் வாயில், அவசர கால வாயில் ஆகியன அமைந்திருப்பதை உறுதி செய்யும்பொருட்டு, தீ பாதுகாப்பு ஆய்வினை நிலைய அலுவலர் மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 14

(2) பள்ளி நிறுவனங்களின் வேண்டுகோளின்பேரில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களின்மூலம் தீ விபத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் ஒத்திகை நடத்தப்படுகிறது.

(3) கல்வித் துறையினரால் பள்ளிகளிலிருந்து தெரிவு செய்து அனுப்பி வைக்கப்படும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, தீ விபத்துக்களைக் கையாள்வது குறித்த பயிற்சியாளராகத் திகழும் வகையில் இரு வார கால தீவிரப் பயிற்சி மாநிலப் பயிற்சி மையத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், உள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் ஆசிரியர்களுக்கு தீ பாதுகாப்பு குறித்த 2 நாள் புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(4) பள்ளிகள், சம்பந்தப்பட்ட நிலைய அலுவலரிடமிருந்து தடையின்மைச் சான்று பெறுவதைக் கட்டாயமாக்கி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**சென்னை மாநகரில் பாதுகாப்பு தன்னார்வலர்களைத் திரட்டுதல்**

பொது மக்களின் பங்கேற்பு ஆர்வத்தை ஒருமுகப்படுத்தும் நடவடிக்கையாக சென்னையில் பாதுகாப்பு தன்னார்வலர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். விரைவில் இத்திட்டத்தை மாநிலத்தின் பிற இடங்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அ) அதிரடிப் படை**

ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 வீரர்களைக் கொண்டு ஓர் அதிரடிப் படை உருவாக்கப்பட்டு, அவர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இத்துறையின் சொத்தாகத் திகழ்கின்றனர். இந்த அதிரடிப் படை வீரர்கள், பேரழிவுக் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**ஆ) புறத் தீயணைப்பு நிலையங்கள்**

சென்னை மாநகரத்தில் கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்களை விரைவாகச் சமாளிக்க புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்புறத் தீயணைப்பு நிலையங்களுக்கு, அதிகக் கொள்ளளவு கொண்ட செயற்கை இழை நீர்த்தொட்டிகள் அல்லது மடக்கு நீர்த்தொட்டிகள், எளிதில் தூக்கிச் செல்லத்தக்க நீர்விடு குழாய்களுடன்கூடிய பம்புகள் மற்றும்



2005 மார்ச் 14]

கம்பியில்லா தொலைத் தொடர்புக் கருவிகள் ஆகிய தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தீ விபத்து வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்காணித்து வருகின்றன.

**இ) திரையரங்குகள்/கட்டடங்களில் தீ தடுப்பு**

திரையரங்குகளில் தீ விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம். எனவே, திரையரங்குகள் தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதில் இவ்வரசு தீவிரமாக உள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரது தலைமையின்கீழ் பல்துறைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு, மாநிலத்திலுள்ள திரையரங்குகளை ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்து உரிம நிபந்தனை மீறல்களை உரிய நடவடிக்கைக்காக உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். 2004 ஆம் ஆண்டில் 1,107 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும், 2004 ஆம் ஆண்டில், பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் கிட்டத்தட்ட 17,000 கட்டடங்கள் தீ அபாயத் தடுப்பு நோக்கில் ஆய்வு செய்யப்பட்டன.

**ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்**

2004 ஆம் ஆண்டில், மொத்தம் 16,136 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. தீ விபத்துக்களில் 248 பேர் உயிரிழந்தனர். 619 பேர் காப்பாற்றப்பட்டனர். சொத்து இழப்பு மதிப்பு 13.71 கோடி ரூபாய் ஆகும். மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு 130.79 கோடி ரூபாய் ஆகும். சென்னை மாநகரில் தீ விபத்து நிகழ்வு இடங்களில் தீயணைப்பு வண்டிகளில் தண்ணீர் நிரப்ப, சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் தண்ணீர் லாரிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஏற்பாடு, உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றப் பெரிதும் உதவி உள்ளது.

பல்வகை கடினமான வேலைகளுக்கென இத்துறையில் சிறப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்துறை ஒத்திகைப் பயிற்சிக்கும் உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவற்றால் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்திறன் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறி உள்ளது. இம்முன்னேற்றம் தீ விபத்துக்களை உடனடியாகச் சமாளிக்கும் திறனை அதிகப்படுத்தி உள்ளது. இதன் பயனாக பெரிய மற்றும் நடுத்தர தீ விபத்துகளாக உருவெடுத்திருக்கக்கூடிய தீ விபத்துக்கள்கூட சிறிய தீ விபத்துக்களாகவே முடிந்துள்ளன.

மாநிலத்தில் கடந்த மூன்றாண்டு புள்ளிவிவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், பெரிய மற்றும் நடுத்தர தீ விபத்துக்கள் கணிசமாகக் குறைந்துள்ளது தெரிய வருகிறது.

| ஆண்டு | பெருந் தீ | நடுத்தரத் தீ |
|---|---|---|
| 2002 | 176 | 390 |
| 2003 | 182 | 324 |
| 2004 | 154 | 312 |

### உ) மீட்பு அழைப்புகள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பெறப்படும் மீட்பு அழைப்புகள் பெரும்பாலும் சாலை விபத்து, இரயில் விபத்துக்களில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப் பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களை சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், இதர இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இன்னல்களில் சிக்குண்டவர்கள் ஆகியோரைக் காப்பாற்றக் கோரும் அவசர அழைப்புகளே. 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில், முறையே 4,881, 5,219 மற்றும் 6,286 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டன. 2004 ஆம் ஆண்டில் வரப்பெற்ற மீட்பு அழைப்புகளினால் 9,336 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின்போது இத்துறை மீட்புப் பணிகளில் முக்கியப் பங்காற்றியது. இந்நிகழ்வில், 1,667 நபர்கள் இத்துறையால் மீட்கப்பட்டனர்.

### ஊ) கட்டண அழைப்புகளும், நோயாளர் ஊர்தி அழைப்புகளும்

80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. தீ விபத்து மற்றும் இதர நெருக்கடிகளின்போது காயமடைந்த நபர்கள் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். மேலும், அழைப்பின்பேரில், நோயாளிகளையும், காயமடைந்தோரையும் குறைந்த வாடகையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் சேவையும் அளிக்கப்படுகிறது. 2004 ஆம் ஆண்டில், நோயாளர் ஊர்திகள் வேண்டி 1,469 அழைப்புகள் பெறப்பட்டன. இவற்றுள் 1,132 அழைப்புகள், ஊர்தி வாடகைக் கட்டணம் செலுத்தப்பட்ட அழைப்புகளாகும். நோயாளர் ஊர்தி வாடகைக் கட்டண அழைப்பு வகையில் 2.33 இலட்சம் ரூபாய் ஈட்டப்பட்டது.



### எ) பொது நலன் கருதி ஆயத்த நிலைப் பணி

முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கியக் கருத்தரங்குகள், கூட்டங்கள் மற்றும் விழாக்களின்போதும் பெரிய பந்தல்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய தருணங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் தயார் நிலையில் அங்கு நிறுத்தி வைக்கப்படுகின்றன. மேலும், பாதுகாப்புப் பணிக்காகவும், ஆயத்த நிலை நிறுத்தப் பணிக்காகவும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர, தனியார் விழாக்களுக்கும் கட்டணத்தின்பேரில் துறையின் தீயணைப்பு ஊர்திகள் ஆயத்த நிலையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில் ஆயத்த நிலைப் பணி கட்டணமாக 37.79 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

சமீபத்தில் நாகப்பட்டினத்தில் சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இத்துறை தொடர்ந்து பாதுகாப்புப் பணி மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க ஆயத்த நிலைப் பணியாகும். இதற்காக, 12 நீர்தாங்கி வண்டிகள், 4 நோயாளர் ஊர்திகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி வீரர்கள், பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தங்கும் இடங்களில் இன்று வரை தொடர்ந்து ஆயத்த நிலைப் பணி மேற்கொண்டு வருகிறார்கள்.

## XIII. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிக்கும் வகையிலும், இத்துறையின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடைவதற்கு ஏதுவாகவும், பின்வரும் விருதுகள் ஏற்படுத்தப்பட்டு, நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

### அ) விருதுகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் கடமைப் பற்றுறுதி, பாராட்டத்தக்க பணி மற்றும் வீர தீரச் செயல் ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில், மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட கீழ்க்காணும் விருதுகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன:—

**1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (அண்ணா பதக்கம்)**

இப்பதக்கம் பெறுவோர், அவரவர் பதவி நிலைக்கு ஏற்ப 2,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள். 2004 ஆம் ஆண்டில் 9 பாராட்டத்தக்க பணிப் பதக்கங்களும், 1 வீர தீரச் செயலுக்கான பதக்கமும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

**2) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுவது)**

இப்பதக்கம் பெறும் தீயணைப்பாளர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் 40 ரூபாயும், முன்னணித் தீயணைப்பாளர்/இயந்திரக் கம்மியர்—ஓட்டுநர், தீயணைப்பாளர்—ஓட்டுநர், தீயணைப்பாளர்—இயந்திரக் கம்மியர் ஆகியவர்களுக்கு மாதந்தோறும் 50 ரூபாயும் ரொக்கப் படியாக வழங்கப்படுகிறது. 2005 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம், 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

**3) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணிப் பதக்கம்**

இந்தப் பதக்கமானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களின் திறனை ஊக்குவிக்கும்பொருட்டும், அவர்கள் தங்கள் கடமையைத் திறமையுடனும், ஊக்கத்துடனும் ஆற்றிட உற்சாகம் அளிக்கும் வகையிலும் 2001 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டது. நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்பாளர், தீயணைப்பாளர் ஆகியோருக்கு, பதவிக்கு ஒன்று வீதம் ஆண்டுதோறும் மூன்று பதக்கங்கள் தீயணைப்பு நாளான ஏப்ரல் 14 ஆம் நாள் வழங்கப்படுகிறது. இப்பதக்கம், 22 கேரட் தங்கத்தில் 8 கிராம் எடையில் செய்யப்பட்டதாகும். மேலும், நிலைய அலுவலருக்கு 3,000 ரூபாயும், முன்னணித் தீயணைப்பாளருக்கு 2,500 ரூபாயும் மற்றும் தீயணைப்பாளருக்கு 2,000 ரூபாயும் ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படுகிறது. இப்பதக்கம் முதுநிலை அடிப்படையில் வழங்கப்படுவதில்லை; மாறாக, பணியில் தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்துபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.



4) மாநில விருதுகள் தவிர, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட பின்வரும் விருதுகளும் வழங்கப்படுகின்றன:—

(அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்.

(ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்.

(இ) வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்.

**ஆ) நலத் திட்டங்கள்:**

**1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த இன்னலுற்ற பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. உறுப்பினர்களின் நலனுக்காகக் கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது:—

(அ) தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற நாட்பட்ட நோய்களுக்கு இலக்கானால் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்கிக்கொள்ள.

(ஆ) உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக.

(இ) மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க.

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவுக்காக.

இத்திட்டத்தில் தற்போது 5,464 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக 6.62 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை 14.30 இலட்சம் ரூபாய் ஆகும். இந்நிதிக்கு வழங்கும் மானியத் தொகையை

3 லட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**2. குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர் குடும்பத்திற்கு, அரசு, குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக 1 இலட்சம் ரூபாய் வீதம் வழங்குகிறது.

**3. கருணைத் தொகை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| (அ) பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.5,00,000/- |
| (ஆ) பணியாற்றும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டவர்களுக்கு | ரூ.1,00,000/- |
| (இ) பணியாற்றும்போது கடுமையான காயமடைந்தவர்களுக்கு | ரூ.20,000/- |
| (ஈ) பணியாற்றும்போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ.10,000/- |

**4. குழுக் காப்பீட்டுத் திட்டம்**

பணியிலிருக்கும்போது உயிர் இழக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலுள்ள பணியாளர்களின் குடும்பத்திற்கு உதவுவதற்காக, 1994 ஆம் ஆண்டு குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் 1 இலட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**5. உணவு மானியத் திட்டம்**

உணவு மானியத் திட்டத்தின்கீழ், இத்துறையைச் சேர்ந்த உதவிக் கோட்ட அலுவலர் நிலை வரையிலானவர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக, ஆண்டொன்றுக்குச் சராசரியாக 50 இலட்சம் ரூபாய் அரசு செலவிடுகிறது.



**6. குடியிருப்புகள் கட்டுதல்**

செயல்திறனை அதிகரிக்கவும், அவசர காலங்களில் உடனடியாக ஆட்களைத் திரட்டவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு, அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே வீட்டு வசதி அளிப்பது அவசியமாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்காக ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின்மூலம் வீடுகள் கட்டித் தருவதென அரசு ஏற்கெனவே முடிவெடுத்திருந்தது. 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து கட்டப்பட வேண்டிய குடியிருப்புகளின் எண்ணிக்கையை ஆண்டொன்றுக்கு 100-லிருந்து 200 ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இத்திட்டமானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் வழங்குவதை விரைவுபடுத்துவதுடன் அவர்களின் செயல்திறன் மேம்படவும் பெரிதும் உதவும்.

**XIV. புதிய முயற்சிகள்**

பொது மக்களுக்கு ஆற்றப்படும் சேவையின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும், பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் இத்துறையின் செயல்பாட்டை மேம்படுத்திட அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, அவசர காலப் பணிகளை நிறைவேற்றுவதால், பணியாளர்கள் நியமனத்திற்கு இருந்த தடையினை, அரசு, அரசாணை (நிலை) எண் 993, உள் (காவல்-17) துறை, நாள் 7-8-2004 மூலம் நீக்கி ஆணை பிறப்பித்துள்ளது.

2) பயிற்சி வசதிகளை மேம்படுத்தவும், அலுவலக நிருவாகத்திற்காகவும் 35 இலட்சம் ரூபாய் செலவில் கணினிகள், டிஜிட்டல் சாதனங்கள் போன்றவை தலைமையிடம் மற்றும் கோட்ட அலுவலகங்களுக்கு வாங்கிட, அரசாணை (நிலை) எண் 1020, உள் (காவல்-17) துறை, நாள் 16-8-2004-ல் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

3) 2004-2005 ஆம் ஆண்டில் பொதுக்காப்பீட்டுக் கழகக் கடன் மூலம், 1.43 கோடி ரூபாய் செலவில் பழைய நீர்தாங்கி வண்டிகளுக்குப் பதிலாக புதிய 10 நீர்தாங்கி வண்டிகள் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

4) அரசாணை (நிலை) எண் 1078, உள் (காவல்-17) துறை, நாள் 2-9-2004-ல் கல்வி புகட்டும் மற்றும் பயிற்சி தொடர்பான படங்களைக் குறுந்தகடுகளில் தயாரிக்க ஒரு படத்திற்கு 10,000 ரூபாய்க்கு மிகாமலும், ஒரு நிதியாண்டில் 2 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும் 20 படங்கள் தயாரிக்க அரசு இத்துறை இயக்குநருக்கு அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் படங்கள் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கு தீயணைப்பு தொடர்பான நவீன தொழில் நுட்பங்களைப் பயிற்றுவிக்க உபயோகப்படுத்தப்படுகிறது.

5) தருமபுரி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரி என்ற புதிய கோட்டத்தை உருவாக்கி அரசாணை (நிலை) எண் 1125, உள் (காவல்-17) துறை, நாள் 13-9-2004-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது.

6) ஏழு (7) நோயாளர் ஊர்திகளை நடமாடும் திரையரங்கங்களாக மாற்றிட அரசு ஆணை வழங்கியுள்ளது. இதற்கென இந்த அரசு புரொஜெக்டர்கள், குறுந்தகடு இயக்கி மற்றும் தொடர்புடைய சாதனங்களை வாங்கி மேற்படி ஊர்திகளில் பொருத்தி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு தீ பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாணை (நிலை) எண் 1133, உள் (காவல்-17) துறை, நாள் 15-9-2004-ல் 10 இலட்சம் ரூபாய் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

7) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் திருமக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள மின் நிலையத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்க அரசு, அரசாணை (நிலை) எண் 1220, உள் (காவல்-1) துறை, நாள் 20-10-2004-ல் ஆணைகள் வழங்கியுள்ளது.

8) அரசு, அரசாணை (நிலை) எண் 54, உள் (காவல்-17) துறை, நாள் 18-1-2005-ல் துறையின் கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதியை நவீனப்படுத்திட 55 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்க ஆணை பிறப்பித்துள்ளது.




**2005—2006 ஆம் ஆண்டுக்கான பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்:**

(1) கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக 1 தண்ணீர் லாரி, 7 நோயாளர் ஊர்திகள், 1 பேருந்து, 2 சிறு பேருந்துகள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கிட 73.80 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

(2) தீயணைப்பாளர்களின் உபயோகத்திற்கென 57 மூச்சுக் கருவிகள் வாங்கிட 37.05 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## XV. நிறைவுரை

பேரழிவு மேலாண்மை மற்றும் நமது சமுதாயத்தின் வேகமான தொழில்மயமாதல் மற்றும் நகரமயமாதல் ஆகியவற்றால் எழும் சவால்களைச் சமாளிப்பது தற்போது இத்துறையின் முக்கியப் பணியாக அமைந்துள்ளது. மாநிலத்தில் பெரும் மற்றும் நடுத்தரத் தீ விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் இத்துறை குறிப்பிடத்தக்க வெற்றி கண்டுள்ளது. தீ ஆபத்துக்கள் மற்றும் தீ தடுப்பு பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்க இத்துறை மேற்கொண்ட புதுமையான நடவடிக்கைகள் சிறந்த பயனை அளித்துள்ளன. சுனாமி பேரழிவினை அடுத்து, இத்துறைப் பணியாளர்கள் ஆற்றிய சீர்மிகு பணிகள், இயற்கைப் பேரிடர், எதிர்பாரா இன்னல் ஆகியவற்றைத் தணிப்பதிலும், அவற்றின் மேலாண்மையிலும் இத்துறை அரசின் ஒரு முக்கியத் துறையாக உருவெடுத்து வருகிறது என்பதைச் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றன. நன்கு திட்டமிட்டு, படிப்படியான முறையில் இத்துறை விரிவாக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. இத்துறையின் ஒட்டுமொத்தத் திறனை மேம்படுத்தவும், உயர்த்தவும், நீதியரசர் (ஓய்வு) திரு. கே.எஸ். பக்தவச்சலம் அவர்களின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்த அரசின் தொடர்ந்த ஆதரவு மற்றும் வழிகாட்டலுடன், இத்துறை, உயிர் மற்றும் பொருட்சேதங்களைத் தடுக்கின்ற/குறைக்கின்ற தனது அடிப்படைப் பணியை சிறந்த முறையில் மேற்கொண்டு, எழுகின்ற எந்த ஒரு சவாலையும் எதிர்கொண்டு சமாளிக்கும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளது.


மாநில இயக்குநர், மேற்கு
, கோயம்புத்தூர்
துணை இயக்குநர்,
நிருவாகம்
துணை அலுவலர் (9)
மொத்த தீயணைப்பு பணி
தீயணைப்பு மீட்புப் பணி
280+1 @
பிற நிறுவனங்கள்
மாநில பயிற்சி மையம் 1
மாநிலப் பணிமனை 1
இசைக் குழு 1
மீட்புப் பணி நிலையம் 1 @
குறிப்பு—தீமிபநி : தீயணைப்பு
மீட்டுப் பணி நிலையம்
தீதகு : தீத்தடுப்புக் குழு
மற்றவை: *புகைப்படப் பிரிவு
**தீக்கட்டுப்பாட்டறை
மற்றும் வான்தந்தி பிரிவு
கோட்ட அலுவலர்
(13)
அலுவலர் (92)
தீமிபநி தீதகு
விருதுநகர்
புத்தூர் 14 1
10 1
8 1
4+1@ 1
நிலைய
கிரி 6 —
அலுவ
க்கல் 8 1
(2)
15 1
ஆனைமலை 12 —
4 —
81+1@ 6

226637